விலை ரூபா 30 பக்கங்கள் 56

## போட்டிக்கு தேங்காய் உடைத்து வழிபட்டனர்

**மகிந்த தரப்பு ஆதரவாளர்கள்**

கொழும்பு, பெப்.7
அரசு மற்றும் பொலிஸ் நிதி மோசடி விசாரணைப் பிரிவு என்பவற்றுக்கு எதிராக பொது எதிரணி எனத் தம்மை அடையாளப்படுத்திக் கொள்ளும் பக். 53

# உதயன்

30°c - 23°c
தெளிவான வானம்

சுடர் 31 கதிர் 73 வள்ளுவர் ஆண்டு 2047 தை 24, ஞாயிற்றுக்கிழமை 07.02.2016

# இன்று யாழ்ப்பாணம் வருகிறார் ஐ.நா. ஆணையாளர் ஹுசேன்

## வடக்கு மக்களின் நிலைமைகள் தொடர்பில் நேரில் ஆராய்வார்

யாழ்ப்பாணம், பெப்.7
ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் சையிட் அல் ஹுசேன், யாழ்ப்பாணத்திற்கு இன்று வருகை தரவுள்ளார்.
இந்தப் பயணத்தின்போது, போரினால் பாதிக்கப்பட்ட மக்கள் உள்ளிட்ட பல தரப்பினரையும் அவர் சந்தித்துப் பேசவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.
இலங்கைக்குநான்கு நாள் பயணமாக பக். 53

# சீன வெளிவிவகார அமைச்சர் மங்களவுடன் திடீர்ச் சந்திப்பு

## கட்டுநாயக்கவில் நடந்தது

கொழும்பு, பெப். 7
இந்திய வெளிவிவகார அமைச்சர் சுஷ்மா சுவராஜ், இலங்கைக்குப் பயணம் மேற்கொண்டுள்ள நிலையில், சீன வெளிவிவகார அமைச்சரும் இலங்கைக்கு குறுகிய நேரப் பயணத்தை மேற்கொண்டிருந்தார். பக். 53



**மைத்திரியின் அரசு மீது மோடி அதீத நம்பிக்கை**

*ஜனாதிபதியிடம் நேரில் தெரிவித்தார் சுஷ்மா*

பக். 03

முச்சந்தி முரளி



அப்ப இரண்டு வல்லரசிட்டையும் சிக்கிவிட்டினமோ...

# சமத்துவமான தீர்வுக்கு இந்தியா துணை நிற்கும்

## தமிழ்க் தேசியக் கூட்டமைப்பிடம் நேற்று உறுதியளித்தார் சுஷ்மா

கொழும்பு, பெப்ரவரி 7
இலங்கையில் நீண்டகாலமாகத் தொடரும் இனப்பிரச்சினைக்கு, சமத்துவமான அரசியல்தீர்வைஏற்படுத்துவதற்கு இந்தியா துணை நிற்கும். அதற்கான இந்தியாவின் முழுமையான ஈடுபாடு தொடர்ந்து இருக்கும்.
இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிடம் உறுதியளித்துள்ளார் இந்திய வெளிவிவகார அமைச்சர் சுஷ்மா சுவராஜ்.
இந்திய - இலங்கை ஒப்பந்தத்தின் அடிப்படை விடயங்கள், புதிய பக். 53





# அனைத்து தரப்பின் கருத்துக்களையும் செவிமடுப்பேன்

## கொழும்பு வந்தவுடன் தெரிவித்தார் ஹுசேன்

கொழும்பு, பெப்.7
இலங்கையில் தாம் அனைத்து சமூகத்தினருடனும், பேச்சுக்களை நடத்தவுள்ளதாகவும், அவர்கள் என்ன சொல்கிறார்கள் என்று கேட்கப் போவதாகவும் தெரிவித்துள்ளார் ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளர் சையிட் அல் ஹுசேன். பக். 53

# இந்திய மீனவரின் பிரச்சினைக்கு 3 மாதங்களுக்குள் நிரந்தரத் தீர்வு

## கூட்டமைப்பிடம் புதுடில்லி உத்தரவாதம்

கொழும்பு, பெப்.7
இலங்கை கடற்பரப்பினுள் அத்துமீறும் இந்திய மீனவர்களின் இழுவைப் படகுகள் தொடர்பான பிரச்சினைக்கு மூன்று மாதங்களுக்குள் நிரந்தரத் தீர்வு காணப்படும் என்று இந்திய வெளிவிவகார அமைச்சர் சுஷ்மா சுவராஜ், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினிடம் உறுதியளித்துள்ளார்.
இலங்கைக்குப் பயணம் மேற்கொண்டுள்ள இந்திய வெளிவிவகார அமைச்சர் சுஷ்மா சுவராஜ், நேற்று நண்பகல் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரைச் சந்தித்துக் கலந்துரையாடினார். இந்தக் கலந்துரையாடலின் போதே மேற்படி உறுதிமொழியை அவர் வழங்கியுள்ளார்.
வடபகுதிக் கடற்பரப்பினுள் இந்திய பக். 52

### முகப்புத்தகத்தில் முறைகேடு குறித்து 220 முறைப்பாடுகள்

கொழும்பு, பெப். 7
கடந்த ஒரு மாதத்தில் மட்டும் முகப்புத்தகம் ஊடான முறைகேடுகள் தொடர்பில் 220 முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாக, இலங்கை பக். 53

# விளையாட்டு நிகழ்வில் மயங்கிய மாணவி வைத்தியசாலையில் சாவு

யாழ்ப்பாணம், பெப். 7
பாடசாலையில் இடம்பெற்ற விளையாட்டு நிகழ்வில் பங்கு கொண்ட சிறுமி மயங்கி வீழ்ந்த நிலையில், வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டபோதும் சிகிச்சை பயனளிக்காது நேற்று அதிகாலை பரிதாபகரமாக உயிரிழந்தார்.
குறித்த சிறுமி காய்ச்சல் மற்றும் சளியினால் பீடிக்கப்பட்டிருந்ததாகவும் அந்த விடயம் கவனத்தில் கொள்ளப்படாது அந்த மாணவி விளையாட்டு நிகழ்வில் ஈடுபட்டுள்ளார் - ஈடுபடுத்தப்பட்டுள்ளார் என்று விசாரணைகளில் தெரிவிக்கப்படுகிறது. அதனால் இதயத்தில் தொற்று ஏற்பட்டு அவர் உயிரிழந்துள்ளார் என்று பக். 53

# இணைந்த வடக்கு - கிழக்கில் சமஷ்டி அடிப்படையில் தீர்வு

## புதிய அரசமைப்புக்காக கருத்தறியும் குழுவிடம் வவுனியாவில் முன்வைப்பு

யாழ்ப்பாணம், பெப். 7
வடக்கு - கிழக்கு இணைந்த சமஷ்டியே தமிழ் மக்களுக்குத் தீர்வாகக் கிடைக்கப் பெற வேண்டும் என்று, வவுனியாவில் நேற்று இடம்பெற்ற புதிய அரசமைப்பு உருவாக்கத்துக்கான மக்கள் கருத்தறியும் அமர்வில் தெரிவிக்கப்பட்டுள்ளது.
நேற்றைய தினம் ஓரளவு அதிகளவான மக்கள் கலந்துகொண்டு தமது கருத்துக்களைத் தெரிவித்தாகக் குறிப்பிட்ட இந்தக் குழுவின் உறுப்பினர்களில் ஒருவரான எஸ்.எஸ்.சி.இளங்கோவன், இன்னும் அதிகளவிலான மக்கள் கலந்துகொண்டு தமது கருத்துக்களை - பிரச்சினைகளை முன்வைக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.
புதிய அரசமைப்புக்கான மக்கள் பக். 53

# அதிகாரப் பகிர்வு போதுமானது அபிவிருத்தியே அவசியமானது

## அரசமைப்பு உருவாக்கம் குறித்து வவுனியா தெற்கு மக்கள் கருத்து

யாழ்ப்பாணம், பெப். 7
இப்போதுள்ள அதிகாரப் பரவலாக்கலே போதும். போரினால் பாதிக்கப்பட்ட பிரதேசம் என்ற அடிப்படையில் வடக்கில் முன்னுரிமையில் அபிவிருத்தி வேலைகள் முன்னெடுக்கப்பட வேண்டும்.
இவ்வாறு வவுனியா தெற்கு பிரதேசத்தைச் சேர்ந்த பிரதிநிதிகள் சிலர், வவுனியாவில் நடைபெற்ற புதிய அரசமைப்பு உருவாக்கத்திற்கான மக்கள் கருத்தறியும் அமர்வில் பக். 53

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதிய நடைமுறைகளின்படி இனி நேர்முகத் தேர்வுகள்

## உள்ளூராட்சி உதவி ஆணையாளர் பொ.குகநாதன் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,பெப்.7
உள்ளூராட்சி மன்றங்களின் கீழான அட்டவணைப்படுத்தப் படாத பதவி வெற்றிடங்களுக் கான நியமனத்தின் போது புதிய நடைமுறைகளின் கீழ் நேர்முகத் தேர்வுகள் இடம்பெறவுள்ளன. அதனடிப்படையிலே தகுதியான வர்களுக்கு நியமனங்கள் வழங் கப்படும்.- என்று உள்ளூராட்சி உதவி ஆணையாளர் பொ.குக நாதன் தெரிவித்தார்.

அதன்படி உதவி உள்ளூராட்சி ஆணையாளர் அந்தந்தப் பிரதேச சபைக் குட்பட்ட மூன்று அலுலர் களைப் பிரதேச சபைச் செயலாள ரின் உதவியுடன் தெரிவு செய்து அந்த தெரிவு முறைமை உள்ளூ ராட்சி அமைச்சின் செயலாளருக் குத் தெரியப்படுத்தப்படும்.

அவரது அனுமதி கிடைக்கப் பெற் றதும் நேர்முகத் தேர்வுக் குழுவி னர் குறித்த பதவிகளுக்கான சேவைப் பிரமாணத்தின் அடிப் படையிலே புள்ளியிடல்களை மேற்கொண்டு நேர்முகத் தேர்வை நடத்தி தகுதியான விண்ணப்பதாரி களைக் குறித்தொதுக்கப்பட்ட பதவிகளில் நிலவும் வெற்றிடங் களுக்கு ஏற்ப தெரிவு செய்வார் கள் என்றும் உதவி ஆணை யாளர் தெரிவித்தார்.

உள்ளூராட்சி மன்றங்களின் கீழான அட்டவணைப்படுத்தப் படாத பதவி வெற்றிடங்களுக் கான நியமனங்களின் போது ஒவ்வோர் சபைகளிலும் வெவ் வேறு நிர்வாக நடைமுறைகள் பின்பற்றப்படுகின்றன. நேர் முகத்தேர்வின் அடிப்படையிலே தெரிவு செய்யப்பட்டவர்கள் குறிப் பிட்ட சில மாதங்களின் பின்னர் (6 மாதங்கள்) பணி இடை நிறுத்தம் செய்யப்பட்டுள்ளனர்.

அதேவேளை பல சபைகளில் நேர்முகத்தேர்வுகள் இடம்பெற்று வருடங்கள் கடந்த நிலையிலும் நியமனங்கள் வழங்கப்பட வில்லை.

மீள் நேர்முகத் தேர்வுக்கான ஏற் பாடுகள் இடம் பெறுகின்றன என் றும், சில சபைகளில் விண்ணப்பத் திகதியில் செயல் வலுவிலிருந்த தகைமைகளை பூரணப்படுத்தாத ஒரு சிலர் நியமனத்தில் உள் வாங் கப்பட்டுள்ளனர் என்றும் பாதிக் கப்பட்ட விண்ணப்பதாரிகள் முன் வைத்த முறைப்பாடுகள் தொடர் பில் கருத்துக் கேட்ட போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரி வித்துள்ளதாவது-

பருத்தித்துறை நகர சபையில் வழங்கப்பட்ட சாரதி மற்றும் சந் தைப் பாதுகாவலர் பதவிகளுக் கான நியமனங்கள் தொடர்பில் உள்ளூராட்சி ஆணையாளர் என்ற வகையில் எனக்கும் அமைச் சின் செயலாளருக்கும் ஆட் சேபனைகள் முன்வைக்கப்பட்டி ருந்தன.

அதன் பிரகாரம் குறித்த முறைப் பாடுகள் தொடர்பில் விசாரணை களை மேற்கொண்டு அறிக்கை யிடுமாறும் நியமனத்தில் உள் வாங்கியவர்களைப் பணியில் இருந்து இடை நிறுத்துமாறு நான் அறிவுறுத்தல் வழங்கியுள்ளேன் என்றும் அவர் தெரிவித்தார்.

ஆனால் சபைச் செயலாளர் எந்த ஒரு அறிவுறுத்தலையும் நடை முறைப்படுத்தவில்லை. அவருக்கு எதிராக ஏற்கனவே 20 முறைப் பாடுகள் பதிவுசெய்யப்பட்டுள்ளன. அதில் உயர் அதிகாரிகளுக்கு கீழ்படிவுடன் நடந்து கொள் வதில்லை என்பது மிகப் பிரதான மானது.

நியமனத்தின் போது திறந்த மற் றும் மட்டுப்படுத்தப்பட்ட தெரிவு முறைகள் இடம்பெறுகின்றன. அதில் மட்டுப்படுத்தப்பட்ட தெரிவு முறையில் ஏற்கெனவே வேலை யில் உள்ளவர்கள் உள்ளடங்கு கின்றனர். அவர்களுக்கான நிய மன அதிகாரம் என்பது உள்ளூ ராட்சி ஆணையாளர்களின் அனு மதியோடு இடம்பெறும்.

ஆனால் திறந்த தேர்வு முறை யிலே நியமன அதிகாரம் அந்தந்த பிரதேசசபைச்செயலாளர்களுக்கு உரித்தாகின்றது. இதன் பிரகாரம் வழங்கப்படு கின்ற நியமனங்களி லேயே அவர்களுக்குச் சார்பான வர்களுக்கு நியமனம் வழங்கும் நடவடிக்கைகளால் முறைகேடுகள் இடம்பெறுகின்றன.

அந்த வகையிலே நாங்கள் சட்ட ரீதியான பிரச்சினைகள் எற்படும் போது அறிவுரைகளை அவர்க ளுக்க வழங்குகிறோம். இந்த நிலைமைகளைக் கட்டுப்படுத்தும் முகமாகவே புதிய நடைமுறை யைத் தற்போது நடை முறைக்குக் கொண்டுவந்துள்ளோம் - என்றார்.

காரைநகர் பிரதேச சபையில் தகு தியற்ற ஒருவருக்கு நியமனம் வழங்கப்பட்டுள்ளது என்று கூறப் படும் குற்றச்சாட்டுத் தொடர்பில் கேட்டபோது-

நியமனத் திகதியில் குறித்த நபர் பிரதேச சபை எல்லைக்குள் வதி விட காலத்தைக் கொண்டிருக்க வில்லை என்ற அடிப்படையிலே அவருக்கு நியமனம் வழங்கப்பட வில்லை. ஆனால் மனித உரிமை கள் ஆணைக்குழுவில் குறித்த நபர் மேற்கொண்ட முறைப்பாட் டின் பிரகாரம்அவர்களின்அறிவுறுத் தலுக்கமைவாக விண்ணப்பதா ரியின் சொந்த இடம் காரைநகர் என்பதன் அடிப்படையிலும், அவ ரது வாக்காளர் பதிவுகள் அனைத் தும் அங்கேயே இருந்து வருகின்ற தன் அடிப்படையிலும் அவ ருக்கு நியமனம் வழங்கலாம் என்ற பரிந் துரைகளின் பிரகாரம் நியமனம் வழங்கப்பட்டது என்று அவர் குறிப்பிட்டார்.

நியமனங்கள் தொடர்பில் சரியான நடைமுறைகள் பின்பற்றப்பட வேண்டும் என்பதற்காகவே புதிய நடைமுறைகள் நடைமுறைப் படுத்தப்படுத்தப்படவுள்ளன. இது தொடர்பில் குறித்த அதிகாரி களுக்கு அறிவுறுத்தப் பட்டுள்ளது. பாதிக்கப்பட்ட வர்களும் நேர்முகத் தேர்வுக்குத் தோற்றித் தகுதியிருப் பின் அவர்களுக்கும் நியமனங் கள் வழங்கப் படும் என்றும் உதவி ஆணையாளர் குறிப்பிட்டார்.

(ற-ஐ-ரி2)

## கப் கலெக்சனில் வாழ்வாதார உதவி

யாழ்ப்பாணம், பெப்.7
அண்மையில் நடைபெற்ற யாழ்.பல்கலைக் கழகத்தின் 31 ஆவது பொதுப் பட்டமளிப்பு விழாவில் பட்டம் பெற்ற 15 ஆம் அணி முகா மைத்துவ வணிக பீட மாணவர்கள் கப் கலெக் சன் எனக் கூறிச் சேமித்த பணத்தொகையில் ஒரு பகுதியைப் போரால் பாதிக்கப்பட்டவர் களுக்கு வழங்கியுள்ளனர் என்று தெரிவிக்கப் பட்டுள்ளது. இது ஏனைய மாணவர்களுக்கு முன்மாதிரி யான செயற்பாடாகவுள்ளது.

அவர்கள் சேமித்த பணத்தை வறிய, அங்கவீன மான குடும்பங்கள் மற்றும் போராளி குடும்பங் களின் வாழ்வாதாரத்தை உயர்த்தும் நோக்கில் வழங்கியுள்ளனர். எதிர்காலத்தில் பட் டம்பெறும் பல்கலைக்கழக மாணவர்களும் பணத்தைப் பயனற்ற விதத்தில் செலவிடாமல் இந்த மாதிரி யான வாழ்வாதார உதவிகளை வழங்க முன் வரவேண்டும் என்று முகாமைத்துவ வணிகபீட மாணவர்கள் தெரிவித்துள்ளனர்.

வேப்பங்குளம் ஒமந்தையைச் சேர்ந்த ஒருவர் போரில் பெற்றோரை இழந்த தனது இரு பேரப்பிள்ளைகளை வளர்த்து வருகிறார். கச் சான் தோட்டம் வைத்துள்ள அவருக்கு நீர் இறைக்கும் மோட்டர் வழங்கப்பட்டுள்ளது.

மாங்குளத்தைச் சேர்ந்த மாவீரர் குடும்பத்தைச் சேர்ந்த ஒருவருக்கு சைக்கிள் வழங்கப்பட்டது.

அவ்வாறே கால் கை பாதிக்கப்பட்ட மற்றொரு போராளிக்கு வாழ்வாதார உதவியாக ஒலி பெருக்கி வழங்கப்பட்டது என்றும் தெரிவிக்கப் பட்டது. (ஐ-4)



மட்டக்களப்பு வவுணதீவு பொலிஸ் பிரிவிற்குட்பட்ட காஞ்சிரங்குடா காட்டுப்பகுதியில் சட்டவிரோதமாகக் கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்டு வந்த இருவர் கைது செய்யப்பட்டனர். அவர்களை நீதிமன்று எதிர்வரும் 10ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டுள்ளது. குறித்த பகுதியில் பொலிஸாரால் மேற்கொள் ளப்பட்ட திடீர் சுற்றிவளைப்பில் சட்டவிரோத கசிப்பு உற்பத்தி நிலையம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. (ற)

## அனைத்துக் கட்சிக் கூட்டத்தின் நினைவு நாள்

யாழ்ப்பாணம், பெப்.7
வல்லை மண்ணின் மூவரின் முயற் சியால் முதன் முதல் தமிழர்கள் தரப்பில் இடம்பெற்ற அனைத்துக் கட்சிகளின் கூட்டத்தின் 45 ஆவது ஆண்டு நினைவை முன்னிட்டு வல்வெட்டித்துறை சிவன் கோவிலில் இன்று விசேட பூசை வழிபாடு கள் இடம்பெறவுள்ளன.

வல்வெட்டித்துறை மண்ணின் மூவரான ஞானமூர்த்தி [illegible] வேல்பிள்ளை [illegible] ஆகியோரின் முயற்சியால் முதன் முதல் 1971 ஆம் ஆண்டு இன்றைய நாளில் தமிழர்கள் தரப்பில் வரலாற்றுச் சிறப்பு மிக்க அனைத்துக் கட்சிகளின் கூட்டம் நடை பெற்றது.

1971ம் ஆண்டில் தமிழர்களின் தலைமை களாக விளங்கிய தந்தை செல்வா, ஜீ.ஜீ. பொன்னம்பலம் , சுந்தரலிங்கம், நவ ரத் தினம் போன்ற தலைவர்களுடன் அப் போதைய நகர முதல்வரான சின்னத் தம்பி நாகராசாவின் தலைமையில் குறித்த சந்திப்பு இடம்பெற்றது.

(ற-101)

## உலக வானொலி தின விழா

யாழ்ப்பாணம்,பெப்.7
உள்ளக அலுவல்கள், வடமேல் அபிவிருத்தி மற் றும் கலாசார அலுவல் கள் அமைச்சு, கலாசார அலுவல்கள் திணைக் களம் ஒன்றிணைந்து ஏற்பாடு செய்துள்ள உலக வானொலி தின விழா எதிர்வரும் 13 ஆம் திகதி சனிக்கிழமை பிற் பகல் 3 மணிக்கு கொழும்பு இலங்கை மன்றக் கல் லூரியின் கேட்போர் கூடத்தில் நடைபெறவுள் ளது.

உள்ளக அலுவல்கள், வடமேல் அபிவிருத்தி மற் றும் கலாசார அலுவல் கள் அமைச்சர் எஸ்.பீ. நாவின்ன தலைமையில் நடைபெறும் நிகழ்வில் நாடாளுமன்ற புனர மைப்பு மற்றும் வெகுசன ஊடக அமைச்சர் கயந்த கருணாதிலக கலந்து கொள்ளவுள்ளார்.

(ற-ஐ-ரி)

## ஆய்வு கூட திறப்பு விழாவும் பரிசளிப்பும்

சாவகச்சேரி,பெப்.7
மீசாலை வீரசிங்கம் மத் திய கல்லூரியில் நிர்மா ணிக்கப்பட்ட விஞ்ஞான ஆய்வு கூடத்திறப்பு விழா வும் கல்லூரியின் பரிச ளிப்பு நிகழ்வும் நாளை திங்கட்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு நடை பெறவுள்ளன.

கல்லூரி அதிபர் த.அம்ப லவாணர் தலைமையில் நடைபெறும் நிகழ்வு களுக்கு பிரதம விருந்தி னராக சிறுவர் விவகார இராஜாங்க அமைச்சர் திருமதி வி.மகேஸ்வர னும், சிறப்பு விருந்தின ராக தென்மராட்சி வல யக்கல்விப் பணிப்பாளர் சு.கிருஷ்ணகுமாரும், கௌரவ விருந்தினராக வட பிராந்திய இறைவரித் திணைக்கள உதவி ஆணையாளர் திருமதி சுகிர்ஜினி சர்வேஸ்வர னும் கலந்து கொள்ளவுள் ளனர். (ஐ-9)

## மாதாந்த இசையரங்கு

யாழ்ப்பாணம், பெப். 7
இணுவையூர் ரசிகப் பிரியாசபா கலைவளர்ச்சி மையத்தின் மாதாந்த இசையரங்கு இன்று ஞாயிற்றுக்கிழமை தொல்புரம் சிவபூமி முதியோர் இல்லத்தில் மாலை 4 மணிக்கு நடை பெறும் என ரசிகப்பிரியா சபா கலைவளர்ச்சி மையத்தின் தலைவர் இணுவையூர் வி.கே. குகானந்தன் தெரிவித் துள்ளார்.

(ற-ஐ-ரி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மைத்திரியின் அரசு மீது மோடி அதீத நம்பிக்கை

*ஜனாதிபதியிடம் நேரில் தெரிவித்தார் சுஷ்மா*

கொழும்பு, பெப்.7
இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியும், இந்திய அரசும், இலங்கையின் புதிய ஜனாதிபதி மைத்திரிபால சிறி சேனவின் தலைமையிலான அரசின் மீது அதிகம் நம்பிக்கை



வைத் துள்ளது என்று இந்திய வெளிவிவகார அமைச்சர் சுஷ்மா சுவராஜ் தெரிவித்தார்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறி சேனவின் சிறந்த தலைமைத்துவத்தின் கீழ் இலங்கையில் ஆரம்பிக்கப் படும் புதிய வேலைத்திட்டங்களுக்கு இந்திய அரசு பூரண ஆதரவு வழங்கும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

நேற்றுப் பகல் ஜனாதிபதியின் இல்லத்தில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுடன் இடம் பெற்ற சந்திப்பின்போதே அவர் மேற்படி விடயங்களைக் கூறினார்.

இந்தச் சந்திப்புக் குறித்து ஜனாதிபதி செயலகம் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

இந்தியாவும், இலங்கையும் மிகவும் நெருக்கமான நட்புறவைக் கொண்டாடும் நாடுகள் என்றும் குறிப்பிட்ட இந்திய வெளிவிவகார அமைச்சர், இதன் காரணமாகத்தான் ஜனாதிபதி மைத்திரிபால பதவியேற்றதும் அவரது முத லாவது வெளிநாட்டுப் பயணமாக இந்தியாவைத் தெரிவு செய்தார் என்றும் சுட்டிக்காட்டினார்.

எனவே, இதற்காக இந்தியா சார்பில் தனதுநன்றியையும் தெரிவித்த சுஷ்மா சுவராஜ், அயல்நாடுகள் என்ற ரீதியில் இலங்கைக்கே இந்தியா அதிக முக்கியதுவம் வழங்குகின்றது என்றும் கூறினார்.

அத்துடன் மலையக மக்களின் கல்வி மற்றும் சுகாதார விடயங்களை மேம்படுத்த இலங்கை அரசு எடுக்கும் முயற்சிகளுக்கு இந்திய அரசு பூரண ஒத்துழைப்பை வழங்கும் என்று உறுதியளித்த சுஷ்மா சுவராஜ், இதற்காக ஐடெக் தொழிநுட்ப நிறுவனத்தின் உதவியுடன் நிதி வழங்குவதற்கும் இணக்கம் தெரிவித்தார்.

இந்தச் சந்திப்பில் இந்திய வெளிவிவகார அமைச்சர் சுஷ்மாவுடன், இந்திய வெளிவிவகாரச்செயலாளர் கலாநிதி எஸ்.ஜெய்சங்கர், இலங்கைக்கான இந்தியத் தூதுவர் வை.கே. சிங்ஹா ஆகியோரும் கலந்துகொண்டனர் என அதில் குறிப்பிடப் பட்டுள்ளது. (வ-சி)

**S.K.Broking Institute** பதிவு இல.1442
எம்மிடம் வீடு, காணி விற்பனைக்குண்டு
திருநெல்வேலி, நல்லூர், கோண்டாவில், இராஜ வீதியில் தொகையாக காணிகள் விற்பனைக் குண்டு. கல்வியங்காடு மற்றும் விற்க, விரும்புபவர்களும் எம்முடன் தொடர்புகொள்ளவும்.
077 461 3884, 077 193 3490

**வேலையாள்கள் தேவை**
சண்டிலிப்பாயில் இயங்க இருக்கும் பிரபல உணவகத்துக்கு கீழ்காணும் வேலை ஆள்கள் தேவை
- சமையல் மாஸ்ரர்
- கொத்து மாஸ்ரர்
- சப்ளையர்கள்
- உதவியாளர்கள்

தொடர்பு: உவானந்த யோதிடம்
சீரணி, சண்டிலிப்பாய்
T.P: 077 552 9904
(68737)(10.17)

**SUPER BALL** சுப்பர் போல்
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் 458
சீட்டிழுப்பு திகதி 2016.02.06
வெற்றி இலக்கங்கள்
51 60 69 70 K
அடுத்த திங்கட்கிழமைக்கான ஜக்பொட்
ரூ. 41,741,740/=
தொ.பே: 011 4062002 / 011 4062062 Web: www.dlb.lk

**சனிக்கிழமை அதிர்ஷ்டம்**
வெற்றி வாரம்: 2735 திகதி: 2016-02-06
வெற்றி எண்கள் மற்றும் ஆங்கில எழுத்து
13 43 53 56 D
போனஸ் இல. 24
திங்கட்கிழமை ஜக்பொட் ரூ. 12,194,850/-
தொ.பே: 011 4062002 / 011 4062062 Web: www.dlb.lk
நீல நிற டிக்கட்டுக்கள் 2016.02.08 ஆம் திகதி திங்கட்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

**தவறிவிட்டது**
யாழ். செலான் வங்கியிலிருந்து HNB (மின்சார நிலைய வீதி) வங்கிக்கும் இடைப்பட்ட தூரத்தில் கைச்சங்கிலி ஒன்று தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து தொடர்புகொள்ளவும். சன்மானம் வழங்கப்படும்.
தொடர்பு: 076 63 70 744
(68742)(10.17)

**இலவச கணினி வகுப்புக்கள்**
தரம் 10,11, A/L மாணவர்களுக்கான இலவச கணினி வகுப்புக்கள்
- பெறுமதிமிக்க சான்றிதழ்
- காலம்: 3 மாதம்
- ICT
- Diploma in Ms-Office
- Diploma in Internet Technology

ஆரம்பம்: 08-14.02.2016 சனி, ஞாயிறு
IPS Thirunelveli 0766 852529

**விற்பனைக்கு** தொடர்பு: 077 650 3140
27.சுதுமலை வீதி, மானிப்பாயில் குரும்பவத்தையும் பெரிய வளவும் நி.ப 4 சகல வசதிகளுடன் வீடு விற்பனைக்குண்டு.

**வீடு வாடகைக்கு**
அம்மன் வீதி, திருநெல்வேலியில் அழகிய அமைதியான சூழலில் அமைந்த வீடு ஒன்று வாடகைக்குண்டு.
குடும்பத்தவர்கள் விரும்பத்தக்கது வாடகை பேசித்தீர்மானிக்கப்படும்
தொடர்புகளிற்கு: 077 8554 158, 021 221 9538

**வாடகைக்குண்டு**
இல. 169, நாவலர் வீதி, யாழ்ப்பாணத்தில் கடை வாடகைக்குண்டு.
தொடர்பு: 077 869 1666

**Room for Rent**
இல.1, பலாலி வீதி, 2ஆம் ஒழுங்கையில் புதிதாக கட்டப்பட்ட கட்டடத்தொகுதியை அரச / அரச சார்பற்ற நிறுவனங்களுக்கும், பெண்களுக்கும் வாடகைக்கு கொடுக்கப்படும்.
தொடர்புகளுக்கு: (68731)(10.17)
077 917 8841, 077 9738 214, 077 2198 642

**பிரத்தியேக வகுப்புகள் தரம் 9-11**
கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலம் (தமிழ்/ஆங்கில மொழிமூலம்) ஆகிய பாடங்கள் தனிப்பட்ட ரீதியாகவோ/குழுக்களாகவோ வீடுகளுக்கு வந்து கற்பிக்கப்படும்.
தொடர்புகளுக்கு: 0750 497577 (68729)(10.17)

**விற்பனைக்குண்டு** தொடர்பு: 076 880 7572
BCW- xxxx பென்லி125 மோட்டார் சைக்கிள் விற்பனைக்குண்டு.

**மணமகள் தேவை**
யாழ். இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த தீய பழக்கமற்ற லண்டன் விசாவுள்ள குறுகிய காலத்துக்குள்ளேயே விவகாரத்துப் பெற்ற 37 வயது ஆணுக்கு யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த மணமகள் தேவை. (68533)(2.9.20)
00447448584424(UK)

**வேலை ஆள் தேவை**
நெல்லியடியில் இயங்கும் பேபிநீட்ஸ் கடைக்கு கொம்பியூட்டர் படித்த பெண் பிள்ளை தேவை. சம்பளம் நேரில் பேசித்தீர்மானிக்கப்படும். (68535)(2.9.20)
077 666 1805

**வீடு வாடகைக்குத் தேவை**
நல்லூர் பிரதான வீதியிலும் சங்கானையிலும் வீடு வாடகைக்கு தேவை.
077 468 2951, 077 362 7055

**மணமகள் தேவை**
யாழ்.இந்து. 28.03.1982, கி.பா.16, 5'6" ரேவதி, அரச உத்தியோகம் பார்க்கும் சிவப்பு நிற மணமகனுக்கு வலிகாமம் அல்லது தென்மராட்சியைச் சேர்ந்த அழகான மணமகள் தேவை.
077 879 3563 (68453)(1.10)

**காணி விற்பனைக்கு**
மல்லாவி-துணுக்காய் பிரதான வீதியில் (B232) மல்லாவி பொலிஸ் நிலையத்துக்கு முன்பாக அமைந்துள்ள 32 பரப்பு மேட்டுக் காணி (வீடு மற்றும் கடை கட்ட உகந்த) பரம்பரை உறுதியுடன் விற்பனைக்குண்டு.
[illegible]
077 078 1611 (68524)(10)

**இலங்கையில் முதல் தடவையாக பெண்களுக்கான கல்லூரி**
BRITISH COLLEGE OF BEAUTY STUDIES
வழங்கும் 20 இற்கும் மேற்பட்ட பெண்களுக்கு பொருத்தமான துறைகள்
அழகுக்கலையில் மட்டும் பல பிரிவுகள் எங்களிடம் உள்ளது
Beauty Parlour Open பண்ண விரும்புபவர்கள், நடாத்திக்கொண்டு இருப்பவர்கள், சுயதொழில் செய்ய விரும்புபவர்கள் அனைவரும் இணைய முடியும்.
வயதெல்லை கிடையாது
O/L, A/L எழுதிய மாணவர்களுக்கு விசேட நேரங்கள் அமைத்துத் தரப்படும்.
Thirunelvely Junction, Palaly Road.
T.P: 076 7011 645

**மணிவிழா வாழ்த்துக்கள்**



Best Wishes
36 ஆண்டு கால உன்னதமான கல்விச் சேவையில் 13 ஆண்டுகள் யா/கல்வயல் ஸ்ரீ சண்முகானந்த வித்தியாலய அதிபராக கடமையாற்றி மணிவிழா காணும்
"பிரதீபா பிரபா" இராசரத்தினம் ரவீந்திரன்
அவர்களின் ஓய்வுகாலம் சிறப்புற அமைய மனதார எமது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்வதில் பெரும் மகிழ்ச்சி அடைகின்றோம்.
(60728)(10.17.19)
வாழ்த்துவோர்: கல்வயல் சமூகம்

**வேலைவாய்ப்புக்கள்**
நீங்கள் விரும்பும் உங்கள் தகுதிக்கேற்ப தனியார் வேலைவாய்ப்பினைப் பெற்றுக் கொள்ள இன்றே நாடுங்கள்.
WINSTAR JOB BANK
(முன்னணி வேலைவாய்ப்பு ஆலோசனை நிலையம்)
உடன் உங்கள் சுயவிவரக்கோவையுடன் நேரில் தொடர்பு கொள்ளுங்கள்
WINSTAR JOB BANK
106, தபாற்பெட்டிச்சந்தி, திருநெல்வேலி.
எமது நிறுவனத்திற்கு ஆங்கிலம் பேசக்கூடிய பெண் முகாமையாளர் தேவை.
TP: 021 320 2789 / 076 5450 539

**SINGER FINANCE** இடமிருந்து மட்டுமே
பதிவு செய்யப்பட்ட முச்சக்கரவண்டிக்காக
அதிகடன் தொகை குறைந்த வட்டி வீதத்தில்



தொடர்புகளுக்கு
சுஜந்தன் 077 7 391 449
தர்ஷன் 077 7 009 666
தனு 077 9 357 124
இல.86, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுவிளம்பரங்கள்



## விற்பனைக்கு



**நாய்க்குட்டி விற்பனைக்கு**

3½ மாதம் நிரம்பிய நல்லின அல்சேசன் பெண் நாய்க்குட்டி விற்பனைக்குண்டு.

(68740) (12, 19,20) தொடர்பு: 077 6139 307

**வீடு விற்பனைக்கு** தொடர்பு: 077 622 5033

கற்கோவளம் வராத்துப்பளை இறையில் நல்ல குடிநீர் கொண்ட சகல வசதிகளுடன் கூடிய புதிய வீடு விற்பனைக்கு உண்டு.

(65918) (14,19,20)

**வீடு வளவு விற்பனைக்கு**

யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரிக்கு அண்மையில் K.K.S வீதிக்கு மிகமிக அருகில் 4அறைகள். 2ஹோல், ஒரு குளியலறை, ஒரு சமையலறை, கராஜ். கிணற்றுடன்கூடிய நல்ல வீடு வளவு உடனடி விற்பனைக்குண்டு. வாங்கவிரும்புவோர் 077 905 0274 என்ற தொலைபேசி இலக்கத்துடன் காலை 6 மணிமுதல் காலை 9மணி வரை மட்டும் தொடர்பு கொள்ளவும்.

(c 28004) (14,15) (தரகர்கள் தேவையில்லை)

**காணியுடன் கூடிய வீடு விற்பனைக்கு**

மல்லாகம் புகையிரத நிலையத்திற்கு அருகில் அமைந்துள்ள 4¾ நிலப்பரப்புடைய காணியுடன் கூடிய வீடு விற்பனைக்கு உண்டு. (68549)(2,19,20)

தொடர்பு: 077 614 2130

**வான் விற்பனைக்குண்டு** 075 951 0085

KDH 201 Primeselection PG - XXXX இலக்கமுடைய Box Van விற்பனைக்குண்டு. (68627)(11,19,20)

**வீடு விற்பனைக்கு**

கொக்குவில் ஆடியபாதம் வீதியில் மஞ்சவனப்பதி ஆலயச் சூழலில் ஐந்து அறைகள் மற்றும் சகல வசதிகளுடன் கூடிய ஒரு வீடு விற்பனைக்குண்டு. (07.02.2016 ஞாயிற்றுக்கிழமை மு.பகல் 9.00 மணிமுதல் 1மணிவரை) தொடர்பு கொள்ளவும்.

தொடர்பு: 077 844 5954

**விற்பனைக்குண்டு**

நல்ல இன நாம்பன் கன்றுகள் (1-2 வயது நெருங்கிய) விற்பனைக்கு உண்டு.

075 511 2588 (63641)(11,19)



## தேவை



**தேவை** தொடர்புக்கு: 077 2626 944

சிறிய வைத்திய குடும்பம் ஒன்றிற்கு வீட்டில் தங்கியிருந்து வேலை செய்வதற்கு பணிப்பெண் ஒருவர் தேவை.

**மணமகள் தேவை** தொடர்பு: 077 674 8302

யாழ்.இந்து. லண்டனில் (PR) வசிக்கும் 1982 ஆம் ஆண்டு, பரணி நட்சத்திரமும் 8இல்செவ்வாயுள்ள மணமகனுக்கு ஏற்ற மணமகளை தாயார் எதிர்பார்க்கின்றார். (68706) (14,19,20)

**வீடு வாடகைக்குத் தேவை**

வலி.வடக்கும் அண்டிய பிரதேசத்திலும் சிறிய குடும்பம் வசிப்பதற்கு வீடு வாடகைக்குத் தேவைப்படுகின்றது.

தொடர்பு: 077 348 5856, 072 752 1718

**டிப்பர் தேவை** தொடர்பு: 075 656 3907

3கியூப் டிப்பர் வாகனம் விற்க உள்ளவர்கள் உடனடியாக தொடர்பு கொள்ளவும். (68712) (14,19,20)

**மணமகள் தேவை**

யாழ்.இந்து 1983 ஆம் ஆண்டு கார்த்திகை 4ஆம் பாதமும், சூரியனும் செவ்வாயும் 8ஆம் வீட்டில் சேர்ந்திருக்கும், தனியார் நிறுவனத்தில் உயர்பதவி வகிக்கும் மகனுக்கு 1,2,4,7,8,12 ஆம் வீடுகளில் சூரியனும் செவ்வாயும் சேர்ந்திருக்கும் மணமகளை பெற்றோர் எதிர்பார்க்கின்றனர். (68705) (14,19,20)

தொடர்பு: 075 421 0505/ 076 741 2627

**தேவை** தொடர்பு: 077 659 2941

சாவகச்சேரியில் புதிதாக ஆரம்பிக்கப்படவுள்ள பாதணிகள் விற்பனை நிலையத்திற்கு 22 - 30 வயதுக்கு உட்பட்ட ஆண், பெண் விற்பனையாளர்கள் தேவை. சாவகச்சேரி நகரசபை எல்லைக்குட்பட்ட அனுபவம் உள்ளவர்கள் விரும்பத்தக்கது.

(60727) (14,19,20)



**வீடு வாடகைக்குத் தேவை** 071 241 1234

யாழ்ப்பாணம் ரவுணில் இருந்து 5KM இற்குள் சிறிய வீடு வாடகைக்குத் தேவை.

**வீடு வாடகைக்குத் தேவை**

நெல்லியடி, கரவெட்டி மற்றும் அதனை அண்டிய பகுதியில் வீடு வாடகைக்குத் தேவை.

(14,19,20) தொடர்பு: 076 902 1524

**தேவை** தொடர்பு: 077 025 0339

யாழ்.நகரில் இயங்கும் பிரபல உடற்பயிற்சி நிலையத்திற்கு (Gym) தங்கி நின்று வேலைசெய்யக்கூடிய ஆண் ஒருவர் தேவை.

Gym உபகரணங்கள் விற்பனைக்கும் உண்டு. (68550) (14,19,20)

**பணிப்பெண் தேவை** தொடர்பு: 077 025 0339

சிறிய குடும்பம் ஒன்றிற்கு நன்கு சமைக்கத் தெரிந்த, வீட்டு வேலைகள் செய்யக்கூடிய பணிப்பெண் தேவை. (68701) (14,19,20)

**மணமக்கள் தேவை**

*யாழ்.இந்து கௌரவ குடும்பம் 1979 உத்தராடம், கிரகபாவம். 49, உயரம் 5'8" - BA பட்டதாரி மணமகளுக்கு மணமகன்தேவை.

*1980 - மகம், கிரகபாவம் 26½ உயரம் 5'11" கனடா PR மண மகனுக்கு மணமகள் தேவை.

077 498 8816 (68707)(11,19,20)

## ஏனையவை

**மொழி பெயர்ப்பு** தொடர்பு: 021 221 7925

ஓய்வு பெற்ற ஆசிரியைகள். தமிழிலிருந்து ஆங்கிலத்துக்கும் ஆங்கிலத்திலிருந்து தமிழுக்கும் தரமாக மொழி பெயர்ப்புகள் செய்து கொடுக்கப்படும். (68529)(2,19,20)

**சேவை** தொடர்பு: 076 897 0707

கொழும்பிலுள்ள எங்களது முதியோர் இல்லத்தில் உங்களது அன்பிற்குரிய முதியோரை அன்புடனும் ஆதரவுடனும் அரவணைப்புடனும் வைத்தியர் தாதியர் சேவையுடன் பராமரிக்க தயாராகவுள்ளோம்.

**Majestic Cineplex Jaffna**

**கார்கிள்ஸ் ஸ்குவெயர்**

(யாழ் போதனா வைத்தியசாலை எதிரில்)

இப்பொழுது திரையில்




ப்ரொன்ஸ் 1.15 p.m. / 6.30 p.m.
10.15 a.m. / 4.00 p.m. Fri/Sat/Sun 9.30 p.m

விசாரணை ☎ 021- 2227712

facebook CeylonTheatres
www.ceylontheatres.lk

**வேலைவாய்ப்பு**

புத்தகங்களை கொண்டு சென்று கொடுக்கக் கூடியவர்கள் தேவை. (நடைபாதை வியாபாரம்) (68533)(2,19,20)

077 217 4741

**கடை வாடகைக்கு உண்டு** தொடர்பு: 077 727 3208, 077 394 7929

பலாலி வீதி, யாழ்ப்பாணத்தில் (வைன் ஸ்ரோர்ஸிற்கு எதிரில்) மூன்றுமாடிகளை கொண்ட சகல வசதிகள் உடைய கடை வாடகைக்குண்டு. (68681) (13)

**உணவகத்திற்கு கீழ்க்கண்ட வெற்றிடங்களுக்கு ஆட்கள் தேவை**

* CAPTAINS / STEWARDS
* STORE KEEPER
* DELIVERY BOY
* BILLING CLERK (MALE / FEMALE)
* KITCHEN HELPER

நேர்முகபரீட்சைக்கு சான்றிதழ்களுடன்

08.02.2016 / 09.02.2016 / 10.02.2016

ஆகிய தினங்களில் காலை 10.00 மணி முதல் மாலை 5.00 மணி வரை நேரில் வரவும்.

**SHANMUGAS**
53/3, Ramakrishna Road,
Wellawatte, Colombo - 06
Tel: 0112 361 384

**வாடகைக்கு**

அரச பணிபுரியும் பெண்கள் இருவர் தங்குவதற்கு ஏற்ற அறை, சமையலறை வசதியுடன் நல்லூரில் வாடகைக்கு உண்டு.

தொடர்புக்கு: 077 007 8802

**வேலைவாய்ப்பு**

கணினி ரைப் செற்றிங் செய்வதில் முன் அனுபவம் உள்ளவர்கள் (ஆண்,பெண்) (Pagemaker, Coral Draw தெரிந்திருப்பது அவசியம்) (68532)(2,19,20)

அத்தியடி வீதி, யாழ்ப்பாணம்
071 847 4325

**Japan Cycle Sale**

யாழ்.மண்ணில் மீண்டும் உதயம் Razeek Cycle Bazaar Original Japan Ladies Cycle மலிவான விலையில் Fram, Spoke உத்தரவாதத்துடன் விற்பனை செய்யப்படும்.

தொடர்பு: Naleer - 077 790 5333 (68451) (11,19,20)

**வீடு வாடகைக்கு உண்டு**

யாழ்.மாநகரசபை எல்லைக்குள் சகல வசதிகளும் உடைய வீடு. இணைப்பு வீடு (Anex) வாடகைக்கு விடப்படும். (68704) (14,19,20)

தொடர்பு: 077 313 5795
Email : ramyahenry@hotmail.com

**(ஆண், பெண்) விற்பனையாளர் தேவை**

ஆங்கில அறிவும்/ கணினி அறிவும் கொண்ட விற்பனையாளர் தேவை. யாழ் மாநகரசபைக்கு/யாழ் பல்கலைக்கழகத்திற்கு அண்மையாக இருத்தல் வேண்டும். (68719) (14,19,20)

தொடர்பு: 077 044 4496

**இந்திய சாஸ்திரியார் வருகை**

கிளிநொச்சி புண்ணிய நகருக்கு வருகை தந்துள்ளார். ஓம் சக்தி அருள்வாக்குப் பெற்ற பரம்பரை ஜோதிடர்.

**S.N.குமாரசாமி**

கைரேகை, ஜாதகம், எண் கணிதம் மற்றும் திருமணத் தடை, கல்வித்தடையா? குழந்தைப் பாக்கியம் மற்றும் புதிய தொழில் தொடங்க வேண்டுமா? தொழிலில் முன் னேற்றம் இல்லையா? குடும்பப் பிரச்சினையா? வெளிநாடு செல்லத் தடையா? மன உளைச்சலா? எந்தப் பிரச்சினைக்கும் நேரில் சந்திக்கவும்.

காலை 8.00 மணி முதல் மாலை 5.00 மணிவரை.

இல.300, துர்க்கையம்மன் கோயில் வீதி, உதயநகர் - தெற்கு, கிளிநொச்சி. (63645) (13)

**தேவை**

கொழும்பிலுள்ள பார்மசி ஒன்றுக்கு அனுபவமுள்ள வேலையாள் தேவை. தங்குமிடம் இலவசம் சம்பளம் பேசித்தீர்மானிக்கலாம். (68647)(2,19,20)

077 343 1934

**பணிப்பெண் தேவை**

யாழ்.மாநகரசபை எல்லைக்குள் சுயநினைவுடன் தானே இயங்கக்கூடிய வயோதிபத்தாயை பிற்பகல் 4மணியிலிருந்து காலை 8மணிவரை பராமரிக்கப் பணிப்பெண் தேவை. சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும். (68702) (14,19,20)

தொடர்பு: 077 428 9795

உதயன்
உதயன் விளம்பரத் தொடர்புகளுக்கு:
021 493 1111, 021492 7415
advt@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நாகபூஷணி திருமண சேவை

**மணமகள்களுக்கு பதிவுக்கட்டணங்கள் இலவசம்**
**(03.02.2016 முதல் 12.02.2016 வரை)**

டாக்டர், எஞ்சினியர், எக்கவுண்டன், வங்கி உத்தியோகத்தர், சட்டத்தரணிகள், ஆசிரியர்கள், அரசஉத்தியோகத்தர், தனியார்துறையினர் மற்றும் உள்நாட்டு, வெளிநாட்டு மணமக்கள் ஜாதகங்கள் எம்மிடம் ஏராளமாக உள்ளன. நீங்கள் விரும்பும் மணமகனையோ, மணமகளையோ மிகப்பொருத்தமாக உடன் தெரிவு செய்து தரப்படும்.

- *வாரத்தின் ஏழு நாள்களும் திறந்திருக்கும்.*
- *எமக்கு வேறு எங்கும் கிளைகள் இல்லை.*

383/14 B, கோயில்வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
(நல்லூர் கோயில் வடக்குப் பக்கம்)
தொடர்பு: 021 222 9306, 077 138 7596, 075 554 6000
Email: nakapoosanywedding@gmail.com

## Holy Cross School Of Health Science

**வயோதிபரைப் பராமரிக்கும் தாதிய பயிற்சி நெறி**

**பயிற்சி நெறிக் காலம்** : 9 மாதங்கள்
**பயிற்சி நேர வகுப்புக்கள்** : சனி, ஞாயிறு (மாதங்களில் இரு தடவை)
**விண்ணப்ப முடிவுத்திகதி** : 29.02.2016

க.பொ.த சாதாரண தரத்தில் சித்தி அடைந்தவர்கள் தங்கள் சுயவிவரக்கோவையை திருச்சிலுவை சுகாதார விஞ்ஞான பாடசாலை, இல.767/4, கடற்கரை வீதி, யாழ்ப்பாணம் என்னும் விலாசத்துக்கு சுயவிலாசமிடப்பட்ட முத்திரை ஒட்டப்பட்ட கடித உறையுடன் அனுப்பி வைக்கவும்.

*பணிப்பாளர்:*
**021 300 1102/ 077 115 9391**

(68652)(11)

## பணியாளர்கள் தேவை

கிளிநொச்சியில் புதிதாக ஆரம்பிக்கப்படவிருக்கும் நவீன மாபிள் (Tiles Show room) காட்சியறைக்கு கீழ் குறிப்பிடப்படும் பதவிகளுக்கு பணியாளர்கள் தேவைப்படுகின்றனர்.

- முகாமையாளர் (Manager)
- விற்பனையாளர் (Salesman)
- காசாளர் (Cashier)

மேற்குறித்த பதவிகளுக்கு ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம். கிளிநொச்சி மாவட்டத்தில் வசிப்பவர்கள் விரும்பத்தக்கது. தகுதியும் ஆர்வமும் உடையோர் தங்களது சுயவிவரங்கள் அடங்கிய விண்ணப்பப்படிவங்களை கீழ்க்குறிப்பிடப்படும் முகவரிக்கு 15.02.2016 இற்கு முன் அனுப்பிவைக்கவும்.

**விளம்பர இல. 5091**
C/o, உதயன்,
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

(சி.28996)
(13)

## யாழ் BCAS CAMPUS இல் புதிய பிரிவுகள்...

PEARSON | University of Wolverhampton | London South Bank University



**UK Degree in**
# Quantity SURVEYING
Leading to BSc (Hons)

- அனுபவம் வாய்ந்த சிரேஷ்ட விரிவுரையாளர் குழாம்.
- இலகு தவணைக் கட்டணம்.
- வசதியான நவீன கற்றல் முறை மற்றும் சூழல்.
- பிரசித்தி மற்றும் பெறுமதி வாய்ந்தது.

RECOGNIZED UGC RECOGNIZED

www.bcas.lk

**BCAS CAMPUS**
BRITISH COLLEGE OF APPLIED STUDIES

16, Point Pedro Road, Jaffna
Tel : 021 221 9910
Hotline 077 710 2131

16 YEARS

Colombo | Mt.Lavinia | Kandy | Kurunegala | Jaffna | Batticaloa | Ampara | Qatar

Blessing Hands Mission

YOUTH FEST
JAFFNA - 2016

THMC

# வாலிபர் விழா-2016

## எழுந்து வாருங்கள்! ஒன்று சேருங்கள்! வாழ்வை வளமாக்குங்கள்!

## 2016 ஏப்ரல்

| 21 | 22 | 23 |
|---|---|---|
| வியாழன் | வெள்ளி | சனி |
| பி.ப.3.00 | பி.ப.3.00 | காலை 9.00 |

**அனுமதி இலவசம்**

**இடம்:** சென் ஜோன்ஸ் கல்லூரி மைதானம், யாழ்ப்பாணம்.

## அனைவரையும் அன்புடன் வரவேற்கின்றோம்

மேலதிக விபரங்களுக்கு
0777 164 226 0773 211 923

www.thmc.net
www.blessinghands.de

(68655)(10.17.19)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பணியாளர் தேவை

யாழ் நகரில் இயங்கிக் கொண்டிருக்கும் பிரபல வர்த்தக நிறுவனம் ஒன்றிற்கு கணக்கு பதியுநர் (பெண்கள்) தேவைப்டுகின்றனர். க.பொ.த உயர்தரப் பிரிவில் கணக்கியலும் வர்த்தகம் கற்றவர்களும் HNDA துறையினைப் பூர்த்தி செய்தவர்களும் கணக்கு பதிதலில் அனுபவம் உள்ளவர்களும் தமது சுயவிவரம் அடங்கிய விண்ணப்பத்தினை கீழ்க் குறிப்பிடப்படும் முகவரிக்கு 15.02.2015 க்கு முன் விண்ணப்பிக்கவும். (c 28995) (14, 19)

விளம்பர இல - 5090
C/O உதயன் கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

## ஆசிரியர் தேவை

குருநாகல் மாவட்டத்தின் முன்னணிக் தமிழ் மொழிமூலத் தேசிய பாடசாலையான சியம்பலாகஸ் கொட்டுவ மதீனா தேசிய பாடசாலையில் க.பொ.த உயர்தர வகுப்புக்களுக்கு உயிரியல் பாடம் கற்பிப்பதற்கான பட்டதாரி ஆசிரியர் தேவை. (68713) (12 19.20)

077 895 9790 ,037 2247 530


## தேங்காய் திருடிய இரு ஊழியர்கள் கைது

காலி, உடுகம நாகொட பகுதியில் உள்ள அரசுக்குச் சொந்தமான தென்னந் தோட்டத்தில் தேங்காய் திருடிய சம்பவம் தொடர்பில் நாகொட பிரதேச சபையில் பணி புரியும் இரண்டு ஊழியர்களும் பிரதேச சபை அரசியல்வாதியின் தோட்டத்தில் தொழில் புரியும் ஒருவரும் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சீனிகம ஆலயத்தில் உடைப்பதற்காக இந்தத்தேங்காய் திருடப்பட்டுள்ளது என்று பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது.

கூட்டு எதிர்க்கட்சியினர் நேற்று சீனிகம ஆலயத்தில்700தேங்காய்களைஉடைத்து வழிபாடு நடத்தியுள்ளனர். சீனிகம ஆலயத்தின் பிரதான பூசாரி யின் நெருங்கிய உறவினர் ஒருவர் உயிரிழந்ததால் நேற்று ஆலயத்தின் கருவறை மூடப்பட்டிருந்தது என்றும் ஒரு லட்சம் தேங்காய்களை உடைக்க போவதாக கூட்டு எதிர்க்கட்சி கூறிய போதிலும் 700 தேங்காய்கள் மாத்திரமே உடைக்கப்பட்டன என்றும் ஆலயத்தின் தகவல்கள் தெரிவிக்கின்றன. (ற)


## மகப்பேறு இனவிருத்தி நிலையம்

மகளிருக்கு குழந்தைப் பருவம் தொடக்கம் முதுமை வரையிலான பிரச்சினைகளையும் அடிக்கடி ஏற்படும் அடி வயிற்றுநோ, கருச்சிதைவு, மாதவிடாய் உட்பட சகல விதமான பிரச்சனைகளுக்குச் சிகிச்சையளித்தலும் மகப்பேறு இனவிருத்திக்கான சிகிச்சைகளும் IVF,ICSI யும் கொடை முட்டை (donaor egg) விந்து நன்கொடை (donor sperm) போன்ற சிகிச்சைகளை ஐக்கிய இராட்சியத்தில் UK 40 வருட அனுபவம் கொண்ட வைத்திய நிபுணர் சதானந்தம் அவர்கள் திருநெல்வேலி **நொதேன் சென்றல் வைத்தியசாலையில்** அளித்து வருகின்றார். சென்ற மாதம் இவரின் சிகிச்சை மூலம் இரு தாய்மாருக்கு சோதனைக் குழாய் மூலம் குழந்தைகள் பிறந்தது யாவரும் அறிந்ததே.

**தொடர்புகளுக்கு திருமதி கௌரி**
இல: 077 343 9988, 021 221 9988,
021 221 9977, 021 222 2263
(c 29031)(12.16.18)

## நீரிழிவு நோய் தொடர்பான விழிப்புணர்வு அவதானம்

அதிகளவு சீனிப்பண்டங்களை உண்பதனால் நீரிழிவு நோய் ஏற்பட்டு விரைவாக மரணம் ஏற்படலாம்.

**Sugar kills, consume with**

அனுசரணை: SAAI TILE & BRICKS
Show Room
No. 80, Point Pedro Road, Jaffna.
Tel: 021 222 4549, 021 3737605, 021 222 2866

# GREEN CARD TO USA
## அமெரிக்கன் கிரீன் காட்

NOW accepting applications for USA green card UNDER THE UNSKILLED WORKER EB3 PROGRAM

- One year any experience
- No English tests required
- Job in Florida
- Under 55 years
- Residency for full family in 18 months
- 75 applications to be filled by March 2016 - On first come first serve basis

Date : 21 Feb 2016 Time : 9.30 am
Venue : Ramada Hotel, Persian Room, Colombo 3
Seminar fee of Rs. 1,000/- payable at the door
Private Consultations after seminar
Book your Seat
Phone : 0717 583683
E mail : sharmila@annarbour.com

Canadian Immigration Consultant,
Sharmila Perera (Canada License: R417167)
USA Immigration Lawyer,
Antonin Favreau (USA License-6134691)
Don't Miss out

ANN ARBOUR CONSULTANTS INC
Canadian Immigration Consultants To The World
www.annarbour.com

## வேலையாள்கள் தேவை

எமது நிறுவனத்துக்கு 21 வயதுக்கு மேற்பட்ட, சாரதி அனுமதி பத்திரம் உடைய, தமிழ், சிங்களம், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் தேர்ச்சி பெற்ற, பூரண கணினி அறிவுடைய விற்பனை துறையில் அனுபவம் உடைய விற்பனை மேற்பார்வையாளர் தேவை. மற்றும் 21 வயதுக்கு மேற்பட்ட சாரதி அனுமதிப்பத்திரம் உள்ள விற்பனை உதவியாளர் தேவை உடன் விண்ணப்பிக்கவும். (68711) (14,17,19,20)

தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி
G.H.A. DE Silva.Co
இல.64, பசார் வீதி, வவுனியா.
024 222 2319, 077 296 0787

## மணமகள் தேவை

யாழ்.நாச்சிமார் கோயிலடி. கொக்குவிலைச் சேர்ந்த இந்து தமிழ் - computer Engineer UK PR, ஆயிலியம் - 1975(5'4") நற்குணமுள்ள மணமகனுக்கு ஓரளவு ஆங்கில அறிவுள்ள -IELT/A சான்றிதழ் உள்ள Teaching, Nursing, Accounting, Computing தகைமை உடைய குணமான மணமகள் உள்நாட்டிலோ வெளிநாட்டிலோ தேவை. **(விவாகரத்துப் பெற்றவர்களும் விரும்பத்தக்கது)**

தொடர்பு: 0044 743 826 5672 -UK
vijey40@hotmail.com
021 492 5047


## கேள்விக்கான கோருதல்

Swiss Labour Assistance SAH

**சுவிஸ் லேபர் அசிஸ்ரன்ஸ் (SAH)**
**கிளிநொச்சி - 021 228 5626**

01. வதிவிட பிரதிநிதி (Country Representative- SAH) பெறுகைக்குழு சார்பில் நாச்சிக்குடா சந்தி, முழங்காவில் பகுதியில் அமைந்துள்ள தையல் கம்பனிக்கு கீழ்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட வேலைகளுக்காக தகுந்த தகைமையுடைய கேள்வியாளர்களிடமிருந்து குறியீடு செய்யப்பட்ட கேள்விகளை கோருகின்றனர்.
02. கேள்வியானது தேசிய போட்டி விலைக்கேள்வியின் மூலம் நடாத்தப்படும்.
03. கேள்வியாளர்கள் நிர்மாணப் பயிற்சி நிறுவனத்தில் (ICTAD) கட்டடம் நிர்மாணிப்பதற்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள தரத்தினை அல்லது அதற்கு மேல் பதிவு செய்யப்பட்டதும், கறுப்பு பட்டியலில் பெயர் இடம்பெறாதவராயிருத்தலும் வேண்டும்.
04. தகைமைகள் பற்றிய தேவைப்பாடுகள் கேள்வி ஆவணத்தில் பகுதி IV (Section IV) இலும், மேலதிக தகவல்கள் பகுதி ஏ (Section V) / கேள்வித் தரவுகள் மற்றும் ஒப்பந்த தரவுகளிலும் உள்ளடக்கப்பட்டுள்ளது.
05. அக்கறை கொண்டுள்ள தகைமையுடைய கேள்வியாளர்கள் கீழ்வரும் விலாசத்தில் மேலதிக தகவலைப் பெறலாம் என்பதுடன் இம் முகவரியில் 9.00 மணியிலிருந்து 15.00 மணிவரை அலுவலக நாள்களில் கேள்வி ஆவணங்களைப் பரிசோதனை செய்யலாம்.

    இல : 232, சுவிஸ் லேபர் அசிஸ்ரன்ஸ் - SAH, திருநகர், கிளிநொச்சி
    தொலைபேசி இல : 021-2285626 / 077-7260672

06. அக்கறை கொண்டுள்ள கேள்வியாளர்களினால் எழுத்து மூலமான விண்ணப்பத்துடன் ரூபா 1000 (ஆயிரம்) செலுத்தி ஆங்கில மொழியிலான கேள்வி ஆவணங்களின் பூரணமான தொகுதி ஒன்றை மேற்குறிப்பிட்ட முகவரியில்2016.02.08 முதல் 2016.02.15 வரை 9.00 மணியிலிருந்து 15.00 மணி வரையான காலப்பகுதியில் பெற்றுக்கொள்ளலாம்.
07. கேள்விகள் 2016.02.15 ஆம் திகதியன்று 15.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் இல : 232, சுவிஸ் லேபர் அசிஸ்ரன்ஸ் - SAH, திருநகர், கிளிநொச்சி எனும் முகவரியில் நேரடியாகவோ அல்லது பதிவுத்தபால் மூலமாகவோ இரு பிரதிகளில் ஒப்படைத்தல் வேண்டும். காலந்தாழ்த்தப்பட்ட கேள்விகள் நிராகரிக்கப்படும். நேரடியாக கீழே உள்ள முகவரிக்கு வருகைதர விரும்பும் கேள்வியாளர்களின் பிரதிநிதிகளது சமூகத்தில் கேள்வி கோரல் முடிவுற்ற உடனேயே கேள்விகள் திறக்கப்படும்.
08. கேள்வி தொடர்பான முதற் கூட்டம் இல : 232, சுவிஸ் லேபர் அசிஸ்ரன்ஸ் - SAH, திருநகர், கிளிநொச்சி எனும் முகவரியில் 2015.02.11 அன்று காலை 10.30 மணிக்கு நடைபெறும்.
09. கேள்வி செல்லுபடியாகும் காலப்பகுதி விலைமனுவின் இறுதிநாளிலிருந்து மூன்று மாதங்களாகும்.
10. சகல கேள்விகளுக்கும் கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டவாறான கேள்விப் பிணைப்பொறுப்பு இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.
11. ஒவ்வொரு கேள்விகளுக்கும் தனித்தனியே பகுப்பாய்வு செய்யப்பட்டு ஏற்புத்தன்மையுடைய குறைந்த பகுப்பாய்வு செய்யப்பட்ட கேள்வியுடைய ஒப்பந்தகாரர் தெரிவு செய்யப்படுவார்.

| கேள்வி அடையாள இல. | வேலை விவரம் | மொத்த மதிப்பீட்டுத் தொகை (மில்லியன்) | ஒப்பந்த காலம் | தேவையான தரம் | கேள்விப்பிணை விவரம் | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | பிணை வைப்பு | செல்லுபடியாகும் காலம் |
| SAH/ NORTH/1140 | தையல் கம்பனிக்கான கட்டடம் | 4.1 | 4 மாதங்கள் (120 நாள்கள்) | C7 அல்லது அதற்கு மேல் | 41, 000.00 | 2016.04.15 |

**தொடர்புகளுக்கு** : இல : 232, சுவிஸ் லேபர் அசிஸ்ரன்ஸ் - SAH, திருநகர், கிளிநொச்சி,
தொலைபேசி இல : 021-2285626 / 077-7260672 (68523)(13.19.20)


## இலவச நூல் வெளியீடு

**வைத்தியக் கலாநிதி**
**இ.தெய்வேந்திரன் எழுதிய**
**"சமகால சுகாதாரப் பிரச்சினைகளும் அவற்றைத் தீர்க்கும் வழிமுறைகளும்"**
**இவ்வெளியீட்டினைப் பெறவிரும்புவோர் தொடர்புகொள்ளவேண்டிய முகவரி**
**யாழ். ஜெய்ப்பூர் வலுவிழந்தோர் புனர்வாழ்வு நிறுவனம்**
**இல.05, பழைய பூங்கா வீதி, சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.**
**தொ.பே. இல. 021 222 2574** (சி.28797) (13.15.18)

## கடைக்கட்டடம் வாடகைக்கு



சாவகச்சேரி A9வீதியில் ஆதார வைத்திய சாலைக்கு அருகில் இரண்டுமாடி கடைக் கட்டடம் சகல வசதிகளுடனும் வாடகைக்கு உண்டு. வாகனத் தரிப்பிட வசதியுண்டு அரச மற்றும் அரசசார்பற்ற நிறுவனங்கள் விரும்பத்தக்கது.

தொடர்பு: 021 227 0728 (68464) (13.19.20)

## GENARATER FOR SALE

USED GENARATER SETS FOR SALE
60 KVA - 230 KVA - 450 KVA
CONTACT:
077 735 5691
077 779 9253, 077 755 5098


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




வவுனியா - யாழ்ப்பாணம் பயணிக்கும் இலங்கை போக்குவரத்து சபைக்கு சொந்தமான அரச பஸ்ஸொன்றில் தமிழ் மாவட்டத்தினுடைய பெயர் எழுத்துப் பிழைகளுடன் காணப்பட்டது. வவுனியா என்று எழுதப்படுவதற்கு பதிலாக வவுநியாவ என்று எழுதப்பட்டிருந்தது. (ற-ஐ-402)

# அரசமைப்பு கருத்தறியும் அமர்வில் அனைவரும் தவறாது பங்குகொள்க

## கிளிநொச்சி மாவட்ட பிரசைகள் குழு வேண்டுகோள்

கிளிநொச்சி.பெப்.07
வடக்கு மாகாணத்தின் இரண்டாவது அமர்வாக நாளை கிளிநொச்சியில் நடைபெற உள்ள அரசமைப்பு சீர்திருத்தம் தொடர்பான மக்களுடைய கருத்துக்களை கேட்டறியும் விசேட அமர்வுக்கு கிளிநொச்சியை சேர்ந்த அனைவரும் தவறாதுகலந்துகொண்டு நாட்டினுடைய அரசமைப்பு சீர்திருத்தம் தொடர்பிலும், தேசிய இன பிரச்சினைக்கான தீர்வு தொடர்பிலும் கருத்துக்களை முன்வைக்குமாறு கிளிநொச்சி மாவட்ட பிரசைகள் குழு கேட்டு கொண்டுள்ளது.

> “இலங்கை வரலாற்றில் முதற் தடவையாக அரசியல் அமைப்பு சீர்திருத்தத்துக்கான அமர்வு இடம்பெறுகின்றது. எனவே இந்த சந்தர்ப்பத்தை தமிழ் மக்கள் தவறாது பயன்படுத்தி கொள்ள வேண்டும்”

மாவட்டத்தைச் சேர்ந்த புத்திஜீவிகள், மதகுருமார்கள், பொது அமைப்புக்களைச் சேர்ந்தவர்கள், அதனுடைய பிரதிநிதிகள், மற்றும் பொதுமக்கள் கட்டாயமாகக் கலந்துகொள்ள வேண்டும் என்றும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.நாட்டின் அரசியல் அமைப்புக் கான புதிய அரசியல் அமைப்பு சீர்திருத்தத்துக்கான மக்களுடைய கருத்துக்களை கேட்டறியும் குழு நாளை கிளிநொச்சியில் தனது அமர்வை முன்னெடுக்க உள்ள நிலையில் கிளிநொச்சி மாவட்ட பிரசைகள் குழுவால் விடுக்கப்பட்டுள்ள ஊடக அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப் பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப் பட்டுள்ளதாவது:-
நாட்டில் நீண்டகாலமாக புரையோடியுள்ளதேசிய இனப் பிரச்சினைக்கான தீர்வை எட்டுவதற்கும், தமிழ் மக்கள் தமது அரசியல் அபிலாசைகளை பூர்த்தி செய்து நாட்டில் சுதந்திரமாகவும், கௌரவமாகவும் வாழ்வதற்கும், நாளை இடம்பெறும் இந்த அரசியல் சீர்திருத்த அமர்வை அனைவரும் முழுமனே பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

இலங்கை வரலாற்றில் முதற் தடவையாக அரசியல் அமைப்பு சீர் திருத்தத்துக்கான அமர்வு இடம்பெறுகின்றது. எனவே இந்தச் சந்தர்ப்பத்தை தமிழ் மக்கள் தவறாது பயன்படுத்தி கொள்ள வேண்டும்- என்றுள்

# நல்லாட்சி திட்டங்களுக்காக சனசமூக நிர்வாக தெரிவுகள்

## அபிவிருத்தி அலுவலரால் முன்னெடுப்பு

சாவகச்சேரி.பெப்.7
சாவகச்சேரி நகரசபையால் இந்த வருடம்மேற்கொள்ளப்படவுள்ள அனைத்து நல்லாட்சி வேலைத் திட்டங்களுக்காக அந்தந்தப் பிரிவில் உள்ள தேவைகளை இனங்கண்டு அறிவிக்கும் பொருட்டு அனைத்து சனசமூக நிலையங்களுக்குமான நடப்பு வருட நிர்வாகத் தெரிவுகள் நகர சபையின் சனசமூக அபிவிருத்தி அலுவலர் மூலம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அந்தந்த சனசமூக நிலையங்களின் எல்லைக்குள் காணப்படும் வீதி விளக்குகள், திண்மக் கழிவகற்றல், அனுமதியற்ற கட்டடங்கள் அமைத்தல் போன்றவற்றின் கண்காணிப்புக்களை மேற்கொள்வதுடன் அந்தப் பகுதிகளில் மேற்கொள்ளப்படவுள்ள வீதி மற்றும் அபிவிருத்தி வேலைகள் தொடர்பான முன்மொழிவுகளை சமர்ப்பிக் கும் பொறுப்பும் சனசமூக நிலைய நிர்வாகத்தினரிடம் கையளிக்க நகரசபை நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

சாவகச்சேரி நகரசபையின் சுத்தமான நகரம் மற்றும் ஒளிமயமான நகரம் திட்டத்தை மேற்கொள்ள சனசமூக நிலையங்களின் பங்களிப்பு அவசியம் என்பதால் நகரசபையுடன் செயற்படக்கூடிய நிர்வாகத்தினரைத் தெரிவு செய்து சபையால் மேற்கொள்ளப்படவுள்ள நல்லாட்சி செயற்றிட்டங்களுக்கும் பங்களிக்குமாறு நகர சபைச் செயலாளர் கா.சண்முகதாசன் அறிவித்துள்ளார்.

நகரசபை எல்லைக்குள் இயங்கும் 21 சனசமூக நிலையங்களின் தெரிவுகளை பெப்ரவரி மாத இறுதிக்குள் மேற்கொள்ள வேண்டுமென அறிவிக்கப்பட்டதையடுத்து, அனைத்து சனசமூக நிலையங்களும் நிர் வாகத் தெரிவுகளை சனசமூக அபிவிருத்தி அலுவலர் திருமதி செ.ஜெகதீசன் முன்னிலையில் நடத்தி வருகின்றனர். (ற-ஐ-9)

# பொம்மைவெளி, புதுக்குடியிருப்பில் முஸ்லிம்களை மீள்குடியமர்த்துங்கள்

யாழ்ப்பாணம்,பெப்.7
பொம்மைவெளி, புதுக்குடியிருப்பு போன்ற பகுதிகளில் முஸ்லிம்கள் குடும்பங்கள் மீள்குடியமர்வு செய்யப்பட வேண்டும் என முஸ்லிம்கள் மீள்குடியேற்றக் குழுவின் உறுப்பினர்கள் கோரியுள்ளனர். கடந்த திங்கட்கிழமை யாழ். பிரதேச செயலகத்தில் நடைபெற்ற ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்திலேயே இவ்வாறு கோரிக்கை விடுக்கப்பட்டது.

1990 ஆம் ஆண்டு இங்கிருந்து 3 ஆயிரத்து 50 முஸ்லிம் குடும்பங்கள் வெளியேறியுள்ளனர். மீண்டும் 2002 ஆண்டு சமாதானத்துக்குப் பின்னர் 2 ஆயிரத்து 175 குடும்பங்கள் மீள்குடிமர்ந்துள்ளனர்.

தற்பொழுது 590 குடும்பங்கள் இங்கு வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். நல்லாட்சி அரசின் ஆட்சியில் இங்கு மீள்குடிமர்வதற்கு அதிகமான முஸ்லிம்கள் காத்திருக்கின்றனர். அவர்கள் இங்கு வந்து குடியமர்வதற்குக் காணிகள் வேண்டும். பொம்மைவெளி, புதுக்குடியிருப்பு பிரதேசங்களில் காணிகளை எங்களுக்காக ஒதுக்கித் தாருங்கள். அந்தக் காணிகள் ஏற்கனவே வயல்காணிகளாக இருந்த போதும் தற்போது அந்தக் காணிகளில் விவசாயம் செய்யமுடியாது என விவசாய சம்மேளனம் அறிக்கை சமர்ப்பித்துள்ளது.

இதனைக் கருத்தில் கொண்டு அங்கு குடியேறுவதற்கு பல வழிகளிலும் முயற்சி செய்தும் இதற்கு இன்னும் ஒரு தீர்வும் காணமுடியாமல் உள்ளது. ஜே/86, 87, 88 கிராமசேவையாளர் பிரிவுகளில் கிட்டத்தட்ட 100 குடும்பங்களுக்கு மேற்பட்ட குடும்பங்கள் பதிவு செய்யப்பட்டும் புனர்வாழ்வு அமைச்சால் கொடுக்கப்பட்ட நிதி இன்னும் முழுமையாக அவர்களுக்குச் சென்றடையவில்லை.

இதனையும் கருத்தில் கொண்டு அதற்கான ஒரு தீர்வையும் பெற்றும் தாருங்கள்.- என்று கோரிக்கை விடுக்கப்பட்டது. இதற்குப்பதிலளித்த இணைத் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான மாவை சேனாதிராசா,முன்னர் முஸ்லிம் குடும்பங்கள் இருந்தமைக் கான காணி உரிமங்கள், இடங்களை, தற்போது குடியமரக் கூடிய இடங்கள் என்பவற்றை அடையா ளப்படுத்துங்கள். அதன் பிறகு அதற்கான ஒரு தீர்வைப் பெற்றுத் தர உங்களுக்கு ஒத்துழைப்பு தரப்படும்- என்றார். (ற-ஐ-ரி)

# தடையை மீறி மணற்குடியிருப்பில் மீண்டும் திறந்திருக்கும் மதுக்கடை

## உடன் நடவடிக்கை எடுக்குமாறு கோரிக்கை

முல்லைத்தீவு.பெப்.7
முல்லைத்தீவு மாவட்டச் செயலகத்தால் விடுக்கப்பட்ட தடை அறிவித்தலையும் மீறி மணற்குடியிருப்பு பகுதியில் உள்ள மதுபானச்சாலை தொடர்ச்சியாக இயங்கி வருகின்றது என்று சுட்டிக்காட்டியுள்ள வடக்கு மாகாண சபை உறுப்பினர் து.ரவிகரன், அதனை மூடுவதற்கான நடவடிக்கையை உடன் எடுக்க வேண்டும் என்றும் கோரிக்கை விடுத்துள்ளார்.

இதுகுறித்துக் கருத்துத் தெரிவித்த முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபர் ரூபாவதி கேதீஸ்வரன், மதுபான சாலையை மூடுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது என்றும் நாளை திங்கட்கிழமை வரை கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளது என்றும் அதன்பின்னர் மூடப்படாது விட்டால் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் தெரிவித்தார். கடந்த மாதம் 24 ஆம் திகதி முல்லைத்தீவு மாவட்டத்தின் நகரப்பகுதியான மணற்குடியிருப்பு பகுதியில் குறித்த மதுபான சாலை அமைக்கப்பட்டது.

இதற்கு மிக அருகில் சிறுவர் பூங்கா உள்ளதால் இந்த இடத்தில் மாலை நேரத்தில் பெற்றோர்கள் தங்களுடைய பிள்ளைகளை அழைத்து வந்து மகிழ்வூட்டுகின்றனர். முல்லைத்தீவு பகுதியின் சுற்றுலாப்பகுதியாகவும் இந்த வெளி காணப்படுகிறது. இதை விட சைவ, கத்தோலிக்க மற்றும் இஸ்லாம் மத அமைவிடங்களுடன் சுனாமி நினைவாலயம், சிறுவர் முன்பள்ளி மற்றும் கச்சேரி என்பவை 500 மீற்றர் தூரத்துக்குள் உள்ளன. இவற்றைக் கருத்தில் கொண்டு குறித்த மதுபானசாலையை மூடுவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு மக்கள் பிரதிநிதிகளாலும், பொது அமைப்புகளாலும் முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபரிடம் மனுக்கள் கையளிக்கப்பட்டிருந்தன. அத்துடன் கடந்த மாதம்இடம் பெற்ற முல்லைத்தீவு மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்தின் போதும் குறித்த மது பான சாலை தொடர்பாக விடயங்கள் பேசப்பட்டன.

இந்த நிலையில் குறித்த மது பான சாலையை தற்காலிகமாக மூடுமாறு, முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபரால் குறித்த மது பான சாலை நிர்வாகத்தினருக்கு நேற்றுமுன்தினம்கடிதம் ஒன்று அனுப்பப்பட்டிருந்தது. நேற்று முன்தினம் மதுபானசாலை மூடப்பட்டுக் காணப்பட்ட நிலையில், நேற்று இரவு திடீரென குறித்த மதுபானச் சாலை திறக்கப்பட்டுள்ளது. இதுகுறித்து முல்லைத்தீவு இளைஞர்களால் வடக்கு மாகாண சபை உறுப்பினர் து. ரவிகனுக்கு வழங்கப்பட்ட தகவலை அடுத்து அவர் நேரில்சென்று மதுபானச்சாலை திறக்கப்பட்டுள்ளதை உறுதிப் படுத்தியுள்ளார்.

மக்களின் ஒருமித்த எதிர்ப்பின் பலனாக மாவட்டச் செயலகத்தால் குறித்த மதுபானச்சாலைக்கான மதுபான விற்பனை அனுமதிப்பத்திரங்கள் தற்காலிகமாக நிறுத்திவைக்கப்பட்டுள்ளன. எனினும் இன்று (நேற்று) அதனை மீறும் வகையில் நேற்று மது பானச் சாலை திறந்திருந்தது. இனியும் தொடருமாக இருந்தால் மதுபானச்சாலை அந்தப் பகுதியில் இருந்து அகற்றப்படும் வரை மக்களின் எதிர்ப்போடு எனது எதிர்ப்பும் இணைந்திருக்கும்.- என்று மாகாண சபை உறுப்பினர் து.ரவிகரன் தெரிவித்தார். முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தால் விடுக்கப்பட்ட தடைகளையும் மீறி மதுபான சாலை திறக்கப்பட்டுள்ளமை தொடர்பாக முல்லைத்தீவு மாவட்ட அரசஅதிபரிடம்தொடர்புகொண்டு கேட்டபோது; மதுபான விற்பனை நிலையத்தினருக்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. அந்தக் கடிதம் கிடைக்காததால் நேற்று குறித்த மது விற்பனை நிலையம் திறக்கப்பட்டிருக்கலாம். ஆனால் நாளை திங்கட்கிழமை வரைக்கும் அவர்களுக்கான கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளது. அதற்குப் பின்னரும் மதுபான விற்பனை நிலையம் திறந்திருந்தால் அதற்குரிய நடவடிக்கை எடுக்கப்படும்- என்றார். (ஐ-21)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT

## தொண்டர் ஆசிரியர்கள் கலந்துரையாடல்

கிளிநொச்சி.பெப்.7
கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த தொண்டராசிரியர்களுக்கான அவசர கலந்துரையாடல் ஒன்று எதிர்வரும் திங்கட்கிழமை கிளிநொச்சியில் இடம்பெற உள்ளது என்று தொண்டராசிரியர் சங்க தலைவர் ஜெயராஜ் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி மத்திய மகா வித்தியாலயத்தின் முன்பாக உள்ள தனியார் கல்வி நிலையத்தில் திங்கட்கிழமை காலை 9 மணிக்கு குறித்த அவசரக் கலந்துரையாடல் இடம்பெற உள்ளது.

தொண்டராசிரியர்களின் பிரச்சினைநீண்டுகொண்டு செல்கின்றனது என்றும், சாதகமான எந்த பதிலும் கிடைக்கப் பெறாததாலும் நிரந்தர நியமனம் தொடர்பான அடுத்தக் கட்ட நடவடிக்கைகள் தொடர்பாக அவசரமான கலந்துரையாடுவதற்குமே இந்தக் கலந்துரையாடல் ஏற்பாடு செய்துள்ளதாகவும், கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த தொண்டராசியரியர்கள் அனைவரும் இதில் கலந்து கொள்ளுமாறும் தொண்டராசியரியர் சங்க தலைவர் ஜெயராஜ் கேட்டு கொண்டுள்ளார். (ந-21)

## கட்டடம் திறப்பு

வவுனியா பூவரசங்குளம் ஆரம்பப்பாடசாலையின் இரு மாடி கட்டடத்தொகுதி நேற்று திறந்து வைக்கப்பட்டது.

பாடசாலை அதிபர் ரவிச்சந்திரன் தலைமையில் நடைபெற்ற திறப்பு விழாவில்வன்னிநாடாளுமன்ற உறுப்பினரும் இணைத் தலைவருமான கே.கே.மஸ்தான், வன்னி நாடாளுமன்றஉறுப்பினர்சிவசக்தி ஆனந்தன், வட மாகாண சபை உறுப் பினர்களான தியாக ராஜா, இந்திரராசா, ந.ராஜாஆகியோரால்திறந்து வைக்கப்பட்டது. (ந-21)

# நெல் விளைச்சல் அமோகம் சந்தைப்படுத்தலில் சிரமம்

## கிளிநொச்சி விவசாயிகள் திண்டாட்டம்


கோப்புப் படம்

“ களஞ்சியசாலைகளில் 2014 மற்றும் 2015 ஆம் ஆண்டு சிறுபோக,கால போக நெல் தேங்கியுள்ளது. அவற்றை நட்டத்தின் மத்தியில் விற்கத் தீர்மானித்தபோதும் மில் உரிமையாளர்கள் கொள்வனவு செய்யவில்லை என்கின்றனர் நெல் சந்தைப்படுத்தும் சபையினர். ”

கிளிநொச்சி.பெப்.7
2015-2016 கால போகத்தில் கிளிநொச்சி மாவட்டத்தில் 51 ஆயிரம் ஏக்கர் நிலப்பரப்பில் நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. அதன் மூலம் 59 ஆயிரம் மெற்றிக்தொன் விளைச்சல் பெறப்பட்டுள்ளது.- இவ்வாறு கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் தெரிவித்தார்.

அதேவேளை, நெற்செய்கையில் அதிக விளைச்சல் கிடைத்துள்ளது என்று தெரிவித்துள்ள விவசாயிகள், தாம் நெல்லைச் சந்தைப்படுத்த முடியாது திண்டாடுகின்றோம் என்றும், அதிகாரிகள் இதுவரை அதற்குரிய தீர்வை வழங்காதுள்ளனர் என்றும் கவலை வெளியிட்டுள்ளனர்.

ஒரு ஏக்கர் விவசாயம் செய்வதற்கு சுமார் 25 ஆயிரம் ரூபா தேவை. ஒரு ஏக்கரில் நெல் விதைக்க சுமார் 6 ஆயிரம் ரூபாவும், அறுவடையின் போது இயந்திரத்துக்காக 7 ஆயிரம் ரூபாவும், மனித வள கூலி யாக 3 ஆயிரம் ரூபாவும் செல விடப்படுகின்றது. அதனை விட மிகுதி 9 ஆயிரம் ரூபா பசளைக்காகவும், புல் பிடுங்குவதற்கும், களை நாசினிகளுக்காகவும் செலவிடப்படுகின்றது.

ஒரு ஏக்கரில் எந்த பாதிப்பும் இல்லாமல் நெல் விளையுமானால் சுமார் 20 மூடை நெல் பெறப்படும். அவை உரிய விலையில் சந்தைப்படுத்தப்படுமானால் ஒரு ஏக்கர் நெல்லுக்கு அதாவது குறித்த 20 மூட்டை நெல்லுக்கு 40 ஆயிரம் ரூபா கிடைக்கும். இலாபமாக 15 ஆயிரம் ரூபாவே கிடைக்கின்றது. இந்த 15 ஆயிரம் ரூபா தான் நாங்கள்வயலிலேமூன்றுநான்குமாதங்களாக பாடுபட்டதற்கு கிடைக்கும் இலாபம். ஆனால், தற்போது விளைச்சல் அதிகமாக இருக்கின்றது. ஆனால் அதை உரிய விலையில்சந்தைப்படுத்துவதற்கு தான் முடியவில்லை என்று கூறு

“ ஒரு ஏக்கரில் நெல் விதைப்பதற்கு 25 ஆயிரம் ரூபா தேவை. ஒரு ஏக்கரில் எந்தப் பாதிப்பும் இன்றி விளைச்சல் கிடைக்குமானால் 20 மூடை நெல் கிடைக்கும். அவற்றை உரிய விலையில் விற்றால் 40 ஆயிரம் ரூபா கிடைக்கும். விவசாயிகளின் மூன்று மாதகால கடின உழைப்புக்கு 15 ஆயிரம் ரூபாவே இலாபமாகக் கிடைக்கும். ”

கின்றனர் விவசாயிகள்.

தற்போது வெள்ளை நெல் ஆயிரத்து 500 ரூபா தொடக்கம் ஆயிரத்து 700 ரூபா வரையிலேயே தனிநபர்களால் கொள்வனவு செய்யப்படுகின்றது. தற்போது மாவட்டத்தின் அரைவாசி வயல்களே அறுவடை செய்யப்பட்டிருக்கின்றன. ஏனையவையும் செய்யப்பட்டால் நெல் விலை இன்னும் வீழ்ச்சி அடையவும் வாய்ப்பு உள்ளது.

அதையடுத்தே விவசாயிகள் தங்களுடைய நெல்லை எப்படியாவது சந்தைப்படுத்தி விட வேண்டும் என்ற நோக்குடன் விவசாயிகள் தற்போது கிடைக்கும் விலையில் தனியார்களுக்கு நெல் மூடைகளை விற்கின்றனர் என்றும் கூறப்படுகின்றது.

நெல் சந்தைப்படுத்தல் தொடர்பில் உயரதிகாரிகள், சம்பந்தப்பட்ட திணைக்களத்தினருக்குப் பல தடவைகள் தெரியப்படுத்தியிருந்தும், இதுவரையில் உரிய தீர்வு எதுவும் கிடைக்கவில்லை என்று கிளிநொச்சி மாவட்ட விவசாயிகள் ஆதங்கம் வெளியிட்டனர்.

மறுபுறத்தில் - கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள நெல்லை கொள்வனவு செய்யும், நெல் சந்தைப்படுத்தும் சபையின் 9 களஞ்சிய சாலைகளிலும் 2014 ஆம் ஆண்டு, 2015 ஆம் ஆண்டு காலத்தின் சிறும்போக மற்றும் கால போக நெல் இன்னும் தேங்கியுள்ளது.

அதனால் தற்போது விவசாயிகளால் மேற்கொள்ளப்பட்ட கால போக நெல்களை கொள்வனவு செய்து, அதைக் களஞ்சியப்படுத்துவதற்கு களஞ்சிய சாலைகள் இல்லை என்று நெல் சந்தைப்படுத்தும் சபையினர் கூறுகின்றனர்.

களஞ்சிய சாலைகளில் தற்போது இருப்பில் உள்ள நெல் (நாடு) விவசாயிகளிடம் இருந்து தாம் 45 ரூபாவுக்கு கொள்வனவு செய்யப்பட்டது. அதை வெளியேற்றுவதற்காக 32.50 ரூபாவுக்கு - பெரும் நட்டத்தில் விற்பதற்கு தீர்மானித்தபோதும் மில் உரிமையாளர்கள் அதனை கொள்வனவு செய்யவில்லை என்றும் சபையினர் தெரிவித்தனர். இதனாலேயே நெல் கொள்வனவு செய்வதில் இழுபறி நிலை காணப்படுகின்றது என்றும் சுட்டிக்காட்டினர்.

அதேவேளை, நெல்லை சந்தைப்படுத்துவதற்கு விவசாயிகள் எதிர்நோக்கும் நெருக்கடிகள் மாவட்ட செயலகத்தின் கவனத்துக்குக் கொண்டு வரப்பட்டுள்ளது என்று மாவட்ட அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம் தெரிவித்தார். இது குறித்து ஆராய்ந்துள்ள மாவட்டச் செயலகம் நாளை திங்கட்கிழமை முதல் நெல் கொள்வனவை மீண்டும் ஆரம்பிப்பதற்கு ஏற்பாடு செய்துள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார்.

புளியம்பொக்கணை, அக்கராயன், வன்னேரிக்குளம் ஆகிய பகுதிகளில் மூன்று களஞ்சிய சாலை வசதிகள் தற்போது ஏற்படுத்தப்பட்டுள்ளது. அவற்றின் கொள்ளளவுக்கு ஏற்ப விவசாயிகளிடம் இருந்து நெல்லைக் கொள்வனவு செய்யப்பட உள்ளது என்றும் அரச அதிபர் தெரிவித்தார். (ந-ஜ-21,10)

# வவுனியா வடக்கில் இது வரை 7,000 பேருக்கு காணிப் பத்திரம்

## பிரதேச செயலர் தெரிவிப்பு

வவுனியா, பெப்.7
வவுனியா வடக்குப் பிரதேச செயலாளர் பிரிவில் கற்றுக் கொண்ட பாடங்கள் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைக்கமைய காணிப் பத்திரம் தொடர்பில் விண்ணப்பித்த 7 ஆயிரத்து 809 பேருக்கான காணி அனுமதிப் பத்திரங்கள் இதுவரை வழங்கப்பட்டுள்ளன என்று வவுனியா வடக்குப் பிரதேச செயலாளர் தெரிவித்துள்ளார்.

வவுனியா வடக்கு பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள 20 கிராம சேவகர் பிரிவுகளிலும் வாழும் குடும்பங்களுக்கே இவை விநியோகிக்கப்பட்டுள்ளன.


இந்தக் காலப் பகுதியில் குறித்த பகுதியில் 8 ஆயிரத்து 549 விண்ணப்பங்கள் கிடைத்துள்ளன. இவர்களுக்கான காணிக் கச்சேரிகள் இடம்பெற்று, அதில் தகுதியான எண்ணிக்கையினருக்கு மட்டும் காணிப் பத்திரம் வழங்கப்பட்டுள்ளது. ஏனையவர்களின் விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டுள்ளன என்றும்- பிரதேச செயலர் தெரிவித்தார்.

“ குறித்த பகுதியில் 8 ஆயிரத்து 549 விண்ணப்பங்கள் கிடைத்துள்ளன. இவர்களுக்கான காணிக் கச்சேரிகள் இடம்பெற்று, அதில் தகுதியான எண்ணிக்கை யினருக்கு மட்டும் காணிப் பத்திரம் வழங்கப்பட்டுள்ளது. ”

காணிப் பத்திரங்கள் விநியோகிக்கப்பட்ட காலங்களின் பின்னர் 694 விண்ணப்பங்கள் கிடைக்கப்பெற்றுள்ளன. இவர்களுக்கான காணிக் கச்சேரிகள் விரைவில் இடம்பெறவுள்ளன என்றும் அவர் குறிப்பிட்டார். (ந-ஜ-10)

# பல லட்சம் பெறுமதியான முதிரைக் குற்றிகள் மீட்பு

வவுனியா, பெப்.7
வவுனியா பூவரசங்குளம் பகுதியில் வவுனியா பொலிஸார் மேற்கொண்ட அதிரடி நடவடிக்கையில் பல லட்சம் ரூபா பெறுமதியான 21 முதிரை மரக் குற்றிகள் கைப்பற்றப்பட்டுள்ளன.



சாம்பைக்குளம் பகுதியிலேயே நேற்றுமுன்தினம் இந்த மரக்குற்றிகள் கைப்பற்றப்பட்டன.

வவுனியா பொலிஸாருக்கு கிடைத்த இரகசியத் தகவலை அடுத்து இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது. டிப்பர் வாகனத்தில் 10 அடி நீளமான 21 முதிரை மரகுற்றிகள் ஏற்றப்பட்டு, குறித்த மரக்குற்றிகள் தெரியாதவாறு மணல் மற்றும் சிறு கற்களால் மூடப்பட்டிருந்த நிலையில் பொலிஸார் மரக்குற்றிகளைக் கண்டு பிடித்துள்ளனர்.

குறித்த டிப்பர் வாகனம் கைப்பற்றப்பட்டுள்ளதுடன், வாகனத்தின் சாரதியும் கைது செய்யப்பட்டுள்ளார் என்று பூவரசங்குளம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தெரிவித்தார். (ந-ஜ-21)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுகாதார வைத்திய நிலையம் அமைப்பதற்கு காணியில்லை

## பிரதேச ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தில் நல்லூர் சுகாதார வைத்திய அதிகாரி சுட்டிக்காட்டு

யாழ்ப்பாணம், பெப்.7

நல்லூர் பிரதேசத்தில் சுகாதார வைத்திய நிலையம் இயங்குவதற்கு நிரந்தரக் காணி வசதி இல்லை. கட்டடம் அமைப்பதற்குத் தேவையான நிதி ஒதுக்கப்பட்டுள்ள போதும், தேவைப்பாடுடைய ஐந்து பரப்புக் காணியை பெற முடியாத நிலை உள்ளதால், தொடர்ந்தும் கோண்டாவில் வைத்தியசாலைக் காணியிலேயே சுகாதார வைத்திய நிலையம் இயங்கி வருகின்றது. - இவ்வாறு நல்லூர் சுகாதார வைத்திய அதிகாரி தெரிவித்தார்.

கடந்த செவ்வாய்க்கிழமை நல்லூர் பிரதேச செயலகத்தில் நடைபெற்ற பிரதேச ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தி லேயே இவர் இதனைச் சுட்டிக்காட்டினார்.

நல்லூர் பிரதேச செயலகத்தில் நிரந்தரமாக சுகாதார வைத்திய நிலையம் ஒன்றை அமைப்பதற்கு கடந்த வருடம் 30 மில்லியன் ரூபாநிதி ஒதுக்கப்பட்டது. எனினும் காணி இல்லாத நிலையில் இந்த நிதி வேறு திட்டத்துக்காகப் பயன்படுத்தப்பட்டது. இந்த வருடம் மீண்டும் 25 மில்லியன் நிதி ஒதுக்கப்படவுள்ளபோதும், சுகாதார வைத்திய நிலையத்தை அமைப்பதற்கான காணி வசதி இல்லாமையால் ஒதுக்கப்படட இந்த நிதி வரும் ஜூன் மாதம் திரும்பிச் செல்லும் நிலை ஏற் படலாம். எனவே இதற்குரிய காணி வசதியை உடனடியாக ஏற்படுத்தித் தர வேண்டும் என்று அவர் ஒருங் கிணைப்புக் குழுவைக் கேட்டுக் கொண்டார்.

**“ கடந்த வருடம் 30 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டது. எனினும் காணி இல்லாத நிலையில் இந்த நிதி வேறு திட்டத்துக் காகப் பயன் படுத்தப் பட்டது. இந்த வருடம் மீண்டும் 25 மில்லியன் நிதி ஒதுக்கப்ட வுள்ள போதும் காணி இன்மையால் திரும்பிச் செல்லும் நிலை காணப்படுகின் றது என்று சுகாதார வைத்திய அதிகாரி சுட்டிக்காட்டினார் ”**

இதன்போது அரியாலை பொன்னம்பலம் வீதியில் உள்ள 5 பரப்பு கோயில் காணியை தாங்கள் விரும்பினால் சுகாதார வைத்தியசாலை கட்டுவதற்கு எடுத்துக்கொள்ளலாம். இதற்கான அனுமதியை கோயில் நிர்வாகத்திடம் கோரும் பட்சத்தில் அவர்கள் தரக்கூடும். இதனால் அரியாலைப் பகுதியும் அபிவிருத்தி அடையும் என்று அரியாலை மக்கள் சார்பில் கூறப்பட்டது.

நிதி திரும்பிச் செல்வதற்கிடையில் காணியைப் பெற்றுக் கொள்வதற்கு ஏற்பாடு செய்யுமாறும், உதயபுரம், அரியாலை கிழக்கு, மணியந்தோட்டம் ஆகிய பகுதிகளில் உள்ள காணிகளைப் பெற்று வைத்திய சாலையை அமைப்பதால் பின் தங்கிய பகுதிகளாக காணப்படும் இந்தப் பகுதிகள் விரைவில் அபிவிருத்தி அடையக் கூடும். வடமாகாண காணி அமைச்சராக உள்ள வடமாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் மூலமாக காணித்தேவையைப் பூர்த்திசெய்து கொள்ள முடியும் என்று கூட்டத்தில் கலந்து கொண்ட வடக்கு மாகாண சபை உறுப்பினர்களான சிவாஜிலிங்கம், ஆனோல்ட், விந்தன் கனகரத்தினம் ஆகியோர் கேட்டுக்கொண்டனர்.

இந்த விடயம் தொடர்பாக பதில் வழங்கிய இணைப்புக் குழுவின் தலைவரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான மாவை சேனாதிராசா காணி தொடர்பான விடயம் என்பதால் இது தொடர் பில் நாம் ஆராய முடியுமே தவிர முடிவுகளைப் பெறமுடியாது.

காணி எங்கு உள்ளது, அது சுகாதார வைத்தியசாலை அமைப்பதற்கு சரியான இடமாக உள்ளதா என ஒரு குழுவைக் கொண்டு ஆராய்ந்து அறிந்து கொண்டதன் பின்னர், வடமாகாண சபையின் சுகாதார அமைச்சுடன் தொடர்பு கொண்டு அது வைத்தியசாலை கட்டுவதற்கு சரியான இடமாக இருக்குமா என தீர்மானித்துக் கொள்ளலாம். அடுத்த இணைப்புக்குழுக் கூட்டத்தில் காணி தொடர்பான தீர்மானத்தை ஏற்றுக் கொள்ளலாம்.- என்றார். (ற-ஜ-ரி5)

## ஒன்றுகூடலும் நிதியுதவி வழங்கலும்

யாழ்ப்பாணம், பெப்.7

நெல்லியடி சனசமூக நிலையத்துக்குட்பட்டவர்களில் புலம் பெயர்ந்துவாழும் உறவுகளின் அனுசரணையுடன் வழங்கி வரும் புலமைப்பரிசில் திட்டத்தில் பயன் பெறும் மாணவர்களுக்கான ஒன்றுகூடலும் விசேட நிதி வழங்கும் நிகழ்வும் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு நெல்லியடி மத்திய கல்லூரிக் கலையரங்கில் நடைபெறவுள்ளது.

நெல்லியடி சனசமூக நிலையத்தின் தலைவர் சு.கிருஷ்ணராஜா தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன், விசேட விருந்தினர்களாக வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் சி.நந்தகுமார், நெல்லியடி மத்திய கல்லூரியின் ஓய்வு பெற்ற அதிபர் செ.சேதுராஜா, நெல்லியடி மத்திய கல்லூரி அதிபர் க.கிருஷ்ணகுமார் ஆகியோரும் கலந்துகொள்ளவுள்ளனர். (ற-ஜ-422)

## பதில் நீதிவான் நியமனம்

சாவகச்சேரி, பெப்.7

சாவகச்சேரி நீதிமன்றின் பதில் நீதிவானாக எம்.எச்.எம்.ஹம்ஷா நீதி அமைச்சின் செய லாளரால் நியமிக்கப்பட்டுள்ளார். அவர் கடந்த வெள்ளிக்கிழமை முதல் தனது கடமைகளைப் பொறுப்பேற்றுள்ளார்.

நீதிவான் பயிற்சி நிலையத்தில் பயிற்சியைப் பூர்த்தி செய்த ஜனாப் எம்.எச்.எம்.ஹம்ஷா சத்தியப் பிரமாணம் மேற்கொண்ட பின்னர் சாவகச்சேரி நீதிமன்றில் பதில் நீதிவானாக கடமையேற்றுள்ளார்.

சாவகச்சேரி நீதிமன்ற மாவட்ட நீதிபதி திருமதி ஶ்ரீநிதி நந்தசேகரன் வெளிநாடு சென்றுள்ளதால் பதில் நீதிவானாக இவர் நியமிக்கப்பட்டுள்ளார் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஜ-9)

## சங்காபிசேகம்

யாழ்ப்பாணம், பெப்.7

வட்டுக்கோட்டை துணைவி அரசடிப் பிள்ளையார் ஆலயத்தின் சங்காபிசேகம் எதிர்வரும் 9 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை நடைபெறவுள்ளது.

பூசைகள் காலை 9 மணிக்கு ஆரம்பமாகி, மாலை 5 மணிக்கு வசந்தமண்டப பூசையைச் தொடர்ந்து விநாயகப்பெருமான் வீதியுலா வரவுள்ளார். (ற-ஜ-ரி5)

## யாத்திரை திருத்தல திருவிழா

யாழ்ப்பாணம், பெப்.7

பருத்தித்துறை தும்பளை தூய லூர்த்து அன்னையின் யாத்திரைத்திருத்தலத் திருவிழா கடந்த முதலாம் திகதி கொடி யேற் றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து நடைபெற்று வருகின்றது.

தினமும் மாலை 4.30 மணிக்கு திருச்செபமாலையுடன் நவநாள் வழிபாடும் நடை பெறும். எதிர்வரும் 9 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மாலை வழிபாட்டில் திவ்விய நற் கருணை விழாவும், திருப்பலியும் ஆராதனையும் பவனியும் இடம்பெறும்.

எதிர்வரும் 10 ஆம் திகதி புதன்கிழமை திருநீற்றுப் புதன் அன்று காலை 6.15 மணிக்கு திருப்பலியும், மாலை 4.30 மணிக்கு திருச்சிலுவைப் பாதையும், மறுநாள் வியாழக்கிழமை காலை 5.30 மணிக்கு முதற் திருப்பலி நடைபெற்று காலை 7 மணிக்கு திருவிழாத் திருப்பலியுடன் திருச்சொரூப பவனியும் ஆசீரும் இடம்பெறும் என பருத்தித்துறை பங்குத் தந்தையும் மறைக்கோட்ட முதல்வருமாகிய அருட்பணி ஏ. யாவிஸ் அடிகளார் தெரிவித்துள்ளார். (ற-ஜ-ரி)



இலங்கையின் 68 ஆவது தேசிய சுதந்திர தினத்தை முன்னிட்டு வயாவிளான் மத்திய கல்லூரியின் 400 மீற்றர் மைதானம் சிரமதானம் செய்யப்பட்டது. பாடசாலை அதிபர் வே.தா. ஜெயந்தன் தலைமையில் 8 ஆவது விஜயபாகு படையணி , 4 ஆவது படையணி , 7 ஆவது மகளிர் படையணி சேர்ந்த 75 பேர் சிரமதானத்தில் பங்கேற்றனர். (ஐ)

## மதுவில் இருந்து மீள்வது குறித்த மருத்துவ அறிவூட்டல் கருத்தரங்கு

சாவகச்சேரி நீதிமன்ற சமுதாயம் சார் திருத்தப் பிரிவில் மதுபோதையில் பொது இடங்களில் குழப்பம் விளைவித்தமைக்காக நீதிமன்றால் சமூகப் பணியில் ஈடுபடுத்தப்பட்டவர்களுக்கான மருத்துவஅறிவூட்டல் விழிப்புணர்வுக் கருத்தரங்கு கடந்த வெள்ளிக்கிழமை நீதிமன்றக் கட்டடத் தொகுதியில் நடைபெற்றது.

நீதிமன்ற சமுதாயம் சரர் சீர்திருத்தப் பிரிவின் அபிவிருத்தி அலுவலர் க.ரஜனிகாந்த் தலைமையில் நடைபெற்ற கருத்தரங்கில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையின் குருந்தம் சிகிச்சைப் பிரிவின் பொறுப்பதிகாரி வைத்திய கலாநிதி திருமதி வி.அச்சுதன் கருத்துரை வழங்கினார்.

அங்கு அவர் கருத்துத் தெரிவிக்கையில்– குருந்தம் சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெறுபவர்களுக்கு எந்தவிதப் பாதிப்பை ஏற்படுத்தக்கூடிய சிகிச்சை முறையல்லாமல் எளிமையாகவே சிகிச்சை அளிக்கப்படுகிறது. சிலர் வீண் வதந்திகளால் குருந்தம் சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெறத் தயங்குகிறார்கள். குருந்தம் குடிவெறுப்பு நிலையத்தில் சிகிச்சை பெறுபவர்களிடம் எம்மால் வழங்கப்படும் சிகிச்சை முறைகளை கேட்டறிந்து கொள்ளுங்கள். சிகிச்சைபெற்று வெளியேறியவர்களிடம் கேட்டு உங்கள் சந்தேகத்தை நிவர்த்தி செய்து நீங்களாகவே முன்வந்து 15 தினங்கள் தங்கியிருந்து உடல் உள சிகிச்சையைப் பெற்று சமூகத்தில் நீங்களும் நற்பிரஜைகளாக வாழுங்கள்.- என்று தெரிவித்தார்.



குருந்தம் சிகிச்சைப் பிரிவில் இதுவரை 300க்கும் மேற்பட்டோர் சிகிச்சை பெற்று சமூகத்தில் நற்பிரஜைகளாக வாழ்கின்றனர் எனவும் அவர் குறிப்பிட்டார். (ற-ஜ-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

LG
Life's Good

# "கொள்வனவு செய்த பின் புலம்பாதீர்கள்"

அங்கீகரிக்கப்படாத இடங்களில் இருந்து LG தொலைக்காட்சிகளை கொள்வனவு செய்வது தொடர்பான விழிப்புணர்வு

**LG உற்பத்திகளுக்கான ஒரே ஒரு நம்பிக்கைக்குரிய அங்கீகரிக்கப்பட்ட விநியோகஸ்தரான அபான்ஸிடமிருந்து பெற்றுக்கொள்ளுங்கள்**

LG சாதனங்களுக்கான இலங்கையின் ஒரே ஒரு விநியோகஸ்தர் அபான்ஸ் ஆகும். இலங்கையில் LG இலக்ரோனிக்ஸ் இன்க் இடமிருந்து நேர்மையான விதத்தில் அங்கீகரிக்கப்பட்ட LG சாதனங்களை நேரடியாக அபான்ஸ் மட்டுமே இறக்குமதி செய்கின்றது. வேறு விதங்களில் LG சாதனங்களை விநியோகிக்கும் அங்கீகரிக்கப்படாதோரிடத்தில் இருந்து தரமற்ற சாதனங்களை பெற்றுக்கொள்ள வேண்டாம் என இலங்கையர்களுக்கு அபான்ஸ் எச்சரிக்கை செய்கின்றது.



**அபான்ஸ் மற்றும் BuyAbans.com இடமிருந்து மட்டுமே LG தொலைக்காட்சிகளை பெற்றுக்கொள்வது சிறந்தது என்பதற்கான காரணங்கள்**

| | அபான்ஸ் | வேறு இடங்கள் |
|---|---|---|
| இலங்கையின் LG சாதனங்களுக்கான ஒரேயொரு விநியோகஸ்தர் மற்றும் LGயிலிருந்து நேரடி இறக்குமதி. | ✓ | ✗ |
| நீடித்த காலத்திற்கு நம்பகமான மற்றும் நீடித்த தன்மையுடைய நிறுவனம். | ✓ | ✗ |
| அனுபவமிக்க தொழில்நுட்ப துணையுடன் விற்பனைக்கு பின்னரான இலவச சேவை வழங்கல். | ✓ | ✗ |
| அனைத்து LG தொலைக்காட்சிகளும் நேரடியாக LG இலத்திரனியல் இன்கிலிருந்தே இறக்குமதி செய்யப்படுகின்றன. மேலும் சிறப்பாக இலங்கை காலநிலைக்கு ஏற்ற விதத்தில் வடிவமைக்கப்பட்டுள்ளது. | ✓ | ✗ |
| இறக்குமதி செய்யப்படும் தொலைக்காட்சிகளை இலகுவாக LG தொலைக்காட்சிகள் என அடையாளம் காண முடியும். | ✓ | ✗ |
| வெவ்வேறுபட்ட வலயங்களின் காரணத்தால் LG தொலைக்காட்சிகளில் சிறப்பு இணைப்பு அம்சம் காணப்படுகின்றது. | ✓ | ✗ |
| குறிப்புக்கள், அம்சங்கள் மற்றும் உதிரிப்பாகங்கள் என்பன LG தொலைக்காட்சிகளுடன் மட்டுமே இணைக்கப்பட்டிருக்கும். | ✓ | ✗ |
| ஈரப்பதம் மற்றும் ஆற்றல் மாறுபாடுகள் என்பவற்றிலிருந்தான பாதுகாப்பு. | ✓ | ✗ |
| வட்டியின்மை மற்றும் கொள்வனவு விதிமுறைகள். | ✓ | ✗ |


தயவு செய்து இவ் எச்சரிக்கையில் கவனம் செலுத்தவும். நீங்கள் வேறெந்த இடத்திலிருந்தும் LG தொலைக்காட்சிகளை கொள்வனவு செய்திருந்தால் அதற்கு நாங்கள் பொறுப்பேற்கமாட்டோம்.

நிபந்தனைகளுக்கு உட்பட்டது

0115099000 BuyAbans.com

நாடுபூராகவும் உள்ள அபான்ஸ் மற்றும் அபான்ஸ் எலைட் காட்சியறைகளில் பெற்றுக்கொள்ளலாம்

Abans



LG
Life's Good

## தோற்றத்தில் நிஜத்தினைப்போல் காணப்படும் எவையும் தரமானதல்ல, கொள்வனவு செய்வதற்கு முன் தரமானதா என்பதனை அவதானியுங்கள்

நம்பகமான LG வளிச்சீராக்கிகளுக்கான இலங்கையின் ஒரே ஒரு முகவர் அபான்ஸ் மட்டுமே

- வளிச்சீராக்கி விற்பனையில் 30 வருடத்திற்கு மேலான அனுபவம்
- பொருத்துதல், பராமரிப்பு, சேவை என்பவற்றுடன் தொழிற்சாலையில் பயிற்சிப்பெற்ற பொறியியலாளர்கள் மற்றும் தொழில்நுட்பவியலாளர்களால் பழுதுபார்க்கப்படும்
- அபான்ஸ் உத்தரவாதம்
- 3 இலவச சேவைகள்
- இலவசமாக பொருத்துதல்
- நம்பகமான உதிரிப்பாகங்கள்

அபான்ஸானது உற்பத்தியாளர்களிடமிருந்து LG வளிச்சீராக்கிகளை நேரடியாக இறக்குமதி செய்யும் இலங்கையின் ஒரே ஒரு முகவராகும். மேலும் அவ்வளிச்சீராக்கிகள் இலங்கையின் காலநிலைக்கேற்ப திருத்தியமைக்கப்பட்டுள்ளன. தரம் மற்றும் செயல்திறனுக்கான நம்பகமான உத்தரவாதத்துடன் உங்களின் தேவைகளுக்கு ஏற்ற வகையில் பரந்தளவான ஆற்றல் சேமிப்பு LG வளிச்சீராக்கிகளை வழங்குவது அபான்ஸ் மட்டுமே.

### LG நிலை வேக வளிச்சீராக்கிகள்

79,900/- ரூபாவிலிருந்து


ஸ்பிலிட் வகை
• 9000btu–24000btu


சீலிங் கெசட்
• 1800btu–48000btu


சீலிங் சஸ்பென்டட்
• 48000btu


சீலிங் கொன்சீல்ட்
• 1800btu–93000btu


ப்ளோர் ஸ்டேன்டிங்
• 4800btu–92000btu


### LG இன்வேட்டர் வளிச்சீராக்கிகள்

102,999/- ரூபாவிலிருந்து

INVERTER V Compressor

60%த்தும் மேலாக ஆற்றல் வெளியீட்டினை குறைப்பதன் மூலமாக இப்புரட்சிகர இன்வேட்டர் தொழில்நுட்பமுடைய LG சாதனங்கள் இரைச்சலற்றதாகவும் அதி செயல்திறன் வாய்ந்ததாகவும் தொழிற்படுகின்றன.


கொரியாவில் தயாரிக்கப்பட்டது


இன்வேட்டர் ஸ்பிலிட் வகை
• 18000btu–24000btu


இன்வேட்டர் சீலிங் கெசட்
• 18000btu–48000btu


இன்வேட்டர் சீலிங் சஸ்பென்டட்
• 18000btu-48000btu


இன்வேட்டர் சீலிங் கொன்சீல்ட் (மத்திய நிலை)
• 48000btu


இன்வேட்டர் ப்ளோர் ஸ்டேன்டிங்
• 30000btu- 48000btu




ஓர்றை நிலை | மூன்று நிலை

**ஆற்றல் சேமிப்பு**

ஆற்றல் சேமிப்பு
60% சதவீதத்திற்கும் மேலாக ஆற்றல் வெளியீட்டினை குறைத்து இப்புரட்சிகர இன்வேட்டர் தொழில்நுட்பமுடைய LG உற்பத்திகள் அதி செயல்திறன் கொண்டதாக காணப்படுகின்றது.

இன்வேட்டர் அழுத்தி
ஆற்றல் செயல்திறன் முதன்மையினூடாக பல்வேறு அளவுகளில் இயங்கும் இயந்திரத்தை நிலையான உபயோகத்திற்கு உட்படுத்துகின்றது.

**சிறந்த நீடித்த தன்மை**

10 வருடத்திற்கான இன்வேட்டர் அழுத்தி உத்தரவாதம்
அழுத்திக்கான 10 வருட உத்தரவாதத்துடன் வாகனங்களில் காணப்படும் இயந்திர அமைப்பினை போல் LG வளிச்சீராக்கிக்கான அழுத்தியும் காணப்படுகின்றது. கொள்வனவு செய்வோர் LG வளிச்சீராக்கியின் நன்மைகளை நீண்ட காலத்திற்கு அனுபவிக்க இயலும்.

Gold Fin™
வெப்ப பரிமாற்றியின் மேற்பரப்பினை வயர் மற்றும் வெளிப்பரப்பை சீருலைக்க கூடிய கடுமையான சுற்றுச்சூழலின் நீடித்த தாக்கத்திலிருந்து Gold Fin™ பாதுகாக்கின்றது.

சிதைவு தடுப்பு சாதனம்
கரையோரப்பகுதிகளில் இலகுவாக வெளிப்படும் கடல் காற்றின் மூலமாக ஏற்படும் வெளிப்புற சிதைவினை தடுத்து நீடித்த செயல்திறனை ஏற்படுத்தக்கூடியது

அச்சுவேலி - 0779554229, சங்கானை - 0212250106, சாவகச்சேரி - 0212270005, கன்னாகம் - 0242240440 / 0772208242, யாழ்ப்பாணம் "A" - 0212220981, யாழ்ப்பாணம் "B" - 0213202421, மானிப்பாய் - 0212255259, [illegible] - 0212220247

*நிபந்தனைகளுக்கு உட்பட்டது

HOTLINE 0714020800 BuyAbans.com us at www.facebook.com/abans நாடுபூராகவும் உள்ள அபான்ஸ் மற்றும் அபான்ஸ் எலைட் காட்சியறைகளில் பெற்றுக்கொள்ளலாம்.

Abans

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 15 வேலைவாய்ப்பு மத்திய நிலையங்கள் நாடெங்கும் நிறுவுவதற்கு நடவடிக்கை

## முதலாவது நிலையம் இரத்தினபுரியில் ஆரம்பம்

கொழும்பு, பெப்.7

நாடெங்கும் வேலைவாய்ப்பின்றி இருக்கும் இளைஞர், யுவதிகளின் தகுதிக்கேற்ப பொருத்தமான வேலைவாய்ப்புக்களைப் பெற்றுத்தருவதற்கான 15 மத்திய நிலையங்களை இவ்வருடத்தில் நிறுவ தொழில் மற்றும் தொழிலுறவு அமைச்சர் டபிள்யூ.டீ.ஜே.செனிவிரத்ன நடவடிக்கை எடுத்துள்ளார்.

தொழில் தேடும் இளைஞர், யுவதிகளுக்கு அரச நிறுவனங்களில் மட்டுமன்றி, தனியார் நிறுவனங்களிலும் தொழில் வாய்ப்புக்களைப் பெற்றுத்தர இந்த மத்திய நிலையங்கள் உதவும். தொழில் வழங்க விரும்புவோர் தங்களது தேவைகள் பற்றிய விவரங்களை இந்த நிலையங்களில் முன்கூட்டியே பதிவுசெய்து வைத்திருந்தால் அவர்களது தேவைகளுக்குப் பொருத்தமானவர்கள் பரிந்துரை செய்யப்படுவார்கள்.

அரசின் ஒரு லட்சம் பேருக்கு தொழில் வாய்ப்பு வழங்கும் கருத்திட்டத்துக்கு இந்த மத்திய நிலையங்கள் ஒத்துழைப்பு வழங்கும். தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுக்குத் தேவையான இலவசப் பயிற்சிகளும் வழங்கப்படும்.

முதலாவது நிலையம் அண்மையில் இரத்தினபுரியில் ஆரம்பிக்கப்பட்டதைத் தொடர்ந்து நடந்த வைபவமொன்றில் உரையாற்றியபோதே அமைச்சர் செனிவிரத்ன மேற்கூறிய தகவல்களை வெளியிட்டார். (த)

# புள்ளி விவர அதிகாரிகள் வீடுகளுக்கு வருகை தருவர்

*நான்கு மதிப்பீடுகளை மேற்கொள்வதற்கு*

கொழும்பு, பெப்.7

இந்த ஆண்டில் நான்கு மதிப்பீடுகளை மேற்கொள்வதற்காக பொதுசன மற்றும் புள்ளி விவரங்கள் திணைக்களத்தின் அதிகாரிகள் குடும்பப் பிரிவுகளுக்கு வருகை தரவுள்ளாதாக அந்தத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் அமர சத்தரசிங்க தெரிவித்துள்ளார்.

குடும்பப் பிரிவொன்றின் தனிநபர் வருமானம், தனிநபர் செலவினம்,வறுமை நிலை மற்றும் சொத்துக்களின் உரிமை ஆகிய விடயங்கள் சம்பந்தப்பட்ட தரவுகளைப் பெற்றுக்கொள்வதை முன்னிட்டு, இந்த அதிகாரிகள் வருகை தரவுள்ளதாகத் திணைக்களம் அறிவித்துள்ளது.

அதன்போது பெற்றுக்கொள்ளப்படும் தரவுகளுக்கு அமைய உழைப்போர் படை வேலைவாய்ப்புக்களில் உள்ளோர் மற்றும் வேலை வாய்ப்பற்றோர் ஆகிய நாட்டுக்கு அத்தியாவசியமான அடிப்படைத் தரவுகள் சேகரித்துக் கொள்ளப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-ஐ-22)

### மணமகன் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 1988ஆம் ஆண்டு பிறந்த புனர் பூசம் நட்சத்திரம் உடைய MBBS பெண் டாக்டருக்கு (பாவம் குறைந்த) டாக்டர், எஞ்ஜினியர் மணமகன் தேவை.

077 521 5203

### அக்ஷயா அழகு கலை நிலையம்

*அழகுக்கலைப் பயிற்சி, இந்திய முறையிலான சாறிவுளவுஸ் கட்டிங் (6), பஞ்சாபி(4) அடிப்படையில் இருந்து தையல் பயிற்சிகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.*கறுப்பு, பிறப்பிலே கறுப்பு, நாட்பட்ட பருக்கள், கடும்கறை, மஞ்சள் - வெள்ளை, கறுப்பு புள்ளிகள் அகற்றும் கிறீம்.*கழுத்துக்கு கடும் கறுப்பு, கை, கால் கருமை நீக்கும் கிறீம்.*கண் கருவளையம், உதட்டுக் கருமை நீக்கும் கிறீம். *உடல் எடை கூட்டும் குறைக்கும் குளிசை, பால்மா, கிறீம்.*ஒட்டிய கன்னங்களை குண்டுக் கன்னங்களாக மாற்றும் குளிசை. *இடுப்பு, கால், தொடை பாகங்கள் எடை குறைக்கும் கிறீம்.*முகத்தில் வளரும் தேவையற்ற முடியகற்றும் கிறீம், மார்பழகு கூட்டும், குறைக்கும் கிறீம், குளிசை, சோப்.*தலைமுடி வளரச்செய்யும் ஆயுள்வேத எண்ணெய், குளிசை. மேற்குறிப்பிட்டவை எம்மிடம் விற்பனைக்குண்டு.*முகத்தில் உள்ள கருமை, கழுத்துக் கறுப்பு ஒரே தடவையில் நீக்கும் பேசியல், முகம் மினுமினுப்பாக்கும் பேசியல், ஜப்றோ சோப், பேஸ் திரெட்டிங் செய்து கொள்ளலாம். *அயனிங் பேர்மிங் செய்து கொள்ளலாம். *றிச்கேக் (ஒன்று 55/-), ஐசிங் ஓடர்கள் ஏற்றுக் கொள்ளப்படும்.

T.P: 077 210 6155

அக்ஷயா
221, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

### அலுவலக உதவியாளர் பதவி வெற்றிடம்- 01

இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ். கிளைக்கு ஒரு ஆண் அலுவலக உதவியாளர் தேவை. 20 - 30 வயதிற்குட்பட்ட தகுதி உடையவர்கள் க.பொ.த சாதாரணதரச் சித்தியுடன் ஆங்கில அறிவு. கணினி அறிவு மற்றும்.சாரதி அனுமதிப்பத்திரம் உடையர்கள் சுயவிவரக்கோவையினை 14.02.2016 இற்கு முன்னர் பின்வரும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

**கிளை நிறைவேற்று உத்தியோகத்தர்,**
**இலங்கை செஞ்சிலுவைச் சங்கம், யாழ். கிளை.**
**இல. 67. கோயில் வீதி. யாழ்ப்பாணம்.**

### வட மாகாணத்தில் 300 பேருக்கான ஓர் விசேட தொழில் வாய்ப்பு

மாத சம்பளம் 30000/-

கொழும்பு கிளாரட் உயர்கல்வி நிறுவனத்தின் கல்வி செயற்பாடுகளை அறிமுகப்படுத்துவதற்கு யாழ்பாணம், மன்னார், கிளிநொச்சி, முல்லைதீவு, வவுனியா போன்ற பிரதேசங்களில் வசிக்கும் O/L, A/L படித்த 18 வயதிற்கு மேற்பட்ட ஆண்கள்,பெண்கள் 300 பேர்கள் உடனடியாக தேவை.

- **ஆசிரியர்களாக தொழில் புரிபவர்கள் பகுதி நேரமாக இணைந்து செயற்படலாம்.**

நேர்முக தேர்வு - **இல188, ஆஸ்பத்திரி வீதி, யாழ்பாணம்** என்ற முகவரியில் பெப்ரவரி மாதம் **13,14,15**ம் திகதிகளில் காலை 9 மணிமுதல் மாலை 3 மணிவரை நடைபெறும்.

**தொடர்புகளுக்கு 0777248855**

### யாழ்ப்பாணத்தில் திட்டத்துக்காக வாகனமும் சாரதியும் தேவை

யாழ்ப்பாணத்தை அமைவிடமாகக் கொண்டு நடைமுறைப்படுத்தப்படும் ஒரு திட்டத்துக்கான, ஒரு முழுநேர அனுபவம் மிக்க சாரதியும் வாகனமும் வட மாகாணத்தில் திட்ட செயற்பாடுகளை மேற்கொள்வதற்காக, போக்குவரத்தை மேற்கொள்வதற்கு தேவையான வேண்டுகோள் திட்ட முகாமையாளரால் விடுக்கப்படுகின்றது.

கால அளவு 06 மாதங்கள் (பெப்ரவரி - யூலை 2016)

**விருப்பத்தேர்வு:**

- தமிழ் மற்றும் சிங்களம் அல்லது ஆங்கிலம் மொழியாற்றல் இருக்க வேண்டும்.
- ஒரு வேன் (Van) அல்லது (Pickup) வாகனம் விரும்பத்தக்கது.

விண்ணப்பதாரர்கள் கீழ் உள்ள முகவரிக்கு பெப்ரவரி 15, 2016 இற்குள் விண்ணப்பங்களை சமர்ப்பிக்க கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். சமர்ப்பிக்கப்படும். விலைப்புள்ளிகளுடன் கட்டாயமாக வாகனத்தின் விவரங்கள், ஒரு கிலோமீற்றருக்கான செலவு வீதம் மற்றும் வேறு மேலதிக தகவல்களுடன் தொடர்பு கொள்ள வேண்டிய விவரங்களும் உள்ளடங்கி யிருக்க வேண்டும். (தொலைபேசி இலக்கம், முகவரி).

இந்த தொலைபேசி இலக்கங்களை தொடர்பு கொள்வதன் மூலம் மேலதிக தகவல்களை பெற்றுக்கொள்ள முடியும் - 0775861932, 0779568921

அனுப்ப வேண்டிய உறை மேல் இடது மூலையில் "**வாகன விலைப்புள்ளி**" என எழுதிக்கொள்ளவும்.

**Institute for Research & Development**
**393/3, Lily Avenue,**
**Off Robert Gunawardhana Mw,**
**Battaramulla,**
**Sri Lanka.**

(C/22824)(10.17.19)

### காணி விற்பனைக்கு உண்டு

- உடுவில் மகளிர் கல்லூரிக்கு அருகில் வீட்டுடன் கூடிய காணி விற்பனைக்குண்டு நில.பர.8 உம் வீடும்
- இணுவிலில் தோட்டக்காணி விற்பனைக்கு உண்டு. நில.பர. 8
- சண்டிலிப்பாயில் வீடு கட்டக்கூடிய காணி மெயின் றோட்டிற்கு அருகில் உண்டு. நில பர.5

விலை பேசித் தீர்மானிக்கப்படும்.

தொடர்புகொள்ளவேண்டிய தொலைபேசி இலக்கம்

077 572 2208, 077 327 6462 (68487) (13.19.20)

### ALLIANCE FRANCAISE DE JAFFNA

பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக்கொள்ளுங்கள்.

af

பிரான்ஸ், சுவிற்சர்லாந்து, கனடா செல்வோர் விரையுங்கள் !




* பிரான்ஸ் FOREIGN MINISTRY & FRENCH EMBASSY யின் கீழ் இயங்குகிறது. தலைமை நிறுவனம் FRANCE இல் உள்ளது.

* எமது CERTIFICATES & INTERNATIONAL DIPLOMA (DELF A1) பெற்றால் பிரான்ஸில் உள்ள கட்டாய பரீட்சை தேவை யில்லை.

கட்டணம் AF மாணவர்களுக்கு 4000/= ஏனையோருக்கு 10300/=

பிரெஞ்சு மொழி பெயர்ப்புக்கள்.

*மாணவர்களுக்கு 40% கழிவு*



* இலவசம்: படிக்கும் பாடங்களின் , PHOTOCOPIES, படித்ததற்கான LETTER, VISA FROM நிரப்புதல், CD, BOOKS பாவனை..

யாழ், வன்னி, மன்னார், திருகோணமலை, மட்டக்களப்பு, கொழும்பைச் சேர்ந்த நூற்றுக்கணக்கானோர் AF இல் படித்தே வெளிநாடு செல்கிறார்கள்.

ஆரம்பம் 14.02.2016 2 p.m உடன் அழைத்து பதியவும்.

021 222 8093 61, கச்சேரி - நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்.

கச்சேரி பஸ்நிலையம் ➡ புகையிரதகடவை ➡ AF [வெள்ளை மாடிக்கட்டடம்]

### சொலெக்ஸ் நீர் பம்பிகள்

## உயர்ந்த.நம்பிக்கையான




ரூபா.8450/- முதல்...

**0773 658869**

விற்பனைப் பிரிவு - அவசர தொடர்புகளுக்கு

சொலேக்ஸ் வரையறுக்கப்பட்ட இஞ்சினியரிங் தனியார் கம்பனி
இல. 39, புதிய நுகே வீதி, பேலியகொடை, இலங்கை.

### பிரபல்யம் வாய்ந்த கட்டார் நிறுவனத்துக்கு வேலையாள்கள் தேவை

| தொ. இல | பதவி | எண்ணிக்கை | சம்பளம் (க.ரியால்) | உணவு |
|---|---|---|---|---|
| 1 | சாரதி (லைட் வெக்கில்) | 05 | 1700 | இலவசம் |
| 2 | கவுண்டி (அகழியந்திர) ஒப்பரேட்டர் | 08 | 2200 | இலவசம் |
| 3 | கணக்காளர் | 03 | 1700 | இலவசம் |
| 4 | வெல்டர் | 05 | 1400 | இலவசம் |
| 5 | ஜெனரேட்டர் எலக்ரீசியன் | 05 | 1500 | இலவசம் |
| 6 | ஜெனரேட்டர் மெகானிக் | 05 | 1600 | இலவசம் |
| 7 | தள்ளுவண்டி (ட்ரெயிலர்) ட்ரைவர் | 05 | 2200 | இலவசம் |
| 8 | ஜே.சி.பி லோட் ஒப்பரேட்டர் | 05 | 1900 | இலவசம் |
| 9 | பெற்றோல் மெகானிக் | 06 | 1500 | இலவசம் |
| 10 | டீசல் மெகானிக் | 04 | 1500 | இலவசம் |
| 11 | டிங்கர் | 03 | 1300 | இலவசம் |
| 12 | ஓட்டோ பெயிண்டர் | 04 | 1300 | இலவசம் |

**வேலை கால அளவு** : இரண்டு வருடங்கள் (புதுப்பிக்கக் கூடியது)

**விமான டிக்கட்** : இரண்டு வருட ஒப்பந்தத்தின் பின் வழங்கப்படும்.

**வேலை நேரம்** : ஒருநாளில் 8 மணித்தியாலங்கள், வாரத்தில் 6 நாள்கள். (48மணித்தியாலங்கள் வாரத்தில்)

**மேலதிக வேலை நேரம் (ஓவர் ரைம்)**: கட்டார் நாட்டு விதிமுறைகளுக்கு அமைய.

**உணவு** : இலவசம்

**மருத்துவம்** : கம்பனியில்

தொடர்பு: AL ZAIM Manpower

077 713 3157 : 066 228 8616
077 179 9000 : 066 228 8617

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீங்காத நினைவஞ்சலி

13 ஆம் ஆண்டு — 18 ஆம் ஆண்டு

மலர்வு 28.04.1949 — மலர்வு 03.09.1929



உதிர்வு 31.01.2003 — உதிர்வு 05.12.1998

திருமதி புவனேஸ்வரி சின்னத்துரை (சோதி)
திதி: சதுர்த்தசி (07.02.2016)

அமரர் மூத்தார் சின்னத்துரை (செல்லமணி)
(காங்.சி.கூ.ஓய்வுபெற்ற ஊழியர்)
திதி: திருதியை (28.11.2015)

வருடம் பல சென்றது ஆறவில்லை எம் துயரம்
அன்புடன் எமைக்காத்து அறிவுரை பல கூறி
பண்புடன் எமை வளர்த்து தரணியிலே உயரவைத்தீர்கள்
ஆயிரம் உறவு இருந்தும் என்ன? உங்கள்
அன்பைப்போல் வருமா? கண்ணீரில் நாம் தோய எமைப்
பிரிந்து எங்கு சென்றீர்கள்? எந்நாளும் உங்கள் நினைவை
இதயத்தில் நினைந்து நிற்கின்றோம்.
எங்கள் அன்புத் தெய்வங்கள் இருவரினதும் ஆத்மா சாந்திபெற இன்று
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

நி.மு - இன்னாவத்தை,
கொல்லங்கலட்டி,
தெல்லிப்பழை.

என்றும் உங்கள் நினைவில் வாழும்:
மக்கள்,மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

(68709) (13.17.20)

# மரண அறிவித்தல்

## திருமதி சிவபாக்கியம் சண்முகம்

தோற்றம் 15 . 01 . 1926



மறைவு 04 . 02 . 2016

யாழ்.சுன்னாகம், வரியப்புலத்தை பிறப்பிடமாகவும் வவுனியா பூந்தோட்டத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சிவபாக்கியம் சண்முகம் 04.02.2016 வியாழக்கிழமை சிவபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வைரமுத்து - சிதம்பரம் தம்பதிகளின் அன்புப் புதல்வியும், காலஞ்சென்ற சண்முகத்தின் (குணரட்ணம்) பாசமிகு மனைவியும், காலஞ்சென்றவர்களான வல்லிபுரம் - சின்னத்தங்கம் தம்பதிகளின் அன்பு மருமகளும், சிவனேஸ்வரன் ( C.E.B.யாழ்ப்பாணம்), சிவனேஸ்வரி, சிவானந்தன், சிவபாலகிருஷ்ணன் (கனடா), சிவானந்தினி ஆகியோரின் பாசமிகு தாயாரும், சரஸ்வதியின் பாசமிகு சிறிய தாயாரும், தெய்வேந்திரம் (அம்பாள் ஸ்டோர்ஸ்), விஜயலலிதா, திலோசினி, நிர்மலா (கனடா), ஜெயந்தன்,சிவசுப்பிரமணியம் ஆகியோரின் அன்பு மாமியாரும்,கமல்ராஜ் - ஸ்ரீபிரியதர்சினி (கனடா), சுஜீவன், மயூரன் (லண்டன்), நிருஷியா (செலான்வங்கி), வைஷ்ணவி, டினேஸ்கரன், வைஷிகா (பிரான்ஸ்), சிவசுதன், சிவானுஜன், சிவதனுஷன், வருணன் (கனடா), சிவமாயகுமார் - தாசினி (லண்டன்), சூரியகுமார் - கிருபா, கௌரிகரன் - கிரிஜா (லண்டன்), காலஞ்சென்ற சுதாகரன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், குருவர்ஷன் (கனடா), வர்ஷாயினி (கனடா), அஸ்வின் (லண்டன்), அக்ஷயா (லண்டன்), ஹரிஷ்கரன் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.02.2016) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக பூந்தோட்டம் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

இல.122/01, 4ஆவது ஒழுங்கை,
சாந்தசோலை வீதி,
பூந்தோட்டம், வவுனியா.

(68204)(11,17,20)

தகவல்:
குடும்பத்தினர்.

தொ.இ:- 024 205 0201, 077 630 9925

# 7 எரிபொருள் குழாய்களில் 5 பாவனைக்கு உதவாதவை

*அமைச்சர் சந்திம வீரக்கொடி தெரிவிப்பு*

கொழும்பு, பெப்.7
கொழும்பு துறைமுகத்திலிருந்து கொலன்னாவைக்கு எரிபொருள் எடுத்துச் செல்லும் 7 குழாய் வழிப்பாதைகளில் 5 குழாய்கள் பாவனைக்கு பொருத்த மற்றனவாகக் காணப்படுகின்றன என்று பெற்றோலிய வளத்துறை அமைச்சர் சந்திம வீரக்கொடி தெரிவித்துள்ளார்.

அதனைச் சீர்செய்வதற்கு முன் வைக்கப்பட்ட அமைச்சரவைப் பத்திரத்துக்கு அங்கீகாரம் கிடைத்துள்ளது என்றும் அமைச்சர் கூறியுள்ளார்.

2006 ஆம் ஆண்டு முதல் இதனை மறுசீரமைப்பதற்கு வேண்டி ஆறு அமைச்சரவைப் பத்திரங்கள் முன்வைக்கப்பட்டும்,அவை நடைமுறைப்படுத்தப் படாதுள்ளது என்றும் அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார். (ற)

# முதலாம் ஆண்டு நினைவுப் பிரார்த்தனை

## லோகநாதன் கஜேந்திரன் (கஜன்)



மலர்வு 15.09.1987
உதிர்வு 18.01.2015

எங்கள் குடும்பத்தின் குல விளக்கே!
எங்கள் உயிரில் உயிராய்க் கலந்தவனே
தங்க மகனே தாமரை நெஞ்சமே
தாங்க முடியாதுன் பிரிவுத்துயரமடா
உன்னைப் பிரிந்து ஓராண்டு
- கழிந்தாலும்
உள்ளத்தில் உன் நினைவு
- உறங்கவில்லையடா
மங்காத புன்னகையும் மலர்ந்த முகமும்
மனத்திரையில் ஓவியமாய்
- இன்றும் தெரியுதடா
மங்களமாய் எமதில்லம் இருந்ததே அன்று
மதியிழந்த வானமாய் இருக்குதே இன்று
செங்கதிராய் ஒளிர்ந்த அன்பு மகனே
செந்நீரும் கண்ணீரும் மாற்ற வருவாயா?

என்றும் உன் நினைவில்
குடும்பத்தினர்.
49, விதானையார் வீதி,
சுண்டுக்குழி, யாழ்ப்பாணம்.

(68521) (13.19.20)

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்

தோற்றம் 27 . 03 . 1938



மறைவு 08 . 01 . 2016

## அமரர் திரு. சுப்பிரமணியம் கந்தசாமி (JPUM)

(ATTORNEY -AT - LAW)

திதி: 07.02.2016

கடந்த 08.01.2016 வெள்ளிக்கிழமை சிவபதமடைந்த எங்கள் குடும்பத் தலைவர் சுப்பிரமணியம் கந்தசாமி அவர்களின் சிவபதப் பேறு குறித்த அந்தியேட்டி மற்றும் வீட்டுக்கிருத்திய கிரியைகள் இன்று (07.02.2016) ஞாயிற்றுக்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று, ஆத்மசாந்திப் பிரார்த்தனைகள் நாளை (08.02.2016) திங்கட்கிழமை நண்பகல் 12 மணியளவில் இல.527, நாவலர் வீதியில் அமைந்துள்ள 'சொர்ணாம்பிகை மண்டபத்தில் (TCT) நடைபெறவுள்ளதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்பசகிதம் வருகை தந்து அவரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

எமது குடும்பத் தலைவர் சுகயீனமுற்று இருந்த காலத்திலும் அவரது மறைவின் பின்னரும், அவருக்கும் எமக்கும் சகல வழிகளிலும் உதவி, ஒத்தாசை புரிந்த அனைத்து நல் உள்ளங்களுக்கும், தந்தையை இழந்து தவித்தபோது தேறுதலும் ஆறுதலும் கூறி தோளோடு தோள் நின்று நாம் துவண்டு விழாது காத்த அனைத்து சொந்தங்களுக்கும் எம் தலை தாழ்த்தி வணக்கத்தையும் நன்றியையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

35/10, 5ஆம் ஒழுங்கை,
பலாலிவீதி,கந்தர்மடம்,
யாழ்ப்பாணம்.

(68538)(11,19.20)

திருமதி பத்மினிதேவி கந்தசாமி
மற்றும் பிள்ளைகள்.

# தமிழ்மொழி தேசிய கீதம் இனவாதத்தைத் தூண்டும்

*கூறுகின்றார் மகிந்த*



கொழும்பு, பெப். 7
நாட்டின் மிக முக்கிய தேசிய நிகழ்வான சுதந்திர தின நிகழ்ச்சியில் தேசிய கீதத்தைத் தமிழில் பாடுவதற்கு மேற்கொண்ட முயற்சி, இரு இனங்களிடையே புரிந்துணர்வை ஏற்படுத்துவதற்குப் பதிலாக இனவாதத்தையும், குரோதத்தையுமே தூண்டிவிடும் என்று முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

இது இனவாதமன்று. நாம் இந்தியாவைப் பார்ப்போம். இந்தியாவில் பல்வேறு மொழிகள் இருக்கையில் தேசிய கீதம் ஒரு பாசையில் தான் இசைக்கப்படுகின்றது. உலகில்பெரும்பாலான நாடுகளில் தேசிய கீதம் ஒரே மொழியில்தான் பாடப்படுகின்றது.

சிங்களம் தெரியாதவர்கள் அந்த கீதத்தை உச்சரிப்புக்காக வேறு மொழியில் எழுதிக் கொள்வது பிரச்சினையாகாது. அப்போதும், பாடும் போது கருத்துப் பிழைக்கக் கூடாது. இதன் போது தான் அனைவருக்கும் இலங்கையர்கள் என்ற உணர்வு ஏற்படுகின்றது எனவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

(த-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சு.க. தலைமையை ஏற்கவேண்டும் அன்றேல் புதிய கட்சி தொடங்குக

## மகிந்தவிடம் ஆதரவாளர்கள் கோரிக்கை

கொழும்பு, பெப். 7
ஒன்றில் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமைப் பதவியை ஏற்றுக்கொள்ள வேண்டும் அல்லது புதிய கட்சியொன்றை ஆரம்பிக்கவேண்டும் என்று அக்கட்சியின் மாகாண சபை உறுப்பினர்கள் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவிடம் வேண்டுகோள் விடுத்துள்ளதாகத் தெரிய வருகின்றது.

நீர்கொழும்பு, கொச்சிக்கடையில் உள்ள ஹோட்டலொன்றில் கடந்த வியாழக்கிழமை நடந்த விசேட கூட்டமொன்றின் போதே இந்தக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. சுமார் 200 பேர் பங்கேற்ற இந்தக் கூட்டத்தில் பத்தேகம சமித தேரோ, மெரில் பெரேரா, ஆனந்த ஹரிஸ்சந்திர, லலந்த குணசேகர உள்ளிட்ட பல மாகாண சபை உறுப்பினர்களும், தினேஷ் குணவர்த்தன, பந்துல குணவர்த்தன, பிரசன்ன ரணதுங்க, காமினி லொக்குகே, ரோகித அபேகுணவர்த்தன, சிசிர ஜயகொடி, பிரசன்ன ரணவீர, ஜோன்ஸ்டன் பர்னாந்து, சனத் நிஷாந்த, மகிந்த யாப்பா அபேவர்த்தன போன்ற கூட்டு எதிர்க்கட்சி உறுப்பினர்களும், முன்னாள் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்சவும் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது. (த)

# சாரதி அனுமதிப்பத்திரத்துக்கு இனிமேல் மூன்று மாத கட்டாயப் பயிற்சி அவசியம்

## மோட்டார்போக்குவரத்துத்திணைக்களம் அதிரடி நடவடிக்கை

கொழும்பு, பெப். 7
சாரதி அனுமதிப்பத்திரம் பெறுவதற்கு விண்ணப்பம் செய்பவர்கள் இனிமேல் மூன்றுமாத கட்டாயப் பயிற்சியொன்றுக்கு உட்படுத்தப்படுவார்கள் என மோட்டார் போக்குவரத்துத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் மோட்டார் போக்குவரத்துத் திணைக்கள ஆணையாளர் நாயகம் ஜகத் சந்திரசிறி தெரிவித்த விவரங்கள் வருமாறு:-
தற்போது நடைமுறையிலுள்ள எழுத்துமூலப் பரீட்சைக்குப் பின் ஒவ்வொரு விண்ணப்பதாரியும் மூன்று மாதக் கட்டாயப் பயிற்சிக்கு உட்படுத்தப்படுவர். அதற்குப் பின்னரே வாகனத்தைச் செலுத்திக் காட்டும் நேரடிப் பரிசோதனை நடத்தப்படும். இப்பயிற்சியின் விவரங்கள் முற்றாகக் கணினி மயப்படுத்தப்பட வுள்ளதால் எக்காரணத்தைக் கொண்டும் பயிற்சிபெறாதவர்களுக்கு நேரடிப் பரிசோதனை நடத்தப்படமாட்டாது. இப்பயிற்சி தொடர்பான விழிப்புணர்வு வேலைத்திட்டங்கள் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

18 வயதைப் பூர்த்திசெய்தவர்கள் சாரதி அனுமதிப்பத்திரத்துக்கு விண்ணப்பிக்கலாம். விண்ணப்பத்துடன் அவரது தேகாரோக்கிய நிலை தொடர்பில் தகுதிவாய்ந்த மருத்துவர் ஒருவரால் வழங்கப்பட்ட மருத்துவச் சான்றிதழ் இணைக்கப்படவேண்டியது அவசியம்.

அதன்பின் திணைக்களத்தின் தலைமைக் காரியாலயத்திலோ அல்லது அதன் பிரதேசக் காரியாலயங்களிலோ வீதிப் போக்குவரத்து நெறிமுறைகள் பற்றிய எழுத்துமூலப் பரீட்சைக்குத் தோற்றவேண்டும். அந்தப் பரீட்சையில் சித்திபெற்ற பின்பே எல் போர்ட் ஒன்றுடன் வாகனத்தைச் செலுத்திப் பழக அனுமதி வழங்கப்படும்.

அந்த எல் போர்டுடன் திணைக்களத்தால் அங்கீகரிக்கப்பட்டுள்ள வாகனப்பயிற்சி நிலையமொன்றில் அல்லது வேறு வாகனத்தில் சாரதி அனுமதிப்பத்திரம் பெற்றிருக்கும் பயிற்சியாளர் ஒருவருடன் வாகனத்தைச் செலுத்திப் பழகலாம். அதன்பின்னர் நேரடிப் பயிற்சிக்கு திணைக்களத்துக்கு விண்ணப்பம் செய்யலாம். 18 வயதுக்கு மேற்பட்டவர்களும் மேற்கூறிய சகல சட்டதிட்டங்களுக்கும் உள்ளாவார்கள் என்று அவர் மேலும் தெரிவித்தார். (த)

## தேவை

யாழ். நகரில் இயங்கிவரும் நிறுவனத்தின் கொழும்பில் உள்ள இறக்குமதி செய்துவரும் சகோதரத்துவ நிறுவனத்துக்கு ஆண் முகாமையாளர் தேவை. இவர் 25-40 வயதுக்கு இடைப் பட்டவராகவும் A/L கணக்கியல் வர்த்தக கல்வித் தகைமைகள் உடையவராகவும் இருத்தல் வேண்டும். தங்குமிட வசதிகள் செய்து தரப்படும். சம்பளம் நேரில் பேசித்தீர்மானித்து கொள்ளலாம். விண்ணப்பிக்கவும்.

விளம்பர இல:5093
மே.பா: உதயன்
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
(68720)(10.17.19)

சாயிராம்

## புட்டபர்த்தி, திருப்பதி, சீரடி



### புனித யாத்திரை

கொழும்பு, ஸ்ரீ சத்ய சாயிபாபா மத்திய நிலையத்தின் ஏற்பாட்டில், சாயி பக்தர்களின் வேண்டுகோளுக்கிணங்க மீண்டும், வியாபார நோக்கமற்ற சேவை!



2016 ஜூன் 1ஆம் திகதி புதன்கிழமை தொடக்கம்
ஜூன் 13ஆம் திகதி திங்கட்கிழமை வரை 12 நாட்கள்

திருப்பதி பெருமாள் தரிசனம், சீரடி சாயியின் ஆராத்தியுடன் கூடிய தரிசன எற்பாட்டுடன். அனைத்து இடங்களும் தேர்ச்சிபெற்ற வழிகாட்டி உதவியுடன், சென்னையில் 02 நாட்கள், திருப்பதியில் 01 நாள் இரவு, புட்டபர்த்தியில் 3 நாட்கள், சீரடியில் 3 நாட்கள் என 12 நாள் சாயி யாத்திரை.

கொழும்பு, சென்னை, கொழும்பு விமானக்கட்டணம், சென்னை திருப்பதி சொகுசு வண்டிக்கட்டணம். உறங்கல் வசதி கொண்ட குளிர்சாதன ரயில் பயணம், திருப்பதி, சீரடி, சென்னை A/C அறைகள் கொண்ட இடவசதி (புட்டபர்த்தி தவிர்ந்த) சாயி நிலையத்திலிருந்து விமானநிலையம் சென்று வர ஒழுங்குகள், இந்திய விசா கட்டணம், சீரடி, திருப்பதி ஆலய ஆராத்தி தரிசனங்களுக்கான கட்டணங்கள் உட்பட.

தொடர்புகளுக்கு : பொருளாளர்
தொ.பே. 0777 485461, 0777 343551
சாயி நிலையம்,
113, புதுசெட்டித்தெரு, கொழும்பு 13
மின்னஞ்சல் : shaeeron@gmail.com
வலைதளம் : www.sainilayamlk.com

## மீனவர்களைக் காப்பாற்ற உயிர்காப்பு படகுச் சேவை

கொழும்பு, பெப்.7
எதிர்பாராத விதமாக கடலில் ஆபத்தில் சிக்கும் மீனவர்களைக் காப்பாற்றுவதற்கான உயிர்காப்புப்படகு சேவையொன்றை ஆரம்பிக்கப்போவதாக கடற்றொழில் மற்றும் நீர்வள அமைச்சு தெரிவித்துள்ளது.

காலநிலையில் எதிர்பாராமல் நடக்கும் மாற்றங்கள் மற்றும் ஏனைய இடர்களால் கடந்த காலங்களில் ஏராளமான மீனவர்கள் உயிரிழந்துள்ளனர். எதிர்காலத்தில் அவ்வாறான இக்கட்டுகளில் சிக்குபவர்களைக் காப்பாற்றுவதற்காகவே இந்த உயிர்காப்புப் படகுச்சேவை ஆரம்பிக்கப்படவுள்ளது.

இந்தச் சேவைக்காக 'டீனி' எனும் விசேட விசைப்படகு ஒன்றின் விலை 25 கோடி ரூபா எனவும் அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்தன. (த)

A - ONE MEDIA SOLUTION
வழங்கும்
JAFFNA
Electronic
Media Course

A-ONE MEDIA SOLUTION
You Define - We Deliver

யாழ்ப்பாணத்தில் இலத்திரனியல்,
ஊடக கற்கைநெறி

TV / Radio Presenting
தொலைக்காட்சி / வானொலி அறிவிப்பு

Programme Producing
நிகழ்ச்சி தயாரிப்பு

News Producing
செய்தி தயாரிப்பு

Audio / Video Editing
ஒலி/ஒளி தொகுப்பு

News Reading
செய்தி வாசிப்பு



மட்டுப்படுத்தப்பட்ட அனுமதிகள்
இன்றே தொடர்பு கொள்ளவும்

போன்ற விடயங்களுக்கான பயிற்சி நெறிகள்.

இலங்கையின் முன்னணி
தொலைக்காட்சி, வானொலி பிரபலங்களால்
பயிற்சி வழங்கப்படும்.

இல. 281, K.K.S. வீதி, யாழ்ப்பாணம்.
தொடர்புகளுக்கு : 0777 824 094
விண்ணப்பம் [illegible]
MASS [illegible]

துபாய் வேலைவாய்ப்பு

DUBAI முன்னணி நிறுவனத்திற்கு பின்வரும் வேலைவாய்ப்புகளுக்காக இணைத்துக்கொள்ளப்பட இருக்கின்றார்கள்.

- Project Site Supervisor - 02 - AED 4000 - 5000
- Art Glass Technicians / Artists/ - 06 - AED 1500 - 1800
- Aluminum / Stainless/ Fabricators - 10 - AED 1500 - 1800
- Finishing Carpenter - 02- AED 1200 - 1500
- Steel Welder - 03 - AED 1500 - 1800
- Plumber - 01 - AED 1500 - 1800
- Security Guards - 03 - AED 1200 - 1500
- Senior Procurement / Logistics Officer - 01 - AED 3000 - 4000
- Unskilled Labour - 11 - AED 800 - 1000

Terms & Conditions: AL/2755/01/16 1AED = Rs.36/-

- ஒப்பந்த காலம் 2வருடம்
- உணவுக்கான அலவன்ஸ் 300AED
- இலவச தங்குமிடம், மருத்துவ வசதி
- நாளொன்றுக்கான வேலை நேரம் 81/2 மணித்தியாலங்கள்
- ஒப்பந்த காலம் முடிவடைந்தது நாடு திரும்ப விமானப்பயண டிக்கட் இலவசம்
- ஏனையவை துபாய் நாட்டு சட்டத்திற்குட்பட்டது.

பெப்ரவரி 12,13,14ம் திகதிகளில் கம்பனி பணிப்பளரினால் நேர்முகப்பரீட்சை.

பதிவுகளுக்கு இன்றே அழையுங்கள்:
0777665441 / 0767665447

அரச அனுமதிக்கட்டணம் மட்டுமே.
(Unskilled Labourers - Rs.100187/- , Other Category - 109,887/-)

Email: cv.orientlankainfo@gmail.com / Web:www.orientlanka.org

Orient Lanka Employment Agency
No:2/1/1A, Highlevel Road, Kirulapone, Colombo - 06.
Tel: 0112515146, 0113186396, 0779671571
LIC NO: 2755

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரண அறிவித்தல்கள்

### திருமதி நாகேஸ்வரி இலங்கராசா

மலர்வு
15 . 05 . 1942



உதிர்வு
03 . 02 . 2016

கொக்குவில் மேற்கு கேணியடியைப் பிறப்பிட மாகவும் பிரான்ஸ் Noisy - le - Sec ஐ வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நாகேஸ்வரி இலங்கராசா 03.02.2016 புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகலிங்கம் - சின்னம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான கந்தையா - நாகம்மா தம்பதிகளின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற இலங்கராசாவின் அன்பு மனைவியும், ரவீந்திரகுமார், ரஞ்சிதகுமாரி, உதயகுமார், கமலகுமாரி, சந்திரகுமார், சிவகுமாரி, உதயகுமாரி, சூரியகுமார், செந்தமிழ்குமாரி ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற குணசிங்கம் மற்றும் நல்லம்மா, பராசக்தி, கணேஸ், தேவராஜா (தெய்வம்) ஆகியோரின் பாசமிகு சகோதரியும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் 09.02.2016 செவ்வாய்க் கிழமை பிரான்ஸில் நடைபெற்றுப் பூதவுடல் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(68717)(11,17,20) தகவல்: சகோதரர்கள்.

### கந்தையா கோபாலசிங்கம் (நொத்தார்)

(ஓய்வுபெற்ற புகையிரத நிலைய அதிபர்)



அரியாலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா கோபாலசிங்கம் 05.02.2016 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா - காமாட்சிப்பிள்ளை தம்பதியரின் இளைய புதல்வரும், காலஞ்சென்ற விசுவலிங்கம் - இராசம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற புவனேஸ்வரியின் (ஈஸ்வரி) அன்புக் கணவரும், புவனகோபன், நந்தகோபன், நந்தினியின் அன்புத் தந்தையும், காலஞ்சென்றவர்களான இராசலட்சுமி, மனோன்மணி, ஜெயலட்சுமி, பாக்கியம், தருமலட்சுமி, சபாரட்ணம், கனகரட்ணம், நவரட்ணம் ஆகியோரின் பாசமிகு சகோதரரும், பத்மினி, மொனிக்கா, மோகனதாஸ் (ஓய்வுபெற்ற மின்சார சபை ஊழியர்) ஆகியோரின் அன்பு மாமனாரும், கரேஸ், பிரதீஸ், பற்றிக், மாறியோ, சஜித்குமரன் (சதீஸ்) மற்றும் சுறேந்தினி ஆகியோரின் அன்புப் பேரனும், பகிர்தன், வேணுஜன் ஆகியோரின் அன்புப் பூட்டனும், காலஞ்சென்றவரான நவரட்ணராஜாவின் அன்பு மச்சானும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 485 கண்டி வீதி, அரியாலையில் அமைந்துள்ள அவரின் இல்லத்தில் இன்று (07.02.2016) ஞாயிற்றுக்கிழமை நடைபெற்று பிற்பகல் 3.30 மணியளவில் தகனக்கிரியைக்காக அரியாலை சித்துப்பாத்தி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர் கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்.

(68710)(11,19,20)

தொ.பே:- 021 221 1092

# யோசித கைதை தாங்க முடியாதோர் உடன் பதவியிலிருந்து விலக முடியும்

## அமைச்சர் லக்ஸ்மன் கிரியல்ல தெரிவிப்பு

கொழும்பு, பெப்.7

யோசித ராஜபக்ச கைது செய்யப்பட்டமைக்காக கண்ணீர் வடிக்கும் பிரதி அமைச்சர்கள் பதவியிலிருந்து விலக முடியும் என அமைச்சரும் அவைத் தலைவருமான லக்ஸ்மன் கிரியல்ல தெரிவித்துள்ளார்.

உயர்கல்வி அமைச்சில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பொன்றிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

முக்கிய பிரபு ஒருவரின் மகன் கைதானமையை தாங்கிக் கொள்ள முடியாத பிரதி அமைச்சர்கள் பதவியிலிருந்து விலக முடியும் எனவும் அதற்கு தடையில்லை எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

பதவி விலகப் போவதாக கூறித் தொடர்ந்தும் ஊடக கண்காட்சி நடத்த வேண்டியதில்லை. பதவி விலக விரும்புவோர் தங்களது பெயர்களை உடனடியாக வெளியிட வேண்டும்.

நல்லாட்சி அரசில் சட்டம் அனைவருக்கும் சமமானது. யாரேனும் சட்டத்தை மீறினால் தராதரம் பாராது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

ஐக்கிய தேசியக் கட்சி எந்த நேரத்திலும் எந்தவொரு தேர்தலையும் எதிர்நோக்கத் தயார். புதிய முறையில் நடத்தினாலும் பழைய முறையில் நடத்தினாலும் எமக்கு அது பிரச்சினையில்லை

ஆட்சி அதிகாரமின்றியே நாம் ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றியிருந்தோம். மூன்றில் இரண்டு பெரும்பான்மை, நாடாளுமன்றம், மாகாணசபை மற்றும் உள்ளூராட்சி மன்றத்தை மகிந்த வைத்திருந்த போதே அவரைத் தோற்கடித்தோம். புதிய கட்சி அமைத்தாலும் எதிர்க்கட்சிக்கு முன்னேற்றம் எதுவும் ஏற்படப் போவதில்லை.

பொய்யான பரப் புரைகளை மேற்கொண்டு மக்களை ஏமாற்றி ஆட்சியை கைப்பற்ற முயற்சிக்கின்றனர். எனினும் மக்கள் நல்லாட்சியை ஏற்றுக்கொண்டுள்ளனர்.

நாட்டின் அனைத்துப் பிரஜைகளும் சட்டத்தின் முன் சமமானவர்கள்.- என்று தெரிவித்துள்ளார். (ற)

# அனைத்துலக சைவ மாநாடு யாழ்.பல்கலையில் இம்மாதம்

யாழ்ப்பாணம், பெப்.7

யாழ்ப்பாணப்பல்கலைக் கழக இந்து நாகரிகத் துறை சமூகத்தினர் ‘சிவாகமங்களும் திருமுறைகளும் புலப்படுத்தும் சைவப் பண்பாட்டுக் கூறுகளும் சமூக நல்லிணக்கச் சிந்தனைகளும்’ என்ற கருப்பொருளை முன்னிலைப்படுத்தும் முதலாவது அனைத்துலக சைவ மாநாடு நிகழ்வுகள் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கத்தில் இம்மாதம் 12 ஆம், 13 ஆம் மற்றும் 14 ஆம் திகதிகளில் இடம்பெறவுள்ளது.

இதன்போது சைவப் பண்பாட்டுக் கூறுகளும், சமூக நல்லிணக்கச் சிந்தனைகளும் மேன்மேலும் வளர்த்தெடுக்கப்பட வேண்டும் என்ற நோக்கத்தின் வெளிப்பாடாக சமயவியல், தத்துவவியல், கலையியல், சமுதாயவியல், மொழியும் இலக்கியமும், அறவியலும் அறிவியலும் என்பதான விடயதானங்களை முன்னிலைப்படுத்திய மூன்று சமகால அமர்வுகளாக ஒன்பது அரங்குகளில் ஆய்வுக்கட்டுரைகள் சமர்ப்பிக்கப்படவுள்ளன.

இந்த மாநாட்டில் இந்தியா, ஐக்கிய இராச்சியம், ஆஸ்திரேலியா போன்ற நாடுகளில் இருந்து ஆய்வாளர்களும், பேராளர்களும் வருகை தரவுள்ளதுடன் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஆய்வாளர்களும், தென்கிழக்கு, பேராதனை, சப்பிரகமுவ பல்கலைக்கழகங்களின் ஆய்வாளர்களும், மாணவர்கள், தேசிய கல்வி நிறுவக விரிவுரையாளர்கள் ஆகியோரும் கலந்து கொள்வர்.

இந்து நாகரிகத்துறை பேராசிரியர் மா.வேதநாதன் தலைமையில் இடம்பெறவுள்ள ஆரம்ப நாள் நிகழ்வுகளின் பிரதம விருந்தினராக யாழ்ப்பாணப் பல்கலைக்கழக துணைவேந்தர் சிரேஷ்ட பேராசிரியர் வசந்தி அரசரட்ணம் கலந்து கொள்வார். சிறப்பு விருந்தினர்களாக கலைப்பீடாதிபதி சிரேஷ்ட பேராசிரியர் நா.ஞானக்குமரன், யாழ்ப்பாணத்திலுள்ள இந்தியத் துணைத்தூதரகத்தின் தூதுவர் ஆ.நடராஜன் ஆகியோரும், சிறப்பு விருந்தினர்களாக இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் அ.உமாமகேஸ்வரன், அகில இலங்கை சைவப் புலவர் சங்கத் தலைவர் மு.திருஞானசம்பந்த பிள்ளை ஆகியோரும் கலந்து கொள்வர்.

மாநாட்டின் இறுதி நாள் நிகழ்வுகள் தகைசார் பேராசிரியர் ப.கோபாலகிருஷ்ண ஐயர் தலைமையில் இடம்பெறவுள்ளதுடன் நிகழ்வின் பிரதம விருந்தினராக யாழ்ப்பாணப்பல்கலைக் கழக வேந்தர் தகைசார் பேராசிரியர் சி.பத்மநாதனும், சிறப்பு விருந்தினர்களாக துணைவேந்தர் சிரேஷ்ட பேராசிரியர் வசந்தி அரசரட்ணமும், முன்னாள் துணைவேந்தர் சிரேஷ்ட பேராசிரியர் நா.சண்முகலிங்கனும், கௌரவ விருந்தினர்களாக தஞ்சாவூர் தமிழ்ப்பல்கலைக் கழகத் துணை வேந்தர் சிரேஷ்ட பேராசிரியர் க.பாஸ் கரனும், அகில இலங்கை சைவப் புலவர் சங்கத் துணைத் தலைவர் சா.தில்லைநாதனும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

இந்த சைவ மாநாட்டில் பேராளர்களாக பதிவு செய்ய விரும்புவோர் முன்கூட்டியே பதிவுகளை மேற்கொள்ளமுடியும் எனவும், மாநாட்டில் கலந்து கொள்ள விரும்புகின்ற சைவசமய ஆர்வலர்கள் அனைவரும் எந்தவித பதிவுகளையும் மேற்கொள்ளாது கலந்து கொள்ளலாம் எனவும் யாழ்ப்பாணப்பல்கலைக் கழக இந்து நாகரிகத் துறை சமூகத்தினர் தெரிவித்துள்ளனர். (ற-ஐ-ரி2)

# சு.கவிலிருந்து சொற்ப அளவினரே விலகிச் செல்ல விரும்புகின்றனர்

## அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவிப்பு

கொழும்பு, பெப்.7

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் சொற்ப அளவானவர்களே கட்சியை விட்டு விலகிச் செல்ல விரும்புகின்றனர் என்று அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்துள்ளார். கொழும்பில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற செய்தியாளர் சந்திப் பில் பங்கேற்ற போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். அங்கு அவர் மேலும் தெரிவித் துள்ளதாவது-

நாடாளுமன்றில் அங்கம் வகிக்கும் 98 வீதமான சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் உறுப்பினர்களும் கட்சியில் தொடர்ந்தும் நீடிக்க வேண்டும் என்றே கருதுகின்றனர். கட்சியை விட்டு விலகிச் செல்ல வேண்டுமென சொற்ப அளவானர்களே கோருகின்றனர். சிறிலங்கா சுதந்திரக் கட்சி பிளவடைந்தால் அதன் நலன்களின் ஊடாக ஐக்கிய தேசியக் கட்சி வெற்றி யீட்டுவதைத் தடுக்க முடியாது. ஐக்கிய தேசியக் கட்சியுடன் டீல் போட்டுக் கொண்ட தரப்பினர் சுதந்திரக் கட்சியை பிளவடையச் செய்ய முயற்சிக்கின்றனர்.

சில தரப்பினர் ஆட்சி அதிகாரத்தை சுதந்திரக் கட்சிக்கு வழங்குமாறு ஜனாதிபதியிடம் கோரி வருகின்றனர். ஜனாதிபதிக்கு தேவை என்றாலும் தற்போது நாடாளுமன்றை கலைக்க முடியாது.

19ஆம் திருத்தச்சட்டத்தின் அடிப்படையில் நாடாளுமன்றை நான்கரை ஆண்டுகளுக்கு கலைக்க முடியாது. அடுத்த சிறிலங்கா சுதந்திரக் கட்சி ஆட்சியை அமைக்க தற்போதிருந்தே ஆயத்தமாக வேண்டும்.- என்று தெரிவித்துள்ளார். (ற)

## கண்ணீர் அஞ்சலி



தோற்றம்: 16.07.1947

மறைவு: 05.02.2016

2004-2007 உயர் தேசிய கணக்கியல் டிப்ளோமா கற்கைநெறி மாணவன் சோ. ருத்திரகுமரனின் அன்புத் தந்தை

### கா. சோதிலிங்கம்

(ஓய்வுபெற்ற மின்சாரசபை ஊழியர்)

அவர்களின் பிரிவால் துயருறும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

2004 - 2007 மாணவர்கள்
உயர் தொழில்நுட்ப கல்லூரி, யாழ்ப்பாணம்.

(68718)(10.17.19)

# ஜனவரியில் புதிய வாகன பதிவுகளில் கடும் வீழ்ச்சி

கொழும்பு, பெப் 7

கடந்த வருடம் டிசெம்பர் மாதத்துடன் ஒப்பிடும்போது இவ்வருடம் ஜனவரி மாதத்தில் பதிவுசெய்யப்பட்டிருக்கும் வாகனங்களின் எண்ணிக்கையில் 42 சதவிகித வீழ்ச்சி காணப்பட்டுள்ளதாக மோட்டார் போக்குவரத்துத் திணைக்களம் தெரிவித்துள்ளது. கடந்த வருடம் டிசெம்பர் மாதத்தில் மொத்தமாக 57 ஆயிரத்து 365 (57,365) புதிய வாகனங்கள் பதிவுசெய்யப்பட் டிருந்தன. ஜனவரி மாதத்தில் மொத்தமாக 32 ஆயிரத்து 801 (32,80) வாகனங்களே பதிவுசெய்யப்பட்டுள்ளன. அண்மையில் வாகனங்களின் விலை அதிகரித்தமையே காரணம் எனக் கூறப்படுகிறது. (தி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சோபித தேரருக்குச் சிலை அமைக்கும் பணி தாமதம்

கொழும்பு, பெப்.7
மாதுலுவாவே சோபித தேரரின் சிலை அமைக்கும் பணிகள் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.
அதற்கான அடிக்கல் நாட்டும் வைபவம் அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் தலைமையில் நடைபெறவிருந்தது. எனினும், சில தரப்பிலிருந்து எழுப்பப்பட்ட எதிர்ப்பைத் தொடர்ந்து அடிக்கல் நாட்டும் வைபவம் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளது என்று குறிப்பிடப்பட்டுள்ளது.
எதிர்ப்பு வெளியானதை தொடர்ந்து, மேல் மாகாண முதலமைச்சர் இசுர தேவப்பிரியவின் உத்தரவுக்கமைய பணிகள் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளன என்று மதுகம பிரதேச சபையின் செயலாளர் அசோக ரணசிங்க தெரிவித்துள்ளார்.
இதேவேளை, மதுகம பிரதேச சபை கேட்போர் கூடத்தில் மாதுலுவாவே சோபித தேரரின் உருவச்சிலை அமைக்கத் திட்டமிடப்பட்டிருந்தது. (ற)


## விநியோகஸ்தர்கள் தேவை

* Ceylon & ForeignTrades PLC நிறுவனத்திற்கு கிளிநொச்சி மற்றும் கல்முனை பகுதிகலுக்கு விநியோகஸ்தர்கள் தேவை
* சந்தையில் சுமார் 50 வருடகாலமாக சிறந்த விற்பனை திறனை கொண்ட எங்கள் நிறுவனத்தின் விற்பனை பொருட்கள் வருமாறு

Parachute Pure Coconut Oil
Parachute Ayurvedic Hair Oil
Parachute Jasmine Hair Oil
Parachute Body Lotion
Mediker Anti Lice Lotion
ARS வீட்டு பூச்சீக் கொல்லிகள் (Insect Control)
Aquawipe Baby and Face Wet Wipes
Mamypoko Pants Baby Diapers
Set Wet Hair Gel
Hair & Care Hair Oil

Ceylon & Foreign Trades PLC
414/18 K. Cyril C. Perera MW
Colombo-13
Tel : 0114 343444, 4378745
Fax : 0112 345360
Email: consumer@cft.lk
தொடர்புகொள்ள 0727576179 / 0722214303






**பின்வரும் நாடுகளில் எந்த ஒரு நாட்டிற்கு விண்ணப்பிக்கும் மூவருக்கு தலா £3,000 மதிப்புள்ள மூன்று கல்வி உதவி தொகைகள் காத்திருக்கிறது**

இங்கிலாந்து | அமெரிக்கா | கனடா | ஆவுஸ்திரேலியா | நியூசீலாந்து

மேலும் விவரங்களுக்கு www.britishcouncil.lk/events இணையத்தளத்தை அனுகுங்கள்.
29 பிப்ரவரி 2016 க்கு முன்னர் விண்ணப்பிக்கவும்.

BRITISH COUNCIL IELTS
IELTS is jointly owned by British Council


# அரச வைத்தியசாலைகளில் மருந்துகளுக்குத் தட்டுப்பாடு

கொழும்பு, பெப்.7
நாடெங்கிலுமுள்ள பல வைத்தியசாலைகளில் அத்தியாவசிய மருந்துகளுக்குக் கடும் தட்டுப்பாடு நிலவுவதாக சுகாதார அமைச்சு தெரிவித்திருக்கிறது.
இருதயநோய், சிறுநீரகநோய், நீரிழிவுநோய், புற்றுநோய், உயர் குருதி அழுத்தம், வாயுப்பிடிப்பு போன்ற பல்வேறு நோய்களுக்கான அத்தியாவசிய மருந்துகளுக்குத் தட்டுப்பாடு நிலவுவதாகவும், வடமத்திய மாகாணத்தின் அநுராதபுர வைத்தியசாலைகளில் மாத்திரம் 21 ஆயிரம் சிறுநீரக நோயாளிகள் உள்ளனர் என்றும் அவர்களுக்கான 'வன் எல்பா' எனும் முக்கிய மருந்துக்கு கடந்த இரு மாதங்களாகத் தட்டுப்பாடு நிலவி வருவதாகவும் சுகாதார அமைச்சின் தகவலறிந்த வட்டாரங்கள் தெரிவித்திருக்கின்றன.
இந்த மருந்துத் தட்டுப்பாட்டை நீக்குவதற்காக சுகாதார அமைச்சின் மருந்துகள் விநியோகப்பிரிவின் முன்னாள் பணிப்பாளர் வைத்தியர் கமல் ஜயசிங்கவை குறைந்தபட்சம் மூன்று மாதங்களுக்கு மீண்டும் சேவையில் அமர்த்துமாறு சுகாதார அமைச்சர் வைத்தியர் ராஜித சேனாரத்ன அமைச்சின் செயலாளர் அருண ஜயவிக்கிரமவுக்கு பணிப்புரை வழங்கியுள்ளதாகவும் அந்த வட்டாரங்கள் தெரிவித்தன.
தற்போது நிலவும் மருந்துத் தட்டுப்பாடு பற்றி பரிசீலனை செய்வதற்காக சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் அநுராதபுரம் மற்றும் பதவிய பிரதேச வைத்தியசாலைகளுக்கு நாளை விஜயமொன்றைமேற்கொள்ளவுள்ளதாகத்தெரியவருகின்றது.
பின்வரும் அதிமுக்கிய மருந்துகளுக்குக் கடும் தட்டுப்பாடு நிலவுவதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.-
சுகாதார அமைச்சரின் பணிப்புரையின் கீழ் வடமத்திய மாகாணத்தின் சிறுநீரக நோயாளிகளுக்கான அத்தியாவசிய மருந்துகளை உடனடியாக விநியோகிக்குமாறு மருந்துகள் விநியோகப் பிரிவுக்கு உத்தரவிட்டுள்ளதாகவும் அதன் பிரகாரம் இன்னும் ஓரிரு தினங்களில் அவை விநியோகிக்கப்படும் எனவும் சுகாதார சேவைகள் பணிப்பாளர் விசேட வைத்திய நிபுணர் வைத்தியர் பாலித மஹிப்பால தெரிவித்திருக்கிறார். (து)

# 21பொலிஸ் உத்தியோகத்தர்களிடம் பொலிஸ் ஆணைக்குழு விசாரிக்கும்

கொழும்பு, பெப்.7
எம்பிலிப்பிட்டிய மெண்டிஸ் கட்டடத்தில் நடந்த வைபவமொன்றில் பொலிஸார் தலையிட்டதால் மேல்மாடியிலிருந்து தள்ளி விழுத்தப்பட்டபின் உயிரிழந்த சுமித் பிரசன்ன எனும் குடும்பஸ்தரின் சாவு தொடர்பில் எம்பிலிப்பிட்டிய பொலிஸ் நிலையத்தில் அச்சமயம் பணியிலிருந்த பொலிஸ் ஆணைக்குழுவிடம் முன்னிலையாக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக ஆணைக்குழுவின் செயலாளர் ஆரியதாச குரே தெரிவித்திருக்கிறார்.
இந்தச் சம்பவம் தொடர்பில் சப்ரகமுவ மாகாணத்துக்குப் பொறுப்பான சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் சீ.டீ.விக்கிரம ரத்னவால் மேற்கொள்ளப்பட்ட ஆரம்ப விசாரணைகளின் அறிக்கை பொலிஸ்மா அதிபருக்கு சமர்ப்பிக்கப்பட்டிருப்பதாகவும் அந்த அறிக்கையின் அடிப்படையில் மேலதிக விளக்கங்களைக் கோருவதற்காகவே இவர்கள் 21பேரையும் ஆணைக்குழுவிடம் முன்னிலையாக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.
இதற்கிடையில் இச்சம்பவம் தொடர்பில் விசாரணை செய்வதற்காக பொலிஸ் ஆணைக்குழு எம்பிலிப்பிட்டிய நகருக்கு அனுப்பியிருந்த மூவர் அடங்கிய விசாரணைக்குழு உயிரிழந்தவரின் குடும்பத்தினரிடமும் பிரதேவாசிகளிடமும் பெற்றுக்கொண்ட வாக்குமூலங்களும் ஆணைக்குழுவுக்கு சமர்ப்பிக்கப்பட்டிருப்பதாகவும் ஆரியதாச குரே மேலும் தெரிவித்தார். (து)

# 15 வேலைவாய்ப்பு மத்திய நிலையங்கள் நாடெங்கும் நிறுவுவதற்கு நடவடிக்கை

*முதலாவது நிலையம் இரத்தினபுரியில் ஆரம்பம்*

கொழும்பு, பெப்.7
நாடெங்கும் வேலைவாய்ப்பின்றி இருக்கும் இளைஞர், யுவதிகளின் தகுதிக்கேற்ப பொருத்தமான வேலைவாய்ப்புகளைப் பெற்றுத்தருவதற்கான 15 மத்திய நிலையங்களை இவ்வருடத்தில் நிறுவ தொழில் மற்றும் தொழிலுறவு அமைச்சர் டபிள்யூ.டீ.ஜே.செனிவிரத்ன நடவடிக்கை எடுத்துள்ளார்.
தொழில் தேடும் இளைஞர், யுவதிகளுக்கு அரச நிறுவனங்களில் மட்டுமன்றி, தனியார் நிறுவனங்களிலும் தொழில்வாய்ப்புகளைப் பெற்றுத்தர இந்த மத்திய நிலையங்கள் உதவும். தொழில் வழங்க விரும்புவோர் தங்களது தேவைகள் பற்றிய விவரங்களை இந்த நிலையங்களில் முன்கூட்டியே பதிவுசெய்து வைத்திருந்தால் அவர்களது தேவைகளுக்குப் பொருத்தமானவர்கள் பரிந்துரை செய்யப்படுவார்கள்.
அரசின் ஒரு இலட்சம் பேருக்குத் தொழில்வாய்ப்பு வழங்கும் கருத்திட்டத்துக்கு இந்த மத்திய நிலையங்கள் ஒத்துழைப்பு வழங்கும். தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுக்குத் தேவையான இலவசப் பயிற்சிகளும் வழங்கப்படும்.
முதலாவது நிலையம் அண்மையில் இரத்தினபுரியில் ஆரம்பிக்கப்பட்டதைத் தொடர்ந்து நடந்த வைபவமொன்றில் உரையாற்றியபோதே அமைச்சர் செனிவிரத்ன மேற்கூறிய தகவல்களை வெளியிட்டார். (இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரூ.2,500 சம்பள உயர்வு இம்மாதம் கிடைக்காவிட்டால் போராட்டம்

## அரச சேவையாளர் தொழிற்சங்க சம்மேளனம் எச்சரிக்கை

கொழும்பு, பெப்.7
வாக்குறுதி அளிக்கப்பட்ட 2,500 ரூபா சம்பள உயர்வு இம்மாத சம்பளத்துடன் சேர்க்கப்படாவிட்டால் நாடளாவிய ரீதியில் மாபெரும் தொழிற்சங்கப் போராட்டமொன்றை முன்னெடுக்கப்போவதாக அரச சேவையாளர் தொழிற்சங்க சம்மேளனம் அரசுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளது.

கொழும்பில் நடந்த ஊடகவியலாளர் மாநாட்டில் இந்த எச்சரிக்கையை விடுத்த அச்சம்மேளனத்தின் தலைவர் டபிள்யூ. எம்.பியதாச, அரசு வாக்குறுதியளித்தவாறு தனியார் துறையினருக்கும் 2,500 ரூபா சம்பள உயர்வு இந்த மாதம் முதல் வழங்கப்பட வேண்டுமெனவும் வலியுறுத்தினார்.

இந்தச் சந்திப்பில் இலங்கை ஆசிரியர் சங்கத்தின் செயலாளர் வசந்த ஹந்தபான்கொட உட்பட பல தொழிற்சங்கங்களின் பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர். (தி)

# காதல் தோல்வியால் உயிரை மாய்த்தார் பெண் சிப்பாய்

கொழும்பு, பெப் .7
தனது காதல் தோல்வியில் முடிவடைந்ததையடுத்து மனமுடைந்து போயிருந்த 24 வயதுப் பெண் சிப்பாய் ஒருவர் நாரஹேன்பிட்டி இராணுவ வைத்தியசாலையில் பத்தாம் மாடியிலிருந்து (ஹெலிகொப்டர் இறங்குதளம்) கீழே குதித்துத் தற்கொலை செய்துகொண்டார்.

தரையிலிருந்து சுமார் 80 அடி உயரமுள்ள இந்த மாடியிலிருந்து குதித்து தற்கொலை செய்துகொண்டவர் இரத்தினபுரி, கீரிமலே, தென்னஹேன பிரதேசவாசியான தில்ஷானி ராஜரத்ன எனும் யுவதி எனவும், அவர் நாரஹேன்பிட்டி இராணுவ வைத்தியசாலையில் பணி புரிந்துகொண்டிருந்தபோதே இந்தச் சம்பவம் நடந்துள்ளதாகவும் தெரியவருகின்றது.

கடந்த முதலாம் திகதி பிற்பகல் 3.45 மணியளவில் நடந்த இந்தத் தற்கொலை தொடர்பில் பொரளை பொலிஸார் மேலதிக விசாரணைகளை நடத்தி வருகின்றனர். (தி)

# சு.க. உறுப்பினர்கள் மீது ஒழுக்காற்று நடவடிக்கை

கொழும்பு, பெப்.7
சிறி லங்கா சுதந்திரக் கட்சியின் ஒழுங்குகளுக்கு முரணாக கட்சியையும், கட்சித் தலைமையையும் விமர்சித்துக் கொண்டு செயற்படும் நாடாளுமன்ற, மாகாண சபை, உள்ளூராட்சி சபை உறுப்பினர்களுக்கு எதிராக தராதரம் பார்க்காமல் ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்க கட்சி தீர்மானித்துள்ளது என்று அந்தக் கட்சியின் செயலாளரும் அமைச்சருமான துமிந்த திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

கட்சியின் ஒழுங்குகளுக்கு எதிராக செயற்படுகின்றனர் என்று முறைப்பாடு கிடைக்கப் பெற்றுள்ளவர்களுக்கு எதிரான ஒழுக்காற்று விசாரணை நடவடிக்கை தற்பொழுது முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

அடுத்துவரும் நாள்களில் மாவட்ட ரீதியில் இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்படவுள்ளது.

கட்சியின் அனுமதியின்றி பத்திரிகையாளர் சந்திப்புக்களை ஏற்பாடு செய்து, கட்சிக்கு எதிராக கருத்துத் தெரிவித்தவர்களுக்கு எதிராகவும் நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அமைச்சர் மேலும் கூறியுள்ளார். (ற)

பண அவசரத்தின் போது
அதிக வட்டி செலுத்துகின்றீர்களா ?
www.pabcbank.com
(011) 4 929 929


மாதாந்தம் ஒவ்வொரு ரூ. 100,000/- க்கும்
ரூ. 990/-*
பண அவசரத்தின் போது
உங்கள் வாகனத்தை லீஸ்
செய்து குறைந்த தவணைகளுக்கு
பணத்தைப் பெற்றிடுங்கள்
PAN ASIA Business+ Leasing
- ஒரு வருடத்தில் செலுத்தி முடித்திடுங்கள்
- மிகக் குறைந்த தவணைக் கட்டணம்
- மீதியினை இறுதியில் செலுத்தக்கூடிய இயலுமை
(011) 4 929 929
பான் ஏஷியா வங்கி
உங்களை அறியும் வங்கி
பான் ஏஷியா பேங்கிங் கோபரேஷன் பி.எல்.சி., இலங்கை மத்திய வங்கியின் மேற்பார்வையின் கீழ் நடாத்தப்படும் ஓர் அனுமதிக்கப்பட்ட வர்த்தக வங்கியாகும் - Fitch Rating 'BBB(lka)'

இயற்கை அழகினைப் பாதுகாக்க....


HERBAL CARE
HOLLYWOOD STYLE
HESPERUS MARKETING (PVT) LTD.
No, 100, 5th Lane Colombo 03. Tel: 011 2576736/7
E-mail: hesperusm@gmail.com

12 மாத நிலையான வைப்பிற்கு அதிகூடிய வட்டி சம்பத் வங்கியிடமிருந்து
8.5%
(A.E.R. 8.5%)
உங்கள் சௌகரியம் கருதி
வருடத்தின் 365 நாட்களும் திறந்திருக்கும்
சம்பத் வங்கியின் 12 சுப்பர் கிளைகள் உள்ளிட்ட
நாடெங்கிலுமுள்ள 225 கிளைகள் உங்களுக்கு
சேவை வழங்க காத்திருக்கின்றன.
சம்பத் வங்கி
எதிர்காலத்தின் முன்னோடிகள்
Like us on facebook.com/Sampathbankplc
Sampath Bank Fitch Ratings A+ (lka)
0112 30 30 50
www.sampath.lk

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விண்ணப்பங்கள் தற்போது

# MERRILL J. FERNANDO INNOVATION AWARDS

#ECOVATION
creative solutions for people and planet
dilmahconservation.org

**வளர்ச்சிக்கும் மனிதநேய முகாமைத்துவத்திற்கும் நாட்டில் எதிர்நோக்கப்படும் சூழலியல் சவால்களுக்கும் புத்தாக்கமே அச்சாணியாகும**

இலங்கை பல்வகை உயிரின வளங்களை மாத்திரமன்றி வரலாற்று மற்றும் கலாசார மரபுகள், அறிவாற்றல் மற்றும் மதிநுட்பம் ஆகியவற்றையும் கொண்ட தேசமாகும். எமது நாட்டின் நிலைபெறு தன்மையான அபிவிருத்திக்கு, படைப்பாற்றல் அர்ப்பணிப்பும் புத்தாக்கத்திறனும் பெரிதும் துணைசெய்யும். தமது கருத்துப்படிவங்களை அல்லது மூல ஆக்கங்களை விருத்தி செய்வதற்கு வசதியற்ற படைப்பாளிகளுக்கு உதவுவதன் மூலம் புதுமையான சிந்தனை கொண்ட சாதாரண இலங்கையரினால் உந்தப்படும் ஓர் இலங்கை வியாபார முயற்சியான Dilmah இன் வெற்றியை தத்தமது துறைகளில் பிரதிபலிக்க அவர்களுக்கு வழிகாட்டுவதே மெரில் ஜே. பெர்னாண்டோ புத்தாக்கத்திறன் விருதின் குறிக்கோளாகும். இந்த விருதுகள், படைப்பாளிகள் தமது கண்டுபிடிப்புக்களைப் பாதுகாத்துப் பணனடையவும் உதவும் அதே வேளையில், இலங்கையின் சூழல், மனிதநேயம் மற்றும் பொதுவான அபிவிருத்தியின் முன்னுரிமைகளுக்கும் பக்கபலமாக அமையும்.

கழிவுப்பொருள் முகாமைத்துவம் | நீர் | உயிரின பல்வகைத் தன்மை | சக்திவளம் | பிளூ இகானமி

இலங்கையில் சூழல் மற்றும் மனிதநேய அபிவிருத்திக்கு உதவக்கூடிய புதிய கண்டுபிடிப்புகள் மற்றும் முன்மாதிரி வடிவமைப்புக்களுக்கே விருது வழங்கப்படும். மொத்தப் பரிசுத் தொகை ரூ.3.5 மில்லியனாகும்.

-உங்கள் எண்ணக்கருவை அல்லது முன்மாதிரியைச் சமர்ப்பிக்க, ஆங்கிலம், தமிழ் மற்றும் சிங்களத்தில் கிடைக்கும் விண்ணப்பப் படிவத்தைப் பதிவிறக்கம் செய்யுங்கள்.
**www.dilmahconservation.org/eco-innovation-award/**

விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி திகதி
2016, மார்ச் மாதம் 21ம் திகதி

**வசதியளிக்கும் நடுவர் குழு:**
பேராசிரியர் அஜித் டீ அல்விஸ்
பேராசிரியல் சரத் டபிள்யூ. கொட்டகம
கலாநிதி சுமித் பிலப்பிட்டிய
திருமதி ’ராணி யசரத்ன

Dilmah CONSERVATION

மேலும் விபரங்களிற்கு
Email: awards@dilmahconservation.org
Phone: 077 9614628

MJF





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## இன்னும் தடயம் அழியாத போரின் பெரும் வடுக்கள்!

**போ**ரின் காரணமாக, இந்தியாவுக்கு (தமிழகத்துக்கு) அகதியாகச் சென்று, பின்னர் நாடு திரும்பிய குடும்பஸ்தர் ஒருவர், இங்கு எவ்வகை வாழ்வாதார உதவியும் கிடைக்காததால், மனம் வெதும்பித் தனது உயிரை மாய்த்துள்ளார்.

இந்தியாவில் இருந்து திரும்பி மூன்று மாதங்கள் கடந்தும் அவருக்கு அரசினாலோ, அன்றி வடக்கு மாகாண சபையினாலோ, வேறெந்த அரச நிறுவனங்களாலோ எந்தவித உதவியும் கிடைக்காத நிலையிலேயே, அதிஉச்ச விரக்திக்கு ஆட்பட்டு, அவர் தமது உயிரை மாய்த்துக் கொண்டார் என்று சொல்லப்படுகிறது.

தமது சொந்த மண்ணுக்கு-இங்கு-திரும்பி வந்து மூன்று மாதங்கள் கடந்த நிலையிலும் வாழ்வாதாரத்துக்கான எந்தவகை உதவியும் அவருக்கு வழங்கப்படவில்லை என்று தகவல்கள் வெளிவந்துள்ளன.

இராணுவ் நடவடிக்கையைத் தொடர்ந்து ஏற்பட்ட உள்ளூர் இடப்பெயர்வை அடுத்து, 2006 ஆம் ஆண்டு காலப்பகுதியில் அவர் தமது சொந்த ஊரான காரைநகருக்குத் திரும்பியபோது, பாதிப்புற்றவரது வாழ்க்கைச் சொத்தான வீடு இடித்துத் தரைமட்டமாக்கப்பட்டிருந்தது.(மொத்தமாக ஐம்பதுக்கும் மேற்பட்டவர்களின் வீடுகள் அவ்வாறு இடித்துத் தள்ளப்பட்டன என்பது தகவல்)

அக்கரையில் பசுமை இல்லை(பச்சை இல்லை) என்ற நிலையில், தமது தாயகத்துக்குத் திரும்பிய அவருக்கும் குடும்பத்தினருக்கும் இக்கரையிலும் எவரும், எந்த நிறுவனமும் கைகொடுக்காத நிலையில், மற்றவர்கள் எவரிடமும் கையேந்திப் பழக்கப்படாத நிலையில், தமது உயிரை மாய்த்துக் கொண்ட துர்ப்பாக்கிய நிலைக்கு அவர் தள்ளப்பட்டார் எனக்கொள்வது தப்பன்று.

எமது நாட்டின் மீள்குடியேற்ற புனர்வாழ்வு அமைச்சு மற்றும் அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் சபையின் உயர்ஸ்தானிகர் அமைப்பு போன்றவற்றின் உதவி எதுவும் கிடைக்காததினாலும்-

விரக்தி தலைக்கு ஏறிய நிலையிலும் அவர் தமது உயிரை மாய்த்தார் என்று கொள்ளலாம் அல்லவா?

மற்றொரு வகையில் நோக்கின், அரச, அரசசார்பற்ற நிறுவனங்கள் மட்டுமன்றி, எமது மக்கள் மத்தியில் சேவை செய்வதாகக் கூறிக்கொள்வோரும், காட்டிக்கொள்வோரும் இதற்கான பழியைச் சுமந்தாக வேண்டும். பொறுப்புக் கூறும் கடமை தமக்கு உண்டு என்பதை அவர்கள் மறந்து விடலாகாது.

சமய, சமூக நிறுவனங்களும் இத்தகைய மக்களுக்கும், வேறு வகைகளில் பாதிப்புற்றோருக்கும் உதவுவதற்கென தமது வருமானத்தில் ஒரு பகுதியை ஒதுக்கலாம்.

வளம் நிறைந்து வாழ்பவர்கள், தமது தேவைகளை ஓரளவேனும் சுருக்கி, மேற்போந்த தரப்பினருக்கு உதவலாம். இப்போது அவ்வாறு நடைபெறுவதில்லை என்றல்ல.

உண்மையில், இத்தகையோருக்கு-நொந்து நொடிந்து போயுள்ளவர்களுக்கு- உதவுவதே உண்மையான தேட்டமும், ஆன்மிக அமைதியும் என்பதனை மறந்து விடலாகாது.

# ஆரம்பம் இது முடிவு அல்ல...

கந்த தியாகராசா

**ஜ**னவரி இருபத்தியாறாம்திகதிசெவ்வாய்க்கிழமை பொது பல சேனாவின் பொதுச் செயலாளர் வணக்கத்துக்குரிய கலகொடஅத்தே ஞானசார தேரரின் கைதைத் தொடர்ந்து ஒரு வாரத்துள் ஜனவரி முப்பதாம் திகதி சனிக்கிழமை யோசித ராஜபக்ச கைது செய்யப்பட்டமையானது பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது. இறைமையுள்ள இலங்கையின் நீதி பரிபாலனத்தின் உச்ச நிலைக்குஇஃது ஓர் உதாரணம். யோசிதவின் சம்பவம் நெடு நாள் பல கோணங்களில் ஆராயப்பட்டவை. ஆதாரபூர்மான ஆவணங்கள் சமர்ப்பிக்கப்பட்டன. வலுவான சாட்சிகளிடம் விசாரணைகள் இடம்பெற்றன. இவையனைத்துக்கும் பின்பே கைது இடம்பெற்றது. மகிந்த ராஜபக்ச குடும்பத்தினருக்கு பெரும் சங்கடத்தையும், மன உளைச்சலையும், குடும்ப கௌரவத்துக்குப் பாதிப்பையும் ஏற்படுத்திய இந்தச் சம்பவமானது மகிந்தவின் அரசியல் அந்தஸ்துக்கு கரும்புள்ளியாய் அமைந்துள்ளமையை மறுக்க முடியாது. நீண்ட காலமாக இலங்கை அரசியலில் நிலைத்து இருந்த பாரம்பரியத்தைக் கொண்ட குடும்பப் பின்னணியை உடையது ராஜபக்ச குடும்பம்.

### தெய்வம் நின்று கொல்லும் என்பது இதுதானோ?

நினைத்ததை நினைத்தபடி நிறைவேற்றி அரசியல் அரங்கில் தனிக்காட்டு ராஜாவாகவும் வந்தவர் மகிந்த. நீண்ட நாள் நிலைத்து ஆட்சி அதிகாரத்தை தக்க வைக்க சாதகமாகக் காய்களை நகர்த்தி வழிநடந்தவர் மகிந்த. ஜனநாயக நாடு என்ற சொற்பதத்துள் சகல அதிகாரக் கடிவாளங்களைக் கையகப்படுத்தி அரசோச்சிய முடி புனையா வேந்தன். போர் வெற்றி என்னும் மாயை விரித்து இனவாதத் தீயை மூட்டி பெரும்பான்மை இனத்தவருக்கு காட்சி தந்த கனவான். இலங்கையின் நல்ல மீட்பர் தமது குடும்பமே எனும் பிரமையை மக்கள் மத்தியில் வளர்த்து சுகம் அனுபவித்த அரசியல் குடும்பம். தொலைபேசி உரையாடல் மூலம் நாட்டின் நீதி பரிபாலனத்தையே நிலை தடுமாற வைத்த தலைவருக்கு, தான் வகுத்த சட்டமே, தன்மகனுக்குக் கேடாகும் என்பதை 2006 ஆம் ஆண்டு எண்ணவில்லை. அதிகாரம் அந்த எண்ணத்துக்கு இடம் தரவில்லை.

### வேலிக்கு வைத்த முள் தன்காலுக்கும் தைக்குமாம்

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி 2006 ஆம் ஆண்டு பணம் தூயதாக்கல் தடைச் சட்டத்தை நடைமுறைப்படுத்தி இருந்தார். அப்போ அந்தச் சட்டம் விடுதலைப் புலிகளின் பணப்பரிமாற்றத்தை குறிவைத்துக் கொண்டு

> நினைத்ததை நினைத்தபடி நிறைவேற்றி அரசியல் அரங்கில் தனிக்காட்டு ராஜாவாகவும் வந்தவர் மகிந்த. நீண்ட நாள் நிலைத்து ஆட்சி அதிகாரத்தை தக்க வைக்க சாதகமாகக் காய்களை நகர்த்தி வழி நடந்தவர் மகிந்த. ஜனநாயக நாடு என்ற சொற்பதத்துள் சகல அதிகாரக் கடிவாளங்களைக் கையகப் படுத்தி அரசோச்சிய முடி புனையா வேந்தன்.


வரப்பட்டது. இந்தச் சட்டவரைவு மூலம் கைதுகள், பிடியாணை எதுவுமின்றி இடம்பெறத் தக்கதாகவும் பிணையில் கூட எந்தக் காலமும் வெளியில் விடாதபடி மிகவும் இறுக்கமாகத் தயாரிக்கப்பட்ட சட்டம். இதன்மூலம் யோசிதகூட பிணையில் வெளிவர முடியாத அளவுக்கு சட்டம் பலமாக உள்ளது.

போர் வெற்றியைக் காரணம் காட்டி இனவாதத்தை வளர்த்தும் அரசியலில் மேலும் நிலைக்க வியூகம் அமைத்துச் செயற்பட்ட மகிந்த தனக்கு விசுவாசமாக, தனது சுட்டுவிரல் அசைவுக்கு ஏற்பத் தாளம்போடும் கடும்போக்காளர்களை ஆழக்கால் பதிக்க வழிவகுத்தவர் மகிந்த. துதி பாடும் கூட்டத்தால் தூயவராக சித்திரித்து நின்ற இனவாதிகள் தனித்து நின்று இயங்க முடியாத கையாலாகாதவர்கள். மகிந்தவின் கால்களைக் கெட்டியாகப் பற்றி நின்றால் மீண்டும் இராஜபோகத்தை எண்ணியபடி எய்தலாம் என்னும் கனவோடு வாழ்பவர்கள். புதுக்கதைகள் புனைவதிலும் புதுக்கண்டு பிடிப்புக்களைக் காட்சிப்படுத்துவதிலும் கைதேர்ந்தவர்கள். இயலாமையும், ஆற்றாமையும் அவர்களைக், கூப்பாடு போட வைக்கிறது. மீண்டும் அதிகாரத்துக்கு வரப்பிரயோகிக்கும் தாரக மந்திரம்.

இன்று பெரிய நிதி மோசடியில் ராஜபக்ச குடும்பம் சிக்கியுள்ளது. மோசடி செய்யப்பட்ட பணம் இந்தத் தீவில் எத்தனையோ அபிவிருத்திப் பணிகளை நிறைவேற்ற முடியும். தங்கள் குடும்ப உறவினரின் நன்மை கருதியும் அவர்களின் வாழ்வை வளம் பெறச்செய்யவும் தங்களுக்கு ஏற்றவகையில் அதிகாரத்தையும் அதிகாரிகளையும் பயன்படுத்திக் கொண்டனர். இவர்கள் மீதான விசாரணைகள் பல கோணங்களில் விசாரிக்கப்பட்டு வருகின்றன. நிறைவேற்று அதிகாரம் கையில் இருந்தமையால், மகிந்த மற்றும் அவ ரின் சகோதரர் சொல்லுக்குக் கட்டுப்பட வேண்டிய தேவை-அரச அதிகாரிகளுக்கு இருந் தது. பதவி பறிபோகும் என்ற பயம், மனதிலேபீதி, எதுவும் நடக்கலாம் என்ற அச்சம் ராஜபக்ச குடும்பத்தாருக்கு நன்றோ தீதோ அவர்களின் எண்ணப்படி நடக்க அதிகாரிகள் நிர்ப்பந்திக் கப்பட்டனர். இதுவே குடும்ப ஆட்சியாளரின் மக்கள் சேவை- மகிந்த சிந்தனை..

### தலையிடியும் காய்ச்சலும் தனக்கு வந்தால்தான் தெரியும்

கைநழுவிப்போகும் கௌரவத்தை எண்ணி கவலைப்படும் மகிந்த, கூப்பாடு போடும் கோத்தபாய, அறிக்கை விடும் ரோகித, கவலைப்படும் பசில், சட்ட நுணுக்கத்தைத் தேடும் நாமல் இவர்கள் எல்லோருமே துன்பப்படுவது பாசத்தின் விளைவு. எந்தவித ஆதாரமும் இன்றிக் கைது செய்யப்படவில்லை. கைவிலங்கு போடப்படவுமில்லை. சி.எஸ்.என். என்னும்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org









'கார்டன் ஸ்போட்ஸ் நெற்வேக்' தொலைக்காட்சி நிறுவனத்தின் இடம்பெற்ற நிதி மோசடி சம்பந்தமாகவே கைது இடம்பெற்றது. இது சட்டபூர்வமானது. நீதிமன்ற ஆணைப்படி நடந்தது. யோசிதவுடன் தொலைக்காட்சி நிறுவனத்தின் முன்னாள் பிரதம நிறைவேற்று அதிகாரி நிஷாந்த ரணதுங்க மகிந்தவின் பேச்சாளரும் தொலைக்காட்சி நிறுவனத்தின் தலைவருமான றொஹான் வெலிகடவும், மேலும் இருவரும் மொத்தமாக யோசிதவோடு ஐவர் கைதாகினர். இது அரசியல் பழிவாங்கலும் அல்ல. வெளிநாட்டின் திட்டமிட்ட சதியும் அல்ல. குற்றத்தை நியாயப்படுத்த போடும் கூப்பாடேதான் இவைகள். சட்டத்தின் முன் சகலரும் சமன் என்பதை சான்று பகரும் நற்செயல். சட்டம் பொதுவானது. சட்டம் தன் பணியைச் செய்தது. நீதி மீண்டும் உயர் வைக் காட்டியது. நீதிமன்றத் தீர்ப்பை அவ மதிப்பது குற்றம். மரியாதைக்குரியது நீதிமன்றம். அதை அவமதிப்பது பெரிய குற்றம். யோசிதவின் கைது வெகுவாகப் பாதிக்கப்பட, கோத்தபாய ராஜபக்ச குழந்தை ஒன்றைக் கைது செய்துவிட்டனர் என அங்கலாய்க்கின்றார். நியாயமான கவலைதான் முன்னாள் பாதுகாப்புச் செயலாளருக்கு முன்னாள் குழந்தையைத் தெரிகிறது. பத்துவயதுப் பாலகன் பாலச்சந்திரனை சுட்டுக்கொன்று புதைக்க ஆணையிட்டபோது எங்கே போனது தர்மம். சாவின் வாசல் வரை சென்று மீண்ட சரத்பொன்சேகா கைதானபோது அது நீதியான செயலாகப்பட்டது கோத்தாவுக்கு. வெள்ளைக் கொடியேற்றி சரண் புக வந்தாரை சர்வதேசப் போரியல் விதிமுறைகளைப் புறம்தள்ளி சாகடிக்க சமிக்ஞை கொடுத்தபோது கோத்தாவின் மனச்சாட்சி எங்கே போனது? தற்போதைய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன 'தான் தேர்தலில் தோல்வியைத் தழுவி இருந்தால் ஆறடிக் குழிக்குள் உறங்கிக் கொண்டிருப்பேன்' உண்மை நிலையை உரைத்ததில் இருந்து முன்னாள் அரசின் தர்மமும் சித்தாந்தமும் தெளிவாகின்றது. பயங்கரவாதிகள் பணத்தைக் கொண்டு வராது தடுக்கவே போடப்பட்ட பணம் தூய்தாக்கல் சட்டத்தைப் பயன்படுத்தியே தனது மகனைக் கைது செய்துள்ளனர் என்பது மகிந்தவின் ஆதங்கம். தந்தை மகற்காற்றும் உதவி. இவ் வாறுதான் தமிழ்த் தாய் தந்தையர் தங்கள் பிள்ளைகளின் கைதுகளை எண்ணி எண்ணி கண்ணீர் சிந்தல் இன்னும் நின்றபாடில்லை.

கைதும் காணாமல் போதலும் இந்த நாட்டில் சர்வசாதாரணம். பிள்ளைகளைப் பறிகொடுத்த தமிழ் பெற்றோரின் கவலைகள் வேதனைகள் அவர்களுக்கு வேடிக்கையாக இருந்தது. கண்ணீரின் விலை வீண்போகவில்லை. இப்போதாவது யதார்த்தத்தைப் புரிந்து கொண்டால் நன்று, அது சாத்தியமாகுமா? நச்சு விதையை விதைத்தவர்கள் இப்போது அறுவடை செய்கிறார்கள். காலம் இப்போது அதைத்தான் நிகழ்த்திக் கொண்டிருக்கின்றது. இன்று கொதிப்பவர்கள் குற்றமிழைத்து இருக்கலாம் அல்லது குற்றமிழைப்பதற்கு துணை போனவர்களாக இருக்கலாம். எதையும் தனியாக நின்று சாதிக்க முடியாதவர்கள் எனப்பலரும் அடங்குவர். நாளுக்கொரு அறிக்கை விடுத்து நாட்டைக் குழப்பிக் குழம்பிய குட்டையில் மீன் பிடிக்க எண்ணும் கையாலாகக் கூட்டம் கடும்போக்கைக் கைவிட்டு தேசத்தின் செவ்வனே நன்மை கருதி ஒருமித்து நாட்டை அபிவிருத்தி செய்ய முற்படுவார்களா? சட்டம் தன் கடமையைச் செய்யும். இன்னும் இன்னும் நடக்கப் போகும் சம்பவங்களை சட்டமே செய்யும். சட்டம் வலியது. ஆட்டம் ஆரம்பம். பொறுத்திருப்போம்.

> சி.எஸ்.என் என்னும் 'கார்டன் ஸ்போட்ஸ் நெற்வேக்' தொலைக் காட்சி நிறுவனத்தின் இடம்பெற்ற நிதிமோசடி சம்பந்தமாகவே கைது இடம்பெற்றது. இது சட்டபூர்வமானது. நீதிமன்ற ஆணைப் படி நடந்தது.

## நவீன சந்தை மலசலகூடத்தை மக்கள் பாவனைக்குரியதாக்குக

யாழ். ஆஸ்பத்திரி வீதியில் உள்ள நவீன சந்தைக் கட்டடத் தொகுதிக்குள் அமைந்துள்ள ஆண் களுக்கான மலசலகூடம் இரண்டு வாரங்களுக்கும் மேலாகப் பூட்டப்பட்ட நிலையில் காட்சியளிக்கிறது.

இதனால் யாழ். நகருக்கு தமது தேவைகளின் பொருட்டு, வருபவர்கள் மிகுந்த அசௌகரியத்தை எதிர்நோக்குவதை அவதானிக்க முடிகிறது.

எனவே, யாழ்.மாநகரசபை அதிகாரிகள் இவ் விடயத்தில் கவனம் எடுத்து, அதன் குறைபாடுகளைச் சீர்செய்து,மீண்டும் மக்களின் பாவனைக் குரியதாக்க வேண்டும் என்று பொதுமக்கள் கேட் டுக்கொள்கின்றனர்.

அலெக்ஸ் பரந்தாமன்
புதுக்குடியிருப்பு

## என்று ஒளி பிறக்கும் நுணாவில் மேற்குக்கு...

ஏ-9 வீதியில் இரத்தினம் கடைச்சந்தி தொடங்கி சாவகச்சேரி பொலிஸ் நிலையம் வரை வீதி மின்விளக்குகள் கடந்த இரண்டு மாதங்களாக ஒளிர்வதில்லை. மின்சார சபையைக் கேட்டால் நகரசபைதான் பொறுப்பு என்றார்கள்.

நகரசபையுடன் தொடர்பு கொண்டு செயலாளரிடம் கேட்டால், அவர் தாங்கள் அதற்குரிய சாதனங்கள் எல்லாம் வாங்கி வைத்திருக்கின்றோம்.

மின்சாரசபையினர், குறித்த மார்க்கத்தினூடான மின்விநியோகத்தை நிறுத்தித் தந்தால் தாங்கள் செய்வதாக சொன்னார்.

நகரசபை பலமுறை தொடர்பு கொண்டும் மின்சாரசபை அதைக் கவனத்தில் எடுப்பதில்லை எனவும் தெரிவித்தார். தயவு செய்து இதை இருபகுதியும் சேர்ந்து சமூகநலனைக் கருத்தில் கொண்டு சீர்செய்து தரவேண்டும் என மக்கள் நன்மை கருதி வேண்டிக்கொள்கின்றேன்.

சு.பூபாலசிங்கம்
அகில இலங்கை சமாதான நீதிவான்.

## அரியண்ட உபசரிப்பு

அண்டைக்கொருக்கா முல்லைத்தீவிலையிருந்து யாழ்ப்பாணரவுணுக்கு வந்தாப்போல மத்தியானமாப்போச்சுது. பயணக்களையோடை பசிக்கவும் தொடங்கியிட்டுது. சரி... சாப்பிடுவம் எண்டிட்டு பஸ்ராண்டுக்குக்கிட்ட இருக்கிற ஒரு பேர்போனதாகக்காட்டிக் கொள்ளும் சைவக்கடைக்குள்ள சாப்பிடப்போனன். அண்டைக்கு வெள்ளிக்கிழமை. கடைக்குள்ள நிறையச்சனம். இடம்பிடிக்கிறதே பெரிய பாடாப் போச்சுது. கவுண்டரிலை காசைக்கட்டி பில்லைக் கொண்டு போய் சாப்பாடு போடுற ஆளிட்டை குடுத்திட்டு இருந்தால், மேசையில சாப்பாடு வந்தபாடாக்காணேல்லை.

அதுக்குப்பிறகு ஒருவர் அரக்கப்பரக்க வர அவருக்கு முன்னால இன்னொருத்தர் வாழையில கொண்டு வந்து வைக்க, சோத்துப் பேசினை வைச்சிருந்தவர், பேசினிலை கிடந்த சோத்தை கரண்டியால கிள்ளி இலையில வைச்ச விதம் இருக்குதே அதுதான் இப்ப உதைக்குது எனக்கு.

என்ன பிரச்சினையெண்டால் ரவுணுக்கை கிடக்கிற சைவக்கடையளொன்றும் அன்னசத்திரமடமல்ல. எல்லாம் வணிக நோக்கத்தோடுதான் செயற்படுகின்றன. மனிசர் சாப்பிடப்போன, போனவனுக்கு அதற்குரிய மரியாதையோடை சாப்பாடு பரிமாறத் தெரியுதில்லை. வேள்விக்கு வளர்க்கிற ஆட்டுக்கிடாய்க்கு அறுகம்புல்லை அறுத்துக் கொட்டின மாதிரி, சாப்பாடு போடுற மனிசன் சோத்தைக் கிள்ளிப் போட்டால் பரவாயில்லை. அள்ளி அள்ளிப்போட சோற்றுப்பருக்கையெல்லாம் மேசை முழுக்கச் சிதறுப்பட்டு உடுத்திருந்த வேட்டியெல்லாம் கொட்டுப்பட்டு....சே... என்ன அரியண்ட உபசரிப்பு.

தூரத்திலை இருந்துவாற நாங்கள், இப்படியான உபசரிப்பை எங்கட ஊரிலை போய்ச்சொன்னால், கடையின் முதல்தரம் முன்னுக்கு வருமோ? பின்னுக்குப் போகுமோ எண்டதை உந்தச் சோத்துக்கடைக்கார முதலாளிமார் கொஞ்சம் சிந்தித்தால் நல்லது.

வன்னிவாசி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கண்ணீரோடு விதைத்தவர்கள் இன்று கம்பீரத்தோடு அறுக்கிறார்கள்

**அலெக்ஸ் பரந்தாமன்**
*புதுக்குடியிருப்பு.*

இலங்கையின் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவின் இரண்டாவது புதல்வர் யோசித ராஜபக்ச கடந்த சனிக்கிழமை 30 ஆம் திகதி மாலை நான்கு மணியளவில், நிதிக்குற்ற விசாரணைப் பிரிவினரால் கைது செய்யப்பட்டதான செய்தி, மகிந்த குடும்பத்தினருக்கும் அவரது அரசியல் சகபாடிகளுக்கும் ஓர் அதிர்ச்சியைக் கொடுத்த அதே வேளை, மகிந்த ராஜபக்சவால் அவரது ஆட்சிக் காலத்தில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு குறிப்பாக போரினால் பாதிக்கப்பட்ட வன்னி மக்களுக்கு எந்தவிதமான அதிர்வையும் ஏற்படுத்தவில்லை என்பது வெளிப்படை.

ஏனெனில், எந்தவொரு செயலுக்கும் எதிர்விளைவு உண்டு என்பதை ஆட்சிப் பீடமேறும் அரசியல்வாதிகள் உணரத்தவறினும்கூட, சாதாரண மக்கள் அதை உணர்ந்தே இருந்தார்கள்; என்றும் இருப்பார்கள்.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவின் ஆட்சிக் காலத்தில் நடந்த அட்டூழியங்களை எமது நாடு மட்டுமல்ல, இந்த நாட்டைச் சுற்றியுள்ள நாடுகளும் நன்கு அறியும்.

வன்னிப் பெரு நிலப்பரப்பில் புலிகளுடனான போரில் ஒரு சிறுநிலப்பரப்பைக் கைப்பற்றுவதற்காக, மகிந்த எடுத்த முடிவு பாதகமானது மட்டுமல்ல, எந்தவொரு பின்விளைவுகளையும் நோக்காத மிகமிகப் பயங்கரமானதும் கூட.

புலிகளிடமிருந்து தமிழ் மக்களைப் பிரித்தெடுக்கும் போர்வையில், பாதுகாப்பு வலயங்களை உருவாக்கி, அதற்குள் மக்களை இருக்கச் செய்துவிட்டு, தனது படைகள் மூலம் ஆட்டிலறி மற்றும் மல்ரிபெரல் கொண்டு கொத்துக் கொத்தாகக் குண்டுகளைப் பொழிந்து, தமிழ் மக்களைக் கொன்றொழித்த அந்தக் கறைபடிந்த சரிதம், இன்றும்கூட வன்னிப் போருக்குள் பாதிக்கப்பட்ட மக்களின் மனங்களில் நெருப்பினால் சுட்ட வடு போன்றே நிற்கின்றது.

மாத்தளன் கடற்கரையில் இருந்து முள்ளி வாய்க்கால் தொங்கல் வரையிலும் தரப்பாள் வீடுகளுக்குள் இருந்த மக்கள் மீது இரவுபகல் பாராது, மகிந்தவின் இராணுவப் படைகள் எறிகணைத் தாக்குதல்களை நடத்தியபோது, எத்தனை மக்கள்..? ஒருவரா அன்றி இரண்டுபேரா..? ஒட்டுமொத்த அத்தனை மக்களும் அழுநீர் சொரிந்து அவலக்குரல் எழுப்பினார்களே... மகிந்தவுக்கு அது இன்று ஞாபகம் இருக்குமா?

குருதி படர்ந்த மணல் மீது குந்தியிருந்தபடி... எறிகணையில் குற்றுயிராய்போய்... சிதைந்து கிடந்த உடல்களை உதிரம் வடிய... வடிய தங்கள் மடிதனில் கிடத்திக் கொண்டு, கண்களில் இருந்து நீர் ஆறாகப் பெருக...கரங்க ளினால் தலையில் அடித்துக் குளறியபோது, அங்கு எழுந்த அவலக் குரல்கள் அனைத்தும், கடல்வெளிக் காற்றோடு கரைந்து போனதே தவிர, அவலப்பட்டு, அந்தரித்து அழுது கொண்டிருந்த தமிழ் மக்களுக்கு அபயக்கரம் கொடுக்க அன்று எவரும் முன்வரவில்லை.

மாறாக, மேலும் மேலும் அவலமும் அந்தரிப்பும் அழுகையுமாய்... மிகுந்த உச்சப் பலிகளை உள்வாங்கி, வன்னியில் மகிந்த ராஜபக்ச நிமிர்ந்த போது, சிங்கள தேசத்தில் அவர் ஒரு கதாநாயகனாகத் தோற்றம் பெற்றார். காலப்போக்கில் இந்த நாயகன் தோற்றத்துக்குள் அவர் தன் குடும்பத்துக்காக செய்து முடித்த அராஜகச் செயற்பாடுகள் அளவு கணக்கு இல்லாதவை.

உதாரணத்துக்கு வெளிச்சத்துக்கு வந்த ரக்பி வீரர் வசிம் தாஜுதீனின் படுகொலை மற்றும் ஊடகவியலாளர் பிரகீத் எக்னெலிகொடவைக் காணாமற் போகச்செய்த செயற்பாட்டைக் கூறலாம்.

இந்த நிலையில்இந்தக் கட்டுரையின் ஆரம்பத்தில் கூறப்பட்டதுபோல, எந்தவொரு செயலுக்கும் எதிர்விளைவு உண்டு... என்பதற்கிணங்க, மகிந்தவின், தான்தோன்றித்தனமான செயற்பாடுகளுக்கு மைத்திரிபால சிறிசேனவின் முட்டை அப்பம் ஒரு முடிவுக்குக் கொண்டு வந்தது.

மைத்திரி ஜனாதிபதியாகி, அதன் பின்ரணில் விக்கிரமசிங்க தேர்தல் மூலம் பிரதமரானதும், இவர்கள் இருவரினது அரசியல் இணக்கமும் இறுக்கமும் மகிந்தவை மீண்டும் அரசியலில் தலைநிமிர விடாது செய்துவரும் அதேவேளை, மகிந்தவின் ஆட்சிக்காலத்தில் அவர் விதைத்த வினைகளுக்கான அறுவடையையும் ஆரம்பிக்கச் செய்துள்ளது.

> **" இனிவரும் காலம் எதற்கும், எவற்றுக்கும் சமாளிக்க வல்லதான ஒரு பாடம், பாடாந்தரமாக ஆணுக்கும் பெண் ணுக்கும் அமைய வேண்டியது காலத்தின் தூண்டுதலாகும். சிரிப்பதைக் கைப்பற்றுவது துன்பத்திலேயே முடிவது கண் கூடு. பாத்திரம் அறிந்துதான் சிரிப்பையும் முதலீடு செய்ய வேண்டும். பாத்திரம் எல்லாம் நல்ல பாத்திரம் என்று சால்ல முடிவதில்லை. "**

### அதில் ஓர் அரங்கேற்றம்தான் ரோசித கைது விவகாரம்!

யோஷித கைது செய்யப்பட்டதை அறிந்ததும், மகிந்த அன் கோ அனைத்தும் கடுவல நீதிமன்றத்துக்குச் சென்றது மட்டுமன்றி, தனது மகனின் நிலை கண்டு, மகிந்த கண் கலங்கி நின்ற காட்சியை இணையத்தளங்களும் பத்திரிகை ஊடகங்களும் அச்சொட்டாக வெளிப்படுத்தி, மக்களின் பார்வைக்கு விட்டிருந்தன.

### மகிந்த இப்பொழுது அழத் தொடங்கி விட்டார்!

இது அவருக்கான விதைத்த வினையின் அறுவடைக்காலம்! சிலரது செயற்பாடுகளுக்கான இறைவனின் நியாயத் தீர்ப்பானது உடனுக்குடன் கிடைத்து விடும். வேறு சிலருக்கு ஆயுள் வரைக்கும் நிண்டறுக்கும். இன்னொரு பகுதியினருக்கு சந்ததி சந்ததியாகத் தொடரும். தற்போது மகிந்த அழுவது... இறைவனின் நின்டறுக்கும் நியாயத் தீர்ப்பாகவே கொள்ளலாம். ஏனெனில்,

சுமார் ஏழு வருடங்களுக்குப் முன்பு, வன்னிப் பெரு நிலப்பரப்பில் இடம்பெயர்ந்து வந்திருந்த மக்கள் மீது, அவரது படைகள் அவரின் ஆணைக்கிணங்க, அடித்த எறிகணைகளின் நிமித்தம், அந்த மக்கள் அழுத கண்ணீரின் வலியோடு கூடிய வலிமை... எப்படிப் பட்டதென்பதை, அலரி மாளிகையில் ஆனந்தக் களிப்போடு வசித்த மகிந்தவுக்குப் புரிந்திருக்க நியாயமில்லை.

சோதிடத்தில் மிகுந்த நம்பிக்கையுள்ள மகிந்தவுக்கு, ஆன்மிகத்திலும், அதன் வழிப் போதனைகளிலும் நம்பிக்கையில்லாமல் போனது அவரது துரதிர்ஷ்டம் என்றே கூறலாம்.

காரணம், மதச் சிந்தனைகள் அவரது மனதில் ஆழமாய் வேரூன்றி இருந்திக்குமானால், பின் விளைவுப் பயமானது சிறிதளவாவது அவருக்குள் இருந்திருக்க வேண்டும். முற்பழியானது வாழ்க்கையில்பிற்பழியாகச்சூழும்.. என்ற சிந்தனை அவரிடத்தில் இல்லை. இருந்திருப்பின், இன்று பல பேர் முன்னிலையில் கண்ணீர் விடவேண்டிய அவசியம் மகிந்தவுக்கு ஏற்பட்டிருக்காது.

பரிசுத்த வேதாகமம் புதிய ஏற்பாட்டில் இயேசு கூறுகிறார் "நீங்கள் குற்றவாளிகள் என்று தீர்க்கப்படாதபடிக்கு, மற்றவர்களைக் குற்றவாளிகள் என்று தீர்க்காதிருங்கள். ஏனெனில், நீங்கள் மற்றவர்களைத் தீர்க்கிற தீர்ப்பின் படியே நீங்களும் தீர்க்கப்படுவீர்கள்". (மத்தேயு7:1,2)

யோசித, நாமல், மகிந்த, ஷிரந்தி மற்றும் கோத்தபாய, பசில்... போன்றவர்கள் இன்று குற்றவாளிகள் என்று தீர்ப் பளிக்கப்பட்டு நிற்பதற்கு, அன்று புலிகள் இயக்கத்தையும், அதனை ஆதரித்தவர்களையும் மட்டுமன்றி, அரசியல் என்றால் என்னவென்று தெரியாத அடிமட்ட அப்பாவி மக்களையும் போரினுள் கொல்ல வைத்த, இரத்தப்பழியே இன்று மகிந்தவும் அவரது குடும்பமும் மனநிம்மதியின்றிக் கண்ணீர் விட்டு அழுவதற்குக் காரணமாகிறது.

"கண்ணீரோடு விதைப்பவர்கள் கம்பீரத்தோடு அறுப்பார்கள்" (சங்கீதம்126:5)

ஆம்!!

அன்று நாதியற்ற நிலையில் வன்னிப் போர்க்களத்தில் மனம் கதறக்கதற... கண்ணீரோடு விதைத்த தமிழ் மக்கள், இன்று மகிந்தவின் முகத்தில் தெரியும் கண்ணீர்த் துளிகளைப் பார்த்துக் கம்பீரத்தோடு அறுக்கிறார்கள் தங்களுக்குள் மௌனமாக!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சூரியகாந்தி



# விவசாயிகளை தொடர்ந்து சோதிக்காதீர்கள்!

அன்ரன்

மன்மத வருடம் கார்த்திகை மாதம் 25 ஆம் திகதி வெள்ளிக்கிழமை ஆங்கிலத் திகதி 11.12.2015இல் உதயன் பத்திரிகையில் 7 ஆம் பக்கத்தில் சிவந்த மையில் விவசாயிகளுக்கு மகிழ்ச்சியூட்டும் “விவசாய உற்பத்திகளுக்கு இனிக் கழிவுகள் கிடையாது” என்ற செய்தி வெளியாகி இருந்தது. நல்லது, விவசாயிகளுக்கு ஒரு விடிவு காலம் ஏற்பட்டு விட்டது என மகிழ்ந்திருந்த வேளை அவர்கள் எதிர் பார்ப்பு 1.1. 2016இல் இலவு காத்த கிளியின் நிலை போலானது.

இரண்டாயிரத்துப் பதினாறாம் ஆண்டு முதலாம் திகதி நெல்லியடி பொதுச் சந்தைக்குச் சென்றபோது, விவசாயிகள் உற்பத்திப் பொருள்களைக் கொண்டு வந்திருந்தார்கள். “இன்று முதல் கழிவு இல்லை” என்று விவசாயிகள் கூறியபோது, “கழிவு தராவிட்டால் கொள்முதல் செய்யமாட்டோம்” என்றார்கள் வியாபாரிகள். சிலநேர இழுபறியின் பின்னர் சந்தைக் குத்தகைக்காரர் திருநெல்வேலி குத்தகைக்காரருடன் தொடர்பு கொண்டபோது வழமை போல் கழிவுடன் கொடுக்கிறார்கள் என்று உறுதிப்படுத்தப்பட்டது. செய்தியை விவசாயிகளுக்குச் சொன்னபோது இனி என்ன செய்வது? கொண்டு வந்த பொருளை விற்றுத்தானேயாகவேண்டும் என்று எண்ணிய விவசாயிகள் வயிறெரிய கழிவுடன் கொடுத்துவிட்டுப் போனார்கள்.

இது பற்றி அதிகாரிகளோ அமைச்சர் ஐங்கரநேசனோ எந்தக் கருத்தும் இதுவரை தெரிவிக்கவில்லை. கழிவு முறை நீக்கப்படும் என்று அறிவிப்பு விட்டவர்கள் அதனை நடைமுறைப்படுத்த மட்டும் பின்னடிக்கிறார்கள். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஒரு முதலாளித்துவம் சார் அரசாகவே இருப்பதால் விவசாயி[illegible] போக்குவதில் அ[illegible] வில்லை. பதிலாக வியாபாரிகளைப் பகைத்துக்கொள்ளாமல் இருப்பதற்காக கழிவு முறையில் கைவைக்கப்பயப்பட்டுக் கொண்டு, அதற்கு என்ன காரணம் சொல்லலாம் என்று தேடிக்கொண்டிருக்கிறது.

“பாம்பின் காலைப் பாம்புதான் அறியும்” என்பார்கள். ஒரு விவசாயின் பரிதாப நிலையை ஒரு விவசாயியால் தான் உணர முடியும்.

இதனால்தான் ஒரு விவசாயி தன் பிள்ளைகளைக் கஷ்டப்பட்டு படிப்பிக்கிறான். தான் பெற்ற துன்பம் தன் பிள்ளை பெறக் கூடாது என்ற எண்ணத்தில்தான் தனது பிள்ளைகளை விவசாயத்தை விட்டு அரச வேலைக்கும் தனியார் வேலைக்கும் துரத்துகின்றான். உழு துண்டு வாழ்வாரே வாழ்வார் மற்றெல்லாம் தொழுதுண்டு பின் செல்பவர் என்று வள்ளுவர் வான் அளாவப் புகழ்ந்தாலும் உழவன் பிள்ளை உழவனாய் இருப்பது அரிதாகி விட்டமைக்கு இதுவே காரணம்.

**நுட்பமும் துன்பமும்**

நிலத்தைப் பண்படுத்தல், சேதனப் பசளை - அசேதனப் பசளையைத் தகுந்த இடைவெளியில் இடுதல், நீர் முகாமைத்துவம், ஊடுசாகுபடி, பத்திரக் கலவை இடல், ஒருங்கிணைந்த பீடை முகாமைத்துவம், ஆதாரம் வழங்கல், திரவ சேதனப் பசளைப் பாவனை, தகுந்த காலத்தில் அறுவடை செய்தல், பதப்படுத்தல், களஞ்சியப்படுத்தல், சந்தைப்படுத்தல் என்று மரக்கறிப் பயிர்களின் பயிர்ச் செய்கை தொழில்நுட்பங்கள் ஏகப்பட்டது. இவற்றையெல்லாம் செய்து, இவை எல்லாவற்றையும் தாண்டிய இயற்கை இடரையும் கடந்து விளைபொருளைப் பொதுச்சந்தைக்கு விற்பனைக்குக் கொண்டு சென்றால் சந்தையில் மொத்தமாக கொடுக்கலாமன்றி சில்லறையாகக் கொடுக்க முடியாது.



மேலும் 10 கிலோ மிளகாய் என்றால் ஒரு கிலோ கழிவு. மிளகாய் விலை 300 ரூபா ஆயின் நிறுவைத் தராசு அரைக் கிலோ வெட்டும். ஆக எட்டரைக் கிலோ தேறும். விவசாயிக்கு கிடைக்கும் தொகை 2,550 ரூபா. இதில் மாற்றிய காசு இல்லை என்று 2,500 ரூபா கொடுப்பார்கள். மேலும் சந்தை வரி 6 வீதம் 150 ரூபா கழித்துத் தேறியதே விவசாயிக்குக் கிடைக்கும் தொகை. விவசாயியிடம் இருந்து வியாபாரி தூக்குத் தராசில் வாங்கும் மரக்கறிகளை, மின் தராசில்தான் நிறுத்து விற்பார். 1/4 கிலோ மிளகாய் 150 ரூபா விலைக்கு விற்கப்படும். அந்தப் பக்கம் இந்தப் பக்கம் கூடாமல் குறையாமல் சரியாக நிறுத்துக் கொடுப்பார்கள். வாங்குபவ னுக்கு எந்தக் கழிவும் கிடையாது. ஆக, உற்பத்தி செய்பவனுக்கும் எதுவும் கிடையாது; அதை நுகர்பவனுக்கும் இலாபம் கிடையாது. இலாபம் மொத்தமும் நடுவில் உள்ள வியாபாரிகளுக்குத்தான்.

சந்தை மேற்பார்வையாளரை விசாரித்த போது கழிவு கொடுப்பதைப் பற்றி தங்களுக்கு தெரியாதென்றும், மின்தராசில் மரக்கறிகளை மொத்தமாக நிறுக்க முடியாது என்றும், கூடிய தொகைக்கு சந்தைக் குத்தகைக்கு எடுத்தமையால் வரியை ஆறு வீதம் அறவிட்டுத்தானாக வேண்டும் என்றும் கூறுகின்றார். தம்புளையில் இருந்து கொண்டு வரும் மரக்கறிகளுக்கு கழிவு இல்லை. தேறிய நிறைதான். அது மட்டும் ஏன் அப்படி? 2002ஆம் ஆண்டு தமிழ் மக்களின் சுதந்திரம் வேண்டி நின்ற இடைக்கால அரசால் இந்தச் சந்தை கையேற்கப் பட்டது. கூறுவிலையில் மரக்கறி விற்பனை, பத்துக்கொன்று கழிவு என்ற நிதான விலை, வியாபாரிகள் மொத்த இலாபத்தில் 15% அவர்களுக்குச் செலுத்துதல் எல்லாம் அந்தக் கால நடைமுறை. இப்போதோ அந்தப் 15 வீதம் வியாபாரிகளிடம் பிடிக்கப் படுவதில்லை. ஆனால் விவசாயிடம் 10 வீதம் கழிவு மட்டும் சுரண்டப் படுகிறது.

**சாத்தியமற்ற ஒன்றிணைவு**

கழிவு முறைக்கெதிராகப் போராடுவதற்கு விவசாயிகளை ஒன்று திரட்டுவதும் சாத்தியப்படும் விடய மல்ல. ஏனெனில் பாரம்பரிய விவசாயி, பகுதி நேர விவசாயி, பொழுது போக்கு விவசாயி என்று அவர்கள் பல தரப்பினராகப் பிளவுண்டு இருக்கின்றனர். அவர்களை ஒன்று சேர்க்க முடிவதில்லை. 20 ரூபாவுக்குக் குறைய கீரைப்பிடியைக் கொடுக்க வேண்டாம் என்று சொன்னபோது ஒருவர் சொன் னார், "நான் வேலைக்குப் போகவேண் டும். எனக்குச் செலவு மில்லை. கள்ளக் கறன்ரில் நீர் பாய்ச்சு கின்றேன். கிடைக் கிற வரைக்கும் எனக்கு லாபம்தான்" என்று. பிடி பத்து ரூபா விலைக்குக் கொடுத்து விட்டுச் சென்று விட்டார். இத னால் இருபது ரூபாவாகப் போய்க் கொண்டிருந்த கீரைப் பிடி 10 ரூபாவுக்கு வந்து விட்டது. வந்தவருக்குக் கிடைத்த வரைக்கும் லாபம். ஒரு நிரந்தர விவ சாயிக்கோ வயிற்றில் அடி. அதேபிடியை வியாபாரி 50 ரூபாவுக்கு விற்கிறான். ஆகவே ஒரு 40 வீதம் லாபம். ஒரு சில மணித்தியாலத்தில் கொள்ளையான சம்பாத்தியம்.

விவசாயி பாதிப்படுவதைப் பற்றிக் கவலைப்படாத இந்த உள்ளூர் வியாபாரிகள் தங்கள் லாபத்தில் பங்கு போய்விடும் என்பதனால் வெளியூர் வியாபாரிகளையும் இங்கே வந்து கொள்முதல் செய்வதற்கு விடுகிறார்கள் இல்லை. கொமிசனுக்கு வாங்கிக் கொடுக்கிறார்கள். அதனால் நியாயமான விலை கிடைப்பதே இல்லை. காலை 7 மணிக்கு 80 ரூபாவாக விலைப்பட்ட பொருளை காலை 8 மணிக்கு 40 அல்லது 50 ரூபாவுக்குத்தான் கேட்பார்கள். ஆனால் விற்பனை விலையோ 1/4 கிலோ 40 ரூபாவாக இருக்கும். இந்த விலைகளைப் பார்த்து மக்களும் தோட்டக்காரனுக்கு கொள்ளை இலாபம் என்றே நினைப்பர். இவர்கள் ஏன் மூக்கால் அழுகிறார்கள் என்று திட்டுவர். ஆனால் விவசாயியின் நிலையோ, வங்கியில் அடைவு வைத்த மனைவியின் தாலிக் கொடி ஏலத்தில் போவதாகத்தான் இருக்கும்.



**இப்படியும் நடக்கிறது நாடகம்**

கடந்த வருடமும் வடமாகாண விவசாய அமைச்சர் கௌரவ ஐங்கரநேசனால் அரச அதிபர் ஒத்துழைப்புடனும் உதயன் பத்திரிகையில் வெளிவந்த நிபந்தனைகளுடன் 2015ஆம் ஆண்டு முதலாம் திகதியில் இருந்து கழிவு இல்லை என்று அறிவிக் கப்பட்டது. அன்று காலையில் சந்தையில் இன்று முதல் கழிவு இல்லை என்று அறிவித்தல் எழுதப்பட்டிருந்தது. கீழே, விரும்பினால் கழிவு கொடுக்கலாம் என்றும் எழுதப்பட்டிருந்தது. அதேநேரம் வியாபாரிகள் ஒன்றுகூடி விவசாயிகளாகிய நாங்கள் கழிவு கொடுக்கச் சம்மதம் என்று நாற்பது வரையான கையெழுத்திட்டு தவிசாளரிடம் சமர்ப்பித்து அவரின் சம்மதத்துடன் கழிவுடன் பொருள்களை எடுத்தார்கள். இது கடந்த வருடம் நடைபெற்ற தலை சிறந்த நாடகம்.

இந்தப் பிரச்சினைகளுக்கு மூலகாரணம் பிரதேச சபைதான். இன்றும் ஏன் மின் தராசு போடவில்லை என்று சந்தைக் குத்தகைக்காரனைக் கேட்டால், அவர் பிரதேச சபைதான் போடவேண்டும் என்று பதிலிறுக்கிறார். அவர்களோ போடுகிறார்கள் இல்லை. அதிகாரிகளோ நாங்கள் ஒன்றும் செய்யமுடியாது என்று இலகுவாகக் கைவிரித்துவிடுகின்றனர். எல்லோருமாகச் சேர்ந்து அடிப்பது என்னவோ விவசாயின் வயிற்றில்தான். மலையக மக்களை தேயிலைத் தோட்டங்களில் எப்படிக் குறைந்த கூலியில் அடிப்படை வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்காமல் கசக்கிப் பிழிகிறார்களோ அவ்வாறே வடபகுதி விவசாயிகளும் உறிஞ்சி எடுக்கப்படுகிறார்கள். இதற்குப் பிரதேச சபைகளும் துணைபோகின்றன என்றே எண்ணத் தோன்றுகின்றது. சந்தையை ஏலத்தில் குத்தகைக் காரனுக்குக் கொடுப்பதன் மூலம் தன்மேல் பிழையில்லை என்ற ரீதியில் பிரதேச சபைகள் நடந்துகொள்கின்றன. குத்தகைக் காரனை பிடிக்கார னாக்கி விவசாயிகளை தோலிருக்க சுளை விழுங் குகிறார்கள். விவசாயி களும் பூனைக்கு யார் மணி கட்டுவது என்ற நிலைப்பாட்டில்தான் அல்லல்படுகிறார்கள்.

"இரவார் இரப்பார்க் கென்று ஈவர் கரவாது
கை செய்தூண் மாலை யவர்"

என்று வள்ளுவர் போற்றிய, பிறரிடம் கையேந் தாத உழவன், இரப்போர்க்கு ஈந்து வாழ்ந்த உழவன், இன்று எங்கே என்ன கொடுக் கிணம் என்று அலைந்து கொண்டிருப்பதை எமது நிர்வாகங்கள் பூனை கண்ணை மூடிக்கொண்டு பார்த்துக் கொண்டிருக்கின்றன. இதற்குத்தானா ஆசைப்பட்டோம் தமிழர் அரசு வேண்டும் என்று?

60 ஆயிரத்துக்கு மேற்பட்ட விவசாயிகள் மண்ணை அடித்து ஒரு சில ஆயிரம் வியாபாரிகளையும், சந்தைக் குத்தகைக் காரர்களையும், பிரதேச சபைகளையும் முத்துக் குளிக்க வைக்கிறார்கள்.

இதுவொரு உண்மை நிலை "உழவன் சேற்றில் காலை வைத்தால்தான் சோற்றில் கையை வைக்கலாம்" என்று சொல்வார்கள். "உணவு, உடை, உறை யுள்" என்று மொழியும்போதும் உணவு தான் முன்னிற்கிறது. ஆகவே இந்த உணவை விளைவிக்கின்றவன் வாழ்க்கையும் செழிக்கத்தானே வேண்டும்? அவன் மனம் கோணாமல் வாழ்விக்க வேண்டியது ஒவ்வொருவரின் மனிதாபிமான மான பணி. விவசாயிக்கு நடக்கும் இந்தக் கொடுமையைப் பார்க்க பாரதி இருந்தால் மூவுலகங்களையும் அல்லவா அழிப் பான். தனி ஒருவனுக்கு உணவில்லை என்பதற்காகவே உலகை அழிக்கத் துணிந் தவனல்லவா அவன்.

கமநல சேவை நிலையங்கள், விவசாய விரிவாக்க நிலையம், விவசாய அமைச்சு, உள்ளூராட்சித் திணைக்களங்கள் இவை எல்லாம் இந்த கழிவு முறையை அகற்றுவதற்கு வக்கணையற்ற அதிகாரமற்ற மையங்களாகவா இருக்கின்றன? மனிதாபிமான அடிப்படையிலும் சிந்திக்கக் கூடாதா?

"துப்பாக்கியில் இருந்துதான் அதிகாரம் பிறக்கிறது" என்ற மா சேதுங் கூற்றுத் தான் சரியாக இருக்கும்போலிருக்கிறது. கால் நூற்றாண்டு காலமாகத் தமிழ் மக்கள் இந்த நிலையில் வாழ்ந்தவர்கள் அந்தக் காலத்தில் கடமை தவறாத செயற்பாடுகள் இருந்தமை மறுக்க முடி யாது. இப்போது யாருக்கு முறையிடு வது, எங்கே முறையிடுவது என்றே தெரியவில்லை.

**கழிவு வேண்டாம்**

சிலசில காரணங்களுக்காக சில விடயங்களை செயற்படுத்த, சில நடை முறைத் தடைகள் இருக்கலாம். ஆனால் கஷ்டப் படும் ஒரு விவசாயச் சமூகம் தொடர்ந்தும் துன்பப்படுவது நாட்டுக்கு ஆரோக்கியமானதன்று.

அளவுக்கு மிஞ்சி இழுத்தால் றப்பர் துண்டும் அறுந்து போகும். எனவே விவசாயிகளைத் தொடர்ந்து சோதிக்காதீர்கள். இப்படியே போனால் மரக்கறிக்காக வெளி மாவட்டங்களைத் தான் நம்பியிருக்க வேண்டிய நிலைக்கு நுகர்வோர்களும் தள்ளப்படுவீர்கள். அப்போது தெரியும் உள்ளூர் விவ சாயியின் அருமை. சந்தைக்கு கொண்டு செல்லாத கடைக்கு விற்கக் கூடிய தானிய வகைகள், பழ வகைகளை உருவாக்கினால் விவசாயி கள் பிழைக்கலாம் என்ற சிந்தனை இப்போதே முளைகட்ட ஆரம்பித்து விட்டது. அது நடந்தால் தம்புள்ளை யைத்தான் மரக் கறிக்கு நம்பியிருக்க வேண்டியிருக்கும். எனவே ஒன்றில் கழிவு முறையை ஒழிக்க வேண்டும். அல்லது மாற்று வழி ஒன்றை காலத்தின் தேவையை ஒட்டி நடைமுறைப்படுத்த வேண்டும். உழவர் சந்தை ஒன்றை ஒவ்வொரு பிரதேச சபை ஆட்சிக்குட்பட்ட இடங்களிலும் அமைத்தால் விவசாயி கழிவு இல்லாமல் சுதந்திரமாக விற்பனை செய்யமுடியும். மற்றைய மாகாணங் களில் கழிவு இல்லை என்பது தெரிந்ததொன்று.

*(வடமராட்சியில் உள்ள கமக்கார அமைப்பு ஒன்றின் தலைவர் ஒருவரது தகவல்கள் தரவுகளின் உதவியுடன்)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பேரவையின் இருட்டு அரசியல்

■ அன்ரன்

வடக்கின் அரசியல் அரங்கில் திடீர் திருப்பமாகத் தமிழ் மக்கள் பேரவையில் ஒரு பகுதியினர் தமிழரசுக் கட்சியை இரவோடு இரவாக சந்தித்துப் பேசியுள்ளனர். பேரவையின் இணைத் தலைவர்களில் ஒருவர் என்று அறிவிக்கப்பட்டுள்ள மருத்துவ வல்லுநர் லக்ஷ்மன் தலைமையில் இந்தச் சந்திப்பு இரகசியமாக நடைபெற்றது.

பேரவை சார்பில் 7 பேர் சந்திப்பில் கலந்துகொண்டனர். தமிழரசுக் கட்சியின் சார்பில் அதன் தலைவர் மாவை சேனாதிராசா இருந்தார். யாழ்ப்பாணம் நகரினுள் இருக்கும் மார்ட்டீன் வீதியில் அமைந்துள்ள தமிழரசுக் கட்சி அலுவலகத்துக்கு இரவு 8 மணியளவில் பேரவையினர் வருகை தந்தனர். யாழ். பல்கலைக்கழக மருத்துவபீடாதிபதி மருத்துவ வல்லுநர் ரவிராஜ், பொது மருத்துவ வல்லுநர் சிவன் சுதன், உள்ளூர் பத்திரிகை ஒன்றின் ஆசிரியரும் திருநெல்வேலியில் உள்ள பாடசாலை ஒன்றின் அதிபருமான ந.விஜயசுந்தரம், ஆகியோரும் அந்தக் குழுவில் அடங்கியிருந்தனர்.

**கட்சிகளுக்கு கல்தா**

சுமார் ஒன்றே முக்கால் மணிநேரம் 9.45 மணி வரையில் அவர்கள் மாவை சேனாதிராசாவுடன் பேச்சு நடத்தினர். மாவையுடன் தொடர்புகொண்டு இந்தச் சந்திப்புக்கான ஏற்பாடுகளை பல்கலைக்கழக மருத்துவபீடாதிபதியே மேற்கொண்டிருந்தார். மாவையைச் சந்தித்த பேரவைக் குழு மிகக் கவனமாகத் திட்டமிடப்பட்டிருந்தது. பேரவையில் இடம்பெற்றிருக்கும் அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் மிகக் கவனமாகத் தவிர்க்கப்பட்டிருந்தனர். அதற்கு மேல், இந்தக் குழுவினர் தமிழரசுக் கட்சியைச் சந்தித்துப் பேசுவது தொடர்பான தகவல்கூட பேரவையில் உள்ள சில கட்சியினருக்குத் தெரியாமல் இரகசியமாகவே வைக்கப்பட்டிருந்தது. குறிப்பாகப் பேரவைக்குப் பெரும் ஆதரவை வழங்கிவரும் ஈ.பி.ஆர்.எல்.எவ். கட்சிக்கு இந்தச் சந்திப்புக் குறித்து அது நடந்து முடிந்த பின்னர் கூடத் தெரிந்திருக்கவில்லை.

இந்தச் சந்திப்பில் அரசியல் கட்சிகளைத் தவிர்த்ததில் பேரவையின் இந்தப் பகுதியினருக்கு உள்நோக்கம் இருந்திருக்கக்கூடும். ஏனெனில் அவர்கள் எடுத்த எடுப்பிலேயே, பேரவை என்பது தமிழரசுக் கட்சிக்கோ தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கோ எதிரானது அல்ல என்று மாவை சேனாதிராசாவை நம்ப வைப்பதற்குப் பெரும் முயற்சி எடுத்தனர்.

தம்மைப் பற்றிய தவறான பார்வையை 'உதயன்' பத்திரிகைதான் உருவாக்கி விட்டது என்றும் அவர்கள் மாவையிடம் எடுத்துக் கூறினர். விடுதலைப் புலிகள் அமைப்பின் முன்னாள் தளபதியும் பின்னர் மகிந்த அரசில் அமைச்சுப் பதவிகளை ஏற்றுக்கொண்டவருமான கருணா அம்மான் எனப்படுகிற விநாயகமூர்த்தி முரளிதரன் பேரவையில் இணைய ஆர்வமாக இருக்கிறார் என்ற செய்தியை வெளியிட்டதன் மூலம், கூட்டமைப்புக்கு எதிரானது பேரவை என்ற பார்வையை உதயன் பத்திரிகை ஏற்படுத்தியது என்றும் வந்திருந்தவர்களில் ஒருவர் கூறினார்.

அனுபவம் வாய்ந்த அரசியல்வாதியான மாவை சேனாதிராசாவோ அந்தப் புனைக் கதைகளைக் கேட்டு, நேரத்தை வீணடிக்க விரும்பாமையால், "இது பற்றிப் பேசுவதானால் மற்றைய பத்திரிகையின் செயற்பாடுகள் பற்றியும் நாம் பேச வேண்டியிருக்கும். நீங்கள் வந்தது புதிய அரசமைப்பு விவகாரம் குறித்துப் பேசுவதற்காக எனவே அதைப் பற்றிப் பேசுங்கள்" என்று பாட சாலை அதிபரைப் பார்த்துக் கண்டிப்புடன் கூறிவிட்டார்.

> இந்தச் சந்திப்பில் அரசியல் கட்சிகளைத் தவிர்த்ததில் பேரவையின் இந்தப் பகுதியினருக்கு உள்நோக்கம் இருந்திருக்கக்கூடும். ஏனெனில் அவர்கள் எடுத்த எடுப்பிலேயே, பேரவை என்பது தமிழரசுக் கட்சிக்கோ தமிழ்த் தேசியக் கூட்டமைப் புக்கோ எதிரானது அல்ல என்று மாவை சேனாதிராசாவை நம்ப வைப்பதற்குப் பெரும் முயற்சி எடுத்தனர்.

**எப்படி நம்புவது?**

இதனால், வேறு வழியின்றித் தமது அரசியலுக்குத் திரும்பினர் பேரவையினர். பேரவை ஒருபோதும் தமிழரசுக் கட்சிக்கோ தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கோ எதிராகச் செயற்படாது என்றனர். பேரவையில் உள்ள சுரேஷ் பிரேமச் சந்திரன்தான் அதனை அரசியல் ரீதியானதாக்க முயற்சிக்கின்றார் என்றனர். அண்மையில் தாங்கள் யாழ்ப்பாணம் நகரில் உள்ள வீரசிங்கம் மண்டபத்தில் நடத்திய கூட்டத்திற்குக்கூட இரண்டு பஸ்களில் ஆள்களை அழைத்து வந்தது சுரேஷ்பிரேமச்சந்திரனே. அத்துடன் தாங்கள் அத்தகைய எந்தவொரு அரசியல் விடயத்திலும் ஈடுபடவில்லை என்றும் கூறினர்.

பேரவையை அரசியல் ரீதியில் நகர்த்துவதில் சுரேஷ் பிரேமச்சந்திரன் முனைப்புக் காட்டுவதால் அவரைத் தொடர்ந்து பேரவையில் நீடிக்கவிடுவது குறித்துக் கூடத் தாங்கள் சிந்திப்பதாக அவர்கள் இந்தச் சந்திப்பில் கூறினர் என்று தகவல்கள் கிடைத்த போதும், சுரேஷைப் பேரவையை விட்டு நீக்குவதாக அவர்கள் சொன்னார்களா என்பதைச் சரிவர உறுதிப்படுத்த முடியவில்லை.

இந்த விடயம் குறித்துக் கருத்துத் தெரிவித்த கட்சியின் மூத்த உறுப்பினர் ஒருவர், "இவர்கள் தம்முடன் கூடவே இருக்கும் சுரேஷ் பிரேமச்சந் திரனைப் பற்றியே இப்படித் தனக்கு முன் தவறாகக் கதைக்கிறார்கள் என்றால், தான் எதையாவது இவர்களுக்குக் கூறப்போய் அதை இவர்கள் எப்படித் திரித்து சுரேஷ் பிரேமச்சந்திரனிடம் போய்க்கூறுவார்களோ என்று நினைத்துத் தானோ என்னவோ மாவை அண்ணை எந்தவொரு விடயம் குறித்தும் அவர்களிடம் மனம்விட்டுப் பேசவில்லை. அவர்கள் கூறியதை மட்டும் அமைதியாகக் கேட்டுக்கொண்டார். பொதுவான விடயங்களை மட்டும் பகிர்ந்துகொண்டு அவசியமானவற்றுக்கு மட்டும் பதில் சொன்னார்" என்று விவரித்தார்.

பேரவையினரின் இந்தச் சந்திப்பில் முதன்மையாக இருந்தது தாங்கள் கூட்டமைப்புக்கு எதிரானவர்கள் அல்லர் என்று மாவை சேனாதிராசாவை நம்ப வைப்பதுதான். தமிழ்த் தேசியக் கூட்டமைப்புத்தான் மக்களின் ஆதரவு பெற்ற ஒரே கட்சி என்பதைத் தாங்கள் முழுமையாக ஏற்றுக்கொள்கிறார்கள் என்று அவர்கள் திரும்பத் திரும்ப மாவை சேனாதிராசாவிடம் வலியுறுத்தினார்கள். தமிழரசுக் கட்சியைக்கூடத் தாங்கள் ஏற்றுக் கொள்கிறார்கள் என்றும் அவர்கள் தெரிவித்தனர்.

அதேபோன்று பேரவையைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நிராகரிக்காமல் இருப்பதற்காக வேடிக்கையான காரணம் ஒன்றையும் அவர்கள் முன்வைத்தார்கள். தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கான அழுத்தக் குழுவாக பேரவையை சிங்கள அரசுகளுக்கு காட்டுவதன் மூலம் அதிக அதிகாரங்களைப் பெறலாம் என்பதுதான் அவர்கள் முன்வைத்த கருத்து. அதாவது, இங்கே பாருங்கள் பேரவை போன்ற அமைப்புகள் மிக மிக அதிகமாக எதிர்பார்க்கின்றன; இந்த நிலையில் நீங்கள் தருவதை நாங்கள் ஏற்கமுடியாது, இன்னும் கொஞ்சம் கூடுதலாகத் தாருங்கள் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சிங்கள அரசுகளிடம் பேரம் பேசுவதற்குத் தம்மைப் பயன்படுத்திக்கொள்ளலாமாம் என்பதுதான் அவர்கள் தெரிவித்த யோசனை.

புதிய அரசமைப்புத் தொடர்பில் தாம் சில யோசனைகளைத் தயாரித்திருக்கின்றனர் என்றும் மாவையிடம் அவர்கள் கூறினர். தமது முன்மொழிவுகளைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பயன்படுத்திக்கொள்ளலாம் என்றும் ஆலோசனை தெரிவித்தன்ர். அந்த யோசனைகள் எங்கே என்று மாவை கேட்டபோது அதனைத் தாங்கள் எடுத்து வரவில்லை என்றும் பின்னர் அதனைத் தருகிறோம் என்றும் கூறினர். (சந்திப்பு முடிந்து அவர்கள் சென்ற பின்னர் அந்த யோசனை தமிழரசுக் கட்சி அலுவலகத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டது)

இந்த விடயத்துக்குப் பதிலளித்த மாவை சேனாதிராசா, "தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தமிழ் மக்களால் முழுமையாக ஏற்கப்பட்ட ஒரே அமைப்பு என்ற ரீதியில் அரசுடனான பேச்சுக்களில் அது ஒரு தீர்வு முன்மொழிவை வைக்கும்.

(44 ஆம் பக்கம் பார்க்க)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசியலமைப்பும் தமிழ் மக்களின் எதிர்பார்ப்பும்

■ சந்திரசேகர ஆசாத்

இலங்கையின் புதிய அரசமைப்பு உருவாக்கம் தொடர்பாக நாடாளுமன்றத்தை அரசமைப்புச் சபையாக மாற்றும் பிரேரணை கொண்டுவரப்பட்டு நாடாளுமன்றத்தில் பெரும்பான்மை வாக்குகளால் பல்வேறு வாதப்பிரதி வாதங்களுடன் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. அதற்கு அடிப்படையாக ஒரு சிறப்புக்குழு அமைக்கப்பட்டுள்ளது. அந்தக் குழு நாடு முழுவதும் மக்களின் அபிப்பிராயங்களைப் பெற்று வருகிறது.

இந்தப் புதிய அரசமைப்பின் மூலம், நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையை ஒழித்து நாடாளுமன்றத்துக்கும் அமைச்சரவைக்கும் முழு அதிகாரத்தை வழங்குதல், விகிதாசாரத் தேர்தல் முறையில் மாற்றம் கொண்டு வருதல், இலங்கையின் தேசிய இனப்பிரச்சினைக்கு நிரந்தரமான தீர்வு காணல் ஆகிய முக்கிய பிரச்சினைகளுக்குத் தீர்வு எட்டப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இலங்கையின் ஆட்சி அதிகாரம் ரணில் விக்கிரமசிங்க, மைத்திரிபால சிறிசேன தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சி, சிறிலங்கா சுதந்திரக் கட்சி வசம் இருந்த போதிலும் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச தென்னிலங்கை அரசியலில் இன்னும் சக்தி படைத்தவராகவே விளங்குகிறார். அவர் தேர்தல்களின் மூலம் அதிகாரத்தை இழந்துவிட்ட போதிலும், நாடாளுமன்றத்தில் மிகவும் குறைவான ஆதரவாளர்களையே கொண்டிருந்த போதும், அரசின் முடிவுகளில் செல்வாக்குச் செலுத்தும் அளவுக்கு இன்னும் வலிமை பெற்றவராகவே விளங்கி வருகிறார்.

இப்படியான ஒரு சூழ்நிலையில் தான் தமிழ்மக்கள் தமது அடிப்படை உரிமைகளைப் பெறவும், நிலை நிறுத்தவும், இனப்பிரச்சினைக்குத் தாம் ஏற்றுக்கொள்ளக் கூடியதான ஒரு நிரந்தரத் தீர்வை புதிய அரசமைப்பின் மூலம் பெறவும் எதிர்பார்க்கின்றனர்.

இன்றைய அரசை உருவாக்குவதில் தமிழ் மக்கள் பெரிய பங்களிப்பை வழங்கியவர்கள் என்ற வகையில், அத்தகைய எதிர்பார்ப்பில் முழுமையான நியாயம் உண்டு.

எமது கோரிக்கைகளை நாம் முன்வைப்பதிலும் அவை தொடர்பான நடவடிக்கைகளை மேற்கொள்வதிலும் நாம் ஆணித்தரமாகவும், நிலை தளராமலும் தந்திரோபாயத்துடனும் செயற்படவேண்டும். ஏனெனில் தென்னிலங்கை அரசியல்வாதிகள், எவருமே தமிழ் மக்களின் நியாயமான உரிமைகளைத் தாமாக விரும்பித் தந்ததில்லை.

சில நிர்ப்பந்தங்கள் காரணமாக சில உரிமைகளைத் தரமுயன்றாலும் அதன் கூடவே அவற்றை வேறு ஒருவகையில் பறிப்பதற்கு வழிவகைகளையும் அவர்கள் கைவசம் வைத்திருப்பதுண்டு.

இன்றைய ஆட்சி அதிகாரத்திலுள்ள பிரதமரும், ஜனாதிபதியும் இனப்பிரச்சினைக்கு ஒரு குறைந்தபட்சத் தீர்வையாவது முன்வைப்பார்கள் என்ற ஒரு தோற்றப்பாட்டைத் தமிழ் மக்கள் மத்தியில் ஏற்படுத்தி வருகின்றனர். அவர்களுடன் இணைந்து அரசியலை முன்னெடுப்பதன் மூலம் தீர்வுக்கான கதவுகளைத் திறக்க முடியும் என்ற நம்பிக்கையை சில தமிழ் அரசியல் தலைமைகள் தமிழ் மக்கள் மத்தியில் ஏற்படுத்தியும் வருகின்றனர்.

ஆனால் இந்த விவகாரத்தில் நாம் கடந்த கால அனுபவங்களைக் கணக்கில் எடுக்கவும், இன்றைய தென்னிலங்கை அரசியல்வாதிகளின் நிலைப்பாட்டின் அடிப்படைகளையும் கணக்கில் எடுக்கத் தவறக் கூடாது. இன்றைய ஜனாதிபதியும் சரி, பிரதமரும் சரி பல்வேறு சந்திப்புக்களின்போதும் விழாக்களில் உரையாற்றும்போதும் இந்த நாட்டில் நிலவிய கொடிய பயங்கரவாதத்தை முடிவுக்குக் கொண்டு வந்தவர்கள் இலங்கை இராணுவத்தினரே என அவர்களைப் போற்றி வருகின்றனர். இராணுவத்தினரின் தியாகங் களைப் பாராட்டியும் வருகின்றனர். இது இலங்கையில் இடம்பெற்ற போரை முடிவுக்குக் கொண்டு வந்ததற்கான பாராட்டுக்கள் எனச் சிலர் கருதலாம். ஆனால், அதில் பாவிக்கப்பட்ட வார்த்தைகளில் அடங்கியுள்ள அர்த் தத்தை ஆழமாகப் புரிந்து கொள்ளும்போது அவர் களின் அடிப்படை மனப்பான்மையைப் புரிந்து கொள்ளமுடியும். இந்த வார்த்தைகள் மூலம் இங்கு நடந்தது ஒரு தேசிய இனத்தின் விடுதலைப் போராட்ட மல்ல. அவை பயங்கரவாத நடவடிக்கைகளே என்பதை வலியுறுத்துகின்றனர்.



இந்தப் புதிய அரசமைப்பின் மூலம், நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையை ஒழித்து நாடாளுமன்றத்துக்கும் அமைச்சர வைக்கும் முழு அதிகாரத்தை வழங்குதல், விகிதாசாரத் தேர்தல் முறையில் மாற்றம் கொண்டு வருதல், இலங்கையின் தேசிய இனப்பிரச்சினைக்கு நிரந்தரமான தீர்வு காணல் ஆகிய முக்கிய பிரச்சினைகளுக்குத் தீர்வு எட்டப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச முதற்கொண்டு, முன்னாள் பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜ பக்ச வரை எல்லோருமே இதைத்தான் வலியுறுத்தி வந்தனர். கோத்தபாய இன்னொரு படி மேலே சென்று வடக்கு கிழக்கு தமிழர்களின் பாரம்பரிய வாழிடம் அல்ல எனவும் தெரி வித்திருந்தார்.

இங்கு இடம்பெற்றது ஒடுக்கப்பட்ட ஒரு தேசிய இனத்தின் விடுதலைப் போராட்டமல்ல பயங்கரவாதம்தான் என்றால், இலங்கை வாழ் தமிழ் மக்கள் ஒரு தேசிய இன மல்ல என்பதுதான் அர்த்தம். அந்தவகையில் நாம் ஒரு தேசிய இனத்துக்கான உரிமைகளுக்கு உரித்துடையவர்கள் அல்லர் என்ற நிலைப் பாட்டிலேயே அவர்கள் உள்ளனர் என்பதை நாம் புரிந்துகொள்ள முடியும்.

எனவே அரசமைப்பில், இலங்கை வாழ் தமிழ் மக்கள் தமக்கென ஒரு மொழி, தமக்கென நிலத் தொடர்பு கொண்ட வாழிடம், ஒரு பொதுப் பொருளாதாரம், ஒரு தனித்துவமான தொன்மையான கலாசாரம் என வரலாற்றுப் பாரம்பரியம் கொண்ட ஒரு தேசிய இனம் என்பது அங்கீகரிக்கப்பட வேண்டும். அந்த அடிப்படை விடயம் ஏற்றுக் கொள்ளப்படாத நிலையில் சமஷ்டியோ, வடக்குக் கிழக்கு இணைப்போ அல்லது அதிகாரப் பரவலாக்கம் கொண்ட அலகு களோ எதனாலும் எந்தவித பயனும் கிட்டப்போவதில்லை. 13ஆவது அரசமைப்புத் திருத்தத்தைப் போன்றே நடைமுறையில் எந்தவித பயனுமற்ற ஓர் ஏட்டுச்சுரைக்காயாகவே இவையும் இருக்கும்.

தற்சமயம் உள்ள மாகாண சபைகளின் அதிகாரம் வெறும் பதவிக் கதிரைகளில் அமரவும், பதவிப் பெயர்களைச் சுமக்கவும் மட்டுமே மட்டுப்படுத்தப்பட்டுள்ளது என்பதை நாம் மறந்து விடமுடியாது.

இந்த நிலைமையில்தான் தமிழ் அரசியல் தலைமைகளுக்கு பெரும் பொறுப்பு உண்டு. இந்த விடயத்தை நேர்மையாகவும், ராஜதந்திர வழிமுறைகள் மூலமும் உறுதியான முறையில் பேரம்பேசி நிறைவேற்ற வேண்டிய கடப்பாடு உண்டு.

தமிழ் மக்களால் ஏற்றுக் கொள்ளப்பட்ட அரசியல் தலைமை தமிழ் தேசியக் கூட்டமைப்பு என்ற வகையில் புதிய அரசமைப்பின் மூலம் இனப்பிரச்சினைக்கு நியாயபூர்வமான தீர்வு காணும் பொறுப்பு அதற்கே உண்டு அது சம்பந்தமான பல்வேறு ஆலோசனைகளை சிவில் சமூக அமைப்புக்களோ அல்லது வேறு குழுக்களோ முன்வைத்தாலும்கூட இலங்கை அரசதரப்பு மட்டுமன்றி சர்வதேசமும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஆலோசனைகளுக்கு முக்கியத்துவம் வழங்கும் நிலையே நிலவுகிறது என்பதை எவரும் மறந்துவிட முடியாது. எனவே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் எந்த ஒரு சிறு நகர்வும் காத்திரமானதும், உறுதியானதும், குழப்பங்களுக்கு இடமற்றதாகவும் அமைய வேண்டும். ஏற்கனவே இடம்பெற்ற நாடாளுமன்றத் தேர்தல்களிலும் மாகாண சபைத் தேர்தல்களிலும் உள்ளூராட்சி சபைத் தேர்தல்களிலும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இனப்பிரச் சினைத் தீர்வுக்கு சமஷ்டிக் கோரிக்கையை முன் வைத்துத் தமிழ் மக்களின் ஆணையைக் கோரியிருந்தனர்.

(43 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இணுவையூர் சிதம்பர
திருச்செந்திநாதன்



# "அன்புள்ள அப்பா நாங்கள் நலம்"

வேகமாக நடந்தாலும் நடக்க முடியவில்லை. கந்தையர் பதகளிப்பட்டார். மகனும் மருமகளும் வேலை முடிந்து வந்திருப்பார் களா? வழக்கமாக நாலேமுக்கால் அல் லது ஐந்து மணிக்கு வந்து விடுவார்கள். சுப்பர் மார்க்கெட்டுக்குப் போனால் அல்லது சந்தைப் பக்கம் போனால்தான் வரத்தாமதமாகும். இன்றைய நிலைமை எப்படி இருக்கும் என அவரால் ஊகிக்க முடியவில்லை. எப்படியும் அவர்கள் வருவதற்கு இடையில் போய்விட வேண்டும். அப்படிப்போகாவிட்டால் ....

அதனால் எழக்கூடிய பிரச்சினைகளை நினைக்கத்தான் பயமாக இருந்தது. அந்தக் களத்தை எப்படி எதிர் கொள்வது. முள்ளிவாய்க்கால் - வட்டுவாகல் அனுபவம்கூட அவருக்கு இல்லை. அன்றைக்கு மகன் மனோகரனும் மருமகள் சுமித்தாவும் வேலைக்கு அந்தரப்பட்டு பறந்தோடிய பின்னர் வீட்டுக்கதவுகள் யன்னல்கள் எல்லாவற்றையும் இறுகப் பூட்டி கதவுத்திறப்பை இடுப்பில் செருகிக்கொண்டு வெளிவிறாந்தை சாய்மனைக் கதிரையில் படுத்திருந்தார். நேரம் கரைந்ததே தவிர எதிலும் ஈர்ப்பு ஏற்படவில்லை. வெளி விறாந்தைக் கரையோரம் தலைநீட்டி நின்ற கொய்யா மரத்தில் ஒருசோடி அணில்கள் விளையாடின. அதனிடையே ஓர் அணில் பிஞ்சாக இருந்த கொய்யாக் காய்க்கு பல்லைக்காட்டியது. எதிர்வீட்டு நாய் இவர்கள் கேற்றில் காலைத்தூக்கி அசிங்கம் செய்தது. அதைக் கலைக்க வேண்டும் என்ற உணர்வுகூட அப்போது அவருக்கு ஏற்படவில்லை, இவர்கள் வீட்டில் ஒரு நாய்கூட இல்லை. தான் இல்லாவிட்டால் சிலவேளை நாய் வளர்க்கப்படலாம் என்று கந்தையர் நினைப்பதுண்டு.

காலை பத்துமணித் தேநீரை தியாகம் செய்து கனகாலமாயிற்று. மனைவி பாக்கியம் இருக்கும்வரை அவர் மன நிலை உடல்நிலையை அறிந்து செயற் பட்டதால் எல்லாமே நன்று. அவள் எந்த வேலையில் இருந்தாலும் பத்துமணி பால் தேநீரை கந்தையர் இருக்கு மிடத்துக்குக் கொண்டு வந்து விடுவாள். இரண்டு கோப்பையில் வரும் . அவை பெரும்பாலும் தகரக் கோப்பைகள்தான். ஒன்று வட்டமானது. மற்றது கைப்பிடியுள்ளது. வட்டக் கோப்பையை முதலில் குடித்து விட்டுப் பிறகு கைப்பிடிக் கோப்பையில் உள்ளதை வட்டக்கோப்பையில் வார்த்துக் குடிப்பார். அவருக்கு பாக்கியம் வழங்கும் பால் தேநீரில் கடைக்காரன் என்றால் மூன்று பேரைச் சமாளித்து விடுவான். ஐந்து வருடங்களுக்கு முன்னர் மனைவி மறைந்தது போலவே காலை பால் தேநீரும் போய்விட்டது. தேநீர் மட்டுமா?

வீட்டின் ஹோலிற்குள் பெருத்த உரு வெடுத்த ரீ.வி. கொலுவிருந்தது. மிகுந்த கஷ்டப்பட்டுத்தான் அவர் அதனை இயக்கப் பழகியிருந்தார். ஆரம்பத்தில இருந்த சின்ன ரீ.வி. மருமகளுக்கு பொருத்தமாகப் படாததால் ஹோலிற்கு வந்த குசன் செற்றிகளுடன் புதிய ரீ.வியும் வந்திருந்தது. கொஞ்சக்காலம் மகனும் மருமகளும் வேலைக்குப் போன பின்னர் ரீ.வி. பார்க்கலானார். பெரும்பாலும் பழைய படங்கள் - பழைய பாடல்கள். "அப்பா நெடுக ரீ.வியோட இராதேங்கோ - அதுக்கும் ஓர் ஆறுதல் வேணும் தானே!" என்ற மகனின் வழி காட்டலால் அவர் ரீவியை மறந்தார்.

பேப்பர் பார்ப்பதுகூட கஷ்டம். தினசரி பேப்பர் பின்னேரம் மகன் வேலையால வரும் போதுதான் கொண்டு வருவான். வழக்கமாக அவன் கொண்டு வரும் பேப்பரை வெளி விறாந்தையில் இருந்து அவர்தான் பார்ப்பார். அன்றைக்கு என்ன நடந்ததோ தெரியவில்லை. மருமகள் சுமித்தா வெளியே வந்தாள். அவர் பேப்பர் பார்ப்பதைக் கண்டு திரும்பிப்போய் விட்டாள், பிறகு மகன் வந்தான். "அப்பா நீங்கள் வீட்டில இருக்கிறனீங்கள் நாளைக்கும் உந்தப் பேப்பரைப் பார்க்கலாம் தானே" என்றான் மகன்.

அதன் பின்னர் பேப்பர் பார்ப்பது என்பது அவர் தியாகம் செய்த பத்துமணித் தேத்தண்ணி போல் ஆகிவிட்டது. பொதுவாகவே வீட்டைவிட்டுப்போவது பிரச்சினை, வீட்டுக்கு அவர் கேற்றில் நிற்காத காவல்காரன் ஆகிவிட்டார். எப்போதாவது காலையிலோ - மாலையிலோ சிறிது தூரம் வெளியே போய் கோயிலுக்கோ - வேறு இடமாவாது போய் விட்டு வருவது நடைமுறை சாத்தியமற்றதாகி விட்டது.

ஒரு வெள்ளி அவர் கோயிலுக்கு போக ஆசைப்பட்டார். அதிகாலை அமைதியில் சில்லென்று பனிகலந்த குளிர்காற்று உடலை வருடும்வேளை எவருமில்லாத தருணத்தில் கோயில் வழிபாடு செய்வது அவருக்குப் பிடித்தமானது. அந்த வெண் பொழுதின் ஐந்தரை மணி அளவில் அது கனிவாகும். அதனால் அவசரப் பட்டு நாலுமணிக்கே எழுந்துவிட்டார். அவர் அரசோச்சிய காலத்தில் பழைய தட்டு முட்டு சாமான்கள் வைத்திருந்த காற்றுக்கூட கஷ்டப்பட்டு நுழையக்கூடிய சிறிய அறை இப்போது அவரது அறை யாக இருந்தது. வீட்டின் ஆட்சி மாற்றத்தின் பின், அவர் பாவித்த பெரிய அறையும் அமர்ந்தால் மேலே உயர்த்திவிடும் மெத்தைக் காண்ட கட்டிலும் மகன் மருமகள் வசமாயிற்று. அந்த அறையின் விரிந்த யன்னல் வெளி விளிப்யோரமாக ஒரு மல்லிகைப் பந்தல் இருந்தது. எப்போதாவது ஒரு கொடி இரண்டு மூன்று மலர்களுடன் யன்னலூடாக அவரை எட்டிப்பார்க்கும். அவருக்கு மல்லிகையின் வாசனையும் அதன் வெண்மையும் சிலிர்ப்பைத் தரும். மயக்கத்தைக் கொடுக்கும்.

அப்பாவுக்கு மல்லிகை பிடிக்கும் என மனோகரனுக்குத் தெரியும். என்றாலும் ஜன்னல் ஓரம் எட்டிப் பார்க்கும் மல்லிகைக் கொடியை சுமித்தாவுக்காக "கட்" பண்ணி சந்தோசப்படுத்தினான்.

முன்பு காலை நாலு மணிக்கு அவர் வழக்கமாக எழும்பியவுடன் ஆரம்பத்தில் பழைய பாட்டுக்களை கசெட்றெக் கோடரில போட்டுவிட்டு தன் அலுவல்களைப் பார்ப்பார். பின்னர் ரீ.வி. வைத்த பின்னர் ஒளிப்பொட்டுக்கள் ஓடிக்கொண் டிருக்கும். அதிகம் தெளிவில்லாத அந்த ரீ.வி. பெட்டியில் சமய நிகழ்ச்சிகளில் லயிப்பார்.

நாலரை மணிக்கு பாக்கியம் பால் தேநீரைக் கொண்டு வந்து வைப்பாள். நாளாந்த நடைமுறையில் அவரது முதலாவது தேநீர்க் குடியல் ஆரம்பமாகும். அதெல்லாம் 2009 இல் காவு கொள்ளப் பட்ட ஈழத்து தமிழ் மக்களின் போராட்டம் போன்ற சங்கதியாகிவிட்டது. இப்போதும் ஒரு பால் தேநீர் காலை ஏழு மணிக்கு வரும்தான். ஆனால் அதனை பால் தேநீர் என்று எழுதி ஒட்டித்தான் உறுதி செய்ய வேண்டும். கந்தையர் பச்சைத் தண்ணீர் குடித்து, நித்திரை வெறி முறித்து, களித்து, நாலு முழம் வேட்டி கட்டிக் கொண்டு இருக்கும்போது வீட்டுக்குள் லைட் எரிந்தது. குசினிப் பக்கம் ஆரவாரம் கேட்டது. மருமகள் சுமித்தா சமையல் தொடங்கியிருக்க வேண்டும். நாலு முழ வேட்டியைக் கட்டிக்கொண்டு

> காலை பத்துமணித் தேநீரை தியாகம் செய்து கனகாலமாயிற்று. மனைவி பாக்கியம் இருக்கும்வரை அவர் மன நிலை உடல்நிலையை அறிந்து செயற் பட்டதால் எல்லாமே நன்று. அவள் எந்த வேலையில் இருந் தாலும் பத்துமணி பால் தேநீரை கந்தையர் இருக்குமிடத்துக்கு கொண்டு வந்து விடுவாள். இரண்டு கோப்பையில் வரும் . அவை பெரும்பாலும் தகரக் காப்பைகள்தான்.

கந்தையர் வீட்டின் முன்பக்கம் வந்தார். நேரம் ஐந்து மணியாகியது. வீட்டின் முன்புறம் இருள், வீட்டின் கேற்றைத் திறக்க வேண்டும். கேற் திறப்பு வீட்டுக்குள். என்ன செய்வது? நேரம் ஒரு பிரச்சினை. விரைவில் விடிந்துவிடும். அவர் எதிர்பார்க்கும் அந்த இனிய பொழுது இல்லாமல் போய்விடும். சற்றுத் துணிச்சலுடன் விறாந்தை சைற் கதவைத்தட்டி. "தம்பி - மனோகரன்" - என அன்பைக் குழைத்து குரல் தந்தார். கணப்பொழுது மௌனம் - பிறகும். "தம்பி - மனோகரன்" என்று சற்றுக் குரலெடுத்தார். "உங்கடை அப்பா கூப்பி டுகிறார். விடிய வெள்ளண அவருக்கு என்ன வில்லங்கம்" என்று மருமகள் சலிப்பது கந்தையருக்குக் கேட் டது. "என்னப்பா" என்றபடி மனோ கரன் கதவைத் திறந்தான். "கேற் திறப்பை ஒருக்கா தா தம்பி." "ஏன் " என்றதில் உஷ்ணம் இருந்தது. "அம்மன் கோயிலடிக்கு ஒருக்கா போகவேணும் - தம்பி. இண்டைக்கு வெள்ளிக்கிழமைதானே!" கந்தையர் இரத்தலுடன் கேட்டார். "உங்களுக்கு எதுக்கும் நேரம் காலம் இல்லையோ- வேலைக்குப் போற நாங்கள் விடிய வெள்ளண எவ்வளவு அந்தரத்தில் நிக்கிறம், நீங்கள் பொழுது போகாமல் விளையாடுறியள்." மனோகரன் கத்திக் கொண்டு திறப்பைத் தந்தான்.

"கோயில் குளத்தை எப்பவும் கும்பிடலாம். விடியவெள்ளண நாங்கள் வெளிக்கிட முதல் உந்த முத்தத்தை கூட்டலாம் தானே" கதவருகே வந்த சுமித்தா வார்த்தைகளை வீசியடித்தாள்.

அம்மன் கோயில் வந்தபோது பொழுது நன்றாக விடிந்திருந்தது. வெளி மண் டபத்தில் நாலைந்து பேர் கூடி நின்று பேசிக் கொண்டிருந்தனர். கந்தையர் எதிர் பார்த்த அந்தச்சூழல் ஆரவாரம் இன்றி ஓடி விட்டது. புறத்தில் ஏற்பட்ட மாற்றம் போலவே கந்தையர் அகத்திலும் மாற்றம் ஏற்பட்டிருந்தது. அம்மனை கும்பிடும் போது காரணம் புரியாமல் அழுகை வந்தது. கந்தையருக்கும் பாக்கியத்துக்கும் திருமணம் நடந்த போது அவருக்கு வயது முப்பது. சங்கக் கடையில் முகாமையாளராக இருந்த அவர் பாக்கியத்தைக் கண்டு காதல் வயப்பட்டு தூதுவிட்டுத்தான் திரு மணம் செய்தார். பாக்கியம் ஓரளவு தூரத்துச் சொந்தம் என்பதால் கல்யாண விடயத்தில் தடங் கல்கள் ஏற்படவில்லை. அத்தோடு பாக்கி யத்தின் குடும்பத்தில் தனிப்பிள்ளை என்ப தால் மாப்பிள்ளை மிடுக்கோடு அந்த வீட் டுக்கு வந்து வீட்டையும், பாக்கியத்தை யும் மாமன், மாமியையும் பொறுப் பெடுத்தார். இயல்பாகவே பெரியவர்களைக் கனம் பண்ணுவதில் கரிசனை உள்ள அவர் மாமன், மாமியை பெறுமதியாகப் பராமரித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சூரியகாந்தி

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT

அவர்கள் ஒருவர் பின் ஒருவரா கப் போய்ச்சேரும்வரை அவர்களுக்குப் பாக்கியமும், கந்தையரும் ஒரு குறை வைக்கவில்லை. ஆனால் கந்தயரை ஒரே ஒரு பிரச்சினை வாட்டியெடுத்தது. கலியாணம் முடித்த முதல் இரண்டு வருடமும் அது பெரிதாகத் தெரியவில்லை. பின்னர்தான் தலையெடுத்தது. ஆஸ்பத்திரி, டாக்டர் என்று சகல முயற்சியெடுத்து உங்கள் இரண்டு பேரிலையும் ஒரு பிரச்சினையும் இல்லை என்ற நம்பிக்கைகளின் பின்னர் மனத் துணிவோடு காத்திருந்து கோயில் குளங்கள் என்று கடவுளர் களைக் கைதொழுது பத்து வருடங்களின் பின்னர் பாக்கியம் மனோ கரனைப் பெற்றெடுத்தாள்.

மனோகரனை எப்போதும் தன் கைப்பிடி பிள்ளையாகவே அவர் வளர்த்தார். நேசரி செல்லும்போதும் பிறகு பாடசாலை செல்லும்வேளையிலும் அவர் மனதிலும், தோளிலும் அவனைச் சுமந்தார். "அப்பா - அப்பா" என அவனும், அவன் மனதில் யாரும் புகாத அந்த வேளையில் அன்பைக் கொட்டினான். ஐ.பி.கே.எவ். யாழ்ப்பாணத்தைப் பசியாற ஆரம்பித்தபோது அவனுக்கு வயது எட்டு. தாயும் தகப்பனும் அவனை இடுப்பில் ஏந்தாத குறையாகப் பாதுகாத்தனர். தமிழர் போராட்ட சூழல் கொதி நிலை பெற்றிருந்த அந்தக் காலத்தில் கந்தையர் மனோகரன் தொடர்பாகப் பயந்தார். 1995இல் இடம் பெயர்ந்து சாவகச்சேரி கல்வயல் கிராமத்தில் அகதியாய் தென்னை மர நிழலில் குடி பெயர்ந்தபோது மனோகரன் வயது பதினான்கு. அந்த வயதுப் பிள்ளைகளுக்கு ஏற்பட்ட போராட்டக் காய்ச்சல் அவனுக்கு வரக் கூடாது என்பதற்காக சங்கக்கடை வேலையையும் உதறிவிட்டு அவனைக் காத்தார்.

இருபத்தியொரு வயதில் பல்கலைக்கழக புதுமுக மாணவனாக கீ பேர்த்டே கொண்டாடிய அவனை நடுவில் நிறுத்தி கந்தையரும் பாக்கியமும் முத்த மழை பொழிந்த பொழுது கந்தையருக்கு ஏற்பட்ட கண்ணீரை இடை நிறுத்த நெடு நேரமாயிற்று. பல்கலைக்கழகத்தில் படிக்கும்போதும் அவன், தகப்பனைக் கேட்காமல் எதையும் செய்யமாட்டான் "அப்பா - அப்பா-" என அவன் அழைக்கும் ஒவ்வொரு வார்த்தையிலும் பாசம் கரைந்திருக்கும்.

அதெல்லாம் மாறிவிட்டது. பல்கலைக்கழகத்தில் படிப்பும் முடித்து பட்டம் பெற்ற காலத்திலேயே அரச வேலையும் கிடைத்தது. கந்தையர் தலை நிமிர்ந்தார். மனம் துள்ளிக்குதித்தது. மனோகரனைப் பார்க்க பெருமையானார். ஊரிலும் அயலிலும் அவர் உயர்ந்து நடந்தார். வேலையின் முதல் மாதச் சம்பளத்தைத் தகப்பனின் கையிலே கொடுத்துவிட்டு அவன் பணிந்து நின்றபோது கந்தையர் பாக்கியத்தைப் பார்த்துக் கனிவுடன் புன்னகைத்தார்.

வேலைத்தளத்திலே மனோகரன் காதல் வயப்பட்டான். சுமித்தாவின் சிலிர்த்த பார்வை அவனை அம்புகளாய்த் துளைத்தது. வெட்டி விடப்பட்ட முன்பக்கத்து மயிர்க்கற்றைகள் அவன் உணர்வுகளை ஊசலாட்டின. மயிர் கற்றைகளை அடிக்கடி வருடிவிடும் அவளது பளிர் என்ற நீள விரல்கள் அவன் அகமனதில் வெடி வைத்தது. அவன் அவளிடம் சரணாகதியானான். ஆரம்பத்தில் அவனை புறமொதுக்கி ஓரக்கண் பார்வை எறிந்து அவனை அரை உயிராக்கினாள் சுமித்தா. தாங்க முடியாத காதல் தாபம் மனோகரனை நிலைகுலைய வைக்க, அவளது முழுப்பார்வையும் தன் வசமாக்க, அவளது முழுநேரத் தொண்டனானான். தொண்டனின் பால் தன் காதல் அருளை சுமித்தா வழங்க பல தட்சணைகளைக் கேட்டாள். அவளின் காதல் அனுக்கிரகம் கிடைக்க வேண்டும் என்பதற்காக சந்தர்ப்பவாத அரசியல் கட்சிகளின் நிபந்தனைகள் அற்ற ஆதரவை அவன் வழங்கினான். கந்தையருக்கும் பாக்கியத்துக்கும் சுமித்தா தொடர்பாக முழுத்திருப்தியில்லை "என்னடி மச்சாள் - உன்ர மருமோள் ஒருபோக்கு போல இருக்கு" என திருமணம் நடந்த அடுத்த நாள் கையில்லாத நைட்டியுடன் தலை விரித்து முகம் பூரித்து சுமித்தா வெளிவிறாந்தைக்கு வந்தபோது பாக்கியத்தின் மச்சாள் சின்னத்தங்கச்சி கேட்டாள்.

கந்தையரின் வீட்டுச்சூழல் இப்படித்தான் மாறியது. சுமித்தா பாக்கியத்துடனும் கந்தையருடனும் முரண்படலானாள். அவர்கள் இயன்ற வரை மருமகளுடன் இணைந்து பணியாற்றத்தெண்டித்தனர். நாளொரு பிரச்சினை - பொழுதொரு மாற்றமாக கந்தையரும் பாக்கியமும் மகனிடமும் மருமகளிடமும் இருந்து அன்னியப்பட்டுப் போனார்கள்.

ஈன்ற மகனை சான்றோர் எனப் பெருமைப்பட்ட தவப் புதல்வன் காதல் மனைவியின் காதோரக்கனிவுப் பேச்சுக்களால் கையறுநிலை அடைந்தான். சிமிட்டிப் பார்க்கும் அவள் அகன்ற விழிகளுக்காக அவன் பெற்றோரைப் பந்தாடி அவளைப் பரவசப்படுத்தினான். நீண்ட காலத்தின் பின்னர் இன்றைக்கு பத்துமணித் தேநீர் குடிக்க வேண்டும் போன்ற ஒரு தாபம் ஏற்பட்டது. சந்திக் கடையில் தேநீர் குடித்த தகவல் மகனுக்கு போய்ச் சேர்ந்து விட்டால் பிரச்சினையாகிவிடும். என்ன செய்யலாம் என்ற யோசனை வந்தபோதுதான் அவரது ஒன்றுவிட்ட சகோதரியின் மகள் பரமேஸ்வரி ஞாபகத்துக்கு வந்தாள். "மாமா இடையில எப்பவாவது ஒரு நாளைக்கு வீட்டுப் பக்கம் வந்து போகலாம்தானே" உண்மையான அக்கறையுடன் பல தடவை கேட்டிருப் பாள். பிள்ளைகள் மூன்றை கலியாணம் செய்து கொடுத்துவிட்டு புருனுடனும், திருமணத்துக்காகக் காத்திருக்கும் ஒரு பெண்ணுடனும் வாழ்ந்த பரமேஸ் வரி யின் வீடு சந்திக்குக் கிட்டத்தான் இருந்தது. இங்கிருந்து ஒரு கிலோ மீற்றர் தூரம் தான் பையப்பைய நடந்தாலும் பத்து நிமிடத்துக்கு இடையில போயிடலாம். அரைமனத்துடன் கேற்றைப் பூட்டிக்கொண்டு தெருவில் இறங்கினார். காலில் செருப்பில்லாமல் நடக்க கஷ்டமாகத்தான் இருந்தது. அவரிடம் இருந்த றப்பர் செருப்பு அறுந்து நாளாயிற்று. அது மனோகரனுக்குத் தெரியும் என்றாலும் புதிது வரவில்லை. சிரமப்பட்டு பரமேஸ்வரி வீட்டுக்குப் போய்ச் சேர்ந்தபோது முதுகு வியர்வையில் சேட் ஒட்டியிருந்தது. "மாமா இதிலை இருங்கோ" பரமேஸ்வரி வெளி விறாந்தையில் இருந்த சாய்மனைக்கதிரையில் அவரைச் சாயச் செய்தாள்.

"களைச்சுப்போனியள் போல"என்றபடி இரண்டு கோப்பை செம் மஞ்சள் நிற பால்த் தேநீரைக் கொண்டு வந்து வைத்தாள். தேயிலை வாசனை மூக்கைத் துளைத்தது. அதனைக் குடித்து முடித்தபோது ஏற்பட்ட ஆனந்தத்திற்கு அளவில்லை. "கொஞ்ச நேரம் படுங்கோ மாமா குசினியுக்கை அலுவல் இருக்கு பார்த்துவிட்டு வாறன்" என்றபடி அவள் உள்ளுக்க போய்விட்டாள். வேப்பமரத்துக் காற்றும் அது தந்த சுகமும் கந்தையரை மயக்கியது. அவர் கண்ணயர்ந்து போனார். பிறகு கண் விழித்தபோது நேரம் பன்னிரண்டு மணியாகியிருக்க வேண்டும். வெய்யில் உச்சமாயிருந்தது. பதற்றமாகப் போய்விட் டது."பிள்ளை - பிள்ளை" எனக் கூப்பிட்டார். பரமேஸ்வரி வந்தாள். "நான் போட்டு வாறன் - அப்பிடியே உறங்கிப்போனன்" "நான் வந்து பார்த்தனான். நீங்கள் நல்ல நித்திரை" என்று சொல்லிச் சிரித்தாள் பரமேஸ்வரி. "சரி பிள்ளை நான் போட்டு வரட்டே" என்ற படி எழுந்தவரை மடக்கினாள் பரமேஸ்வரி. "இவ்வளவு நேரமும் இருந்தனீங்கள்தானே மாமா! சாப்பிட்டுட்டு போங்கோ- மாமா" என்றாள் அன்புடன். அதிர்ந்தார் கந்தையர்."இல்லைப் பிள்ளை - என்ரை சாப்பாடு அங்கை வீணாய்ப்போயிடும். பிறகு சிக்கல்" என்றார் சற்றே பயத்துடன். "இல்லை - அது பிரச்சினையில்லை நீங்கள் உங்கடை அங்கத்தை சாப்பாட்டை முன் வீட்டு நாய்க்கு வைக்கலாம்தானே. மருமோளுக்கு நீங்கள் சாப்பிடுறது தெரிய வராது" பரமேஸ்வரிக்கு கந்தையர் வீட்டு கள நிலமை தெரிந்தது தான்."இல்லைப் பிள்ளை- பிரச்சினை ஏன்" என்னும்போது பரமேஸ்வரியின் வீட்டுக் குசினியில் இருந்து வெந்தயக்குழம்பு வாசனை அவரிடம் காலம் நேரம் தெரியாமல் வந்து சேர்ந்தது.

அந்த வாசனை இதுவரை அவர் உணர்வுகளில் ஏற்படுத்தாத ஒரு கிளர்ச்சியை ஏற்படுத்தியது. புலன்கள் விழித்துக்கொண்டன. அதனை வென்று கொள்ள அவர் முயற்சி எடுத்தார். என்ன செய்தும் மாற்றமடைந்து கொண்டு வந்த அவரின் மனமும், பரமேஸ் வரியின் வற்புறுத்தலும் ஒன்று சேர அவர் பணிந்துபோனார். தலை வாழையிலையில் குத்தரிசிச் சோறும் முருங்கைக்காய், கத்தரிக்காய் தூள்க்கறி, மரவள்ளிக் கிழங்கு, கீரை, பருப்பு, வாழைக்காய்ப் பொரியல், வெந்தயக் குழம்பு, தயிர் என எல்லாமே ஒன்று சேர சாப்பிடத் தொடங்க கந்தையருக்கு அழுகை பெருக்கெடுத்தது. மருமகளின் சமையல் என்னவோ சமையல்தான். ஆனால் என்ன கறி என்றே தெரியாத அந்தப் பொருள்களை அவர் சாப்பிட்டுக் களைத்தார். சில வேளையில் மத்தியானம் ஒரு மணிக்கு அவர் சாப்பிடத் தொடங்க அதிகாலையில் சமைத்த அந்தச் சாப்பாடு சில்லென்று இருக்கும். என்ன செய்வது? அனேகமான வேளைகளில் காலையில் சமைத்து நீர்த்துப்போகும் உருப்படிகளே அவருக்கு இரவும் கிடைக்கும். மகனும் மருமகளும் கொத்து ரொட்டியோ மசாலா தோசையோ வாங்கிக் கொண்டு வந்து தங்கள் பாட்டைப் பார்த்துக் கொள்வார்கள். பரமேஸ்வரி வீட்டுச் சாப்பாட்டை ஒரு பிடி பிடித்து விட்டு சற்று நேரம் சாய்மனைக் கதிரையில் சரிய மறுபடி தூக்கம் அவரை வளைத்துக் கொண்டது. துள்ளி நிமிர்ந்தபோது நேரம் கழிந்திருந்தது. அந்தரப்பட்டு விடைபெற்று வேகமாக நடந்து வீட்டுக் கேற்றை அண்மிக்கும்வரை வேண்டாத தெய்வம் இல்லை. தெய்வம் அவரது வேண்டுகோளை ஏற்கவில்லை போலும் கேற்றுப்பூட்டைத்திறக்க, பக்கத்தில் வந்து நின்றது பல்சர் மோட்டார் சைக்கிள். சொப்பிங் செய்த பாக்குகளுடன் மருமகள் மோட்டார் சைக்கிளை விட்டு இறங்கினாள்.

"எங்கையப்பா போனனியள்?" மனோகரன் கேட்க "அவருக்கென்ன பிரச்சினை? வீட்டை இருந்து சாப்பிடச்சாப்பிட பொழுது போகாது தானே!" மருமகள் கொழுத்திப்போட்டாள். கந்தையர் பதில் சொல்லவில்லை - உடல் தளர்ந்துபோனது. மனம் படக்படக்கென அடித்தது. ஒரு காலமும் இப்படி அவர் பயந்தது இல்லை. மகன் மருமகள் வீட்டுக்குள் திறந்து உள்ளே போய்விட்டார்கள்.

கந்தையர்தன் குச்சறைக்குள் போய் ஒடுங்கிக் கொண்டார். வீட்டுக்குள் சற்றே நேரம் போக அமளி ஏற்பட்டது. "இஞ்சையப்பா! மத்தியானம் வைச்சிட்டுபோன சாப்பாடு அப்பிடியே இருக்கு. இந்த மனிசன் எங்கை போய் ஆரிட்டை நக்கிக் கொண்டு வருகுது? நான் காலமை எழும்பி எவ்வளவு கஸ்டப்பட்டு சமைச்சு வைக்கிறன். அதை தின்ன வழியில்லாமல் எங்கை நக்கப் போனது?" மருமகள் சுமித்தா உச்சக்குரல் எடுத்தாள். "உந்த மனிசன் எங்களை மானம் கெடுக்காமல் இருக்க மாட்டுது. நாங்கள் உங்கடை அப்பரை சரியாய் கவனிக்காத மாதிரி மற்றவை கதைக்கத்தான் இந்த ஆட்டம் ஆடுது. கிழடுக்கு என்ன விசர் பிடிச்சிட்டுதோ!" சுமித்தாவின் வெடிகள் சரவெடியாயின. எழுபத்தி நாலுவயது கந்தையர் தன் பிறப்பின் மேன்மையை அன்று உணர்ந்தார்.

குச்சறையின் ஒடுங்கிய கதவின் ஊடாக தலை நீட்டிய மனோகரன் "ஏனப்பா - உயிரோடை இருந்து எங்களைக் கொல்லுறியள்?" என்று கத்திக்கொண்டு போனான். அதன் அர்த்தத்தை கந்தையர் சரியாய் விளங்கிக் கொண்டார். ■



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இறுதிச் சுற்று

## தவறவிடக் கூடாதது

பெண்களுக்கான குத்துச்சண்டைப் பயிற்சியாளராக ஹரியாணாவில் வேலை பார்ப்பவர் பிரபு (மாதவன்). குத்துச்சண்டைக் கூட்டமைப்பின் தலைவருடனான சச்சரவால் சென்னைக்கு இடமாற்றம் செய்யப்படுகிறார். வடசென்னை குப்பத்தில் உள்ள குத்துச்சண்டைப் பயிற்சி மையத்துக்கு வந்து சேர்கிறார். அங்கு பயிற்சி பெறும் பெண்களிடம் காணப்படாத இயல்பான திறமையையும் உத்வேகத்தையும் மீன் விற்கும் தடாலடிப் பெண்ணான ரித்திகா சிங்கிடம் (மதி) கண்டு வியக்கிறார்.
தன் அக்கா குத்துச்சண்டையில் வெற்றிபெற்று பொலிஸில் சேரவேண்டும் என்பதுதான் மதியின் கனவு. ஆனால், மதியிடம் ஒரு சாம்பியனுக்கான கூறுகள் இருப்பதைக்கண்டு, அவளுக்குப் பயிற்சி அளிக்கத் தொடங்குகிறார் மாதவன். சந்தர்ப்ப சூழ்நிலைகளால் ஏற்படும் தடைகள், குத்துச்சண்டைக் கூட்டமைப்பின் அசிங்கமான அரசியல் ஆகியவற்றைத் தாண்டி மாதவனால் தன் நோக்கத்தில் வெற்றிபெற முடிந்ததா?
இயக்குநர் சுதா கொங்கரா, தனது 3 ஆண்டு கால உழைப்பை அற்புதமான திரைவடிவமாக மாற்றி யிருக்கிறார். 2010ஆம் ஆண்டிலேயே 'துரோகி' படம் மூலமாகத் தமிழ் சினிமாவில் கால் பதித்த இவர், இறுதிச் சுற்று படத்தில் 'நொக்அவுட்' முத்திரை பதித்திருக்கிறார். ஒரு சாமானியப் பெண்- அசாத்தியமான வெற்றியை அடைய முடியும் என்பதை நம்பத்தகுந்த வகையில் திரைக் கதையாக வடித்திருப்பது பாராட்டுக்குரியது. நம்பகத்தன்மை, விறுவிறுப்பு, அழுத்தமான காட்சிகள் ஆகியவை திரைக்கதையின் பலம்.
பல காட்சிகள் அழியாமல் மனதில் பதிந்துவிடுகின்றன. தன் தங்கையே தனக்குப் போட்டியாளராக வந்து விட்டாலும், அவளுடைய வலியைக் கண்டு துடித்துப் போகும் அக்கா, மதியின் வெற்றி ஒட்டுமொத்தப் பெண் களின் வெற்றி என்பதைக் காட்சிப்படுத்தும் விதமாக தங்கள் முகத்திரையை விலக்கி உற்சாகமாக எழுந்து நிற்கும் பர்தா அணிந்த இரு இளம் பெண்கள் எனத் தனது தனித்துவத்தை நிரூபித்திருக்கிறார் சுதா.
மதியை சாம்பியனாக்க மாதவன் படும் கஷ்டங்கள் மிகைப்படுத்தப்படாமல் சித்திரிக்கப் பட்டுள்ளன.
இவர்களுக்கு இடையே மலரும் உறவு அழகாகக் காட்சிப் படுத்தப்பட்டுள்ளது. பல விசயங்கள் சொல்லாமலேயே உணர்த்தப்படுவது இயக்குநரின் பக்குவத்தைக் காட்டுகிறது.







உதாரணம், தன் கை முறிந்தது எவரால் என்று மதிக்குத் தெரியும் என்பது உணர்த்தப்படும் விதம், எனக்கு ஏன் அப்படிப் பயிற்சி அளிக்கவில்லை என்று மதியின் அக்கா கேட்கும்போது மாதவன் பதில் சொல்லும் விதம் என்பன பக்குவமான படமாக்கத்துக்கு இன்னொரு சான்று.
நாசரும் காலி வெங்கட்டும் சென்னைத் தமிழில் நகைச் சுவையை ஆங்காங்கே தூவிச் சிரிக்க வைக்கிறார்கள்.
பொய்க் குற்றச்சாட்டில் கைது செய்யப்படும் ரித்திகாவை மாதவன் மிகச் சுலபமாக விடுவித்து தன்னோடு ஹரியாணாவுக்கு அழைத்துச் செல்வதும், தான் வலுக்கட்டாயமாகப் பயிற்சிக்கு அழைக்கும் ஒரு பெண்ணை அவர் முரட்டுத்தனமாக அணுகுவதும் திரைக்கதையின் உறுத்தல்கள்.
கனமான கதாபாத்திரங்களை நன்கு கையாளக்கூடிய நடிகர்களைத் தமிழ் சினிமா சரியாகப் பயன்படுத்துகிறதா என்ற கேள்விக்கான பதிலாக அமைகிறது மாதவனின் பாத்திர வார்ப்பு. பாத்திரத்துக்கேற்ற தோற்றத்தாலும் மிகையற்ற நடிப்பாலும் கவர்கிறார் மாதவன்.
இதைவிடவும் பொருத்தமான தேர்வு இருக்க முடியாது எனும் அளவுக்கு அனாயாசமாக நடித்திருக்கிறார் ரித்திகா சிங். களத்திலும் குத்துச் சண்டை வீராங்கனை என்பதால் சண்டைக் காட்சிகளைக் கச்சிதமாகச் செய்திருப்பதில் ஆச்சரியமில்லை. முரட்டுத்தனம், ஆர்ப்பாட்டம் நிறைந்த பெண்ணாகவும், காதல்வசப்பட்டுத் தன்னைஅறியாமலேயே நளினமாகும் பெண்ணாகவும் அட்டகாசமாக நடித்திருப்பது அசத்தல். கனமான கதாபாத்திரங் களைக் கம்பீரமாக தாங்கி நிற்கும் நாசர், சற்றே கோமாளித்தனமான பாத்திரத்தில் இந்தப் படத்தில் கச்சிதமாகத் தன்னைப் பொருத்திக் கொள்கிறார்.
பொதுவெளியில் தன்னை நிரூபிக்க எத்தனிக்கும் பெண்கள் ஒவ்வொரு கட்டத்திலும் எதிர்கொள்ள வேண்டியிருக்கும் பாலியல் சீண்டலை, அத்துமீறலை முகத்திரை கிழித்துக் காட்டுகிறார் இயக்குநர். காவலில் வைக்கப்படும் ரித்திகா எப்படியாவது ஒரு தொலைபேசி அழைப்பு எடுத்துவிடப் போராடும்போது அவர் அருகில் உட்கார்ந்திருக்கும் பாலியல் தொழிலாளர் தனது அலைபேசியை இரகசியமாக ரித்திகாவுக்குக் கொடுப்பது விளிம்பு நிலையினர் குறித்த புரிதலும் அக்கறையும் கொண்ட இயக்குநரின் அடையாளம்.
மீன் வாசமும் புழுதியும் நிறைந்த வட சென்னையையும், வட மாநிலங்களின் வளமான சில பகுதிகளையும் சிவகுமார் விஜயனின் கேமரா அச்சு அசலாகப் பதிவு செய்திருக்கிறது. ஆடை வடிவமைப்பாளர், ஒப்பனை, சிகை அலங்காரக் கலைஞர்களுக்குத் தனி கைதட்டல்.
மொத்தத்தில் தமிழ் சினிமாவுக்கு பல சாம்பியன்களை அறிமுகப்படுத்தியிருக்கிறது இறுதிச் சுற்று. கட்டாயம் திரையரங்குக்கு சென்று பார்க்க வேண்டிய முக்கியமான படம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சூழ்மீனும் கள்ளும்!

■ லக்ஸ்மன்

மீன்பிடித் தொழிலுக்குப் பெயர்பெற்ற இடமாக நெடுந்தீவு கடந்த காலங்களில் விளங்கியது போன்று, சூழ்கட்டி மீன் பிடிப்பதிலும் பேர் பெற்றிருந்தது ஒரு காலத்தில்.

தென்னோலைகளைச் சேர்த்து ஒன்றாகச் சுருட்டிக்கட்டி கடல்வற்றுக் காலங்களில் கடற்கரையோரமாக அதனைக் கொளுத்தி அந்த வெளிச்சத்துக்கு வரும் மீன்களையும் நண்டு வகைகளையும் அதற்கெனவுள்ள கத்தி அரிவாள் போன்றவற்றால் குறிதவறாமல் அடித்துப் பிடித்துக் கொள்ளும் ஒரு முறையையே சூழ்கட்டி மீன்பிடியென்பர்.

இது பின்னாளில் பந்தம் கொளுத்திப் பிடிக்கும் ஒன்றாகவும் மாறியது. சிறிய இரும்புக் குழாயில் சீலைத் துணிகளைச் சுற்றிப் பந்தமாக்கி அதனை எண்ணைப் போத்தலுக்குள் ஊற வைத்து விட்டுப் பின்னர் கொழுத்திப் பிடிக்கும் வகையில் நவீனமயப்படுத்தப்பட்டது என்று கொள்ளலாம்.

கடலில் முழங்காலுக்குக் கீழ்ப்பட்ட நீரிலேயே சூழ்கட்டி மீன்பிடிக்க முடியும். முழங்காலுக்கு மேற்பட்ட நீரில் இந்த முறையிலான மீன்பிடி கஷ்டம். ஆழம் கூடினால் மீன்களைக் குறிபார்த்து அடிப்பதென்பது இதில் சாத்தியப்படாது.

முழங்காலுக்குக் கீழ்ப்பட்ட நீரில் குறிதவறாது மீனுக்கு அடித்துப் பிடிப்பதென்பதும்கூட எல்லோராலும் முடிந்த காரியமல்ல. ஒவ்வொரு தொழிலுக்கும் அதற்குரிய திறமையும் தகுதியும் தேவை. அது போன்றே சூழ்கொளுத்தி மீன்பிடிப்பதற்கும் கணிசமான பயிற்சி தேவை.

நெடுந்தீவில் கடல் நீரில் வளைந்து நெழிந்து சூழ் வெளிச்சத்தை நாடிவரும் மீன்களைக் குறிதவறாமல் அடித்துப் பிடிப்பதில் வல்லவர்கள்பலர் இருந்துள்ளனர். கடல் வற்றுக்கால இரவுகளில் கடற்கரைகளில் வெளிச்சங்கள் மெல்ல மெல்ல நகர்ந்து கொண்டிருக்கிறது என்றால், அந்தப் பகுதிகளில் எல்லாம் சூழ்கொளுத்தப்படுகிறது என்பதைக் குறிப்பால் உணர்ந்து கொள்ளமுடியும். குடும்பஸ்தர்கள் மட்டுமன்றி இளசுகளும்கூட இந்த வேட்டையில் மிகவும் ஆர்வத்துடன் ஈடுபடுவதுண்டு.

அந்த நாள்களில் ஆழ்கடல் மீன்பிடித் தொழிலில் கிடைக்கும் மீன்களைத் தமது தேவைக்காகப் பெற்றுக் கொள்வதில் உள்ளூர் மக்களுக்கு எந்தவித கஷ்டங்களும் இல்லாத நிலையிலும்கூட, பெரும்பாலானவர்கள் சூழுக்குச் செல்வதெனில் அதற்கும் முக்கிய காரணம் உண்டு.

ஆழ்கடலில் கிடைக்கும் மீன்களில் சுவை உண்டென்றாலும் சூழில் பிடிக்கும் மீன்களில் தனித்தன்மை கொண்ட சுவையை உணரமுடியும். பொடித்தரவளிக்கு இது ஒரு பிராக்கும் பொழுதுபோக்கும் என்பதால் ஒரு குழுவாகச் சேர்ந்து இதில் ஈடுபடுவர். ஆள்களின் தொகையைப் பொறுத்துக் கொண்டு செல்லப்படும் சூழின் தொகையும் இரண்டு மூன்று கட்டுக்கள் என இருக்கும். பொடித்தரவளிகளுக்கு சபா அண்ணர்தான் ஹீரோ.

மீன்களுக்குக் குறிதவறாமல் கத்தியால் போடுவதும், நண்டுகள் பொந்துகளுக்குள் ஓடி ஒழிவதற்கு முன் அவற்றைக் கொத்தி எடுத்துக் கொள்வதிலும், மீன்களையோ நண்டுகளையோ பிடித்தவுடன் அவற்றைப் போடுவதற்கான கூடையை வைத்திருப்பவர் தனக்கு சமீபமாக இல்லாமல் கொஞ்சம் எட்டத்தில் நின்று கொண்டாரென்றால் அதிகாரத் தோரணையில் அவரை ஏசிக்கொள்வதிலும் அவர்தான் சமத்தர். கொண்டு செல்லும் பறி நிரம்பாமல் திரும்புவதும் அவருக்கு ஆகாத ஒன்று.

பிடிக்கப்பட்ட மீன்களுடன் திரும்பியதும் உடன் சென்றவர்களுக்கென கணிசமான அளவு மீன் வழங்கப்படும். அதை அவர்கள் தமது வீடுகளுக்கு எடுத்துச் செல்லலாம். மிகுதியை வாட்டி எடுத்துத் துப்புரவு செய்து சுவைப்பதுடன் ஒடியற்கூழ் ஆக்கும் நடவடிக்கைகளும் இடம்பெறும். கூடவே உடன் இறக்கப்பட்ட பனம்பாலும்(கள்) இருந்தால் அதற்குத் தனியொரு மவுசு காத்திருக்கம்.

எல்லோரும் கூடியிருந்து வலு இம்பிளிக்கமாக தங்களது கெட்டித்தனங்களையும் அளந்து கொட்டி மகிழ்வதுண்டு. தங்களது படிப்புக்களிலும் இதுபோன்ற பிராக்குகளிலும் ஒருசேர ஊக்கமுடன் இளசுகள் இருந்த ஒரு காலம் அது.

இப்போது இதுபோன்ற மகிழ்ச்சிகள் கிடையா. சூழ் கட்டுதல், இரவு வேளைகளில் அதைக் கொளுத்திக்கொண்டு கடலில் இறங்கி மீன்களை வேட்டையாடுதல், பின்னர் அதை இஷ்டம்போல பாகம் பண்ணி ரசித்துச் சுவைத்தல் போன்ற பொழுதுபோக்குகள் கிடையா. அந்த அனுபவங்களும் சுவாரஷ்யங்களும் எப்படி என்பது இன்றைய இளசுகளுக்குத் தெரியாது. பொடித்தரவளி மட்டுமன்றி சில அனுபவம்மிக்க முதியவர்களும் அந்த நாள்களில் இதனை முக்கியத்துவம்மிக்க ஒன்றாகவே கருதி வந்தனர். தாங்கள் தமது வீட்டுப் பாவனைக்காக இதனை ஓர் உபதொழிலாகவும் கருதிக் கொள்வதுமுண்டு.


சூழ்மீனும் கள்ளும் அடித்துவிட்டு பகலில் வேம்பு அல்லது ஆல மரத்தின் கீழ் படுத்து உறங்கினால் அதில் ஓர் அருமையான நிம்மதியான சுகம் இருக்கிறது என்று கூறி வாழ்க்கையை ஆழ்ந்து அனுபவித்த பல முதியவர்கள் இன்னும் நெடுந்தீவில் வாழ்கிறார்கள். ஆனால் அந்த அனுபவம் இப்போது இல்லாமலே!

சூழ்மீனும் கள்ளும்
சுவைத்துப் பெருவெளியில்
ஆலின் நிழலில்
அயர்ந்துறங்க இனி வருமோ?

என்று ஏங்காதவர்களே அன்று அரிது. இன்று இவைபோன்ற இனிய அனுபவங்கள் கிடையாது. எல்லாமுமே தொலைந்து போனது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒழுக்கம் உயிரினும்...



■ அரியாலையூர் சரஸ்வதி

எங்கள் உயிரினும் மேலானது ஒழுக்கம் என்பதை வள்ளுவர் ஆதியிலே "ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம் உயிரினும் ஓம்பப்படும்" என்று மிக அழகாகக் கூறியிருக்கிறார். அழகான குறள் – ஆழமான கருத்து என்ற பெருமையைக் கொண்ட இந்தக் குறளானது இன்றும் மாணவர்கள், சிறுவர்கள், பெரியவர்கள், படித்தவர், பாமரர் என எல்லோர் வாய்களிலிலும் புரள்கின்றது. அதிகமானோர் வாய்களில் வெறும் புரளல்களாகவே இவை தவழ்கின்றன என்பதுதான் கவலை.

தங்கள் பெருமையைத் தக்க வைப்பதற்கும், புலமையை வெளிக்கொணரவும் வெறுமனே ஒப்புவித்துச் செல்கின்ற நிலையிலேயே நீதி நூல்களும், அவற்றின் செய்யுள்களும் இன்று காணப்படுகின்றன. இந்த நூல்களில் கூறப்படும் நல்ல விடயங்களை, ஒழுக்கநெறிகளை நடைமுறையில் யார் கைக் கொள்கின்றனர்? நீதி நூல்களும் குறட்பாக்களும் சொல்லும் ஆழமான விடயங்கள் எல்லாம் செயலிழந்து நிற்கும் காலமாகிவிட யாரும் அனுமதிக்கக்கூடாது.

சாக்கடையில் தத்தளித்துக் கொண்டிருக்கும் உயர்ந்த ஒழுக்கம், பண்பு, பழக்கம் என்பவற்றை மீட்டெடுக்க பெற்றோர், பெரியோர், கற்றோர் என்ற சமூகத்தினர் முன்னின்று செயற்படவேண்டும். சமூகத்திலே அதிகமான பெற்றோரும், பெரியோரும், ஒழுக்கநெறி பற்றிய விழிப்புணர்வு இல்லாததன் காரணமாகத் தங்கள் பிள்ளைகளினாலேயே தங்கள் வாழ்வைத் தொலைத்துக் கொண்டிருக்கின்ற துர்ப்பாக்கிய நிலைக்குத் தள்ளப்பட்டு வருகின்றனர்.

உலகியல் கல்விக்கு முக்கியத்துவம் கொடுத்துப் பாடசாலைக்கும், தனியார் கல்வி நிறுவனங்களுக்கும் பிள்ளைகளை அனுப்பும் பெற்றோர், பிள்ளையானவன் உயர் பதவியைப் பெற்று பணம் சம்பாதித்து விட்டால்போதும் எனச் செயற்படுவதையே காணக்கூடியதாக இருக்கின்றது. இது அவர்களின் பலவீனமா? அல்லது அறியாமையா? சிந்திக்கவேண்டியிருக்கிறது. ஒரு மனிதனுக்குச் செல்வம், ஆரோக்கியம், நட்பு ஆகியவை தேவை. ஆனால் நல்லொழுக்கமின்றி அவற்றால் பயனேதும் இல்லை.

"பருவத்தே பயிர் செய்" என்பதற்கிணங்க நான்கு வயதிலேயே உலகியல் கல்விக்கு முக்கியத்துவம் கொடுத்து புத்தகப்பையை பிள்ளையின் தோளிலே சுமத்தி முன்பள்ளிக்கும், பாடசாலைக்கும் கொண்டு செல்லும் பெற்றோர்கள், வாழ்வியற் கல்வியான ஆன்மிகக் கல்விக்கு முக்கியத்துவம் கொடுக்காதது தவறு.

மானிடர்கள் ஒவ்வொருவரும் தாம் வாழும் முறையையும் கற்றுக்கொள்ள வேண்டும். இன்றைய கால கட்டத்தில் ஒவ்வொருவருக்கும் வாழும் முறையானது மிகவும் அவசியமானதாகும்.

பள்ளிப் பாடங்களிலே உயர் புள்ளிகளை மட்டும் உயர்ந்த இலட்சியங்களாகக் கொண்ட பெற்றோர், பிள்ளை வாழும் வழிமுறைகளைக் கற்றுக்கொள்ளும் கல்வி முறையைக் கற்றுக்கொடுக்கத் தவறிவிடுகின்றனர். இன்றைய அறிவியல் வளர்ச்சியினால் வசதி வாய்ப்புக்கள் பெருகி மனிதன் தீய செயற்பாடுகளுக்கெல்லாம் திசை திருப்பப்படுகின்றான். இந்த உலகத் திசை திருப்பிகளில் இருந்து நாம் ஒவ்வொருவரும் எமது பிள்ளைகளைப் பாதுகாத்தல்வேண்டும். இது எமது கடப்பாடாகும். பிள்ளைகளைப் பாதுகாத்துக்கொள்ளும் கல்வியாக ஆன்மிகக் கல்வி ஒன்றே அமைகின்றது.

மனித மனம் பக்குவமாக வளர்க்கப்படவேண்டும். அந்த வளர்ச்சியானது சிறுவயது முதல் மேற்கொள்ளப்படவேண்டும். இதற்கு நாம் ஒரு விடயத்தை உதாரணமாகக் கொள்ளலாம். ஒரு சிறிய மாங்கன்றை குறித்த ஒரு பருவம் வரை நான்கு பக்கமும் வேலியிட்டு வளர்க்கும்போது அதற்கு அதிகமான பாதுகாப்பு உண்டாகிப் பயனையும் மிக நன்றாகவே தர வாய்ப்பாக அமைகின்றது. புறத்தாக்கங்களின் கெடுபிடி ஏதுமின்றி அதனைப் பாதுகாத்தது அந்த வேலியே. அந்த வேலியைப் போன்று அமைவதே இந்த வாழ்வியற் கல்வியான ஆன்மிகக் கல்வியும்.

பிள்ளைகளின் நேர்வழிச் சிந்தனையைத் தூண்டுகின்ற ஒரு கல்வி முறையாக ஆன்மிகக் கல்வி காணப்படுகின்றது. இந்தக் கல்வியைப் பிள்ளைகள் கற்றுக்கொள்வதற்கு பெற்றோர் ஆவன செய்ய வேண்டும். இன்று சமய நிறுவனங்கள் பலவற்றிலும் இந்தக் கல்விச் செயற்பாடுகள் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன. ஒவ்வொரு பெற்றோரும் பொறுப்புடன் இதனைச் சிந்தையில் கொண்டு பிள்ளைகளை நெறிப்படுத்தினால் சூழலில் நல்லதொரு மாற்றத்தை ஏற்படுத்தலாம். ஒரு சிறிய பிள்ளையில் ஏற்படும் நல்லதொரு மாற்றம் குடும்பச் சூழலிலே நல்ல மாற்றத்தை ஏற்படுத்தும். இதன் காரணமாகச் சமூகம், பிரதேசம், நாடு, பிரபஞ்சம் என அனைத்தும் அமைதியுடன் வாழ வழி பிறக்கும். ஒவ்வொரு மனிதனும் மனிதத்துவத்திலிருந்து தெய்வீகத்திற்கு மேலோங்க வேண்டுமேயன்றி மிருகமென்ற நிலைக்குக் கீழிறங்கி, சீரழிந்து சரிந்துவிடக்கூடாது.

சமுதாயத்தில் ஒரு மனிதன் "பெரியவன்" என்ற பெயர் எடுப்பதைவிட "நல்லவன் " என்ற பெயரை எடுப்பதே சிறந்ததாகும். எனவே பெற்றோர்கள் சிந்தனை செய்யவேண்டும். நல் ஒழுக்கத்தை பண்பாட்டை, பழக்கத்தை நல்ல விழுமியங்களை எம் மத்தியில் நிலைநிறுத்த வேண்டுமாயின் ஒவ்வொருவரும் தங்கள் பிள்ளைகளை சிறுவயது முதல் நல்வழியில் நெறிப்படுத்தத் தயாராக வேண்டும். சுவாமி விவேகானந்தரின் சிந்தனையின் பிரகாரம் "விழிமின்" "எழுமின்" "நடமின்" என்ற அறைகூவலைப் பெற்றோரும் பெரியோரும் செவிமடுத்து, விழிப்புணர்வுடன் செயற்பட்டு பிள்ளைகளுக்கு வாழும் நெறியை ஊட்டிவிடல் வேண்டும்.

கல்வியும், அறிவும் அடையாத
பறவைகளும், விலங்குகளும்
ஒழுக்கநெறியைப் பின்பற்றுகின்றன.
மதிக்கூர்மை பெற்ற மனிதனோ
அவை பின்பற்றும் ஒழுக்க நெறியைக்கூட
பின்பற்றுவதில்லை என ஆன்மிக மகான்கள் பலரும் கூறியிருக்கின்றனர்.

இந்த உலகில்உள்ள அனைத்துஉயிர்களுக்கும்ஜீவாதாரமாக அமைவது ஒழுக்க நெறி. மனித சமுதாயத்திற்கு முதுகெலும்பாக அமைவதும் அதுவே. புத்தகங்களைப் பக்கம் பக்கமாகப் புரட்டுவதாலோ அன்றி ஆசிரியர் கூறுவதைக் கேட்பதாலோ இது கிடைக்கப்பெறுவதில்லை. அன்றாடக் கடமைகளைக் குறிப்பிட்ட விதிமுறைகளுக்கமையப் பின்பற்றி நிறைவேற்றுவதன் மூலம் மட்டுமே ஒழுக்க நெறியை நிலை நிறுத்தலாம். மனிதனையும் – மனிதனையும் – மனிதனையும், சமூகத்தையும் – சமூகத்தையும் – சமூகத்தையும் ஒன்றிணைப்பது ஒழுக்க நெறியே ஆகும். இதனால் ஒழுக்க நெறியானது மனித வாழ்க்கையின் ஓர் உன்னத பண்பாக அமைந்துவிடுகின்றது. மனிதனானவன் ஒழுக்க நெறியைக் கடைப்பிடித்து வாழும்போது அந்த ஒழுக்க நெறியே அவனுக்குப் பாதுகாப்பு வேலியாகவும் அமைந்து விடுகின்றது.

> மானிடர்கள் ஒவ்வொருவரும் தாம் வாழும் முறையையும் கற்றுக் கொள்ள வேண்டும். இன்றைய கால கட்டத்தில் ஒவ்வொருவருக்கும் வாழும் முறையானது மிகவும் அவசியமானதாகும்.

இறைவனால் படைக்கப்பட்ட இந்தப் பிரபஞ்சத்தில் கோள்களும், கிரகங்களும் ஏனைய அனைத்தும் தமக்கு விதிக்கப்பட்ட கட்டளையின் பிரகாரம் (சக்தியின் பிரகாரம்) சீராக இயங்கி வருகின்றன. மேலும் அவை ஓர் ஒழுங்குமுறையில் பரிணமிக்கின்றன. உலக நன்மை வேண்டி அவை ஒழுங்காகச் செயற்படுகின்றன.

மாறாக ஒழுங்கு தவறி ஒன்றை ஒன்று விலகிச் செயற்பட ஆரம்பித்தால் அதன் விளைவானது ஒட்டுமொத்த உலகையும் பாதிப்பதாகவே அமைந்துவிடும். மனிதனுக்காகப் படைக்கப்பட்ட அனைத்தும் ஒரே சீரான ஒழுங்கிலே இயங்கி எம்மை வாழ்விக்கும்போது, மனிதன் மட்டும் ஒழுங்கு தவறி வாழ்ந்து பிரபஞ்சத்தின் அமைதியைக் கெடுத்துக் கொண்டிருப்பதில் எந்த வித நியாயமும் இல்லை. எனவே மனிதன் மனிதனாக வாழ்ந்து புனிதன் எனப் போற்றப்பட வேண்டியவனாக வேண்டும். தனி மனிதனில் ஏற்படும் மாற்றமானது உலக மாந்தருள்ளே தாக்கத்தை ஏற்படுத்தவல்லதாக அமைந்து விடுகிறது.

உலக நன்மை கருதியும் எமது வருங்கால சந்ததியினரின் வளமான வாழ்வு முறை கருதியும் இன்றைய மனிதர்களாகிய நாம் ஒவ்வொருவரும் பெறுமதி மிக்க மனித வாழ்விலே ஓர் ஒழுங்கு முறையில் ஒழுக்கமுள்ள வாழ்வு நெறியைக் கடைப்பிடித்து நாம் வாழும் சூழலுக்கும் ஏனையவற்றுக்கும் நன்மை செய்பவர்களாக எம்மை நாம் மாற்றிப் பெருமிதம் கொள்வதோடு தெய்வப் புலவர் திருவள்ளுவரின் வாக்கிற்கும் உயிர் கொடுத்தவர் ஆகி விடலாமே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தமிழ் மரபுவழி கல்வியில் பாடத் திட்டம் - 1

■ பேராசிரியர் க.சிவலிங்கராஜா

தமிழ்க் கல்விப் பரப்பிலே பொதுவாக மரபுவழிக் கல்வியில் பாடத் திட்டம் ஒன்று வரன்முறையாகப் பின்பற்றப்பட்டது என்று கருதமுடியாது. மரபு வழிக் கல்வி முறைமை ஒழுங்காகப் பாடத் திட் டத்தை நடைமுறைப்படுத்த முடியாததாகவே இருந்தது. மரபுவழிக் கல்வியில் பெரும்பாலும் வயது வித்தியாசத்தின் அடிப்படையிலேயே வகுப்புக்கள் அமைக்கப்பட்டன என்று துணிந்து கூறமுடியாது. அறிவு விருத்தி, கிரகித்தல் தன்மை, மனனப் பயிற்சி, எழுத்துத் திறமை முதலியவற்றை மனங்கொண்டே வகுப்புக்கள் பிரிக்கப்பட்டன. இந்த வகுப்புக்களுக்கு ஏற்ற வகையிலேயே பாடத்திட்டமும் அமைந்திருந்தது எனலாம்.

மரபுவழிக் கல்வி முதலில் வாய்மொழிப் பயிற்சியாகவே பயிற்றப்படும். எழுத்துக்களை மனனஞ் செய்வது ஆரம்ப வகுப்பு மாணவர்களுக்குரிய முதலாவது கட்டமாகும். தமிழ் நெடுங்கணக்குகளைப் பாடமாக்கிப் பாடம் ஒப்பித்ததன் பின்னர்தான் அந்த எழுத்துக்களை மாணவர்கள் எழுதப் பழகுவர்.

முதலில் நிலத்திலே மணல் பரப்பி மணலிலே அகர வரிசைப்படி நெடுங்கணக்கை எழுதிப் பழகு வர். பாரம்பரியக் கல்வி முறை யிலே பிள்ளைகளுக்கு எழுத்துப் பழக நீண்ட நாள்கள் செல்லும். எழுத்தின் ஒலி வடிவை அறிந்த மாணவன் அதனை உச்சரித்து அதன் வரி வடிவை எழுதப்பழகுவான். பெரும்பாலும் மணலிலே தான் முதன் முதலாக எழுத்துப் பயிற்சி நடைபெறும்.

மணலிலே நீண்ட நாள்களுக்கு எழுதிப் பழகிய பின்னர்தான் ஓலையை (ஏடு) பயன்படுத்த முடி யும். ஆசிரியர் ஒவ் வொரு மாணவன் மீதும் தனிக்கவனம் செலுத்தியே எழுத் தைப் பழக்குவர். திண்ணைப் பள்ளி மரபிலே கரும்பலகை உபயோகத்தில் இருக்கவில்லை. ஆசிரியர் மாணவனின் வலது கைச் சுட்டுவிரலைபிடித்துத் திரும்பத் திரும்ப மணலிலே எழுதிக் காட்டுவார். அழித்து அழித்துத் திரும்பத் திரும்ப எழுதிப்பழகமணல் மிக வசதியாக இருந்தது.

மாணவர் எழுதப் பழகியதும் அவன் கல்வியில் ஒரு படி உயர்ந்த வனாகக் கருதப்படுவான். "எழுத்தறியத்தீரும் இழிதகைமை" என்ற தொடர் இதனையும் சுட்டி நிற் கின்றது எனலாம்.

பாடமாக்குவித்தல், பின்னர் எழுத்துப் பழகுதல் என்ற இரண்டு அம்சங்களுமே திண்ணைப் பள்ளியில் தமிழ் மொழி கற்பித்தலில், முதன்முதலில் பயிற்றும் பாடத்திட்டமாக இருந்தது எனலாம். இதனைப் பாடத்திட்டம் என்றோ, இதுதான் பாடத்திட்டம் என்றோ எவருக்கும் தெரியப் படுத்துவதில்லை. பாடத்தை ஒழுங்குறப் பயிற்றும் முறைமையே பாடத் திட்டம் என்ற பெயரில் அழைக்கப்படுகின்றது. மரபுவழிக் கல்வியில் ஒழுங்கு முறைமை ஒன்று பேணப்பட்டது. இதனை நாம் பாடத்திட்டம் என்று அழைக்கலாம்.

**ஆரம்பகாலத் தமிழ்க் கல்வி பற்றி ப.சிவனடி குறிப்பிடும் கருத்து 19ஆம் நூற்றாண்டின் யாழ்ப்பாணக் குடாநாடு மரபு** வழித் தமிழ்க் கல்வியின் இயல்புகளைக் கொண்ட தாகவே காணப்படுகின்றது. அவர் கூற்றுப் பின்வருமாறு அமைகின்றது: பிள்ளைகளுக்கு மணல்தான் கரும்பலகையின் இடத்தைப் பெற்றிருந்தது. பனையேடுதான் புத்தகம். விரலும் எழுத்தாணியுமே எழுதுகோல் இடத்தைப் பெற்றிருந்தன. ஆசிரியர் முதலில் பிள்ளையின் ஆள்காட்டி விரலைப் பிடித்து மணலில் தமி ழின் வரிவடி வத்தை எழுதிக் காட்டுவார். பிறகு அவர் சொல்லியபடி

முதலில் நிலத்திலே மணல் பரப்பி மணலிலே அகர வரிசைப்படி நெடுங் கணக்கை எழுதிப் பழகுவர். பாரம் பரியக் கல்வி முறையிலே பிள்ளை களுக்கு எழுத்துப் பழக நீண்ட நாள் கள் செல்லும். எழுத்தின் ஒலி வடிவை அறிந்த மாணவன் அதனை உச்ச ரித்து அதன் வரி வடிவை எழுதப் பழகுவான். பெரும்பாலும் மண லிலே தான் முதன் முதலாக எழுத் துப் பயிற்சி நடைபெறும்.

ஆனா, ஆவன்னா தமிழ் நெடுங்கணக்கைத் தவறின்றி உச்சரிக்க வேண்டும்.... தமிழின் ஒலி வடிவை நன்றாக அறிந்த பின்னர்தான் வரி வடிவை (அரிச் சுவடியை) ஆசிரியர் எழுதிக்காட்டுவார்.

மேற்காட்டிய முறைமை மரபுவழித் தமிழ்க் கல்வியிலே பயன்பட்டபொழுது இது பாடத் திட்டத்தின் ஒரு பகுதி என்ற உணர்வைப் பலர் பெற்றிருக்கவில்லை. ஆனால் நிறுவன ரீதியில் வரும் பாடசாலைகளிலும் பின்னர் (மிக அண்மைக்காலம் வரை) இந்த நடைமுறை கடைப் பிடிக்கப்பட்டது. அங்கு இது பாடத்திட்டம் என்ற பெயரில் நடைமுறைப் படுத்தப் பட்டது. ஒழுங்குபடுத்தப்பட்ட மரபுவழிப் படிப்பிலே கடவுள் வணக்கம், குரு வணக்கம் முதலியனவும் பாடத்திட்டத்தின் ஒரு பகுதியாகவே இருந்து வந்துள்ளன. இவை பற்றிப் பின்னர் நோக்குவோம். பெரும்பாலும் நீதி நூல்களும், சமயச் சார்புடைய நூல்களுமே ஆரம்ப வகுப்பு மாணவர் களுக்குக் கற்பிக்கப்பட்டன. ஆத்திசூடி, கொன்றைவேந்தன் முதலியவை அகர வரிசையில் அமைந்தமைக்கு முக்கிய காரணம் ஆரம்பக்கல்வி கற்கும் பிள்ளை நெடுங்கணக்கைத் தடையின்றிப் பழகவும் அதன் வழி நீதி போதனையைப் பெறவும் வேண்டும் என்ற பாட முறைமையே எனலாம்.

19ஆம் நூற்றாண்டின் சகல தமிழ்க் கல்வி நிலையங்களிலும் ஆத்திசூடி, கொன்றை வேந்தன் முதலியன போதிக்கப்பட்டன.

ஆரம்ப வகுப்பு மாணவர்களின் பாடத் திட்டத்தில் அவை முக்கிய இடத்தைப் பெற்றன. பண்டைக் காலக் கல்வி முறையின் பாடத் திட்டம் பற்றி இந்திய சரித்திரக் களஞ்சியம் என்னும் நூல் பின்வருமாறு கூறுகின்றது.

அரிச்சுவடி என்னும் வரிச்சுவடி, ஔவையார் இயற்றிய ஆத்திசூடி, கொன்றைவேந்தன், மூதுரை, வாக்குண்டாம், நாலடியார் (இவற்றின் மூலம் மட்டும்) முதலியனவும், எண் சுவடியிலுள்ள கீழ் வாயிலக்கம், மேல்வாயிலக்கம், குழி மாற்று, நெல்லிலக்கம், முறையஞ் சொல்லுதல் முதலியன.

மேற்காட்டிய நூல்கள் யாவும் 19ஆம் நூற்றாண்டு யாழ்ப்பாணத்துத் தமிழ்க் கல்வியில் முக்கிய இடத்தைப் பெற்றமையையும் அவதானிக்க முடிகின்றது.

யாழ்ப்பாணத் தமிழ்க் கல்வி மரபிலேயும் முக்கியமாக இடம்பெறும் பாடநூல்களாக ஆத்திசூடி முதலியனவே அமைந்தன. இந்த நூல்களின் பயன்பாடு பற்றி உ.வே.சாமிநாதையர் கூறுவது மனம் கொள்ளத்தக்கது.

சிறுவர் படிக்கும் ஆத்திசூடி, கொன்றை வேந்தன் என்பவை அகராதி வரிசையில் அமைந்தமை அவர்களுடைய ஞாபகத்தில் அவைபதிவதன்பொருட்டேயாகும். இப்படியே அந்தாதி முறைமையைக் கொண்டும் செய்யுள்களை ஞாபகப்படுத்திக் கொள்வார்கள். அந்தாதி நூல்களை இளம்பருவத்தே கற்பிப்பதன் பயன் ஞாபகசக்தியடைவதே.

எழுத்தை உச்சரிக்கவும், எழுதவும் பழகிய பின்னர் முற்குறிப்பிட்ட ஆத்திசூடி முதலியவற்றைப் பொருள் விளக்கமின்றியே மனனஞ் செய்வர். மனனஞ் செய்த பின்னர் இரண்டாவது கட்டம் ஆரம்பமாகும். மனனமாக்கிய பகுதிகளுக்கு ஆசிரியர் பொருள்கூறி விளக்குவார். பொருள்கூறி விளக்கிய பின்னர் ஏட்டுச்சுவடியில் (மிகச் சிறுபான்மையாகக் கடதாசியில் தடிப் பேனையால்) எழுதப் பயிற்றுவர். உச்சரிப்போடு, மனத்தோடு இருந்த மாணவன் ஓலையில் எழுதும்போது அதற்கு வசதி

→



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாகச் சில பாடப் பகுதிகள் மாற்றமடையும். ஓலையில் எழுதுவதற்குரிய முறைமையை ஆசிரியர் பழக்குவதற்குப் பல நாள்கள் பிடிக்கும். எழுத்தாணியாற்றான் ஓலையில் எழுதலாம். எழுத்தாணி இரும்பால் ஆக்கப்பட்டிருக்கும். பிள்ளைகளின் குடும்ப வசதிக்கேற்ற வகையிலே எழுத்தாணிகளும் அமைந்திருக்கும். சில எழுத்தாணிகளுக்கு ஊசி என்றும் ஒரு பெயர் உண்டு. தமிழ் மக்கள் பயன்படுத்திய எழுத்தாணிகளைப் பற்றியறியப் பின்வரும் குறிப்பு உதவுகின்றது:

ஓலையில் எழுதுவதற்குரிய எழுத்தாணியில் பல பேதங்கள் உண்டு. எழுத்தாணியை ஊசி என்று கூறுவதுமுண்டு. மடக்கையெழுத்தாணி, வாரெழுத்தாணி, குண்டெழுத்தாணி என்பன எழுத்தாணியின் வகைகள். ஒருபக்கம் வாருவதற்குக் கத்தியும், மறுபக்கம் எழுதுவதற்கு எழுத்தாணியும் அமைந்ததைப் பார்த்தே பேனாக்கத்தி என்று பெயர் வந்ததென்று தோன்றுகின்றது.

எழுத்தாணியால் ஏட்டில் எழுதுவதே ஒரு கலை. இந்த எழுத்துப் பயிற்சியும் மரபுவழித் தமிழ்க் கல்வியின் எழுதப்படா ஒரு பாடத்திட்டமாகவே இருந்தது. ஓலையிலே ஓட்டைகள் விழாமலும், ஓலை கிழியாமலும் எழுதப் பழக்குவதே ஆசிரியரின் முதற் கடமையாகும்.

எழுத்து உறுப்பு மிகவும் முக்கியமாகப் பேணப்பட்டது. 19ஆம் நூற்றாண்டுத் தமிழறிஞர்களில் பெரும்பாலானோர் மிகவும் அழகாக (உறுப்பாக) எழுதக்கூடியவர்களாகவே இருந்தனர். எழுதும் முறை பழக்குதலில் ஆசிரியருக்கு உதவியாக சட்டாம்பிள்ளை என வழங்கப்பட்ட மூத்த மாணவர்களும் இருந்துள்ளனர்.

இளமை முதலே ஓலையை இடக்கையால் பிடித்து வலக்கையால் எழுத்தாணியைக் கொண்டு எழுதிப் பழகுவர். எழுத்தாணியைப் பிடித்து எழுதும்போது, ஓலையைத்தான் நகர்த்துவர். எழுத்தாணி பிடித்த இடத்தில் இருந்தே வரும். உச்சரிப்பு, மனனம், எழுத்துப் பயிற்சி என்ற படிமுறைப் பாடத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்ட பின்னர், சொற்களைப் பொருளுக்கு ஏற்பப் பிரித்து வாசிக்கப் பயிற்றுவர்.

வாசிப்புப்பயிற்சிக்குப்பெரும்பாலும் ஏடுகளே பயன்படுத்தப்பட்டன. 19ஆம் நூற்றாண்டின் நடுக்கூறுகளுக்குப் பின்னர் நூல்கள், கடதாசிகள் நடைமுறைக்கு வந்துவிட்டன. எனினும் யாழ்ப்பாணத்திலே பெருமளவுக்கு இலக்கிய இலக்கண ஏடுகள் பாவனையில் இருந்தன. சி.வை.தாமோதரம்பிள்ளை, உ.வே. சாமிநாதையர் முதலியோர் நூல்களைப் பதிப்பிக்கும் பொழுது ஈழத்து அறிஞர்கள் பலர் தம்வசமுள்ள ஏடுகளை அன்பளிப்புக்களாக வழங்கியதை வெளிவந்த நூல்களின் பதிப்புரைகள் சுட்டி நிற்கின்றன.

(கல்வி தொடரும்)



# மிருதங்க வித்துவான் திருமங்களம்





**கலாபூசணம் பசிடிப் பரமர்**

## அறிமுகப்படுத்துகிறோம் 6

பெயரைப் பார்த்ததுமே உங்களின் காதுகளில் துல்லியமான மிருதங்க நாதம் காற்றில் தவழ்ந்து வந்து மெய்மறக்க வைக்கிறதா? மிருதங்க ஓசை உங்களுக்குச் சுக அனுபவத்தைக் கொடுக்கலாம். என்னிடம் மிருதங்கச் சத்தம் எத்தகையது என்று கேட்டால் தவறாகக்கூட அந்நாத வினோதத்தை விளக்கி விடலாம். காரணம் மிருதங்க வித்துவான் திருமங்களத்தின் வீட்டுக்கு அருகே குடியிருப்பவன் என்பதனாலோ என்னவோ?

மிருதங்க வித்துவான் பெருந்தன்மையான மகாபெரிய மனிதப்பிறவி. இதற்கு விளக்கம் கூறுவது என்றால் இரண்டு விதமாகக் கூறலாம். ஒன்று நாட்டில் இருக்கும் புகழ் பெற்ற இயற்கையாக கலைஞானம் பெற்றவர்களை வீட்டுக்கு அழைத்து விருந்து வைப்பார்.

அதற்குக் காரணம் பூவோடு சேர்ந்த நாருக்கும் மணம் வீசுவது போல் அத்தகையவர்களை கௌரவம் செய்தால் அயலட்டையில் வாழ்பவர்கள் இவரையும் அவரைப்போலவே எடை போடுவாரென்னும் நப் பாசை!

மற்றது திருமங்களத் துக்கு தலைக்கனம் அதிகம். அது அளவுகடந்து விட்டால் அத் தலைப் பாரத்தைக் குறைக்க வீடு வந்து மிருதங்கத்தின் மீதே விளாசித் தீர்த்துக் கொள்வார். இவரது கைகளுக்கு சுறுசுறுப்பை விடவும் விறுவிறுப்புக்கூட! அதனாலேயே மிருதங்கத்தைக் கற்றுக் கொண்டாராம். அதே ஒரு தனிக் கதை. ஆரம்பக் காலங்களில் பாடசாலை வாங்கு மேசைகளில் தட்டும் படலத்தை ஆரம்பித்துக் கொண்டவர் பாடசாலையில் இருந்து விலக்கப்பட்டதும் அதனாலே என்பதை பெருமையுடன் தெரிவித்தார்.

அதற்குப் பின்பாகத் தொழிலார்வம், சிகையலங்காரங்களில் உள்ள வாங்குகளிலும், சனசமூக நிலையங்களில் கிடக்கும் மேசைகளிலும் வளர்க்கப்பட்டதாகவும் அறிய முடிந்தது. இவருள்ளே வளர்ந்த தட்டும் பழக்கதோசத்தால் இளைஞராக இருந்த நாள்களில் ஊருக்குள் அடிக்கடி அடிதடி போர்க் கோலம் பூணுமாம். ஊருள் இருக்கும் சின்னஞ் சிறுசுகளிலும் தட்டும் பழக்கத்தைக் கடைப்பிடித்ததே காரணம் எனப்படுகிறது.

அதனாலே தந்தையார் இவருடைய குணாதிசயங்களைப் பார்த்து ஒரு நல்ல மிருதங்க வித்துவானிடம் சேர்த்துவிட்டார். அதுகூட நீடிக்கவில்லை. அங்கே வைக்கப்பட்டிருந்த பெறுமதி வாய்ந்த மிருதங்கக் கருவிகளை அடித்து நொறுக்கி விட்டாராம். திருமங்களம்.

அவரின் வீட்டுப் பக்கம் போனால் முதலில் எங்கள் கண்களில் படுவது மிருதங்க வித்துவான் திருமங்களம் என்னும் பிளாஸ்ரிக்கில் வெட்டப்பட்ட பென் னாம் பெரிய அறி விப்பு பலகைதான். இதை எழுதும் போதில் ஞாபகம் வருகிறது எங்கேயும் இவருக்கு மிருதங்கத்துக்காக வித்துவான் பட்டம் வாங்கவும் இல்லை, இதுவரை இவருக்கு கொடுக்கப்படவும் இல்லை என்றது. அப்படியெண்டால் வித்துவான் பட்டம்? இவர் தனக்குத் தானே சூட்டிக்கொண்டது தானா? என நீங்கள் கேட்பதும் காதுகளில் கணீரெனக் கேட்கிறது. இவ்விடயத்தில் நீங்கள் கேட்டது நூற்றுக்கு நூறு சரியானதே. மிருதங்க வித்து வானுக்கு மனையாட்டியாக வாய்த்தவர் கொடுத்து வைத்தவர் பாருங்கோ! எடுத்ததற்கெல்லாம் தட்டிப் பழகியவர் ஏதும் இசக்குப் பிசக் கெண்டால் மனையாட்டி மீதிலும் தட்டு வாரோ என்று யோசிக்கத்தேவையில்லை. அப்படி ஏதாவது சந் தர்ப்பம் ஏற்பட்டாலும் பயப்பிடத் தேவையில்லையாம். அந்த ஆவேசத்தைத் தீர்க்கத் தானே இருக்கவே இருக்கிறது மிருதங் கம். இவ்விதம் ஆடம்பரமாகப் பேரும் புகழோடும் வாழ்வதற்கு இவருக்கு வசதி எப்படி வருகிறது என்று தானே யோசிக்கிறீர்கள்? அதற் கெல்லாம் மிருதங்க வகுப்புகள் நடத்தி ஏதோ இரண்டு காசைக் காணும் உபாயங்களையும் கைவசம் வைத்துள்ளார். பிள் ளைகளுக்கு வாத்தியங்கள் பயிற்றுவிக்க நாயாய் அலைகின்ற பெற்றோர் இவர் விரித்துள்ள வலையில் சிக்குப்படுவர் தானே. அத்தகையோர் இரண்டு நஷ்டங்களை ஏற்றுக்கொண்டே ஆக வேண்டும். பிள்ளைகள் ஒழுங்காக மிருதங்கத்தைக் கற்றுக்கொள்ளவேமாட்டார்கள். அடுத்தது இவரிடம் வருமுன்பாக இயல்பிலேயே இருந்த கொஞ்ச நஞ்ச ஞானத்தையும் இழந்து மறந்தே போவது. எது எப்ப டியா னாலும் மிரு தங்க வித்துவான் திருமங்களம் வாழும் காலம் வரையில் இத்த கைய ஏமாளிப் பெற்றோரும் வாழ் வாரென்று அவரே தனக்கு ஜோசியம் கூறிக் கொள் கிறார்.


திருமங்களத்துக்கு இருக்கும் கவலை எல்லாம் ஒரு காலத்தில் தனக்கு இருந்த கிராக்கி காற்றுப் போன பலூனைப் போலவே சடாரெனச் சுருங்கிப் போனதே என்பதுதான். அப்பொழுதெல்லாம் கிராமம் கிராமமாக நடைபெற்று வந்த நாட்டுக் கூத்துக்கள் இப்போ அருகிப் போனதல்லவா?

அத்தகைய நாட்டுக் கொட்டகைக் கூத்துக்களுக்கு மிருதங்கம் வாசிக்கும் பொறுப்பு இவரிடமே வந்து சேரும். கொட்டகைக் கூத்துக்களில் போடப்படுகின்ற ஆட்டங்களுக்கு முழங் கித் தள்ள எம்முடைய மிருதங்க வித்துவான் திருமங்களத்தை விட்டால் இனியொருவன் புதிதாகப் பிறந்து வர வேண்டுமென்று புகழ்ந்து பேசாதவர்களே இருக்க மாட்டார்கள். இப்பெல்லாம் நவீன பல்சுவை எழுப்பும் கருவிகள் வந்த பின்பாக அவற்றால் வெளிவரும் கர்ணகடூர ஓசைகளைக் காதுகளால் வாங்கி ஜீரணிக்க முடியாமல் துணியால் காதுத் துவாரங்களை அடைத்து விட்டே நடமாடி வருகிறார். இளமைக் காலத்தில் இவரால் வாசிக்கப்பட்ட கொடூர அடிகளை மற்றவர் எவ்விதம் ஜீரணித்துக் கொண்டிருப்பார்களென்று சிந்திக்க மட்டும் அவரால் முடிவதில்லை.

ஆலை இல்லா ஊருக்கு இலுப்பைப் பூ சர்க்கரை என்பது பழமொழி. இந்தக் காலத்து இசைக் கச்சேரிகளுக்கு சென்று மீளும் நுகர்வோரது காதுகள் புளிக்க முழங்கும் றம்ஸ், ஓகன் சத்தங்களை விடவும் எமது மிருதங்க வித்துவான் திருமங்களத்தின் வாசிப்பொன்றும் சோடை போய் விடாதெண்டதை எம் முன்னோரைத்திரும்பபிறக்கவைத்துக்கேட்டாலே உண்மை வெளிவரும்.

இதனிடையே அயலில் குடிகாரன், சட்டி, பானைகளைத் தூக்கிப் போட்டு உடைக்கும்சத்தம்கேட்கிறதே! அது ஒண்டுமில்லை மிருதங்க வித்துவான் திருமங்களம் மிருதங்கக் கருவியில் மங்களம் வாசிக்கத் தொடங்கி விட்டார். அதனால் இருந்து சகிக்க முடியுதில்லை.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# பிரான்ஸில் ஆட்சியைக் கவிழ்த்த 'எல் நீனோ'

கே.என். ராமசந்திரன்,

வழக்கமாக இந்தியத் துணைக் கண்டத்தில் தென்மேற்குப் பருவமழை ஜூன் முதல் வாரத்தில் தொடங்கி செப்ரெம்பர் இரண்டாவது வாரம் வரை நீடிக்கும். அதன் பிறகு சிறிது நாள்களுக்கு நல்ல வெயில் காயும். ஒக்ரோபர் மத்தியிலிருந்து நவம்பர் இறுதிவரை வடகிழக்குப் பருவமழை பெய்யும். 1913ஆம் ஆண்டில் தென்மேற்குப் பருவமழை ஒக்ரோபருக்குப் பிறகும் நீடித்து, இந்தியாவின் மேற்கு - வடக்கு மாநிலங்களான குஜராத், ராஜஸ்தான், டெல்லி போன்ற இடங்களில் கொட்டித் தீர்த்தது.

வானிலை நிபுணர்கள் 'எல் நினோ' மற்றும் 'லா நினா' எனப்படும் விளைவுகளின் மேல் பருவ மழைக்கால மாறுபாடுகளுக்கான பழியைச் சுமத்துகிறார்கள்.

உலக ளாவிய வெப்ப நிலை உயர்ந்ததும், மொடேன் – ஜூலியன் காற்றலைவு என்ற விளைவும் எமது பகுதிகளில் காலமில்லாத காலத்தில் கடும் மழை பொழியக் காரணமாகின்றன என்று ஐ.நா. நிபுணர்கள் கருதுகிறார்கள்.

மொடேன் ஜூலியன் காற்றலைவு என்பது புவியின் வெப்பமண்டலத்தில் அவதரித்து கிழக்குத் திசையில் பயணித்து, வெப்ப மண்டல நாடுகளைச் சுற்றிவரும் ஒரு வட்டக் காற்றோட்டம். அதன் விளைவாக வெப்ப மற்றும் தரைமட்ட வெப்ப நிலைகளில் தாக்கம் தோன்றும். அதன் காரணமாகச் சில இடங்களில் பெரும் மழை மற்றும்வெள்ளங்களும்வேறு சில இடங்களில் கடும் வறட்சியும் தோன்றும்.


**'எல் நினோ' பாதிப்புகள்**

எல் நினோ என்பது பசிபிக் பெருங்கடலில் நீண்ட காலத்துக்குச் சராசரியைவிடக் கடல்பரப்பு வெப்ப நிலை அதிகமாகிவிடுவதாகும். இந்த அதிகம் என்பது சுமார் அரை டிகிரி செல்சியஸ் மட்டுமே. ஆனாலும் அது உலக ளாவிய அளவில்பெரும்விளைவுகளை ஏற்படுத்துகிறது. அது சில ஆண்டுகளுக்கு ஒரு முறை தோன்றிச் சில மாதங்களுக்கு நீடிக்கும்.

அதன் காரணமாக இந்தியப் பெருங்கடல், இந்தோனேசியா, ஆஸ்திரேலியா ஆகிய இடங்களில் காற்றமுத்தம் உயரும். ஆஸ்திரேலியாவுக்கும் தென் அமெரிக்காவுக்கும் இடையிலான பசிபிக் கடலின் மையப் பகுதி மற்றும் கிழக்குப் பகுதி, டகிடி தீவுக் கூட்டம் போன்ற இடங்களில் காற்றமுத்தம் குறையும்.

தென்பசிபிக் பகுதிகளில் பருவக்காற்று வலுவிழக்கும் அல்லது கிழக்கே நகரும். பெரு நாட்டின் அருகில் வெப்பக் காற்று மேலே எழும்பி அந்த நாட்டின் வட பகுதிப் பாலைவனங்களில் மழையைப் பொழிவிக்கும். இந்தியப் பெருங்கடலில் இருந்தும் மேற்கு பசிபிக் கடலில் இருந்தும் சூடான கடல்நீர் கிழக்கு பசிபிக் கடலுக்குப் பாயும். அதன் கூடவே மழையும் நகர்ந்து மேற்குப் பசிபிக் பகுதியில் பரவலாகவும், கிழக்கு பசிபிக் பகுதியில் வழக்கத்துக்கு மாறாகவும் பெய்யும். சூடான கடல்நீர் கிழக்கே இடம் பெயர்வதன் மூலம், கடல்வாழ் உயிரிகளுக்குத் தேவைப்படும் ஊட்டச்சத்துகள் நிறைந்த குளிர்ச்சியான நீர் கீழேயிருந்து கடலின் மேற்பரப்புக்கு வராமல் தடுக்கப்படும். அதன் காரணமாக மீன் வளம் குறையும். மீனவர்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்படும்.

'எல் நினோ' தோன்றும் ஆண்டுகளிலும் நடுநிலையான ஆண்டுகளிலும் செப்ரெம்பர் - நவம்பர் மாதங்களில் ஜப்பான், கொரியா போன்ற நாடுகளை வழக்கமாகத் தாக்கும் புயல்களின் எண்ணிக்கை குறையும். தென்கிழக்கு ஆசியா, வடஆஸ்திரேலியா ஆகிய பகுதிகளில் வறட்சி, காட்டுத் தீ, காற்றில் தூசிச் செறிவு அதிகரிப்பு, காற்றில் தூய்மைக் கேடு போன்றவை ஏற்படும்.




**பஞ்சமும் வறட்சியும்**

கடந்த 10,000 ஆண்டுகளாகவே சில ஆண்டுகளுக்கு ஒரு முறையாவது 'எல் நினோ' தோன்றுகிறது. அதனால் ஏற்படும் வெப்ப நீரோட்டம் பெரும்பாலும் கிறிஸ்துமஸ் பருவத்தில் தென்பட்டதால் பெரு நாட்டு மாலுமிகள் பாலகன் எனப் பொருள்படும் 'எல் நினோ' என்ற பெயரை அதற்குச் சூட்டினார்கள்.

முன்பு கொலம்பியாவிலும் பெருவிலும் செழித்திருந்த புராதனச் சமூகங்கள் அழிந்துபோனதற்கு அவை காரணமாயின். 1789 -1793 காலகட்டத்தில் அவை ஐரோப்பாவில் உணவு உற்பத்தியைப் பாதித்தன. பிரான்ஸில் உணவு கிடைக்காத மக்கள் புரட்சி செய்து மன்னராட்சியைக் கவிழ்த்ததற்கு 'எல் நினோ' ஒரு மறைமுக உந்துசக்தியாக இருந்தது. 1876-77களில் 'எல் நினோ'க்கள் உலகின் பல பகுதிகளில் கடும் வறட்சியையும் பஞ்சத்தையும் தோற்றுவித்தன.


'எல் நினோ'வுக்கு நேர் எதிரான விளைவுகளை 'லா நினா' என்ற நிகழ்வு ஏற்படுத்துகிறது. அச்சொல்லுக்கு சிறு பெண் என்று பொருள். அது நிலநடுக்கோட்டுப் பகுதியில் மத்திய கிழக்கு பசிபிக் கடல் பரப்பின் வெப்பநிலையை 3.5 டிகிரி செல்சியஸ் வரை குறையச் செய்யும். இந்தியத் துணைக்கண்டத்தில் எல் நினோ தென்மேற்குப் பருவ மழையின் போக்கைக் குலைக்கிறது. ஆனால், லா நினா சரியான நேரத்தில், சரியான அளவில் மழை பொழியவைக்கும். அதன் செயல்பாட்டின் காரணமாக 2010 ஆம் ஆண்டில் சாதகமான தென்மேற்குப் பருவமழை அமைந்தது.

ஆனால், அதேசமயத்தில் ஆஸ்திரேலியாவின் குயின்ஸ்லாந்து பிராந்தியத்திலும் தென்கிழக்கு பிரேசிலிலும், இலங்கையிலும் பெரு மழையும் புயலும் தோன்ற 'லா நினா' வைக் காரணமாகச் சொல்கிறார்கள். அதே ஆண்டில் வட அமெரிக்காவில் கடும் பனிப்புயல்களும் அதன் மத்திய மேற்கு மற்றும் தென் மேற்கு மாகாணங்களில் கடுமையான டோர்னடோ புயல்களும் தோன்றிய தற்கும் டெக்சாஸ், வோக்லஹாமா, அர்க் கன்சாஸ் மாநிலங்களில் கடும் வறட்சி ஏற்பட்டதற்கும் அதுவே காரணமாயிற்று.

2011ஆம் ஆண்டில் உலகளாவிய வளிமண்டல வெப்பநிலை சற்று குறைந்து பூமித் தரைப்பரப்பின் வெப்ப நிலை சற்றுக் கூடியது. உலகின் சராசரி மழையளவு அதிகரித்தபோதிலும் கிழக்கு ஆப்பிரிக்காவில் கடும் வறட்சி நிலவியது.


ஐ.நாவின் சர்வதேச வானிலைக் கணிப்பு அமைப்புஇனிவரும்பலஆண்டுகளுக்கு இந்தியாவின் பல பகுதிகளிலும் மழைப் பருவம் முன்னதாகத் தொடங்கித் தாமதமாகமுடியும்என்றுகணித்துள்ளது. அதற்கு உலகளாவிய வளிமண்டல வெப்ப நிலை உயர்வதும் கடல் பரப்பிலிருந்து அதிகமாக நீராவி வெளிப்பட்டு நிலப்பரப்புக்கு வந்து மழையாகப் பொழிவதும் காரணமாயிருக்கலாம்.

இது எல்லா ஆண்டுகளிலும் நிகழாமல் போனாலும் ஓரிரு ஆண்டுகளுக்கு ஒரு முறையாவது அதிகத் தீவிரத்துடன் நிகழும். அதற்கேற்ற வகையில் விவசாயிகள் தமது சாகுபடிக் கால அட்டவணையை மாற்றியமைத்துக் கொள்ள வேண்டும். மழை நீரைச் சேமித்து வைத்துக்கொள்ளப் போதுமான நீர்நிலைகளை அமைத்துக்கொள்ள வேண்டும். இருக்கும் குளங்களையும் மூடிவிட்டு அதில் சிமெந்துக் கட்டடங்களை எழுப்புவதில் ஆர்வமாக இருக்கும் எம்மவர்கள் இனியாவது விழித்துக் கொண்டு நடந்தால் பரவாயில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செய்திப் பத்திரிகைகளும் அவை புரியும் பணிகளும் 17



# பிரிட்டனில் பெரும் சக்தி பின்புலமாக விளங்கிய வாரப் பத்திரிகைகள்

ரம்யன்

19 ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில்தான் செய்திப் பத்திரிகைகள் இன்று நாம் காணும் வகையில் வெளிவரத் தொடங்கின என்று அறியமுடிகின்றது. என்றாலும் அதற்கு முன்னரே உலகம் முழுவதும் செய்திப் பத்திரிகைகள் வெளிவரத்தொடங்கி இருந்தன. பெரிய பிரித்தானியர்கள் பத்திரிகைகளை ஆர்வத்துடன் வாசிக்க ஆரம்பித்திருந்தமையால் பத்திரிகைகளின் விற்பனையும் பன்மடங்காக அதிகரித்திருந்தது.

தோமஸ் டேனியல் என்ற ஆய்வாளரின் தகவலின்படி லண்டனில் 1801 செப்ரெம்பரில் ஒரு புதிய பத்திரிகை தோற்றமுற்றது. நான்கு பக்கங்களை மட்டுமே கொண்ட ஒரு தாள். அதன் விலை ஆறு பென்ஸ். பத்திரிகையின் பெயர் வீக்லி டிஸ்பாச். அந்த நூற்றாண்டின் முதல் புதிய பத்திரிகை அதுவாகும் என்கிறார் அவர். அதன் தோற்றப்பாடும், அதன் உள்ளடக்கங்கள், மற்றும் ஆசிரியர் தலையங்கத்தின் ஆக்கபூர்வ கருத்துக்களும் வேறு பத்திரிகைகளும் அதனைப் பின்தொடர்ந்து வெளிவர உதவின.

லண்டனில் பத்திரிகை உலகின் இதயம் என்று இன்றைய நாள்களில் அறியப்படுகின்ற ஃப்ளீட் ஸ்ட்ரீட் (Fleet street) இல்தான் வீக்லி டிஸ்பாச் அச்சிடப்பட்டது. அதன் முதலாவது பதிப்பின் முன்பக்கத்தில் விளம்பரங்களுக்கே அதிக இடம் கொடுக்கப்பட்டிருந்தது. அதில் ஒரு விளம்பரம் "வைட்ஹெட்" என்பாரின் கடுகு ரசம் பற்றியதாகும். வாதம், மூட்டுப் பிடிப்பு, இடுப்புவலி, திடீர் வாதம் போன்ற நோய்களுக்கு இது கைகண்ட மருந்தாக விளம்பரப்படுத்தப்பட்டிருந்தது.

உள்பக்கத்தில் ஒரு நீண்ட அறிமுகக் கட்டுரையில் தன்னைப் பற்றி அந்தப் பத்திரிகை எழுதியிருந்தது. சுவை தட்டும் விதத்தில் அழகு நடையில் எழுதப்பட்டிருந்த கட்டுரை "இட்டாலிக்" (italic) எனப்படும் சரிவு வடிவ எழுத்துக்களால் அச்சிடப்பட்டிருந்தது. பத்திரிகையின் பிரதான நோக்கம் பற்றி அது, "மிகவும் அதிகாரபூர்வமான ஆர்வத்தைத் தூண்டுகின்ற அச்சாகும். கடைசி நேரம் வரையிலான அதன் பயன்பாட்டை வாசகனுக்குக் கொண்டு சேர்ப்பதாகும்" என்று தெரிவித்திருந்தது. "ஐரோப்பாவிலும் வேறு இடங்களிலும் பிரிட்டன் இராணுவம், கடற்படை செயற்பட்டுக் கொண்டிருக்கின்ற இடங்களின் செய்திகள், போர் தொடர்பான அல்லது சமாதானம் தொடர்பான விவரங்கள் மற்றும் பிரிட்டன் ஏகாதிபத்தியத்துக்குச் சம்பந்தப்பட்ட அனைத்துச் செய்திகளும் தரப்படும்" என்றும் அது தெரிவித்திருந்தது.

அது மட்டுமல்ல, நாடாளுமன்றத்தில் நடைபெறும் சகல விவாதங்கள் மற்றும் அவைகளின் உணர்வுபூர்வமான சாரம்சங்களையும் வெளியிடப் போவதாக அது உறுதி கூறியிருந்தது. இந்த வித முன்னேற்றகரமான செயற்பாட்டில் வேறு எந்தவொரு வாரப்பத்திரிகையாலும் ஈடுபடமுடியாது என்றும் அது தன்னைப் பற்றி புகழ்ந்து கொண்டது. அந்தக் காலகட்டத்தில் ஆங்கிலக் கால்வாய்ப் பகுதியிலும் வேறு இடங்களிலும் பிரெஞ்சு நெப்போலியன் படைகளுக்கும் பிரிட்டன் படையினருக்கும் இடையில் நடைபெற்றுக் கொண்டிருந்த போர் பற்றிய விவரங்களையும் பத்திரிகை வெளியிட்டிருந்தது.

முக்கியமான செய்தி இந்தக் காலத்தில் என்றால் முதல் பக்க பிரதான செய்தியாக இருந்திருக்கும். ஆனால் அது கடைசிப் பக்கத்தில் ஐந்து வரிகளைக் கொண்ட செய்தியாகக் காணப்பட்டுள்ளது.

அந்தப் பத்திரிகையின் கடைசிப் பக்கத்தில்(பின்பக்கம்) அந்தக் காலத்தில் (1801) அன்றைய பிரித்தானியர்களின் வாழ்க்கை முறையின் "இருள் சூழ்ந்த" அம்சங்களும் வெளியிட்டப்பட்டிருந்தன. ஒல்ட்பெய்வி நீதிமன்ற விசாரணைகளும் விரிவாக இடம்பெற்றிருந்தன. ஒருவார காலத்தில் 13 கைதிகளுக்கு சாவுத்தண்டனை விதிக்கப்பட்டிருந்தது. அதில் ஒருவன் 12 வயதுச் சிறுவன். ஒரு




துண்டு துணியைத் திருடியதற்காக அந்தப் பையனுக்கு இந்தத் தண்டனை.

அவனது வயதை உத்தேசித்துக் கருணை காட்ட வேண்டும் என்றும் பரிந்துரை செய்யப்பட்டிருந்தது. தோமஸ் டேனியல் மேலும் தகவல் தருகையில்; முப்பத்து நான்கு பேருக்கு ஏழு வருடங்களுக்கு நாடு கடத்தலும் வேறு பலருக்குச் சிறைத்தண்டனைகளும் ஏனையவர்கள் சாட்டை அடிகொடுத்து விடுவிக்கவும் தீர்ப்புகள் வழங்கப்பட்டிருந்தன.

இன்னொரு முக்கியமான செய்தி இந்தக் காலத்தில் என்றால் முதல் பக்க பிரதான செய்தியாக இருந்திருக்கும். ஆனால் அது கடைசிப் பக்கத்தில் ஐந்து வரி களைக்கொண்ட செய்தியாகக் காணப்பட்டுள்ளது.

"பிரபுக்கள் சபையில் நிகழ்ந்துள்ள அசாதாரண திருட்டு" பற்றிய செய்தி அது. தங்கத்திலான செங்கோல், சிம்மாசனத்தில் காணப்பட்ட எல்லாவித ஆபரணங்கள் என எல்லாமும் கழற்றிக் களவாடப்பட்டிருந்தன. சபையில் மாற்றங்கள் செய்யப்பட்டுக் கொண்டிருந்த காலப்பகுதியில் இந்தத் துணிகரம் நிகழ்ந்திருந்தது.

அந்தக் காலத்தில் இந்த டிஸ்பாச் என்ற பத்திரிகை எட்டு பென்சுக்கு விற்கப்பட்டுள்ளது என்றாலும் ஏனைய போட்டிப் பத்திரிகைகளை விட இதன் விலை குறைவு என்றே கருதப்பட்டுள்ளது. அவைகள் ஒன்பது அல்லது 10 பென்சுக்கு விற்கப்பட்டுள்ளன. குறுகிய காலத்திலேயே டிஸ்பாச் வேறு அம்சங் களையும் வெளியிடத் தொடங்கியது. அதில் விளை யாட்டுக்கள்-மல்யுத்தங்கள், குதிரைச் சவாரிப் போட்டிகள் போன்றவையும் அடங்கின. அத்துடன் கொலைகள் போன்ற ஏனைய திகைப் பூட்டும் சம்பவங்கள் குறித்த செய்திகளும் இடம் பெறலாயின.

அந்தப் பத்திரிகை ஓர் இலகுவான மொழிநடையையும் வெளிப்படைத் தன்மையையும் கடைப்பிடித்தது. விரைவிலேயே அதன் போட்டிப் பத்திரிகைகளும் அதனைப் பின்பற்றத் தொடங்கின. சிறிது காலத்திலேயே இந்த வாரப் பத்திரிகைகள் பிரிட்டனில் ஒருபெரும் சக்தியாக உருவாகிவிட்டன.

1830ஆம் ஆண்டில் கொண்டுவரப்பட்ட சிறப்பு மிக்க சீர்திருத்தச் சட்டம் கொண்டு வரப்பட்டமைக்கு இந்த ஞாயிறு பத்திரிகைகளே முக்கிய பின்புலமாக இருந்துள்ளதாக வரலாற்றாசிரியர்கள் கருதுகிறார்கள். வீக்லி டிஸ்பாச் வெகுகாலம் நீடித்து செழிப்புடன் நடைபெற்றதன் பின் 1961ஆம் ஆண்டு சண்டே எக்ஸ்பிரஸ் என்ற பத்திரிகையுடன் இணைக் கப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெண் என்றால்...



நாம் அல்லது நமது நண்பர்கள் யாராவது ஒரு பெண்ணைப்பார்த்து பெண் என்றால் இப்படித்தான் இருக்க வேண்டும் என்று சொல்லி நீங்கள் கேட்டிருக்கிறீர்களா? ஆம் என்றால் அந்த பெண் எப்படிப்பட்டவராக இருப்பார்? அழகாக இருப்பதைக் கொண்டு சொல்வதை இங்கே தவிர்த்துவிடுங்கள்.

ஒரு சராசரி பெண் என்பவள், வீட்டில் மகாராணியாகவும், அலுவலகத்தில் ராணியாகவும் இருப்பாள். இதுமட்டும் அல்லாமல் பொது விடயங்களிலும் சேவகியாகவும், தவறை தட்டிக் கேட்பவளாகவும் இருப்பாள். அவளது கடமையை செய்துவிட்டு, உரிமையைத் தட்டிக் கேட்கும் பெண்ணைத்தான் பெண் என்றால் இப்படி இருக்கணும் என்று சொல்வார்கள்.

எந்த விடயத்திலும் ஆர்வம் காட்டாமல், எதற்கெடுத்தாலும் குற்றம் சொல்லிக் கொண்டு, நம்மைப் பற்றி நாமே உணராமல் வீட்டுக்குள் முடங்கிக் கிடக்கும் பெண்ணை பெண் இனமே மதிக்காது. பிறகு எப்படி சமுதாயம் மதிக்கும்.

தன்னைப்பற்றிய ஒரு தெளிவான சிந்தனையுடன் வாழ்வதுதான் அடிப்படை. தனக்குள்ள திறமைகளைக் கொண்டு வாழ்வில் முன்னேறும் ஆவலுடனும், எதையும் மற்றவரை எதிர்பார்க்காமல் தானாக செய்யும் தன்னம்பிக்கையும் பெண்ணுக்கு நிச்சயம் வேண்டும்.

திருமணத்துக்கு முன்பு தந்தையின் தயவுடன் வாழும் பெண் திருமணத்துக்குப் பின் கணவரின் தயவுடனும், பிறகு மகனிடம் வாழ்வதும் ஒரு பெண் தனக்குத் தானே போட்டுக் கொள்ளும் கட்டுப்பாடாகும்.

வீட்டு வேலையை மட்டும் செவ்வனே செய்து வந்தால் போதாது. நமது குடும்பம் மட்டும் நன்றாக இருந்தால் போதாது. அந்த குடும்ப உறுப்பினர்கள் வீட்டைவிட்டு வெளியே சென்றதும் சந்திப்பது இந்த சமுதாயத்தைத்தான். எனவே ஒவ்வொரு பெண்ணுக்கும்; சமூக அக்கறையும் நிச்சயம் தேவை.

ஒரு இடத்தில் தவறான காரியம் நடக்கிறது என்று தெரிந்தும் அதனை சும்மா விட்டுவிடுவதும், பாதிக்கப்பட்ட ஒருவருக்கு உதவி செய்யாமல் வேடிக்கை பார்ப்பதும் சமுதாயத்தில் ஒரு அங்கமான பெண்ணுக்குச் சரியெனப் படுமா? ஒரு சமுதாய நோக்கு கொண்ட பெண்ணாக நமது பெண் சமுதாயம் மாற வேண்டும்.

சிலர் வழி கேட்டால் கூட சொல்லாமல் போவார்கள். பஸ்ஸில் கர்ப்பிணிகளை அடித்துத் தள்ளிக் கொண்டு ஏறுவதும் சில பெண்கள் தான்.

கருணைக்கும், இரக்கத்துக்கும் எடுத்துக் காட்டாகக் கூறப்பட்ட பெண்கள் தற்போது, அதனை எடுத்துக்கூறும் அளவுக்கு மாறிவிட்டனர். ஆனால் இவை அனைத்தும் நிறைந்து, உற்சாகமாகவும், புத்துணர்ச்சியுடனும் தனது வேலையை செம்மையாக செய்யும் ஒரு பெண்ணைத்தான் எல்லோரும் விரும்புவார்கள் பெண் என்றால் இப்படித்தான் இருக்க வேண்டும் என்று கூறுவார்கள். நாமும் அப்படியே வாழ்ந்து காட்டுவோம்.

இணையவள்



# சிறந்த பெண் சமுதாயம் உருவாகட்டும்

வீட்டுக்குள்ளே அடங்கிக் கிடந்த பெண் சமுதாயம், வெளி உலகுக்குக் அடி எடுத்து வைக்கும் போது ஏற்பட்ட பலவேறு இன்னல்களை எதிர்கொண்டு சவால்களில் வெற்றி பெற்றனர்.

பெண் இனமே பிறக்கத் தகுதி இல்லாத இனம். கள்ளிப்பால் கொடுத்து கொல்லும் பழக்கம் இருந்த இந்த உலகத்தில், தற்போது மருத்துவத்துறையில் உயிர்களைக் காப்பாற்றும் பணியில் கூட பெண்கள் ஜொலித்துக் கொண்டிருக்கும் காலமாக உருவாகியுள்ளது.

ஆண்களுக்கு எதிராகவும், பெண்களுக்காக போடப்பட்டு வந்த மூட நம்பிக்கை முடிச்சுகளுக்கு எதிராகவும் போராடி பெற்ற சுதந்திரம் தற்போது பெண்களாலேயே நசுக்கப்பட்டு வருகிறது.

மறைமுகமாகவும், நேரடியாகவும் பெண் சமுதாயம் இன்றளவும் பல கொடுமைகளை அனுபவித்து வந்தாலும், பெண்களால் பெண்கள் படும் கொடுமைகள்தான் அதிகம் என்று மனதுக்குள் ஒரு நெருடல்.

மாமியார் கொடுமையில் தொடங்கி, பெண்களைப் பற்றி புறம் பேசும் பெண்கள் வரை பெண்களுக்கு ஏற்படும் பிரச்சினைகள் பலவற்றில் பெண்களின் பங்குதான் அதிகம் என்பது மறுக்க முடியாத உண்மையாகவே உள்ளது.

ஒரு குடும்பத்தில் பெண் இறந்துவிட்டால் உடனடியாக ஆணுக்கு இரண்டாம் திருமணம் செய்து வைத்து சிதறிய குடும்பத்தை ஒன்றாக்கும் பெண் சமுதாயம், அதே குடும்பத்தில் ஆண் இறந்துவிட்டால் உடனடியாக அந்தப் பெண்ணைக் கைம்பெண் ஆக்கி அழகு பார்க்கிறது. பெற்ற பிள்ளைகளை படிக்க வைப்பதும், வளர்த்து ஆளாக்குவதும் ஒரு பெண்ணின் தலையில் சுமத்தப்படுகிறது.

ஆயிரம் கனவுகளை தாயிடம் இருந்து பிரித்துக் கொண்டு செல்லும் பெண் தான், தனது மகனை திருமணம் செய்து கொண்டு வீட்டுக்கு வரும் மருமகளை வரதட்சணைக் கொடுமை செய்து தற்கொலைக்குத் தூண்டுவதும் ஒரு பெண் தான். பெண் சமுதாயம் முன்னேற வேண்டும் என்று கொடுத்த சலுகைகளை தவறான வழிகளில் பயன்படுத்திக் கொள்ளாமல், நமது முன்னேற்றத்துக்கு நாம் மட்டும் காரணமல்ல, நமக்குப் பின்னால் இருந்த ஆண் சமுதாயமும் காரணம் என்பதை நினைவில் கொள்ள வேண்டும். இந்த நாளில் ஒவ்வொரு பெண்ணின் கடமையாகும்.

நாம் படித்துவிட்டோம் என்பதற்காக நமது குடும்ப நிலையோ வேலைக்குச் செல்கிறோம் என்பதற்காக கணவனையோ தூக்கி எறியக் கூடாது. வாழ்வின் அடிப்படையே நமது குடும்பம்தான் என்பதை மறக்கவும் கூடாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பேராசை பெரும் கேடு



ஒரு பிச்சைக்காரன் உணவுக்காக வீடு வீடாக அலைந்தான். அவன் மிகவும் அசிங்கமாக, கிழிந்த உடைகளோடும், சிக்குப் பிடித்த தலைமுடியோடும் இருந் தான். ஒரு பழைய கோணிப் பையே அவனது உடைமையாக இருந்தது.

ஒவ்வொரு வீடாகப் போய்ப் பார்த்து விட்டு எதுவும் கிடைக்காவிட்டால் தனக்குள் அந்த வீட்டைப் பற்றி சொல்லிக் கொள்வான். ஒரு வீட்டின் முன்னே போய் அவன் சொன்னான், வீடு மிகப் பெரியது. ஆனால் இங்குள்ளவர் களுக் குப் பணம் நிறைய இருந்தும் திருப்தி இல்லை. அவர்கள் எப்போதும் அதிகமாகவே எதிர் பார்க்கிறார்கள். கடைசியில் அவர் கள் பேராசையால் எல்லாவற்றையும் இழப்பார்கள்.

இன்னொரு வீட்டுக்குப் போனான். உணவு கிடைக்கவிலை. இந்த வீட்டில் உள்ளவன் கோடீஸ்வரன். ஆனால் இருக்கிற பணத்தில் திருப்தியடையாமல் அவற்றை இரட்டை மடங்காக்க சூதாடினான். கடைசியில் எல்லாவற்றையும் இழந்தான். எனக்கோ கொஞ்சப் பணம் கிடைத்தால்போதும். திருப்தி கொள்வேன். அதிக ஆசைப் படமாட்டேன்! என்று அந்த பிச்சைக்காரன் சொன்னதும் அதிர்ஷ்ட தேவதை அவன் முன்னே தோன்றியது நான் உனக்கு உதவப் போகிறேன். நீ உன்னுடைய கோணிப்பையைப் பிடி. நான் அதனுள்ளே தங்க நாணயங்கள் போடுவேன். உனக்கு எவ்வளவு வேண்டுமோ பெற்றுக் கொள்.

பிச்சைக்காரன் அதிர்ஷ்ட தேவதையைப் பார்த்தான். அதன் கரங்களில் தங்க நாணயங்கள் நிறைய இருந்தன. உடனே அவன் கோணிப்பையை விரித்தான். அப்போது அதிர்ஷ்ட தேவதை சொல்லியது கோணிப்பைக்குள் விழுகின்ற நாணயங்கள் தங்கமாக இருக்கும். அவை நிலத்தில் விழுந்தால் தூசியாகி விடும். இது எனது எச்சரிக்கை.

பிச்சைக்காரன் மிகுந்த மகிழ்ச்சியோடு இருந்தான். அதிர்ஷ்ட தேவதை மீண்டும் எச்சரித்தது. அதன் பிறகு பிச்சைக்காரனின் கோணிப்பைக்குள் தங்க நாணயங்களைக் கொட்டியது. கோணிப்பை நிரம்பியதும் தேவதை தங்க நாணயங்களைக் கொட்டுவதை நிறுத்தியது. உன் கோணிப் பையில் இருக்கிற நாணயங்கள் உன்னை அரசனை விட பணக்காரனாக்கும். அது போதும்தானே? என்றது அதிர்ஷ்ட தேவதை. போதாது. இன்னும் வேண்டும் என்றான் பிச்சைக்காரன்.

அதிர்ஷ்ட தேவதை மேலும் சில தங்க நாணயங்களைக் கொடுத்து விட்டு சொன்னது, உன்கோணிப்பை இதற்கு மேல் தாங்காது. பிச்சைக் காரன் சொன்னான். இன்னும் கொஞ்சம் வேண்டும். அதிர்ஷ்ட தேவதை மேலும் தங்க நாண யங்கள் சிலவற்றைக் கொடுத் துவிட்டு நிறுத்தியதுடன்.

உன் கோணிப்பை கிழியப் போகிறது என்றும் கூறியது. பிச்சைக்காரன் மறுத்தான். இல்லை. நீ இன்னும் கொஞ்சம் நாணயங்களைப் போடு! என் கோணிப்பை தாங்கும் என்றான். மறு வினாடி கோணிப்பை கிழிந்தது. அதனுள் இருந்த நாணயங்கள் கீழே விழுந்து தூசியாகின. அதிர்ஷ்ட தேவதையும் மறைந்தது. பிச்சைக்காரன் திகைத்துப் போய் நின்றான்.

# ஆறு



மலையில் நானும் பிறந்திடுவேன்
மண்ணின் மீது தவழ்ந்திடுவேன்
நிலையாய் ஓரிடம் நில்லாமல்
நீண்ட தூரம் சென்றிடுவேன்!

ஏரிகள் குளங்கள் என் நண்பன்
எல்லா மக்களும் என் சொந்தம்
ஊர்கள் தோறும் நானுண்டு
உதவும் குணமும் எனக்குண்டு!

கழனியில் பயிர்களைக் காத்திடுவேன்
கனிதரும் மரங்களை வளர்த்திடுவேன்!
உழவும் தொழிலும் செழிப்பதற்கு
உற்ற துணையாய் இருந்திடுவேன்!

என்னிடம் உண்டு மின்னாற்றல்
எனக்குள் உண்டு பேராற்றல்!
நன்மை அதிகம் செய்திடுவேன்
நல்லவன் என்று பேரெடுப்பேன்!

அனைவரும் குளித்து மகிழ்ந்திடவே
அருவியாய் நானும் கொட்டிடுவேன்!
சுனைகள் என்றும் ஊற்றென்றும்
சொல்லிடும் பெயர்கள் பலவுண்டு!

தாறு மாறாய் ஓடாமல்
தக்க வழிநான் சென்றிடுவேன்!
ஆறு என்றால் வழியென்று
அழகிய தமிழில் பொருளுண்டு!

## பெயர் மாற்றப்பட்ட நாடுகள்

1. டச்சு கயானா -சுரினாம்.
2. அப்பர் வோல்டா- புர்க்கினா பாஸோ
3. அபிசீனியா- எத்தியோப்பியா
4. கோல்டு கோஸ்ட் - கானா
5. பசுட்டோலாந்து-லெசதொ
6. தென்மேற்கு ஆப்பிரிக்கா - நமீபியா
7. வட ரொடீஷியா - ஸாம்பியா
8. தென் ரொடீஷியா - சிம்பாப்வே
9. டாங்கனீகா,சன்ஸிபார் - தான்சானியா
10. கோட்டே டி ஐவோயர் - ஐவரி கோஸ்ட்
11. சாயிர் - கொங்கோ
12. பர்மா - மியன்மார்
13. சிலோன் - சிறிலங்கா
14. கம்பூச்சியா - கம்போடியா
15. பாரசீகம்,பெர்ஷியா - ஈரான்
16. மெஸபட்டோமியா - ஈராக்
17. சயாம் -தாய்லாந்து
18. பார்மோஸ் - தைவான்
19. ஹாலந்து - நெதர்லாந்து
20. மலகாஸி - மடகாஸ்கர்

# பொது அறிவுத் தகவல்கள்...

- முதன் முதலாக தொழில்புரட்சி நடைபெற்ற நாடு - இங்கிலாந்து
- குளோரினிலிருந்து தயாரிக்கப்படும் மருந்துப் பொருள் - குளோரோஃபார்ம்
- மனிதனுடைய உடல் உறுப்புகளில் வாழ்நாள் முழுவதும் ஆரோக்கியமாக இருப்பவை - மூளையில் உள்ள செல்கள்
- எச்.பி.ஜே. பைப்லைன் திட்டமானது எதைக் கொண்டு செல்ல உருவாக்கப்பட்டது - இயற்கை வாயு
- இத்தாலி நாட்டின் தேசிய மலர் - லில்லி
- மின் விளக்கை கண்டுபிடித்தவர் - ஹம்ப்ளி டேவி
- ஒரு மணி நேரத்தில் 74 கி.மீ வேகத்தில் ஓடுவது - நெருப்புக் கோழி
- எறும்புகளில் உள்ள வகைகள் - 14,000 (அவைகள் ஒரு போதும் உறங்குவதில்லை)
- நயாகரா நீர்வீழ்ச்சியைக் கண்டுபிடித்தவர் - லூயிஸ் ஹெறனபின்
- ஆசியாவில் முதன் முதலாக தொழில் மயமான நாடு எது - ஜப்பான்
- சூரிய குடும்பத்தில் அதிக வெப்பமான கிரகம் - புதன்
- சுறா மீனின் வாழ் நாள் - 20 முதல் 30 ஆண்டுகள்
- கொசுக்களில் 3500 வகை உள்ளன
- பூச்சி இனங்களில் அறிவு மிக்கது எறும்பு.
- உலகில் அதிக அளவில் கப்பல் போக்குவரத்து நடைபெறும் இடம், பனாமாக் கால்வாய்.

# வரலாற்றில் இன்றைய தினம்

1807 - பிரான்ஸ் பேரரசன் நெப்போலின் ரஷ்யா மற்றும் புருஸ்ஸியாவுக்கு எதிராகப் போர் தொடுத்தார்.
1863 - ஓக்லந்துக்கு அருகில் கப்பல் ஒன்று மூழ்கி 189பேர் சாவு.
1904 - பல்ரிலோ மேரிலாண்டில் ஏற்பட்ட தீயில் 1500 கட்டடங்கள் எரிந்தழிந்தன.
1951 - கொம்யூனிஸ்ட் ஆதரவாளர் என சந்தேகிக்கப்பட்ட 705 பேர் தென்கொரிய படைகளால் மிருகத்தனமாகக் கொல்லப்பட்டனர்.
1962 - கியூபாவுக்கான ஏற்றுமதி இறக்குமதியை அமெரிக்கா தடைசெய்தது.
1974 - ஐக்கிய இராஜ்ஜியத்திலிருந்து கிரெனடா சுதந்திரம்பெற்றது.
1986 - கரிபியன்தேசத்தை விட்டு ஜனாதிபதி ஜீன் கிளோட் டாவலியர் ஓடியதை தொடர்ந்து கெயிட்டியின் 20 ஆண்டு குடும்ப ஆட்சி முடிவுக்குக் கொண்டுவரப்பட்டது.
1990 - சோவியத் ஒன்றியம் கலைக்கப்பட்டது.
1991 - ஜீன் பேட்ராண்ட் ஆடிஸ்ரைட் ஜனநாயக முறையில்தேர்ந்தெடுக்கப்பட்ட கெயிட்டியின் முதல் ஜனாதிபதியாக சத்தியப்பிரமாணம்.
1992 - 'ஐரோப்பிய யூனியனின் உருவாக்கத்துக்கு இட்டுச் செல்லும் மாஸ்ட்றிச் ஒப்பந்தம் கைச்சாத்தானது.
1992 - அடுத்த சில மாதங்களில் பாகிஸ்தானிடம் அணு ஆயுதங்கள் இருக்கும் என பாகிஸ்தான் அதிகாரி ஒருவர் ஒப்புக்கொண்டார்.
1995 - 1993 இன் உலக வர்த்தக மைய குண்டு தாக்குதலின் சூத்ரதாரி ராம்ஸி யூசுப் பாகிஸ்தானில் கைதானார்.
1995 - ராஜீவ் கொலை வழக்குத் தொடர்பாக பிரபா மீதான நீதிமன்ற உத்தரவு தொடர்பாக சிறிலங்காவின் உதவியை இந்தியா கோருமாம்.
1999 - முடிக்குரிய இளவரசர் அப்துல்லா தனது தந்தையான மன்னர் இறந்ததைத் தொடர்ந்து ஜோர்தான் மன்னரானார்.
2009 - வரலாற்றில் மிக மோசமான இயற்கை அனர்த்தமான காட்டுத்தீயில் சிக்கி விக்ரோறியா மாநிலத்தில் 173பேர் சாவு.
2013 - ஸாம்பியாவில் பஸ்ஸும் ட்றக்கும் மோதியதில் 51பேர் வரை சாவு.

# விடுகதைகளும் விடைகளும்

1. வாயில்லை புத்திமதிகள் சொல்வான், காலில்லை கடந்தும் செல்வான் கையில்லை உளங் காட்டிக் கொள்வான், உயிரில்லை ஒரு நாளும் சாக மாட்டான். - அது என்ன?
2. மேலே பறக்கும் பருந்தல்ல, கட்டுண்டு இருக்கும் மாடல்ல, அழகான வாலுண்டு குரங்குமல்ல - அது என்ன?
3. ஊர் உண்டு மக்களில்லை, மலையுண்டு மரங்களில்லை, ஆறுண்டு நீரில்லை, அணையுண்டு கல்லில்லை, வழி உண்டு வாகனமில்லை, வண்ணமுண்டு உயிரே இல்லை - அது என்ன?
4. குடிக்கத் தண்ணீர் உண்டு, குளிக்கத் தண்ணீர் இல்லை - அது என்ன?
5. மனிதன் போடாத பந்தலிலே மலர்ந்து கிடைக்குது பூ - அது என்ன?
6. காலும் கையும் உண்டு, விரல் இல்லை முதுகு உண்டு, தலை இல்லை தன்னைத் தேடி வந்தோரைச் சுமப்பான். - அது என்ன?
7. வெயிலில் காயும் மழையில் நனையும் அண்டி வருவோர்க்கு அடைக்கலமும் தரும் - அது என்ன?
8. யாரும் செய்யாத கதவு தானே திறக்கும் தானே மூடும் - அது என்ன?
9. கனலைப் பிடித்து கண்ணீர் வடிக்கும் கடைசியில் கரைந்தும் போகும் - அது என்ன?

விடைகள்:
1. புத்தகம் 2. பட்டம் 3. தேசப்படம்
4. தேங்காய் 5. நட்சத்திரம் 6. நாற்காலி
7. குடை 8. கண் இமை 9. மெழுகுவர்த்தி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பாதத்தின் பாதுகாப்பு

கால் பாதங்கள் வெடிப்பு விட்டு அசிங்கமாக இருக்கும். அதனை அழகாக்கவும், பாதுகாக்கவும் வழிகள் சில. ஒரு பாத்திரத்தில் எண்ணெய், நல்லெண்ணெய் ஆகியவற்றை சில துளிகள், வெந்நீரில் விட்டு சில மார்பிள்கள் அல்லது சிறு கற்களைப் பாத்திரத்தில் வைக்கவும். இப்போது பாதத்தை அதில் 15 நிமிடங்களுக்கு ஓய்வாக வைக்கவும்.

**ஷாம்பு பயன்படுத்தலாம்** - தரமான ஒவ்வாமை ஏற்படுத்தாத ஷாம்புகளை தலையில் தேய்த்துக் குளிப்பதில் தவறில்லை. வாசனைக்காக அதிக இரசாயனக் கலப்புகள் கலந்துள்ள ஷாம்புகளைத் தேய்த்தால் முடி உதிர்தல், பொடுகுத் தொல்லை என்பன ஏற்படும்.



# உருளைக்கிழங்கு ஜிலேபி

**தேவையான பொருள்கள்:**
உருளைக்கிழங்கு : அரைக்கிலோ
தயிர் : 1 கப்
அரோரூட் பவுடர் : 50 கிராம்
எலுமிச்சம்பழம் : 1 சிறிது
நெய் : அரைக் கிலோ
சீனி : கால் கிலோ
குங்குமப் பூ - சிறிது

**செய்முறை:**
உருளைக்கிழங்கை வேக வைத்து, தோலை உரித்து அத்துடன் அரோரூட் பவுடர், தயிர் சேர்த்து கெட்டியாகப் பிசைந்து கொள்ள வேண்டும். ஒரு பாத்திரத்தில் தேவையான அளவு தண்ணீர் ஊற்றி, சீனியை அதில் கொட்டி அடுப்பில் வைக்கவும். சர்க்கரை கரைந்து, பாகாகக் கொதித்து வரும். பாகு இருகி வரும்போது குங்குமப்பூவைச் சிறிது தண்ணீரில் கரைத்து, அதில் ஊற்றி இறக்கவும்.
வெள்ளைத் துணியின் நடுவில் ஒரு சிறு துவாரம் செய்து வைத்துக்கொள்ளவும். சட்டியில்; நெய்யை விட்டு காய்ந்ததும், பிசைந்து வைத்துள்ள கலவையை, துவாரம் செய்துள்ள துணிக்குள் வைத்து, முறுக்கு பிழிவது போல வட்டமாகப் பிழிய வேண்டும். முறுக்கின் இருபுறமும் சிவக்க வந்ததும் எடுத்து, தனியாக வைத்துள்ள சர்க்கரைப் பாகில் போடவும். பாகில் நன்றாக ஊறியதும் எடுத்து ஒரு பாத்திரத்தில் போடவும். உருளைக்கிழங்கு ஜிலேபி ரெடி.

# பேசியல் கிறீம் செய்ய

மைதமா இரண்டு தேக்கரண்டி எடுத்துக் கொண்டு, அதில் சிறிது தயிர், ஒரு சிட்டிகை அளவு மஞ்சள் தூள் கலந்து முகத்தில் பேக் போல போடவும். பின்னர் கழுத்து, கை, பாதங்கள் ஆகியவற்றில் இதனைப் பயன்படுத்தலாம். பேக் சிறிது உலர்ந்த பின் லேசாகத் தேய்த்து விடவும். பின்பு நல்ல தண்ணீரால் நன்கு அலம்பவும். பின்னர் பார்த்தால் முகம் பள பளப்பாகவும் பொலிவுடனும், இருக்கும்.



# வறட்டு சருமத்துக்கு

வறட்டுச் சருமம் உள்ளவர்கள் தினமும் குளிக்கச் செல்லுமுன் சிறிது தயிரை உடம்பில் தடவி தொடர்ந்து வெதுவெதுப்பான தண்ணீரில் குளித்து வந்தால் வறட்டு சருமம் சரியாகிவிடும். குளிர் காலத்தில் கடுகு எண்ணெய் தேய்த்து வெந்நீரில் குளித்தால் வறட்டு சருமம் சரியாகி விடும். குளிருக்கும் இதமாக இருக்கும். எண்ணெய் நாற்றமும் அடிக்காது. வறண்ட சருமம் உள்ளவர்கள் குளிர்ந்த நீரில் குளிக்கக்கூடாது.

# அப்பிளால் அழகாகும் முகம்

அப்பிள் உடலுக்கு மட்டுமல்ல சருமத்துக்கும் ஏற்ற பழமாகும். அப்பிள் பழத்தின் தோலை நீக்கிவிட்டு நன்றாக மசித்துக் கொள்ளவும். அதனுடன் சிறிது தேன், ஓட்ஸ்பவுடர்ஆகியவற்றைக்கலந்து,அந்தக்கலவையை முகத்தில் பூசவும். அரை மணி நேரம் முகத்தில் ஊறவிட்டு, பிறகு குளிர்ந்த நீரால் முகத் தைக் கழுவவும். உங்கள் வறண்ட சருமம் புதுப் பொலிவு பெறும். இதேப்போல அப்பிள் பழத் துண்டுகளைத் தோல் நீக்கி ஒரு கப் பாலில் போட்டு நன்றாகக் கொதிக்க வைக்கவும்.நன்றாகக் கொதித்ததும் அது தயிர் போன்று மாறும். அதை நன்றாக ஆற விட்டு பிறகு அதை முகத்தில் பூசி 20 நிமிடங்கள் ஊறவிட்டு பின் கழுவிவிடுங்கள். இப்படி தினமும் செய்து வாருங்கள். நீங்கள் வறண்ட சருமம் கொண்டவராக இருந்தால் சருமம் முற்றிலுமாக மாறிவிடும். முகம் பிரகாசிக்கவும் ஆரம்பித்து விடும்.

# பருக்களைச் சமாளிக்க வழி...

பரு அழகை பாழாக்குவதுடன் வலியையும் ஏற்படுத்தும். அதில் இருந்து தப்பிக்க எளிதான வழி. பசும் மஞ்சளுடன் வேப்பிலையைச் சேர்த்து அரைத்துப் பூசி, பதினைந்து நிமிடங்கள் ஊற விட்டு, பிறகு குளிர்ந்த நீரில் கழுவினால், பரு சீழ் பிடிக்காது. இதனால் வலி குறைவதோடு, விரைவிலேயே மறைந்துவிடும். முக்கியமாக, பரு உதிர்ந்த பிறகு வடு உண்டாகாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யோசித ராஜபக்சவிற்கு

## ஒரு பகிரங்க மடல்!

தம்பி யோசித,
வணக்கம்!

தங்களின் தற்போதைய சரீர சுகத்தினைப் பற்றி விசாரித்து உமக்கு மேலும் துன்பம் தர நான் விரும்பவில்லை. யாரும் இருக்குமிடத்தில் இருந்து கொண்டால் தான் எல்லாம் சௌக்கியம்.

துரதிருஷ்டவசமாக கடந்த ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் மக்களின் புள்ளடிகள், பரமசிவன் கழுத்துப் பாம்பாக இருந்த தங்களின் நிலவரத்தினை தகர்த்துப் போட்டதனால், கருடன்கள் பற்றி கவலைப் படவேண்டிய தேவையை ஏற்படுத்திவிட்டது.

பேயரசு செய்தால் பிணந்தின்னும் சாத்திரங்கள் நிலையும் மாறி ஆற்றங்கரை அரச மரமாக மாறியிருக்கிறது உங்களது சூழ்நிலை! நேற்றைய சனிக்கிழமைக்கு முந்தைய சனியன்று உங்கள் கிரக பலனில் சனி உச்சம் கொடுத்திருந்ததுபோலும். இலங்கையின் நிதி மோசடி விசாரணைப்பிரிவினரால் வாக்குமூலம் ஒன்றினைப் பெறுவதற்காக அழைக்கப்பட்ட நீங்கள், பின்னர் கைதாகி, நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டு தற்போது வெலிக்கடையில் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருக்கிறீர்கள்.

உமது தந்தையினை கொழுகொம்பாகக் கொண்டிருந்த கூட்டணியினர், உங்கள் கைதினை ஓர் அரசியல் பழிவாங்கல் நடவடிக்கை எனச் சோடித்து, அடுத்து வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் தமது வாக்கு வங்கிகளை பத்திரப்படுத்த முனைகின்றனர். அவர்கள், நீங்கள் எந்த எந்தக் குற்றச்சாட்டின் கீழ் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருக்கிறீர்கள் என்பதனை வெளிப்படுத்தத் தவறுகின்றனர்.

உமது தமையனார் நாமலைப் போல அரசியல் பரப்பில் நீர் அதிகம் தலை போடாமல் விட்டாலும், முன்னாள் ஜனாதிபதியின் இரண்டாவது மகனாக இருந்து அடிக்கடி செய்தித் தலைப்புக்களில் தலைகாட்டி வந்திருக்கிறீர்.

இலங்கைக் கடற்படைக்கான ஆட்சேர்ப்பு மந்த நிலையைக் கொண்டிருந்த ஒரு கட்டத்தில், மகிந்த ராஜபக்சவினால் கவன ஈர்ப்பிற்காக போர்-விளம்பர களத்தில் இறக்கப்பட்ட நீங்கள், போர்க் களங்களுக்கு முகம் கொடுக்காமலேயே லெப்டினன்ட் தரதராதரத்தைப் பெற்றுக்கொண்டு விட்டீர்கள்.

அது மாத்திரமின்றி பல மில்லியன் ரூபா பெறுமதியான வெளிநாட்டுக் கற்கைகளையும் நீர் கற்று முடிக்க, வகைதொகையற்ற முறையில் அரச பணம் வாரி இறைக்கப்பட்டிருக்கிறது. வெளிநாட்டுப் பயணங்களும் சாத்தியமாகியிருக்கின்றன. இவற்றில் எல்லாம் முறையான பொறிமுறை பின்பற்றப்பட்டுத்தானா நடந்தேறின என்பது சந்தேகத் திற்குரியதாகவே இருக்கிறது.

கோயில் பூனை தேவரை மதியாது என்பது போல, முப்படைகளுக்கு எல்லாம் அதிபதியாக உமது தந்தை மற்றும் பாதுகாப்புச் செயலாளராகத் தந்தையின் சகோதரர், விளங்கியபோது இவற்றை பற்றியெல்லாம் அலட்டிக் கொள்ள வேண்டிய தேவை உமக்கு இருந்திருக்கவில்லை தான். ஆனால், ஆட்சி மாற் றத்தின் அடுத்தடுத்த பலாபலன்களாக உமது பதவி நகர்வுகளின் முறைமை கண் காணிக்கப்பட்டிருக்கிறது.

கடற்படையில் சேருவதற்கான அடிப்படை தகுதியை நீர் பூர்த்தி செய்திருந்தீரா என்பதிலிருந்து ஆராயப்பட்டிருக்கிறது. சிலபல இடங்களில் அது சந்தேகங்களையும் சர்ச்சையையும் தோற்றுவித்திருக்கிறது.

ரக்பி விளையாட்டில் சூரனான நீங்கள், இலங்கையின் தேசிய ரக்பி அணியின் தலைவராகவும் வெஸ்ரேண் வோரியர்ஸ் அணியின் தலைவராகவும் விளங்கியிருந்தீர்கள். பிரபல ரக்பி வீரர் தாஜுதீனின் சந்தேகத்திற்குரிய சாவு தொடர்பிலான விசாரணை மீண்டும் கிளறப்பட்டு, நிகழ்ந்த இறப்பு தொடர்பிலான சிலபல வினாக்களுக்கான விடைகளை உங்களிடமிருந்து பெற்றுக் கொள்ள வேண்டிய தேவையும் இலங்கை நீதித்துறைக்கு இருக் கின்றமை நீங்கள் அறியாத தல்ல.

கார்ல்டன் என்ற பேரைக் கேள்விப்படாத இலங்கையர் எவரும் இருக்க முடியாது. தங் காலையில் உள்ள கார்ல்டன் மனையிலிருந்து புறப்பட்டவர் களுள் ஒருவரான உங்களுடன் சம்பந்தப்பட்டதே இந்த சி.எஸ். என். என்றழைக்கப்படும் கார்ல்டன் விளையாட்டு வலையமைப்பு தொலைக்காட்சி நிறுவனமாகும். இந்தத் தனியார் நிறுவனத்தின் விவகாரமே தற்போது உங்களை விளக்கமறியலில் கம்பி எண்ண வழிவகுத்திருக்கிறது.


2015 தை மாதம் 9ஆம் திகதிக்குப் பின்னரான பல ஆராய்வு சம்பவங்களில், கிணறு தோண்ட பூதம் கிளம்பிய கதையாக அரசுக்கு வரியாகவும் வருவாயாகவும் கிடைக்கவேண்டிய பல மில்லியன் ரூபாய்கள் விலாசமில்லாமல் போன விவகாரங்கள் வெளிச்சத்திற்கு வந்த வண்ணமிருக்கின்றன. அத்தகைய விவகாரங்களில் ஒன்றாக உங்கள் ஆளுகைக்குள் இருந்த சி.எஸ்.என். சிக்கியிருக்கிறது.

கடற்படை அலுவலராக இருந்து கொண்டு நீங்கள் இந்த நிறுவனத்தினை தோன்றா எழுவாயாக இயக்கிய விடயத்தில் வழங்கப்பட்ட முன்னுக்குபின் முரணான பதில்கள், உங்களை மாத்திரமல்லாது மேலும் சில நிர்வாகப் பணியாளர்களையும் சட்டத்தின் முன் நிறுத்தியிருக்கிறது.

அரச தொலைக்காட்சி சேவைக்குச் சேர வேண்டிய வருமானங்கள் வழிமறிக்கப்பட்டு சி.எஸ். என்இற்குத் திசைதிருப்பப்பட்டது முதல் ஜனாதிபதி செயலகத்திலிருந்து இந்தத் தனியார் நிறுவனம் நிர்வகிக்கப்பட்டது வரை கேள்வி எழுப்பப்பட்டிருக்கிறது. தனியார் தொலைக்காட்சி ஒன்றிற்குவழங்கப்பட்ட சுதந்திரம்தொடர்பில் குழப்பம் ஏற்பட்டிருக்கிறது. நாட்டின் முதற்குடும்பத்தின் உறுப்பினராக நீங்கள் இருந்த போது கண்டும்காணாமலும் விடுபட்ட சம்பவங்கள், நீதிதேவதையின் கவனத்திற்கு இப்போது கொண்டுவரப்பட்டிருக்கிறது.

எதிர்வரும் 11ஆம் திகதி வரை விளக்கமறியலுக்கு உத்தரவிடப்பட்டுள்ள நிலையில், வீட்டில் தயாரித்த உணவை சுவைக்க உங்களை அனுமதித்திருப்பதாக தெரியவருகிறது. அது வரையில் விசாரணைகளுக்கு ஒத்துழைத்து அடுத்தடுத்த நீதிமன்ற நகர்வுகளில்நீதிக்குதலைசாய்க்க வேண்டி வாழ்த்தி நிற்கிறேன்!

நன்றியுடன்,
ஸூடோ ஸ்வாமி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இந்த வாரம் 07.02.2016 முதல் 13.02.2016 வரை

# உங்களுக்கு எப்படி?

## மேடம்

கேது, சூரியன், சுக்கிரனால் நன்மை ஏற்படும். உற்சாக மனதுடன் பணிகளைத் தொடங்குவீர்கள். சமூக நிகழ்ச்சிகளில் பங்கேற்று, இனிய அனுபவம் காண்பீர்கள். வாகனப் பயணம் அதிகரிக்கும். புத்திரர் உங்கள் சொல் கேட்டு நடப்பர். உறவினர்களின் உதவி கிடைக்கும். குடும்பத்தில் மகிழ்ச்சி கூடும். ஆரோக்கியத்தில் கவனம் வேண்டும். மனைவியின் செயல்கள் சிறப்பாக அமையும். தொழில், வியாபார வளர்ச்சியால் வருமானம் கூடும். அரசு வகையில் உதவி கிடைக்கும். பணியாளர்களின் செயலுக்கு பாராட்டு, வெகுமதி கிடைக்கும். பெண்கள், உறவினர் மத்தியில் நற்பெயர் காண்பர். மாணவர்கள் நன்றாக படிப்பர். வைரவர் வழிபாட்டால், இன்பம் பெருகும்.

## இடபம்

செவ்வாய், புதன், குரு, சுக்கிரன் நற்பலன் தருவர். எதிர்பார்த்த நன்மை முழு அளவில் கிடைக்கும். உடன்பிறந்தவரின் செயலைக் குறை சொல்ல வேண்டாம். வாகனத்தில் மிதவேகம் பின்பற்றவும். புத்திரரின் செயல்பாடு பெருமை தேடித்தரும். நிலுவைப் பணம் கிடைக்கும். மனைவி பெருந்தன்மை குணத்துடன் நடந்து கொள்வார். தொழில், வியாபாரத்தில் ஓரளவு இலாபம் கிடைக்கும். பணியாளர்கள் பணி இலக்கை விரைந்து நிறைவேற்றுவர். வெளியூர் பயணத்தால், இனிய அனுபவம் உண்டாகும். பெண்கள் தாராள பணச் செலவில் குடும்பத்தேவையை நிறைவேற்றுவர். மாணவர்கள் படிப்பில் ஆர்வமுடன் ஈடுபடுவர். செவ்வாயன்று, முருகனை வழிபடுங்கள்.

## மிதுனம்

ராகு, சந்திரன், சனீஸ்வரர் நன்மை தருவர். உறவினர்களின் உதவி கிடைக்கும். திட்டமிட்ட பணிகள் சிறப்பாக நிறைவேறும். வாகனத்தின் பயன்பாடு சிறப்பாக இருக்கும். பிள்ளைகளின் செயற்பாட்டில், தாமதம் உருவாகும். ஆரோக்கியத்தில் அக்கறை கொள்வீர்கள். வழக்கு விவகாரத்தில் அனுகூலம் கிடைக்கும். மனைவியின் சொல்லும், செயலும் குளறுபடியை ஏற்படுத்தலாம். தொழில், வியாபாரத்தில் முன்னேற்றம் பெற, கிடைத்த வாய்ப்பை பயன்படுத்துவர். பணியாளர்களுக்கு சலுகை கிடைக்கும். பெண்கள் வீட்டுச் செலவில் சிக்கனம் பின்பற்றுவர். மாணவர்கள் பெற்றோரின் அன்பை பெறுவர். திங்கட்கிழமைகளில், சிவனை வழிபட்டால் கஷ்டம் குறையும்.

## கடகம்

புதன், சந்திரன் அனுகூல அமர்வில் உள்ளனர். உங்கள் செயல்களில் மனிதாபிமானம் நிறைந்திருக்கும். விலகிச் சென்ற நண்பரும், அன்பு பாராட்டுவர். தாயின் அன்பு, ஆசி ஊக்கம் தரும். பூர்வ சொத்தில் ஓரளவு வருமானம் கிடைக்கும். பிள்ளைகளின் மனதில் தெளிவு ஏற்பட ஆலோசனை வழங்குவீர்கள். கடனில் பெரும்பகுதியைச் செலுத்துவீர்கள். தொழில், வியாபாரத்தில் இடையூறுகளை தாமதமின்றி சரி செய்வதால், வளர்ச்சி சீராகும். பணியாளர்களுக்கு, அதிர்ஷ்டவசமாக சலுகை கிடைக்கும். பெண்கள் மற்றவர் விடயத்தில் கருத்து சொல்ல வேண்டாம். மாணவர்கள் அக்கறையுடன் படிப்பதால் தேர்ச்சி கூடும். ராகு காலத்தில் துர்க்கையை வணங்கி, நன்மை பெறுங்கள்.

## சிங்கம்

சூரியன், செவ்வாய், குரு, சுக்கிரன் நன்மை தருவர். மனதில் ஆன்மிகச் சிந்தனை மேலோங்கும். அன்றாடப் பணிகளில் ஆர்வமுடன் ஈடுபடுவீர்கள். நண்பர்களிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். வாகனப் பயன்பாடு சிறப்பாக அமையும். பிள்ளைகள் விரும்பிய பொருள் வாங்கித் தருவீர்கள். ஆரோக்கியம் பலம் பெறும். அன்றாட வாழ்வியல் நடைமுறை சுமுகமாக அமையும். குடும்ப நலன் கருதி மனைவிக்கு உதவுவீர்கள். புதியவர்களின் ஆதரவால், தொழில், வியாபாரத்தில் வளர்ச்சி கூடும். வருமானம் அதிகரிக்கும். பணியாளர்கள் சிறப்பாக பணிபுரிந்து சலுகை பெறுவர். பெண்கள் இஷ்ட தெய்வ வழிபாட்டில் ஈடுபடுவர். மாணவர்கள் பாதுகாப்பற்ற இடங்களில் செல்வது கூடாது. சனிக்கிழமைகளில், சாஸ்தாவை வழிபட நன்மை பெருகும்.

## கன்னி

சுக்கிரன், சனீஸ்வரர், புதன், கேது நன்மை தருவர். பிறர் உங்களின் நல்ல குணத்தைப் பாராட்டுவர். பேச்சு செயலில் நிதானம் நிறைந்திருக்கும். உடன்பிறந்தவர்கள் உறுதுணையாக செயல்படுவர். குடும்பத் தேவையை தாராள பணச் செலவில் நிறைவேற்றுவீர்கள். பிள்ளைகள் படிப்பு, வேலைவாய்ப்பில் மேம்படுவர். ஆரோக்கியம் பலம் பெறும். உழைப்பில் ஆர்வம் அதிகரிக்கும். மனைவி குடும்பத்துக்குப் பெருமை சேர்ப்பார். தொழிலில் அபரிமிதமான வளர்ச்சியும், பணவரவும் உண்டாகும். பணியாளர்கள், நிர்வாகத்தின் நன்மதிப்பை பெறுவர். பெண்களுக்கு தாய் வீட்டு உதவி கிடைக்கும். மாணவர்கள் படிப்பில் தேர்ச்சி பெறுவர். கணபதியை வழிபட கவலை குறையும்.

## துலாம்

ராகு, சுக்கிரன், சந்திரனால் நன்மை உண்டாகும். செயல்களில் உற்சாகம் பிறக்கும். அன்புக்குரியவர்களின் பாராட்டு கிடைக்கும். குடும்பத்தில் ஒற்றுமை மேலோங்கும். பொது விடயத்தில் கருத்து சொல்ல வேண்டாம். பிள்ளைகள் அதிருப்தி எண்ணத்துடன் செயல்படுவர். வெளியூர் பயணத்தில் திடீர் மாற்றம் ஏற்படலாம். எதிரியிடம் விலகி இருப்பது நல்லது. சீரான ஓய்வு உடல் நலம் பாதுகாக்கும். மனைவி வழி உறவினர்களின் உதவி கிடைக்கும். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சி படிப்படியாக உயரும். பணியாளர் கூடுதல் வேலை வாய்ப்பை ஏற்றுக்கொள்வர். பெண்கள் விரும்பிய பொருள் வாங்குவர். மாணவர்கள் படிப்பில் சிறந்து விளங்குவர். செவ்வாய்க்கிழமை நரசிம்மரை வழிபடுங்கள்.

## விருச்சிகம்

சூரியன் குரு சுக்கிரன் அனுகூலமாக உள்ளனர். முக்கியமான பணிகளை ஆர்வமுடன் நிறைவேற்றுவீர்கள். அக்கம் பக்கத்தினர் அன்பு பாராட்டுவர். அறிமுகம் இல்லாதவருக்கு வீடு, வாகனத்தில் இடம் தர வேண்டாம். பிள்ளைகளின் எதிர்கால வாழ்வுக்கு, தேவையான பணிபுரிவீர்கள். பூர்வச் சொத்தில் வருமானம் அதிகரிக்கும். குடும்பத்துடன் சுற்றுலா சென்று வர திட்டமிடுவீர்கள். பகைவர் வியக்கும் அளவில் வாழ்க்கைத்தரம் உயரும். மனைவி உறுதுணையாக இருப்பார். தொழில், வியாபாரத்தில் வருமானம் உயரும். பணியாளர்கள் நிர்வாகத்தின் நன்மதிப்பை பெறுவர். பெண்கள் மகிழ்ச்சிகரமாக வாழ்வு நடத்துவர். மாணவர்கள் படிப்பில் முன்னிலை பெறுவர். வெள்ளிக்கிழமை, அம்பாளை வழிபட்டு நன்மை பெறலாம்.

## தனுசு

சுக்கிரன், செவ்வாய், கேது, சந்திரனால் நன்மை கிடைக்கும். இடம் சூழல் உணர்ந்து பேசுவீர்கள். செயல்கள் வெற்றி இலக்கை அடையும். வீட்டுச் செலவுக்கான பணத்தேவை அதிகரிக்கும். வாகனத்தில் மிதவேகம் பின்பற்றவும். பிள்ளைகளின் செயல்பாடு மகிழ்ச்சியளிக்கும். கொடுக்கல், வாங்கல் திருப்திகரமாக இருக்கும். மனைவியின் அன்பைக் கண்டு நெகிழ்ச்சி அடைவீர்கள். தொழில், வியாபாரத்தில் விடாமுயற்சியும், கடின உழைப்பும் தேவைப்படும். இலாபம் சுமாராகக் கிடைக்கும் பணியாளர்கள், நிர்வாகத்தின் வழிகாட்டுதல் தவறாமல் பின்பற்றவும். பெண்கள் சிக்கனத்தைக் கடைபிடிப்பர். மாணவர்கள் படிப்பு தவிர, பிறவிடயங்களில் ஈடுபட வேண்டாம். வியாழனன்று தட்சிணாமூர்த்தியை வணங்கி சிறப்பு பெறலாம்.

## மகரம்

குரு, சுக்கிரன், சனீஸ்வரர் நன்மை அளிப்பர். மனதில் தைரியம் அதிகரிக்கும். திட்டமிட்ட பணி நிறைவேறும். இஷ்ட தெய்வ அருள் துணை நிற்கும். நண்பர், உறவினர்களுக்கு உதவுவீர்கள். வீட்டில் மகிழ்ச்சி நிறைந்திருக்கும். வாகனப் பயணத்தில் நிதானமாக இருப்பது நல்லது. பிள்ளைகளால் பெருமை உண்டு. அவர்களால் மருத்துவச் செலவு ஏற்படலாம். குடும்பத்துடன் விருந்து, விழாவில் பங்கேற்பீர்கள். மனைவி உங்கள் கருத்துக்கு முக்கியத்துவம் தருவார். தொழில், வியாபார வளர்ச்சியால் வருமானம் அதிகரிக்கும். பணியாளர்களுக்கு சலுகை கிடைக்கும். பெண்கள், பிள்ளைகளின் நலனில் அக்கறை கொள்வர். மாணவர்கள் வெளியிடம் சுற்றுவதைக் குறைக்கவும். புதன்கிழமை, குலதெய்வத்தை வழிபட்டு, நன்மை பெறுங்கள்.

## கும்பம்

சுக்கிரன், புதன், சந்திரனால் நன்மை உண்டாகும். நிதானமுடன் செயல்படுவீர்கள். பணிகளில் ஆர்வமுடன் ஈடுபடுவீர்கள். உறவினர்களிடம் இருந்த கருத்து வேறுபாடு மறையும். வாகனத்தின் பயன்பாடு அதிகரிக்கும். பிள்ளைகளின் அறிவார்ந்த செயலால், பெற்றோருக்கு பெருமை தேடித் தருவர். நண்பருக்கு கடனாக கொடுத்த பணம் திரும்ப கிடைக்கும். மனைவி விரும்பிய பொருள் வாங்கித் தருவீர்கள். தொழில், வியாபாரத்தில் மிதமான இலாபம் கிடைக்கும். நிர்வாகச் செலவு அதிகரிக்கும். பணியாளர்கள் பணிச்சுமையைச் சந்தித்தாலும் வருமானம் கிடைக்கப் பெறுவர். பெண்கள் குடும்பநலனில் அக்கறை கொள்வர். மாணவர்கள் படிப் [illegible] சனீஸ் [illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மீனம்

சூரியன், புதன், குரு, ராகு நன்மை வாரி வழங்குவர். புதிய முயற்சிகளில் ஈடுபடுவீர்கள். அன்புக்கு உரியவரின் ஆலோசனை கிடைக்கப் பெறுவீர்கள். வாகனப் பயன்பாடு சிறப்பாக அமையும். பிள்ளைகளின் எண்ணங்களை உணர்ந்து இதமாக வழிநடத்தவும். பூர்வீகச் சொத்து மூலம் வருமானம் கிடைக்கும். சீரான ஓய்வு ஆரோக்கியத்தை பாதுகாக்கும். பிறருக்காக பொறுப்பு ஏற்க வேண்டாம். மனைவியின் குறையைப் பொறுத்துக் கொள்வது நல்லது. தொழில், வியாபாரத்தில் கடின உழைப்பால் வளர்ச்சி காண்பர். பணியாளர்களுக்கு சலுகை கிடைக்கும். பெண்கள், உறவினர் பிரச்சினையில் கருத்து சொல்ல வேண்டாம். மாணவர்கள் நன்றாக படிப்பர்.



# சிரியா: முடிவின்றித் தொடரும் போர்

ஐ.முபாரக்

உலகில் தற்போது இடம்பெற்று வரும் போர்களுள் மிகவும் கொடூரமான – அதிக சேதங்களை ஏற்படுத்தியதாக சிரியாவில் இடம்பெற்று வரும் உள்நாட்டுப் போரைக் க்ருத முடியும்.

சுமார் 5 வருடங்களாக இடம்பெற்று வரும் இந்தப் போரால் இதுவரை 2.5 இலட்சத்துக்கும் அதிகமானோர் உயிரிழந்துள்ளனர். ஒரு கோடி 10 இலட்சம் மக்கள் இடம்பெயர்ந்துள்ளனர். சுமார் 4 இல்ட்சம் மக்கள் பட்டினிச் சாவை எதிர்நோக்கியுள்ளனர்.

சிரியா ஜனாதிபதி பசர் அல் அசாத்தைப் பதவி கவிழ்ப்பதற்காகத் தொடங்கப்பட்ட இந்தப் போரில் இதுவரை எந்தத் தரப்பும் வெற்றி பெறவில்லை. தினம் தினம் உயிர்ச் சேதங்களையும் பொருள் சேதங்களையும் ஏற்படுத்திக் கொண்டிருக்கும் இந்தப் போரில் எந்தத் தரப்பும் வெல்ல முடியாமல் இருப்பதற்குக் காரணம், போரில் ஈடுபடும் இரு தரப்பும் சம பலத்துடன் காணப்படுவதுதான்.

சுமார் ஒரு இலட்சத்துக்கும் அதிகமான ஆள்பலத்துடன் பல்வேறு ஆயுதக் குழுக்கள் அமெரிக்காவின் உதவியுடன் சிரியா அரசுக்கு எதிராகப் போராடி வருகின்றன.

மறுபுறம், சிரியா அரசைக் காப் பாற்றுவதற்காக ரஷ்யா மற்றும் ஈரான் போன்ற நாடுகளும் ஹிஸ்புல்லாஹ் அமைப்பும் சிரியா ஜானதிபதி அசாத்துடன் இணைந்து போராடி வருகின்றன.

ஈரானின் ஆதரவில் சிரியாவுக்குள் களமிறக்கப்பட்டுள்ள ஈரானியத் துணைப் படை மற்றும் அந்த நாட்டு இராணுவத்தின் உதவியுடனும் ரஷ்யாவின் விமானத் தாக்குதலின் உதவியுடனும் சிரியப் படையினர் முன்னேறி வருகின்றனர்.

கடந்த வருடம் செப்ரெம்பர் மாதம்தான் ரஷ்யாவின் விமானத் தாக்குதல் தொடங்கப்பட்டது. உலக வல்லரசு நாடுகளுள் ஒன்றான ரஷ்யா, சிரியா அரசுடன் கை கோர்த்துள்ளதால் சிரியா அரசு தனது பலத்தை மீட்டுக்கொண்டது.

ரஷ்யாவின் விமானத் தாக்குதல்களின் உதவியால் சிரியப் படையினர் போராளிகளின் கட்டுப்பாட்டில் இருந்த பல இடங்களை மீளக் கைப்பற்றியுள்ளனர். மறுபுறம், அமெரிக்க ஆதரவு பெற்றுள்ள ஆயுதக் குழுக்களும் சிரிய அரச படைகளுக்கு எதிராக அதிக பலத்துடன் போராடி வருகின்றன.

சிரியப் போர்க் களத்தில் உலகின் இரு பெரும் வல்லரசு நாடுகளான ரஷ்யாவும் அமெரிக்காவும் எதிர் எதிர் நின்று போராடுவதால் நீயா, நானா என்ற போட்டி ஏற்பட்டுள்ளது.

உண்மையில், சிரியாவில் இடம்பெற்றுக் கொண்டிருப்பது சிரியா அரசுக்கும் ஆயுதக் குழுக்களுக்கும் இடையிலான போர் அல்ல. இரு பெரும் வல்லரசுகளான அமெரிக்காவுக்கும் ரஷ்யாவுக்கும் இடையிலான மறைமுகச் சண்டை.

இந்தப் போரில் எந்தத் தரப்பு வெல்கிறதோ அந்தத் தரப்புக்கு உதவிய வல்லரசு நாட்டுக்கே வெற்றி சொந்தம். இதனால், எது வல்லரசு நாடு என்று உலகம்



**இந்தப் போரை நிறுத்துவதற்காக 2012ஆம் ஆண்டு ஜூன் மாதமும் 2014 ஜனவரி மாதமும் போரில் ஈடுபடும் இரு தரப்புகளுக்கும் இடையில் ஜெனிவாவில் அமைதிப் பேச்சு நடத்தப்பட்டது. ஆனால், அவை எவையும் வெற்றி பெறவில்லை.**

அடையாளங் காண்பதற்கான ஒரு போராகவே இது அமைந்துள்ளது.

பல நாடுகளில் அமெரிக்க இராணுவம் நேரடியாகக் களமிறங்கிப் போராடி வருகின்ற போதிலும், சிரியா விவகாரத்தில் அமெரிக்கா அவ்வாறு நடந்துகொள்ளவில்லை. அங்கு போராடி வருகின்ற ஆயுதக்குழுக்களுக்கு ஆயுதங்களையும் ஏனைய உதவிகளையும் வழங்கியே இந்தப் போரில் கலந்துகொண்டுள்ளது.

கடந்த வருடம் ஒக்ரோபர் மாதம் சிரியா ஜனநாயகப் படை என்ற பெயரில் மற்றுமொரு ஆயுதக்குழுவை அமெரிக்கா உருவாக்கியது.

இவ்வாறு சிரிய ஜனாதிபதிக்கு எதிராக ஆட்பலத்தையும் ஆயுத பலத்தையும் அமெரிக்கா சிரிய மண்ணில் அதிகரித்துக் கொண்டே போகின்றது. மறுபுறம், ரஷ்யா, சிரியாவில் இரண்டு விமானத் தளங்களை நிறுவி அமெரிக்க ஆதரவு ஆயுதக் குழுக்களுக்கு எதிராக விமானத் தாக்குதல்களை நடத்தி வரு கின்றது.

இவ்வாறு இரண்டு வல்லரசு நாடுகளும் தங்களது போராட்டப் பலத்தை அதிகரித்துக்கொண்டு செல்வதால் சேதங்கள் அதிகரிப்பதைத் தவிர வேறு எந்த நன்மையும் ஏற்படவில்லை. இதனால், போர் நிறுத்தத்தை ஏற்படுத்துவதுதான் சரியான வழி என மேற்கு நாடுகளும் ஐ.நாவும் கருதின.

இந்தப் போரை நிறுத்துவதற்காக 2012ஆம் ஆண்டு ஜூன் மாதமும் 2014 ஜனவரி மாதமும் போரில் ஈடுபடும் இரு தரப்புகளுக்கும் இடையில் ஜெனிவாவில் அமைதிப் பேச்சு நடத்தப்பட்டது. ஆனால், அவை எவையும் வெற்றி பெறவில்லை.

இதனைத் தொடர்ந்து கடந்த மாதம் 29ஆம் திகதி மீண்டும் இரு தரப்பு களுக்கும் இடையில் ஜெனிவாவில் பேச்சு தொடங்கப்பட்டது. ஆனால், அந்தப் பேச்சும் எதுவித பயனையும் எட்டாது இந்த மாதம் 25ஆம் திகதிக்கு ஒத்திவைக் கப்பட்டுள்ளது.

சிரியா அரசு, மக்கள் மீதான தாக்குதல்களை நிறுத்த வேண்டும்; அரச படையின் முற்றுகைக்குள் சிக்கியுள்ள மக்களுக்கு உணவுப் பொருள்கள் செல்வதற்கு அரசு வழிவிட வேண்டும் போன்ற முன் நிபந்தனைகளை விதித்தே எதிர்க்கட்சிகள் பேச்சில் கலந்துகொண்டன. ஆனால், அரச தரப்போ பேச்சுக்கு முன் நிபந்தனை விதிப்பதை ஏற்கவில்லை. இதனால் இந்தப் பேச்சு ஒரு முடிவையும் எட்டாது இந்த மாதம் 25ஆம் திகதி வரை ஒத்திவைக் கப்பட்டுள்ளது.

பேச்சு ஒத்திவைக்கப்பட்ட மறுநாளே சிரியப் படையினர் மூன்று வருடங்களாக ஆயுதக் குழுக்களின் கட்டுப்பாட்டில் இருந்த, சியா முஸ்லிம்களின் முக்கிய நகரங்கள் பலவற்றைக் கைப்பற்றினர். ரஷ்ய விமானத் தாக்குதலின் உதவியு டன் சிரிய அரசு அந்த இடங்களை மீட்டது.

இன்னும் அதிகமான நிலங்கள் போராளிகளின் கட்டுப்பாட்டில் இருப்பதால் அவற்றையும் கைப்பற்றுவதற்காக சிரியப் படையினர் முன்னேறிக் கொண்டு இருக்கின்றனர்.

சிரியா இப்போது நான்கு பிரிவினரின் கட்டுபாட்டில் உள்ளது. சிரிய அரசின் கட்டுப்பாட்டில் ஒரு பகுதி, எதிர்கட்சிகள் மற்றும் அல் - கைதா சார்பு ஆயுதக் குழுக்களின் கட்டுப்பாட்டில் ஒரு பகுதி, குர்திஷ் போராளிகளின் கட்டுப்பாட்டில் ஒரு பகுதி மற்றும் ஐ.எஸ். அமைப்பின் கட்டுப்பாட்டில் ஒரு பகுதி என அந்த நாடு பிளவுண்டு கிடக்கின்றது.

இந்தப் பகுதிகள் அனைத்தையும் மீளக் கைப்பற்றுவது இலகுவான காரியம் அல்ல. அதற்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கையின்போது மேலும் உயிர்ச் சேதங்களை சிரியா சந்திக்க நேரிடும். சிரியாவில் தற்போதுவரை அதன் சனத்தொகையில் 50 வீதமானவர்கள் இடம்பெயர்ந்துள்ளனர். ஆகவே, இந்தப் போர் மேலும் தொடர்ந்தால் சிரியாவில் ஒருவரும் இல்லாத நிலை ஏற்பட்டுவிடும். இரு தரப்பினரும் அமைதிப் பேச்சில் கவனம் செலுத்துவதைவிட ஆயுதத் தீர்வில் அதிக கவனம் செலுத்துவதால் அழிவுகள் மேலும் அதிகரிக்கப்போவது நிச்சயமாகிவிட்டது.

போரில் ஈடுபட்டுவரும் இரு தரப்பினரில் ஒரு தரப்பு பலவீனமடைந்தால் மாத்திரமே அமைதிப் பேச்சும் விட்டுக் கொடுப்பும் சாத்தியப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொலித்தீன் பை ஆர்ஜென்ரீனா ஜெர்சியானது நேரில் அழைத்து அரவணைக்கும் மெஸ்ஸி



பொலித்தீன் பையொன்றை ஆர்ஜென்ரீனா கால்பந்து அணியின் உடைபோன்று அணிந்திருந்த மெஸ்ஸியின் தீவிர ரசிகனான ஆப்கானிஸ்தான் நாட்டின் ஐந்து வயதுச் ஏழைச் சிறுவனும் அவனை நேரில் பார்ப்பதற்கு மெஸ்ஸி விருப்பம் தெரிவித்தமையும் கால்பந்து உலகில் கடந்த வாரம் நடைபெற்ற நெகிழ்ச்சிச் சம்பவங்களாக அமைந்துள்ளன.
ஒரு காலத்திலே இங்கிலாந்தின் டேவிட் பெக்காமுக்கு தீவிர ரசிகர்கள் இருந்தனர். தற்போது கிரிஸ்டியானோ ரொனால்டோ, மெஸ்ஸி, நெய்மர் ஆகியோர் உலக புகழ்பெற்ற வீரர்களாக திகழ்ந்து வருகின்றனர். சில தீவிர ரசிகர்கள் வீரர்களைப் போலவே உடையணிவது, முடிவெட்டிகொள்வது, என அனைத்திலும் அவர்களை பின்பற்றுபவர்களாக இருப்பார்கள்.
அவர்களையெல்லாம் தூக்கி சாப்பிட்டுள்ளான் மெஸ்ஸியின் ரசிகரான ஆப்கானிஸ்தானின் 5 வயது சிறுவன் ஒருவன்.
ஆப்கானிஸ்தான் தலைநகர் காபூல் அருகேயுள்ள ஜஹோரியை என்ற கிராமத்தைச் சேர்ந்தவன் அஹ்மதி. 5 வயதுச் சிறுவனான இவன் மெஸ்ஸியின் தீவிர ரசிகன். இரவில் தூங்கிக்கொண்டிருக்கும்போது திடீரென தூக்கத்தில் இருந்து விழிக்கும் அஹ்மதி, மெஸ்ஸியிடம் செல்ல வேண்டும் என்று அழுவானாம். இந்நிலையில் ஒருநாள் தன் தந்தையிடம் தனக்கு மெஸ்ஸி அணிவது போன்ற ரீசேட் வேண்டும் என்று கேட்டு அடம்பிடித்துள்ளான். அவரது தந்தையோ, நாம் நகரத்தில் இருந்து மிகவும் தொலைவில் உள்ள குக்கிராமத்தில் இருக்கிறோம். எனவே ரீசேட் வாங்க வழியில்லை என்று தெரிவித்துள்ளார். இதனால் ஏமாற்றமடைந்த சிறுவன் தொடர்ந்து அழுதபடி இருந்துள்ளான். இதையடுத்து முர்டாஸாவை சமாதானப்படுத்த அவரது சகோதரர் ஒரு யோசனை செய்தார். அதன்படி ஆர்ஜென்ரீனா உதைப்பந்தாட்ட அணியின் உடையை போன்றுள்ள ஒரு பொலித்தீன் பையில் மெஸ்சியின் பெயரையும் அவரது எண்ணான 10 என்பதையும் வரைந்து அணிய கொடுத்துள்ளார்.
அதைப் பார்த்ததும் மகிழ்ச்சியடைந்த முர்டாஸா எப்போதும் அந்த பொலித்தீன் பையை அணிந்தப்படியே வலம்வருகிறார். இவரின் புகைப்படங்கள் சமூகவலைத்தளங்களில் காட்டுத்தீயாய் பரவின. சமூக வலைத்தளங்களினூடாக சிறுவனின் புகைப்படம் மெஸ்ஸியையும் சென்றடைந்துள்ளது. படத்தைப் பார்த்ததும் கண்கலங்கிய மெஸ்ஸி சிறுவனை சந்திக்க தான் விரும்புவதாகவும் அதற்கு ஏற்பாடு செய்து தருமாறும் ஆப்கானிஸ்தானின் கால்பந்து சம்மேளனத்தைக் கேட்டுள்ளார். மெஸ்ஸியின் அழைப்பால் இன்ப அதிர்ச்சியான ஆப்கானிஸ்தான் கால்பந்தாட்ட சம்மேளனமும் உடனடியாக உதவுவதாக அறிவித்துள்ளது. மெஸ்ஸி ஆப்கானிஸ்தான் வருவதற்கு பாதுகாப்புச் சிக்கல்கள் உள்ளமையால் மெஸ்ஸியின் நாடான ஆர்ஜென்ரீனாவுக்கு சிறுவனை அழைத்துச் செல்லத் திட்டமிட்டுள்ளதாக ஓர் தகவலும், மெஸ்ஸி ஸ்பெயினில் தற்பொழுது தொடர்களில் இருப்பதால் சிறுவனை ஸ்பெயினுக்கு அழைத்துச் செல்லவிருப்பதாக மற்றொரு தகவலும் வெளியாகியுள்ளன. பெரும்பாலும் ஸ்பெயினில் வைத்தே மெஸ்ஸி சிறுவனைச் சந்திப்பார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.
தன்னை விரும்பும் சிறுவர்களை தன்னிடத்தில் அழைத்து பரிசில்களை அள்ளி வழங்கும் வீரராக கிறிஸ்ரியானோ ரொனால்டோவே இதுவரை அடையாளம் காணப்பட்டிருந்தார். அந்த வரிசையில் தற்பொழுது மெஸ்ஸியும் இணைந்துள்ளார்.



பிரகாஸ்

# பிரேஸிலில் சிகா வைரஸ் தாக்கம் ஒலிம்பிக் தொடருக்கான சவாலே!



ஆபிரிக்காவிலேயே சிகா வைரஸ் ஆரம்பத்தில் கண்டறியப்பட்டு சிறிய அளவில்எச்சரிக்கை விடுக்கப்பட்டிருந்தது.

உலக சுகாதாரமும் ஆரோக்கியமும் சிகா வைரஸ் என்னும் தாக்கத்தினால் தற்பொழுது கேள்விக் குறியாகியுள்ளன. நுளம்பினால் பரவும் இந்த வைரஸுக்கு இலக்காக இருப்பவர்கள் கர்ப்பிணிப் பெண்களே. பிறக்கும் குழந்தைகளின் மூளை வளர்ச்சி, உடல் ஆரோக்கியம் என்பன இந்த வைரஸினால் பெரிதும் பாதிக்கப்படுகின்றன. அமெரிக்க நாடுகளிலேயே இதன் தாக்கம் பரவலாகவுள்ளது. அதிலும் குறிப்பாக பிரேஸில், அமெரிக்கா போன்ற நாடுகளில் தாக்கம் உச்சமாகவுள்ளது. விளையாட்டு உலகின் இந்த வருட அட்டவணையில் பிரேஸிலுக்கு மிகமிக முக்கிய இடமுண்டு. ஒலிம்பிக் தொடரே அவ்வாறு பிரேஸில் முக்கியம் பெறக் காரணமாக அமைந்துள்ளது. பிரேஸிலின் ரியோ டி ஜெனிரோ நகரில் நடத்தத் திட்டமிட்ட ஒலிம்பிக் தொடர் நடைபெறுவதில் தற்பொழுது புதிய சிக்கல்கள் எழுந்துள்ளன.
ஆபிரிக்காவிலேயே சிகா வைரஸ் ஆரம்பத்தில் கண்டறியப்பட்டு சிறிய அளவில் எச்சரிக்கை விடுக்கப்பட்டிருந்தது. ஆனால் நிலைமை கைமீறிப் போனதையடுத்து உலக சுகாதார ஸ்தாபனத்தால் சுவிற்ஸர்லாந்தில் கடந்த புதன்கிழமை நடத்தப்பட்ட அவசர கூட்டத்தின் அடிப்படையில் சர்வதேச சுகாதார அவசர நிலை பிரகடனம் செய்யப்பட்டுள்ளது. இதற்கு பிரதான காரணிகளாக பிரேஸில் அமெரிக்கா அமைகின்றன. பிரேஸிலில் கடந்த நான்கு மாதங்களில் மட்டும் 3ஆயிரத்து 700 பேர் குறித்த வைரஸின் தாக்கத்துக்கு உட்பட்டுள்ளதாக அறியவருகிறது. அமெரிக்காவில் அடுத்த வருடம் வரையில் 4 மில்லியன் மக்கள் சிகாவுக்கு இலக்காகலாம் என சுகாதார ஸ்தாபனம் எச்சரித்துள்ளது.
ரியோ ஒலிம்பிக் தொடருக்கு இன்னும் ஆறு மாதங்கள் மட்டுமே இருக்கின்ற நிலையில், ரியோ ஒலிம்பிக் தொடர் சிகா வைரஸினால் பாதிக்கப்படலாம் என்று இந்த வருடத்தின் ஆரம்பத்திலேயே எதிர்வு கூறப்பட்டது. இந்த எதிர்வுகூறல் நிஜமாகும் தருவாயில்; தற்பொழுது உள்ளது. ரஷ்யா, ஆஸ்திரேலியா நாடுகள் சிகா வைரஸின் தாக்கத்தால் ஒலிம்பிக் தொடரில் கலந்துகொள்ளாமல் விடுவது போன்ற வகையில் பரிசீலித்து வருகின்றன. இன்னும் சில நாடுகள் தமது வீர,வீராங்கனைகளை எச்சரிக்கையாக இருக்கும்படி அறிவுறுத்தியுள்ளன. ஒலிம்பிக் தொடருக்கான முற்பதிவுகள் மிகமிக மந்த கதியிலேயே நடைபெறுகின்றன என ரியோ ஒலிம்பிக் சம்மேளனம் அறிவித்துள்ளது. நிலைமை இவ்வாறு இருக்க தொடர் சிறிது அச்சமும் இன்றி திட்டமிட்டபடி நடைபெறும் என்கிறது பிரேஸில் ஒலிம்பிக் சம்மேளனமும் அந்த அரசும். அடுத்த சில மாதங்களுக்குள் சிகா வைரஸ் முழுதாக இல்லாமல் செய்யப்பட்டு சுகாதாரமான சூழலில் ஒலிம்பிக் தொடர் நடைபெறும் என்பது பிரேஸில் அரசின் கருத்தாக அமைந்துள்ளது.
உலக நாடுகள் பலவும் வைரஸுக்கான தடுப்பு மருந்தை தீவிரமாக ஆராய்ந்து வரும் நிலையில் அடுத்த சில மாதத்துக்குள் சிகா முற்றிலும் இல்லாமல் செய்யப்பட வேண்டும் என்பதே பலரதும் எதிர்பார்ப்பு. ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாதிகள் தமது பிரதான இலக்குகளில் விளையாட்டு நிகழ்வுகள் நடைபெறும் இடங்களையும் கொண்டிருந்தமையால் அவர்களின் அச்சுறுத்தலைத் தகர்த்து பலத்த பாதுகாப்பில் ஒலிம்பிக் தொடர் நடத்தப்படும் எனத் தெரிவித்த பிரேஸில் அரசு தற்பொழுது ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாதத்துக்கு எதிராக மட்டுமன்றி சிகாவுக்கு எதிராகவும் போரிட சித்தமாகியுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## நவநாகரீக கைப்பைகள்

பெண்களுக்கான நவநாகரீக பேஸ்கள் அறிமுகப்படுத்தப் பட்டுள்ளன. லெதரில் உலோக வடிவமைப்புகள் பொருத்தப் பட்டு இவை வடிவமைக்கப் பட்டுள்ளன. இவற்றின் விலை 1000 - 1200 ரூபாவாகும்.



## நேற்றைய கடலுணவு விலை நிலைவரம்

| | யாழ்ப்பாணம் | மன்னார் | கிளிநொச்சி | கொடிகாமம் | பருத்தித்துறை | சாவகச்சேரி | பாசையூர் |
|---|---|---|---|---|---|---|---|
| இறால் | 600 | 600 | 600 | 700 | 800 | 600 | 600 |
| நண்டு | 300 | 400 | 300 | 300 | 500 | 300 | – |
| கணவாய் | 600 | 600 | 500 | 500 | 600 | 500 | – |
| பாரை | 500 | 500 | 500 | 600 | 600 | 500 | 400 |
| சுறா | 500 | 500 | 600 | 800 | 650 | 600 | 550 |
| சீலா | 300 | 500 | 400 | 500 | 400 | 600 | 400 |
| விளை | 700 | 400 | 400 | 500 | 500 | 500 | 400 |
| முரல் | 300 | 400 | 350 | 400 | 400 | – | – |
| கும்பிளா | 400 | 350 | 300 | 400 | 350 | 400 | 300 |
| கிழாக்கன் | 500 | 800 | – | – | 500 | – | – |
| ஓரா | 400 | 400 | – | – | 400 | – | 400 |
| திரளி | 300 | 300 | 200 | 200 | 300 | – | 350 |
| நகரை | 250 | 300 | – | 200 | 400 | 300 | 350 |
| சூடை | 150 | 200 | 100 | 200 | 200 | 150 | 80 |
| ஓட்டி | 300 | 300 | 150 | – | 300 | 400 | 200 |
| திருக்கை | 150 | 250 | 200 | 300 | 300 | 200 | 150 |
| மதனம் | 150 | 200 | 180 | 300 | 300 | 300 | 300 |
| கொய் | 100 | 150 | 60 | 100 | 100 | 100 | – |
| பாலை | 450 | 200 | 250 | 400 | 400 | – | – |
| வாழை | 100 | 150 | 200 | 300 | 300 | 300 | 250 |



## நேற்றைய மரக்கறி விலை நிலைவரம்

| | மருதனார்மடம் | சாவகச்சேரி | சுன்னாகம் | நெல்லியடி | திருநெல்வேலி | கிளிநொச்சி | கொடிகாமம் | வவுனியா |
|---|---|---|---|---|---|---|---|---|
| முள்ளங்கி | 30 | 80 | 40 | 60 | 30 | 40 | 30 | 30 |
| கத்தரி | 120 | 120 | 120 | 120 | 80 | 80 | 80 | 40–50 |
| கரட் | 200 | 240 | 240 | 240 | 240 | 200 | 180 | 300 |
| மரவள்ளி | 40 | 50 | 40 | 40 | 40 | 40 | 35 | 35 |
| பயிற்றை | 120 | 160 | 120 | 180 | 200 | 120 | 150 | 200 |
| பாகல் | 100 | 120 | 80 | 100 | 100 | 140 | 90 | 120 |
| கருணைக்கிழங்கு | 70 | 80 | 80 | 70 | 60–70 | 60 | 60 | 50 |
| பெ.வெங்காயம் | 70 | 70 | 70 | 70 | 70 | 80 | 50 | 60 |
| சி.வெங்காயம் | 100 | 100 | 100 | 100 | 60 –80 | 80 | 65 | 80 |
| பூசணி | 30 | 70 | 40 | 70 | 80 | 80 | 50 | 65 |
| தக்காளி | 60 | 60 | 70 | 80 | 60 | 80 | 50 | 50 |
| வாழைக்காய் | 70 | 60 | 60 | 60 | 60 | 40 | 45 | 40 |
| கீரை | 30 | 20 | 40 | 10 | 30 | 20 | 10 | 30 |
| பொன்னாங்காணி | 40 | 40 | 30 | 40 | 30 | 30 | 15 | 10 |
| பச்சை மிளகாய் | 200 | 240 | 250 | 180 | 200 | 400 | 200 | 350 |
| புடோல் | 80 | 60 | 80 | 60 | 60 | 100 | 40 | 60 |
| கோவா | 80 | 120 | 80 | 100 | 70 | 100 | 80 | 90 |
| வெண்டி | 100 | 100 | 100 | 100 | 140 | 120 | 80 | 120 |
| போஞ்சி | 80 | 120 | 100 | 120 | 120 | 80 | 60 | 120 |
| லீக்ஸ் | 80 | 120 | 100 | 100 | 80 | 160 | 90 | 100 |
| தேங்காய் | 50 | 40 | 50 | 40-50 | 50 | 40 | 30–40 | 30 |
| உருளைக்கிழங்கு | 70 | 60 | 70 | 60 | 60–70 | 60 | 50 | 60–100 |
| தேசிக்காய் | 100 | 80 | 80 | 100 | 60 | 80 | 40 | 35 |
| வல்லாரை | 20 | 20 | 10 | 20 | 30 | 20 | 10 | 10 |
| கறிமிளகாய் | 200 | 240 | 200 | 180 | 200 | 200 | 180 | 300 |
| இராசவள்ளி | 150 | 140 | 160 | 100 | 120 | 120 | 90 | 80 |
| முருங்கைக்காய் | 1000 | 600 | 800 | 500 | 500 | – | 400 | 450 |



## பலாப்பழ தோசை



**தேவையான பொருள்கள்:**

பச்சை அரிசி - 1 கப்
ஏலக்காய் பவுடர் - 1 தேக்கரண்டி
பலாப்பழ துண்டுகள் - 2 கப்
வெல்லத்தூள் - 1 கப்
நெய் - தேவையான அளவு

**செய்முறை:**

முதலில் அரிசியை ஆறு மணி நேரம் தண்ணீரில் நன்றாக ஊற வைக்க வேண்டும். பின்னர் ஊற வைத்த அரிசியை உரலில் போட்டு ரவை போன்று அரைத்து கொள்ளவும்.

பிறகு வெல்லத்தையும், பலா பழத் துண்டுகளையும் உரலில் மையாக அரைக்கவும். இவற்றை அரிசி மாவுடன் நன்றாக சேர்த்து கலக்கி கொள்ள வேண்டும். அதில் ஏலக்காய் பொடியையும் சேர்த்துக் கொண்டு அசத்தலாம்.

அரை மணி நேரம் கழித்து, தோசை கல்லில், நெய் விட்டு தோசை போல் வார்த்து எடுத்துக் கொண்டு பரிமாறி னால் ருசியான தோசை ரெடி.

## சிறுகுறிப்புகள்

- குக்கரின் உள்ளே கறை படிந்தால் ஒரு பெரிய வெங்காயத்தை வெட்டி நன்கு தேய்த்தால் கறைகள் விட்டுவிடும்.
- பயறு வகைகள் புழுத்து போகாமல் இருக்க
- பயறு வகைகளை சிறிது விளக்கெண்ணெய் சேர்த்து கிளறி வைத்தால் பல நாள்கள் வரை புழுத்து போகாமல் இருக்கும்.
- வற்றல் குழம்பு சுவையாக இருக்க.
- வற்றல் குழம்பு செய்யும் போது கடைசியாக சிறிது மஞ்சள் பொடியும், மிளகுப்பொடியும் கலந்தால் சுவையுடன் இருக்கும்.
- ரொட்டி காய்ந்து போனால்.
- ரொட்டி காய்ந்து போனால் இட்லி பாத்திரத்தில் ஆவியில் வேக வைத்தால் புதிய ரொட்டி போல் மிருதுவாக ஆகிவிடும்.
- பூண்டை சுலபமாக உரிக்க..
- வெங்காயம், பூண்டை தண்ணீரில் தனித்தனியே போட்டு பிறகு உரித்தால் சுலபமாக உரிக்க வரும். கண் எரிச்சல் வராது.
- கோதுமையில் பூச்சி வராமல் இருக்க...
- கோதுமை உள்ள பாத்திரத்தில் ஒரு கொத்து வெந்தயக் கீரையை போட்டு வைத்தால் பூச்சிகள் வராது.
- பக்கோடா மொறுமொறுப்பாக இருக்க...
- பக்கோடா செய்யும் போது மொறுமொறுப்பாக இருக்க வேண்டுமானால் மாவைக் கலக்கும்போது சிறிதளவு நெய்யும், உப்பும், தயிரையும் சேர்த்துப் பாருங்கள். பக்கோடா மொறுமொறுப்பாக இருப்பதோடு ருசியாகவும் இருக்கும்.

## நாளை தை-25

திங்கட்கிழமை 08.02.2016
திதி: அமாவாசை மு.இ.09.26வரை
நட்சத்திரம்: திருவோணம் மா.06.10வரை
ராகுகாலம்: 08.05-09.35 வரை
சுபநேரம்: 12.35-02.05 வரை
மகோதய புண்ணிய காலம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா



**மேடம்:** மனதில் புத்துணர்ச்சி நிறைந்திருக்கும். தொழில் வளர்ச்சியால், இலாபம் அதிகரிக்கும். சுய கௌரவத்துக்காக தாராள அளவில் பணம் செலவழிப்பீர்கள். பெண்களின், கணவரின் அன்பைப் பெறுவர்.

**இடபம்:** செயலில் நிதானம் பின்பற்றுவது அவசியம். தொழிலில் உழைப்புகேற்ப ஆதாயம் கிடைக்கும். பெண்கள், வீட்டுச் செலவில் சிக்கனம் பின்பற்றுவது நல்லது. ஆரோக்கியத்தில் அக்கறை செலுத்தவும்.

**மிதுனம்:** உங்கள் கருத்தை நண்பர் ஏற்றுக்கொள்வார். தொழில், வியாபாரத்தில் முன்னேற்றம் உண்டாகும். இலாபம் திருப்தியளிக்கும். இஷ்ட தெய்வ வழிபாடு சிறக்கும். புத்திரர் விரும்பிய பொருள் வாங்கித் தருவீர்கள்.

**கடகம்:** பணிகளில் முழு மனதுடன் ஈடுபடுவீர்கள். தொழிலில் வியத்தகு வளர்ச்சியும், நற்பெயரும் வந்து சேரும். சேமிப்பை அதிகரிப்பீர்கள். குடும்பத்துடன் சுற்றுலா சென்றுவரத் திட்டமிடுவீர்கள்.

**சிங்கம்:** நண்பரிடம் எதிர்பார்த்த உதவி தாமதமாகும். தொழிலில் தடைகள் குறுக்கிடலாம். புதிய அணுகுமுறையால், சிரமம் சரிசெய்ய முயல்வீர்கள். பண விடயத்தில் விழிப்புடன் இருப்பது அவசியம்.

**கன்னி:** பணிகளில் கூடுதல் கவனம் தேவை. தொழிலில் மிதமான பணவரவு கிடைக்கும். வெளியூர் பயணத் திட்டத்தில் மாற்றம் உருவாகும். மாணவர்கள் அக்கறையுடன் படிப்பர்.

**துலாம்:** பகைவரின் கெடு செயலை முறியடிப்பீர்கள். தொழில் அபிவிருத்தியால் பணவரவும், நன்மையும் அதிகரிக்கும். பணியாளர்கள் சலுகை கிடைக்கப் பெறுவர். பெண்கள் வீட்டு உபயோகப் பொருள் வாங்குவர்.

**விருச்சிகம்:** அறிமுகம் இல்லாதவரிடம் நெருக்கம் வேண்டாம். தொழிலில் வருகிற இடையூறு தாமதமின்றி சரி செய்வது நல்லது. இலாபம் சுமார். பெண்களுக்கு வீட்டுச் செலவு அதிகரிக்கும். ஒவ்வாத உணவைத் தவிர்க்கவும்.

**தனுசு:** செயல்களில் நேர்த்தி நிறைந்திருக்கும். தொழிலில் வியத்தகு முன்னேற்றம் உண்டாகும். ஆதாயம் அதிகரிக்கும். குடும்பத்தில் சுப நிகழ்வு உண்டாகும். பெண்கள் ஆடை, ஆபரணம் வாங்கி மகிழ்வர்.

**மகரம்:** நண்பர்களின் கருத்துக்களை ஏற்கத் தயங்குவீர்கள். தொழிலில் பணிச்சுமை அதிகரிக்கும். பெண்கள் சேமிப்புப் பணத்தை, வீட்டுச் செலவுக்கு பயன்படுத்துவர். குடும்ப ஒற்றுமையில் அக்கறை காட்டுவது நல்லது.

**கும்பம்:** உறவினர் உதவி கேட்டு வருவர். தொழில், வியாபாரத்தில் தாராள பணவரவு கிடைக்கும். பணியாளர்கள் சிறப்பாகப் பணிபுரிந்து பாராட்டு, வெகுமதி பெறுவர். மாணவர்கள் ஆர்வமுடன் படிப்பர்.

**மீனம்:** சிலர் சுய இலாபத்துக்காக உங்களைப் புகழ்ந்து பேசுவர். தொழிலில் முதலீட்டை அதிகப்படுத்தி ஆதாயம் காண்பீர்கள். பணியாளர்கள் சலுகை கிடைக்கப் பெறுவர். குடும்பத்துடன் விருந்து, விழாவில் பங்கேற்பீர்கள்.

# பெரிய எதிர்பார்ப்புடன் பெங்களூர் நாட்கள்



மலையாள "பெங்களூர் டேஸ்" படத்தின் தமிழ் ரீமேக்கான "பெங்களூர் நாட்கள்" திரைப்படம் உலகம் முழுக்க பிரம்மாண்டமான முறையில் வெளியிடப்பட்டுள்ளது. பிரபல திரைப்பட தயாரிப்பு நிறுவனமான "பிவிபி சினிமா"தயரித்துள்ள "பெங்களூர் நாட்கள்" படத்தை தமிழகத்தில் மட்டும் 300 இற்கும் மேற்பட்ட தியேட்டர்களில் வெளியிட திட்டமிட்டுள்ளார்களாம்!. தமிழ்நாடு தவிர்த்து கர்நாடகா, கேரளா, மும்பை உட்பட இந்தியாவின் பல மாநிலங்களிலும் அதிக எண்ணிக்கையிலான தியேட்டர்களில் வெளியாகியுள்ள "பெங்களூர் நாட்கள்" அமெரிக்காவில் மட்டும் 35 தியேட்டர்களில் வெளியாகவிருக்கிறதாம். அதாவது உலகம் முழுக்க "பெங்களூர் நாட்கள்" திரைப்படம் 500 இற்கும் மேற்பட்ட தியேட்டர்களில் வெளியாகும் என்கிறனர்.



"பொம்மிரிலு" பாஸ்கர் இயக்கியுள்ள "பெங்களூர் நாட்கள்"படத்தில் ஆர்யா, பாபி சிம்ஹா, ராணா, சமந்தா, ஸ்ரீதிவ்யா, பார்வதி, ராய் லட்சுமி, சரண்யா பொன்வண்ணன், ரேகா முதலானோர் நடித்துள்ளனர். மலையாள "பெங்களூர் டேஸ்" படத்துக்கு இசை அமைத்த கோபி சுந்தரே "பெங்களூர் நாட்கள்" படத்துக்கும் இசை அமைத்துள்ளார். கே.வி.குகன் ஒளிப்பதிவு செய்துள்ளார்.

# எது முக்கியம்

**ஆசிரியர்:** உலகுக்கு முக்கியம் சூரியனா சந்திரனா?

**மாணவன்:** சந்திரந்தான் சார்!

**ஆசிரியர்:** எப்படி?

**மாணவன்:** சார் பகல்ல வெளிச்சம் இருக்கும் போது தான் சூரியன் ஒளி கொடுக்குது. ஆனால் சந்திரன் இராத்திரில வெளிச்சம் இல்லாத போது ஒளி கொடுக்குதுல்ல

**ஆசிரியர்:** ?!?!?!



படித்ததில் பிடித்தது







தன்னை அறிந்தவன்
"ஆசைப்படமாட்டான்"
உலகை அறிந்தவன்
"கோபப்படமாட்டான்"
இந்த இரண்டையும் உணர்ந்தவன்
::: கஷ்டப்படமாட்டான் :::

பேஸ் புக்கில் பிடித்தவை...

# சுடோக்கு எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 9 | 5 | | | 8 | | | 1 | |
| 7 | | 3 | 6 | | | | | 4 |
| | 8 | | | 3 | | | | |
| | | | | | | 1 | | 7 |
| | | | 9 | | 5 | | | |
| 3 | | 7 | | | | | | |
| | | | | 2 | | | 4 | |
| 8 | | | | | 6 | 5 | | 3 |
| | 7 | | | 4 | | | 8 | 9 |

நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 9 | 5 | 2 | 6 | 7 | 3 | 1 | 8 | 4 |
| 3 | 8 | 4 | 9 | 5 | 1 | 2 | 6 | 7 |
| 1 | 6 | 7 | 4 | 8 | 2 | 3 | 5 | 9 |
| 7 | 4 | 6 | 5 | 2 | 9 | 8 | 1 | 3 |
| 5 | 2 | 9 | 3 | 1 | 8 | 4 | 7 | 6 |
| 8 | 1 | 3 | 7 | 6 | 4 | 5 | 9 | 2 |
| 4 | 9 | 1 | 8 | 3 | 7 | 6 | 2 | 5 |
| 6 | 7 | 8 | 2 | 4 | 5 | 9 | 3 | 1 |
| 2 | 3 | 5 | 1 | 9 | 6 | 7 | 4 | 8 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1–9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3 ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்ப வற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்).

இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1–9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள்பெட்டிகளுக் குள்ளும் அவ்வாறே 1–9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும். தர்க்கரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது. 2005 இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

தமிழன் K@ish @radkrishvl · 5h
#வாழ்க்கை_டா
பேருந்தின் கடைசி சீட்டை போலவே வாழ்க்கை திடீர் திடீர் என்று தூக்கியடிச்சுது....

காட்டுப்பூச்சி™
அழகும் ஆசையும்
நிலையானதல்ல
காலங்கள் மாற அதுவும் மாறும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசியலமைப்பும் தமிழ் மக்களின் எதிர்பார்ப்பும்

(தொடர்ச்சி)

தமிழ் மக்கள் தங்கள் அமோக ஆதரவை வழங்கி ஆணை கொடுத்தனர்.

1833ஆம் ஆண்டு கோல்புறூக் ஆணைக் குழுவின் அரசமைப்பின் மூலம் இலங்கை ஒரே தேசமாக்கப்பட்டு ஒற்றையாட்சியின் கீழ் கொண்டு வரப்பட்டது. அதன் பின்பு கொண்டுவரப்பட்ட சோல்பரி அரசமைப்பு, 1972ஆம் ஆண்டின் குடியரசு அரசமைப்பு, 1978ஆம் ஆண்டின் அரசமைப்பு என அனைத்துமே ஒற்றையாட்சி முறையை மேலும்மேலும் வலுப்படுத்தும் வகையிலேயே அமைந்திருந்தன. ஏற்கனவே மேற்கொள்ளப்பட்ட தீர்வு முயற்சிகளான பண்டா-செல்வா ஒப்பந்தம், டட்லி-செல்வா ஒப்பந்தம், 13ஆவது திருத்தச் சட்டம் என்பன ஒற்றையாட்சி அமைப்பு என்ற கட்டமைப்புக்கு எந்தவித பங்கமும் வராமலே மேற்கொள்ளப்பட்டன. அவை எவையுமே நடைமுறைக்கு வரவுமில்லை. வந்ததாகக் கூறப்படும் 13ஆவது திருத்தமும் வெற்றி பெறவில்லை.

அப்படியான ஒரு நிலையிலேயே சமஷ்டிக் கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது. இது ஒற்றையாட்சி என்ற கட்டுக்கோப்புக்கு வெளியே இரு அதிகார அலகுகளின் இணைப்பாட்சி என்றே பொருள்படும். எனினும் சமஷ்டி என்ற சொல்லுக்குத் திட்டவட்டமான வரைவிலக்கணம் இருப்பதாகத் தெரியவில்லை. சோவியத் ஒன்றியத்தில் அமைக்கப்பட்ட பிரிந்துபோகும் உரிமையுடன் கூடிய சுயநிர்ணய உரிமை கொண்ட அதிகாரப் பிரிவுகளின் ஒன்றியம் முதற்கொண்டு மத்திய அரசின் கட்டுப்பாட்டுக்குள் சுற்றிவரும் இந்திய சமஷ்டி வரை சமஷ்டி என்றே அழைக்கப்படுகின்றன.

அப்படியான நிலையில் தமிழ் மக்கள் கோரும் சமஷ்டி எப்படியானது என்பதே கேள்வியாகும்.

திருமதி சந்திரிகா விஜயகுமார ரணதுங்க ஜனாதிபதியாகவும், ரணில் விக்கிரமசிங்க பிரதமராகவும் இருந்தபோதே விடுதலைப் புலிகளுக்கும் இலங்கை அரசுக்குமிடையே நோர்வேயின் அனுசரணையுடன் இனப்பிரச்சினைத் தீர்வு தொடர்பான பேச்சுக்கள் இடம்பெற்றன. இந்தத் பேச்சுக்கள் ஒன்றிணைந்த இலங்கைக்குள் வடக்குக் கிழக்கு இணைந்த உள்ளக சுயநிர்ணய உரிமையுடனான அதிகாரப் பரவலாக்கம் என்ற புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் அடிப்படையிலேயே இடம்பெற்றன. ஜனாதிபதியின் ஒப்புதலுடன், பிரதமரின் தரப்பினரால் பேச்சுக்கள் நடத்தப்பட்டன.

இன்றைய ஆட்சியில் அந்த இருவருமே முக்கியமானவர்களாகவும் தீர்மானிக்கும் சக்திகளாகவும் விளங்குகின்றனர். இது இன்றைய ஆட்சியில் நியாயபூர்வமான ஒரு தீர்வை எட்டக் கிடைத்திருக்கும் வாய்ப்பாகும். இந்த வாய்ப்பைப் பயன்படுத்தித் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அரசுக்கு அழுத்தங்களைக் கொடுக்க முடியும். அவர்களும் இலகுவாக மறுத்துவிடமுடியாது.

எவ்வளவோ உயிர் இழப்புகளின் பின்பும், பேரழிவுகளின் பின்பும் அதற்குக் குறைந்த எந்த ஒரு தீர்வையும் ஏற்றுக் கொள்வது அர்த்தமற்றதாகும். அது தமிழ் மக்களைப் பேரினவாதத்துக்கு விற்கும் ஒரு பெரிய மன்னிக்க முடியாத குற்றமாகும்.

ஆனால் இன்றைய அரசு, அரசியல் கைதிகள் விடுதலை, காணாமற்போனோர் விவகாரம், இடம்பெயர்ந்த மக்களின் காணிகளை மீளளித்தல், மீள் குடியமர்வு, இராணுவப் பிரசன்னத்தைக் குறைத்தல் போன்ற முக்கியமான விடயங்களில் நேர்மையாக நடந்து கொள்ளவில்லை. ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் கண்துடைப்பு நடவடிக்கைகள் மூலம் ஓர் ஏமாற்று அரசியலே தொடர்கிறது.

இந்தப் பிரச்சினையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு போதிய அழுத்தங்களைக் கொடுக்கவில்லை என்ற குற்றச்சாட்டும் சிலரால் முன்வைக்கப்படுகிறது. எமக்கிருக்கும் குறைந்தபட்ச வாய்ப்புக்களைப் பயன்படுத்தி பேரம் பேசுவதே தற்சமயம் அழுத்தம் கொடுக்கும் வழி என எமது மக்களால் உணரப்படுகிறது.

எனவே எந்தவித விட்டுக்கொடுப்புமின்றி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும், தமிழ் மக்களும் உறுதியாக நிற்பதன் மூலமே அரசமைப்பு மூலம் எமது உரிமைகளை நிலை நாட்டுவதற்கான ஓர் அடித்தளத்தை அமைக்க முடியும்.

மகிந்த குழுவினர் உட்பட இன ஒடுக்குமுறையாளர்கள், ஊழல்மோசடி சக்திகள் ஆகிய தரப்புகளை வலுவிழக்கச் செய்வதில் ஓர் இணக்கப்பாட்டு அரசியலையும், எமது நியாயபூர்வமான உரிமைகளைப் பெறுவதில் ஒரு விட்டுக்கொடுக்காத போராட்ட அரசியல் உறவையும் ஐக்கியமும் போராட்டமும் என்ற அடிப்படையில் ஐக்கிய தேசிய முன்னணி அரசுடனான உறவைப் பேணுவதே சரியான திசை மார்க்கமாகும்.

நிபந்தனையற்ற இணக்கப்பாடும், கண்மூடித்தனமான எதிர்ப்பும் தமிழ் மக்களை மீண்டும் அதல பாதாளத்தில் தள்ளும் நிலையையே உருவாக்கும்.

## சொற்சிலம்பம் - போட்டி இல: 406

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | | 3 | 4 | ■ | 5 | 6 |
| 7 | | ■ | 8 | | 9 | | |
| 10 | | 11 | | ■ | 12 | | |
| 13 | | | ■ | 14 | | | ■ |
| | ■ | 15 | 16 | | | ■ | 17 |
| ■ | 18 | | | | ■ | 19 | |
| 20 | | | ■ | 21 | 22 | | |
| 23 | | ■ | 24 | | | | ■ |

அனுப்புபவர் பெயர்:........................................

பூரணமான தபால் விலாசம்: ........................................

........................................

கையொப்பம்:........................................

### இடமிருந்து வலம்

1. ஓர் ஆச்சிரமம்
5. இரண்டு
7. யானை
8. பார்வையிட்டு அறியும் நிகழ்வு
10. பத்திரிகைகளின் ரசிகன்
12. வாழை நார்
13. பணம்
14. குழந்தை
15. இரப்பவன்
18. ஒன்றுக்கு ஈடாக மற்றொரு கோரிக்கை வைத்துப் பேசப்படும் பேரம்
19. இது குளிர்மை தரும் பானம்
20. கை
21. முதல் திதி
23. வான்
24. அன்பளிப்பு

### மேலிருந்து கீழ்

1. தொடர்பு பேணல்
2. சிறு ஓடம் போன்றது
3. புத்திரன்
4. வலிமை
5. கெட்ட பழக்க வழக்கம் உள்ளவன்
6. ஊதல்
9. காதல் வயப்பட்டவன்
11. திருமணம்
14. சொத்துப் பங்கீடு செய்யுமாறான கோரிக்கை
16. ஒரு குறியீடு
17. கூரிய தன்மை
18. பாதுகாப்பாக வைத்துப் பேண அமைப்பது.
19. ஒன்றோடு ஒன்று இடிபடுதல்
20. குரங்கு
22. ரசனைத் தன்மை

வாசகர்கள் மத்தியில் குறிப்பாக மாணவ, மாணவியர் மத்தியில் பொது உளச்சார்பு மற்றும் மொழி அறிவை வளர்த்து விடத் தூண்டுவதே இப்போட்டி நடத்தப்படுவதன் முக்கிய குறிக்கோள். ஒவ்வொரு போட்டியிலும் ஏராளமான வாசகர்கள் ஆர்வத்துடன் கலந்துகொள்வதுடன், அவர்களில் பெரும்பாலானோர் முற்றிலும் சரியான விடைகளை அனுப்பி வருவதால் பரிசுக்கும் பாராட்டுக்கும் உரிய அதிர்ஷ்ட சாலிகள் குலுக்கல் முறைமூலம் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 404இற்கான

சரியான விடைகள் வருமாறு:-

**இடமிருந்து வலம்**

(1) வளையாபதி (5)சதா (7)கடைக்குட்டி (9)வாதம் (11)குட்டை (12)சரை (13)உதடு (15)குடல் (16)மாரி (17)கடல் (19)மடம் (20)நண்பன் (22)தும்பிக்கை (23)தினை

**மேலிருந்து கீழ்**

(1)வனவாசம் (2)யாகம் (3)படை (4)திக்குதல் (5)சட்டை (6)தாடி (8)குட்டு (10)தரை (13)உடல் (14)பெரியன்னை (15)குடம்பி (16)மா (17) கடம் (18) ஆண் (19)மது (20) நகை (21)பதி

சொற்சிலம்பம் போட்டி தொடர்பான வாசகர்களது ஆலோசனைகளும் கருத்தில் எடுக்கப்படும்.

சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 404 இற்கான சரியான விடைகளை எழுதி அனுப்பியவர்களில் குலுக்கல் முறை மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் ஐந்து அதிர்ஷ்டசாலிகளது பெயர் விவரங்கள் வருமாறு:-

**1 ஆம் பரிசு**

வி.பத்மாவதி,
சம்புளியவத்தை,
வல்வெட்டித்துறை.

**2 ஆம் பரிசு**

குணராசா விஜிதன்,
6ஆம் வட்டாரம் குமுழமுனை,
முள்ளியவளை.

**3 ஆம் பரிசு**

இரஞ்சன் இரகுராம்,
அருணோதயம், நாவலடி,
புலோலி மத்தி, பருத்தித்துறை.

**4 ஆம் பரிசு**

செ.வசீகரன்,
இல.375,கொரவபத்தான வீதி,
இறம்பைக்குளம் வவுனியா.

**5 ஆம் பரிசு**

ந.ஜெயகணேசன்,
பண்டித்தாழ்வு, காரைநகர்.

**பாராட்டுப் பெறுவோர்**

லோ.கிருஷ்ணதாசன்,
ஏழாலை கிழக்கு,
ஏழாலை.

பா.கேதீஸ்வரி,
இல.67,கிருஸ்ணாநகர்,
முழங்காவில்

கா.பொ.கி.குலசிங்கம்,
5ஆம் வட்டாரம்,
யா/நயினாதீவு.

## போட்டி விதிகள்

1. வாசகர் எவரும் சொற்சிலம்பம் போட்டியில் கலந்து கொள்ளலாம்.
2. ஒருவர் எத்தனை கூப்பன்களையும் நிரப்பி அனுப்பலாம்
3. உதயனில் பிரசுரமாகும் கூப்பன்களே போட்டிக்கு ஏற்கப்படும்.
4. போட்டி தொடர்பாக ஆசிரியரின் தீர்ப்பே முடிவானதாகும்.
5. வெற்றி பெறும் முதல் ஐந்து அதிர்ஷ்டசாலிகளுக்கு முறையே ரூபா 300/=, ரூபா 250/=, ரூபா 200=, ரூபா 150/= ரூபா 100/= பணப் பரிசில்கள் வழங்கப்படும். அத்துடன் பாராட்டுப் பெறும் மூன்று அதிர்ஷ்டசாலிகளது பெயர் விவரங்களும் உதயனில் பிரசுரிக்கப்படும்.

சொற்சிலம்பம் போட்டி இல.406 பூர்த்தி செய்யப்பட்ட கூப்பன்கள் நியூ உதயன் பப்ளிக்கேஷன் (பிறைவேற்)லிமிட்டெட், இலக்கம் 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம், என்னும் முகவரிக்கு எதிர்வரும் புதன்கிழமைக்கு அடுத்து வரும் புதன்கிழமைக்கு முன்னர், (17.02.2016 ஆம் திகதிக்கு முன்னர்) கிடைக்கத் தக்கதாகத் தபாலட்டையில் ஒட்டி அனுப்பி வைக்கப்படவேண்டும்.

சொற்சிலம்பம் போட்டி இல.406இல் வெற்றி பெறுவோர்களது விவரம் 21.02.2016 ஞாயிறு உதயனில் பிரசுரிக்கப்படும்.

சொற்சிலம்பம் போட்டியில் கலந்து கொண்டு வெற்றியீட்டுவோருக்கான பரிசுக் காசோலைகள் வெற்றி பெற்றோரால் கொடுக்கப்படும் விலாசத்துக்கே அனுப்பி வைக்கப்படும். சரியான தபால் விலாசம் கொடுக்கப்படாமையால் சில சமயம் காசோலைகள் உரிய வெற்றியாளரைச் சென்றடையாமை அவதானிக்கப்பட்டுள்ளது. போட்டியில் கலந்து கொள்வோர் தத்தமது சரியான, முழுமையான தபால் விலாசத்தையும் குறிப்பிடுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள்.

சொற்சிலம்பம் போட்டி 404 இல் பரிசு பெற்றோருக்கான கொடுப்பனவுக் காசோலைகள் காலக் கிரமத்தில் அவரவர்களது விலாசத்துக்கு அனுப்பி வைக்கப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிர்ந்தது நிலம்; சரிந்தன மாடிக் கட்டடங்கள்

## தாய்வானின் தாய்னான் நகரில் நேற்றுப் பயங்கரம்







தாய்னான், பெப்.2
தாய்வானின் தாய்னான் நகரில் நேற்று அதிகாலை ஏற்பட்ட நிலநடுக்கத்தால் 17 அடுக்குமாடிக் கட்டடம் உள்ளடங்கலாக நான்கு பெரிய கட்டடங்கள் முற்றாக இடிந்து வீழ்ந்துள்ளன. மேலும் பல கட்டடங்கள் சேதமடைந்துள்ளன.

ரிச்டர் அளவுகோலில் 6.7 ஆகப் பதிவாகியுள்ள இந்த நிலநடுக்கம் வலது தாய்வான் நீரிணைக்கு அப்பால் உள்ள தென்கிழக்கு சீனாவின் ஃபுஜியான் மாகாணத்திலும், இந்தியாவின் பீகார் மாநிலத்தின் வடக்குப் பகுதியிலும் உணரப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.

நிலநடுக்கத்தால் குறைந்தது 7 பேர் கொல்லப்பட்டுள்ளனர். 10 வயது சிறுமி மற்றும் 40 வயதான நபர் ஒருவரதும் சடலங்கள் இதுவரை கண்டெடுக்கப்பட்டுள்ளன என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

துரிதமாக முன்னெடுக்கப்பட்டு வரும் மீட்புப் பணிகளில் இதுவரை 127 பேர் மீட்கப்பட்டுள்ளனர். இவர்களில் 30 க்கும் மேற்பட்டவர்கள் மருத்துவமனைகளில் சேர்க்கப்பட்டுள்ளனர் என்று மீட்புக் குழுவினர் தெரிவித்துள்ளனர்.

நிலநடுக்கத்தால் இடிந்து விழுந்துள்ள 7 மாடிக் குடியிருப்புத் தொகுதியில் இருந்து 36 பேர் பாதுகாப்பாக மீட்கப்பட்டுள்ளனர் என்று தெரிவிக் கப்படுகின்றது. மருத்துவமனையில் சேர்க்கப் பட்டு சிகிச்சை பெற்று வந்தோரில் மூவர் சிகிச்சைகள் பயனின்றி உயிரிழந்துள்ளனர் என்று உள்ளூர் ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

அதிகாலை 3.57 மணியளவில் எற்பட்ட இந்த நிலநடுக்கம் பிங்கித்துங் கவுண்டி நகரில் 115 கிலோமீற்றர் ஆழத்தில் மையம் கொண்டிருந்தது என்று சீன நிலநடுக்க வலையமைப்பு மையம் தெரிவித்துள்ளது.

இந்த நிலநடுக்கத்தின் மையப் புள்ளி 22.94 பாகை வட அகலக் கோட்டுக்கும் 120.54 பாகை கிழக்கு நெடுங்கோட்டுக்கும் இடையே அவதானிக்கப்பட்டுள்ளது என்றும் சீன நிலநடுக்க வலையமைப்பு மையம் மேலும் குறிப்பிட்டுள்ளது.

மீட்புப் பணிகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டு வருகின்ற நிலையில் உயிரிழந்தோரின் எண்ணிக்கை மேலும் அதிகரிக்கலாம் என அஞ்சப்படுகின்றது.

அதேவேளை தாய்லாந்தில் நிலநடுக்கத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு உதவ சீனாவின் மெயின்லண்ட் மாநிலம் விருப்பம் தெரிவித்துள்ளது. குறித்த மீட்பு நடவடிக்கையின் போது உதவிகள் தேவைப்பட்டால் தமக்கு உடனடியாக அறிவிக்குமாறு கேட்டுள்ளது.

அதேவேளை நேபாளத் தலைநகர் காத்மண்டுவில் நேற்றுமுன்தினம் இரவு 10.05 மணியளவில் நிலநடுக்கம் ஒன்று உணரப்பட்டுள்ளதோடு, இது ரிச்டர் அளவு கோலில் 5.2 ஆகப் பதிவாகியுள்ளது என்றும் காத்மண்டுவில் இருந்து 16 கிலோமீற்றர் தொலைவில் மையம் கொண்டிருந்தது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற)

# பேரவையின் இருட்டு......

## (தொடர்ச்சி)

அதற்குள் இந்த யோசனைகளை உள்ளடக்குவதா இல்லையா என்பதை கூட்டமைப்பின் தலைமைதான் தீர்மானிக்க வேண்டும். நான் இதனை தலைமைப் பீடத்திடம் வழங்குவேன்" என்று தெரிவித்தார்.

இதுகூட மாவையின் எச்சரிக்கையான பதில்தான். அவர் இவர்களின் யோசனையை நிராகரிக்கவும் இல்லை; ஏற்கவும் இல்லை. இது குறித்துக் கேட்டபோது கட்சியின் அந்த மூத்த உறுப்பினர் இப்படி விளக்கம் அளித்தார், "இவர்கள் பிள்ளையையும் கிள்ளி தொட்டிலையும் ஆட்டுவார்கள். அதனால் எச்சரிக்கையாக இருக்கவேண்டும். இப்போது தங்களை ஓர் அழுத்தக் குழுவாகப் பயன்படுத்துங்கள் என்று எங்களிடம் சொல்லிவிட்டு, பின்னர் மக்களிடம்போய் நாங்கள் எவ்வளவோ கேட்டோம்; பாருங்கள் கூட்டமைப்பு ஒரு சொற்பத்தைத்தான் பெற்றிருக்கிறது என்று மாற்றிச் சொல்லுவார்கள். அதனால் இவர்களின் சகவாசம் குறித்து எச்சரிக்கையாகவே இருக்கவேண்டும்" என்றார்.

### உத்தியோகபூர்வ பதில்

இந்தச் சந்திப்புக் குறித்து நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா உதயன் பத்திரிகையிடம் தெரிவித்ததாவது: தமிழ் மக்கள் பேரவையின் ஏழு உறுப்பினர்கள் வரை வந்து சந்தித்தனர். அவர்களால் வெளியிடப்பட்ட அரசமைப்பு யோசனை வரைவின் வெளியீட்டு விழாவுக்கு என்னை அழைத்திருந்தனர். அதில் நான் பங்கேற்கவில்லை. அதற்கான காரணத்தை அவர்களிடம் தெரிவித்திருந்தேன்.

யோசனைகளைத் தயார் செய்யும்போது அழைக்காமல், இப்போது எல்லாவற்றையும் முடித்துவிட்டு அழைக்கை யில் நான் பங்கெடுப்பது பொருத்தமாக இருக்காது என்று பதிலளித்திருந்தேன். இதன் பின்னர் என்னைச் சந்திக்கவேண்டும் என்று கேட்டிருந்தனர். அதற்கமையவே இந்தச் சந்திப்பு நடைபெற்றது.

நீங்கள்தான் மக்கள் பிரதிநிதிகள், இந்த அரசமைப்பு வரைவை நீங்கள்தான் கொண்டு செல்லவேண்டும் என்று என்னிடம் கேட்டுக் கொண்டனர். அத்துடன் தமது வரைவில் உள்ள யோசனைகளை கூட்டமைப்பு பயன்படுத்திக்கொள்ளலாம் என்றும் தெரிவித்தனர். தேவையான உதவிகளைச் செய்வதற்குத் தயாராக இருக்கின்றனர் என்றும் தெரிவித்தனர். எல்லாவற்றையும் செவிமடுத்த பின்னர் அவர்களுக்கு நான் பதிலளித்தேன். மக்கள் எங்களுக்கு ஆணை கொடுத்திருக்கின்றனர், அதற்கமைய நாங்கள் புதிய அரசமைப்பு வரைவைத் தயாரிப்போம் என்று அவர்களுக்குக் கூறினேன்.

இந்தச் சந்திப்பு நடக்கும்போது அவர்களது அரசமைப்பு வரைவை என்னிடம் தரவில்லை. சந்திப்பு முடிந்து இரண்டு மூன்று மணித்தியாலங்களின் பின்னர் அது எனக்குக் கிடைத்தது.

கூட்டமைப்பைத்தான் மக்கள் அங்கீகாரம் பெற்ற கட்சியாக தாங்கள் ஏற்றுக் கொள்கிறார்கள் என்று என்னிடம் தெரிவித்தனர்.

அரசமைப்பு வரைவில் அவர்களின் யோசனைகளை உள்ளடக்குவது தொடர்பில் கட்சியின் தலைமைப்பீடத்துடன் கதைத்துத்தான் எந்த முடிவையும் தெரிவிக்க முடியும் என்று அவர்களிடம் தெரிவித்தேன். இதன்போது, எமது தலைவர் இரா.சம்பந்தனைச் சந்திக்கவேண்டும் என்று கேட்டுக் கொண்டனர். அதற்குரிய ஏற்பாடுகளை செய்து தருகிறேன் என்று நான் கூறியிருக்கிறேன்– என்றார்.

இந்தச் சந்திப்புக் குறித்து இரு பகுதியினரும் தகவல்கள் எதனையும் வெளியிடவில்லை. குறிப்பாக பேரவையினர் இந்தச் சந்திப்புக் குறித்து மூச்சுக்கூடவிடவில்லை. சந்திப்புப் பற்றிய தகவல் ஊடகங்களில் வெளியான பின்னர்கூட, அது பற்றிய தன்னிலை விளக்கத்தை பேரவை தனது இணையத் தளத்தில் வெளியிடாமல் தொடர்ந்து அமைதி காத்து வருகிறது. அப்படி நடந்துகொண்ட போதும், பேரவை சாதாரண மக்களுக்காகவே இயங்குவதாக அது தெரிவிப்பது வேடிக்கைக்குரியது.

### திணறும் பேரவை

தீர்வு விடயத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு அழுத்தம் கொடுப்பதற்காக 'குடைச்சல் கொடுப்பதற்காக' கூட்டமைப்பின் அதிருப்தியாளர்களை உள்ளடக்கி உருவாக்கப்பட்ட பேரவை அவசர அவசரமாக அரசமைப்புக்கான உள்ளடக்க யோசனை ஒன்றை உருவாக்கி வெளியிட்டது. எனினும் அதன் பின்னர் அந்த யோசனைகளை வைத்து என்ன செய்வது என்று தெரியாத நிலையில், தற்போது அதனை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிடம் கொடுப்பதைத் தவிர வேறு வழிவகை எதுவும் இல்லாத நிலையில் திணறி நிற்கிறது என்பதையே இந்தச் சந்திப்பு உணர்த்துகிறது.

பேரவையை மக்கள் இயக்கமாக மாற்றப்போவதாக அதைச் சார்ந்தவர்கள் கூறி நின்றபோதும், அது உள்ளடக்கத்திலும் உருவத்திலும் பண்பியல்புகளிலும் பிரமுகர்கள் சபையாகவே இயங்குகின்றது. அரசமைப்பு யோசனை முன்மொழிவுகளைத் தயாரிப்பதற்கான அதன் உப குழுவில் முதலமைச்சர் விக்னேஸ்வரனுக்கு இரண்டு பிரதிநிதிகளை நியமிப்பதற்கான இடங்கள் ஒதுக்கப்பட்டன. ஆனால் அந்தப் பிரதிநிதிகள் நியமிக்கப்படாமலேயே அமர்வுகள் நடத்தி முடிக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டதுடன் யோசனைகளும் வெளியிடப்பட்டு விட்டன. இதில் மக்களின் யோசனைகள் எவையும் கேட்கப்படவும் இல்லை, உள்ளடக்கப்படவும் இல்லை. அனைத்தும் இரகசியமான முறையிலும் மக்களுக்கு வெளிப்படுத்தப்படாமலும் 'வெளிப்படையற்ற தன்மையுடனும்' நடத்தி முடிக்கப்பட்டுள்ளன.

இந்த யோசனைகள் மக்கள் முன்வைக்கப்பட்டு அவர்களின் கருத்துக்கள் பெறப்பட்டு திருத்தப்படும் என்று பேரவையினர் அறிவித்திருந்தனர். ஆனால், அத்தகைய நடவடிக்கைகள் எடுக்கப்படுவதற்கு முன்னரே (மக்களிடம் கொண்டு சென்று விவாதங்களை நடத்துவதற்கு எந்த நடவடிக்கையும் முன்னெடுக்கப்படவில்லை என்பதும் கூர்ந்து கவனிக்க வேண்டியது) தமிழரசுக் கட்சியிடம் கையளிக்கப்பட்டு, அதனை அரசுடனான பேச்சுக்களில் பயன்படுத்தும்படி கோரிக்கை விடுக்கப்பட்டிருக்கிறது. எனவே இனி வரும் நாள்களில் இந்த யோசனைகள் குறித்து மக்கள் கருத்துக்கள் அறியப்படும் என்றோ, அந்த யோசனைகளின் அடிப்படையில் அவை திருத்தப்படும் என்றோ நம்புவதற்கு இடமேதும் இல்லை.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org


# புற்றுநோய் சிகிச்சையின் போது ஏற்படும் பக்கவிளைவுகளை கண்டு அஞ்சாதீர்கள்



மருத்துவர் ச.முருகானந்தன்

எமது நாட்டில் மிகச் சவாலான தொற்றாநோயாக புற்றுநோய் இருக்கின்றது. நோயாளி நீண்ட நாள்கள் துன்பத்தை அனுபவிப்பதும் (MORBIOITY) சாவடைவதும் (MOTALITY) இன்னமும் கட்டுப்படுத்த முடியாத அளவிலேயே இருக்கின்றது. நவீன மருத்துவ விஞ்ஞானிகள் புற்று நோய்ச் சிகிச்சைக்காக புதுப்புது சக்தி வாய்ந்த வெற்றிகரமான மருந்துகளையும், சிகிச்சை முறைகளையும் கண்டு பிடித்துள்ள இன்றைய நிலையில் புற்றுநோய் குணமாக்கக்கூடிய நோயாக உள்ளது. எனினும் நோயை இனம்காண்பதில் ஏற்படும் தாமதமே சிகிச்சை வெற்றியளிக் காமைக்குக் காரணமாக உள்ளது. எந்த ஒரு புற்று நோயையும் ஆரம்பத்தில் இனம் கண்டு கொண்டால் நூற்றுக்கு நூறு வீதம் குணமாக்க முடியும். எனவே புற்றுநோய் பற்றிய விழிப்புணர்வும், துரிதமான மருத்துவ ஆலோசனை களையும் புற்று நோயிலிருந்து காத்திட உதவும்.

புற்றுநோய் எந்த வயதினருக்கும் ஏற்படலாம். ஆண் பெண் என இருபாலாரையும் பீடிக்கலாம். பரம்பரையில், இரத்த உறவில் புற்றுநோய் உள்ளவர்கள் கவனமெடுக்க வேண்டும். சில புற்று நோய்களுக்கு பரம்பரைத் தொடர்பு இருப்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. புகைத்தல், கதிர் வீச்சுக்களுக்கு உள்ளாதல், இரசாயனப் பொருள்களின் தாக்கம், சில தொற்றுக்கள், அழற்சிகள் என்பன புற்றுநோய் ஏற்படுவதைத் துரிதப்படுத்தக் கூடியவை. எனினும்





புற்றுநோய் ஒரு தொற்று நோயல்ல. எமது உடலிலுள்ள கலங்கள் உருவாகும்போது கட்டுப்பாடின்றி வளர்வதே (MULTIPLICATION WITHOUT DIFFERENTIA TION) புற்று நோயாகும். இந்த வளர்ச்சியானது பாதிக்கப்பட்ட உறுப்பை மாத்திரமன்றி அருகிலிருக்கும் உறுப்புக்களுக்கு நாளாவட்டத்தில் ஊடுருவிப் பாதிக்கும். முதல்வகைப் புற்றுநோயில் நான்கு கட்டங்கள் உண்டு. எவ்வளவு முன்னராக நோயை இனம் காண்கின் றோமோ சிகிச்சை அளித்தல் எவ்வளவு இலகுவாகின்றது. நோய் பரவப் பரவ சிகிச்சையும் சிரமமாகின்றது. புற்றுநோய் ஓர் உறுப்பிலிருந்து காவப்பட்டு அதன் துகள்கள் குருதிச்சுற்றின் ஊடாகவோ, நிணநீர் ஊடாகவோ இன்னொரு

*கதிரியக்க சிகிச்சை எந்த இடத்தில் செய்கிறோமோ அதைப் பொறுத்தே பக்க விளைவுகள் இருக்கும். குறிப்பிட்ட இடத்தில் தோல் முதலில் சிவந்து பின்னர் கறுப்பாவதுடன் புண்ணும் வரலாம்.*

உறுப்பை அடைந்து, அங்கு ஏற்படுத்தும் இரண்டாம் வகை புற்றுநோய் (META STASIS) மிகவும் ஆபத்தானது. இதைக் குணமாக்குவது கடினம். பல சந்தர்ப்பங்களில் இந்த நிலையை அடைந்த நோயாளர்கள் சிகிச்சை பயனின்றி இறந்து போவதுண்டு. புற்று நோய்ச் சிகிச்சைக்குப் பல நவீன மருந்துகள் அறிமுகமாகியுள்ளபோதிலும் அவற்றின் விலை மிகவும் கூடுதலாக உள்ளது.

புற்றுநோய்க்கான சிகிச்சையில் மூன்று வகைகள் உண்டு. சத்திர சிகிச்சை, மருத்துவ சிகிச்சை, கதிரியக்க சிகிச்சை என்பன அவையாகும். நோயின் நிலையைப் பொறுத்து வைத்தியர்கள் சிகிச்சை முறையைத் தேர்ந்தெடுப்பர். நோய் பரவியுள்ள நிலையைப் பொறுத்து கூட்டு சிகிச்சை அளிக்கப்படும். முதலாம் நிலையில் உள்கட்டிகள் குறிப்பிட்ட உறுப்பை மட்டும் பாதித்திருப்பின் அறுவைச் சிகிச்சை மட்டும் போதுமானது. அறுவைச் சிகிச்சையை அடுத்து அந்த நோய் அருகிலுள்ள உறுப்புக்களில் தொடர்பு பட்டிருப்பின் அதை பரிசோதனை மூலம் இனங்காண முடியும். அவ்வாறானவர்களில் அறுவைச் சிகிச்சையை அடுத்து கதிரியக்க சிகிச்சை அல்லது மருத்துவ சிகிச்சையை மேற் கொள்வார்கள். தீவிரமாகப் பரவியிருப்பின் கதிரியக்க மற்றும் மருத்துவ சிகிச்சையை கூட்டாக மேற்கொள்வார்கள்.

கதிரியக்க சிகிச்சையின் போதும் மருத்துவ சிகிச்சையின் போதும் சிலபக்க விளைவுகள் ஏற்படுவ துண்டு. இந்தப் பக்க விளைவுகள் தீவிரமாக இருப்பதாலும் அழகைப் பாதிப்பதாலும் பலர் இந்தசிகிச்சைகளுக்கு அச்சப்படுகின்றார்கள். ஆனால் இந்தப் பக்க விளைவுகள் நிரந்தரமானவை அல்ல.



தற்காலிகமாக ஏற் படும் இந்த அசௌகரியங்களும், பாதிப்புக்களும் சிகிச்சை முடிவடைந்த பின்னர் படிப்படியாக நீங்கிவிடும். நோயாளி பழைய நிலைக்கு திரும்புவார். எனவே பக்கவிளைவுகளுக்கு அஞ்சி சிகிச்சையை ஒருபோதும் இடைநிறுத்தி விடாதீர்கள்.

அறுவைச் சிகிச்சையைப் பொறுத்தவரை இயன்றவரை பாதிப்புற்ற பகுதிகளையே அகற்றுவார்கள். எனினும் நோய் கூடுதலாகப் பரவியிருப்பின், அகற்றுவதால் தீமை இல்லை எனின் அந்த உறுப்பை முற்றாக அகற்றிட நேரிடும். உதாரணமாக மார்பகப் புற்றுநோய் தீவிரமாகப் பரவியிருப்பின் முலையை முற்றாக அகற்ற வேண்டி ஏற்படுவதுண்டு. சில பகுதிகள் அகற்றப்பட்டால் அவற்றின் அவசியம் கருதி செயற்கையான உறுப்புக்களின் பகுதிகள் பொருத்தப்படுவதுண்டு. உதாரணமாக உணவுக் குழாயில் ஏற்படும் களப்புற்று நோயாளியின் நீண்ட களத்தில் ஒருபகுதி கட்டாயமாக நீக்கப்பட வேண்டுமாயின் அந்தப் பகுதியை அகற்றி அதற்குப் பதிலாக செயற்கையாக குழாயைப் பொருத்த முடியும். வாய்ப்புற்று நோயுள்ளவர்களில் சொக்கின் பகுதிகள் அகற்றப்பட்டால் நோய் குணமான பின்னர் பிளாஸ்ரிக் சத்திர சிகிச்சை மூலம் ஓரளவு பழைய நிலைக்குக் கொண்டு வரமுடியும்.

கதிர் வீச்சு சிகிச்சையின்போது நவீன முறையில் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு மட்டுமே மிகத் துல்லியமாகக் கதிர்வீச்சு அளிக்கப்படுகின்றது. தற்போது செய்யப்படும் கதிர்வீச்சுச் சிகிச்சையின் முன்னதாக சீ.ரீ.ஸ்கான் எடுக்கப்பட்டு, முப்பரிமாண முறையில் இனம்காணப்பட்டு பாதிப்புற்ற பகுதிகளுக்கு மாத்திரமே கதிர் வீசப்படுகிறது. இந்த நவீன தொழில்நுட்பத்தினால் நல்ல நிலையில் உள்ள கலங்கள் பாதுகாக்கப்பட்டு புற்றுக் கட்டிகளின் கலங்கள் மட்டுமே எரிக்கப்படுகின்றன. கதிரியக்க சிகிச்சை எந்த இடத்தில் செய்கிறோமோ அதைப் பொறுத்தே பக்க விளைவுகள் இருக்கும். குறிப்பிட்ட இடத்தில் தோல் முதலில் சிவந்து பின்னர் கறுப்பாவதுடன் புண்ணும் வரலாம். எனினும் இந்தக் கதிரியக்க சிகிச்சை தொடர் முடிவடைந்த பின்னர் பக்கவிளைவுகள் நீக்கி அவ்விடம் பழைய நிலைமைக்கு திரும்பிவிடும். கதிர் வீச்சு சிகிச்சைப் பகுதியில் ஏற்படும் தழும்புகளுக்கு வைத்தியரின் ஆலோசனை இன்றிக் கிறீம், எண்ணெய் என்பவற்றைத் தடவக்கூடாது.

கீமோ திரபி (CHEMOTHERAPY) என்றழைக்கப்படும் மருத்துவ சிகிச்சையைத் தொடர்ந்து மேற்கொள்ளும்போது பல தற்காலிகமான பக்கவிளைவுகள் ஏற்படுவதுண்டு. இவற்றைத் தாங்கமுடியாமல் பலர் குழப்பமடைவதுண்டு. மருத்துவ சிகிச்சை மேற்கொள்ளும் புற்று நோயாளர்களுக்கு உடல் சோர்வு, பசியின்மை, மெலிதல், வாந்தி, குமட்டல், வாய்ப்புண், முடி உதிர்தல், இரத்தக் கலங்கள் குறைவடைதல், களைப்பு என்பன ஏற்படலாம். முடி கொட்டுதலைக் கண்டு பல பெண் நோயாளிகளும் குழப்பமடைவார்கள் கண்டிப்பாக மொத்த சிகிச்சை முடிவடைந்து சில வாரங்களில் தலைமுடி முழுவதும் பழைய நிலைக்கு வளர்ந்து இயல்பாகி விடும். உடலில் ஏற்படும் சில பக்கவிளைவுகளை பரிசோதனைகள் மூலம் இனங்கண்டு சிகிச்சை அளிக்கப்படுவதால் இரத்த அணுக்கள் குறைவடைவது பற்றி அஞ்சாதீர்கள். இரத்தக் கலங்கள் அதிகமான அளவில் வீழ்ச்சியடைந்தால் பதிலீடு செய்யப்படுவதுடன் மருந்து ஏற்றும் இடைவெளிகளை அதிகரிப்பார்கள். புற்றுநோய்ச் சிகிச்சையின்போது ஏற்படும் பக்க விளைவுகளைக் கண்டு பயப்படாதீர்கள். அவை தற்காலிகமானவை. மீளக் கூடியவை என்பதை உறுதியாகக் கூறுகின்றேன்.

புற்றுநோய்க்கு கூட்டு சிகிச்சை மேற் கொள்ள வேண்டி ஏற்பட்டால் உடல் நிலைதேறி பழைய நிலைக்கு மீள்வதற்கு சில மாதங்கள் ஏற்படலாம். நோயாளியினதும், அவரது குடும்பத்தவரினதும் மனவுறுதி மிகவும் முக்கியம். குழப்பமடைந்திருக்கும் நோயாளிக்கு மனத் தைரியமூட்டல் அவர்களது கடமையாகும். சிலருக்கு, குறிப்பாக நோய் தீவிரமாக பரவியுள்ளவர்களுக்கு சில எதிர் பாராத பக்கவிளைவுகள் ஏற்படுவதுண்டு. இன்னும் சிலரில் மருந்துகள் நல்ல கலன்களையும் பாதிப்பதால் சில பக்க விளைவு ஏற்படலாம். இவ்வாறானவர்களில் சிகிச்சை நீண்டகாலம் தொடர வேண்டியிருக்கும். மனத்தைரியத்தை இழக்காமல் சிகிச்சையைத் தொடர வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT

# அமலமரித் தியாகிகள் துறவறசபை ஆரம்பிக்கப்பட்டு

# 200 ஆண்டுகள் நிறைவு



அருள்திரு ரூபன் மரியாம்பிள்ளை
ஊடக விரிவுரையாளர் – யாழ். பல்கலைக்கழகம்

*அமலமரித் தியாகிகள் துறவறசபையினர் தமது சபை ஆரம்பிக்கப்பட்ட 200ஆவது ஆண்டு (1816-2016) நிறைவை கடந்த மாதம் 25ஆம் திகதி யாழ். அடைக்கல அன்னை ஆலயத்தில் யாழ்.ஆயர் மேதகு யஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகை தலைமையில் திருப்பலி ஒப்புக்கொடுத்து கொண்டாடியதையொட்டி இந்தக் கட்டுரை பிரசுரமாகிறது.*

இந்த ஆக்கம் அமல மரித்தியாகிகளின் யாழ். மாகாண முதல்வர் எட்வின் வசந்தராஜா அ.ம.தி. அடிகளார் மற்றும் றமேஸ் அ.ம.தி. அடிகளார் ஆகியோர் வழங்கிய தகவல்களில் இருந்து ஆக்கப்பட்டது.

**200ஆண்டு கால நீண்ட சரித்திரம்**

உலகின் 5 கண்டங்களில் சீனா உட்பட 71 நாடுகளில் இன, மத, மொழி நிற வேறுபாடுகளைத் தாண்டி கடந்த 200 ஆண்டுகளாக (1816 - 2016) அமலமரித் தியாகிகள் துறவறசபையினர் பணியாற்றி சாதனை படைத்துள்ளனர். குரிசுச்சுவாமி என அன்றும் அமலமரித்தியாகிகள் (அ.ம.தி) என இன்றும் அன்பாக அழைக்கப்படும் அமலமரித் தியாகிகள் துறவற சபையினர் யாழ். மாகாணத்தில் கடந்த 168 ஆண்டுகளாக மேய்ப்புப்பணி - கல்விப்பணி - சமூகப்பணி - மனித நேயப்பணி எனப் பன்முகப்பட்ட பணிகளை ஆற்றிப் பெருமையோடு தலை நிமிர்ந்து நிற்கின்றனர். இவ்வேளையில் முதலில் அமல மரித்தியாகிகளின் உயர் தலைவர் மேதகு லூயி லோகன் அ.ம.தி. அடிகளாரையும் அவரோடு இணைந்து பணியாற்றும் அனைத்துலக அமல மரித்தியாகிகள் துறவறசபைக் குருக்களையும் வாழ்த்தி தொடர்பணி சிறக்க ஆசீர் கூறுவோம்.

**அமலமரித் தியாகிகள் துறவறசபை நிறுவுநர்**

இயூஜின் டி மசெனட் செல்வம் மிக்க பிரபுக்கள் குடும்பத்தில் பிறந்து (1782) பிரான்சிய புரட்சியில் புடமிடப்பட்டு (1789) திருச்சிலுவையை உற்று நோக்கி மனமாற்றம் அடைந்து (1807) குருவாகத் திருநிலைப்படுத்தப்பட்டு (1811) துறவற சபையை நிறுவி (1816) ஆயராகி (1837) இறைவனோடு இணைந்து (1861) புனிதராகி(1995) இன்று 71 நாடுகளில் ஏறக்குறைய 4 ஆயிரம் அமல மரிப் பணியாளர்களினால் இன்றும் வாழ்கிறார்.

**ஏழைகளுக்கு நற்செய்தி நவில**

ஏழைகளுக்கு நற்செய்தி நவில என்னும் விருது வாக்குடன் மறைபரப்புப் பணியை மகாஞான ஒடுக்க மறை உரை மூலம் போதிப்பதையே தலையான பணியாகக் கொண்டு பன்முகப்பட்ட பணிகளைச் சமய, சமூக மற்றும் வரம்புகளைக் கடந்து மனிதம் என்ற பரந்த பாதையில் பணியாற்றுபவர்கள் இவர்கள். யாழ். அப்போஸ்தலிக்க ஆளுநர் ஆயர் மேதகு பெற்றக்கினி ஆண்டகையின் அழைப்பை ஏற்று ஆசியாவில் தமது பணியை ஆரம்பிக்கும் முதல் நாடாக இலங்கை காலித்துறை முகத்தில் 1847இல் கால் பதித்து யாழ். நோக்கி பயணித்தனர் அமலமரித்தியாகிகள். இவர்களைத் தொடர்ந்து ஜரோப்பிய நாடுகளில் இருந்து பல நூற்றுக்கணக்கில் மறைபரப்புத் தாகத்தோடு ஈழமண்ணை நோக்கி வருகை தந்தனர். தேவை எங்கோ சேவை அங்கே என்ற நோக்குடன் மறைபரப்புப் பணியாளர்களாகக் கடல்கடந்த பயணம் மேற்கொண்ட இந்த வெள்ளைக்கார சுவாமிமார் தம் தாய் தந்தை - உற்றார் உறவினர் - சுற்றம் சூழல் - சொந்த வீடு தாய் நாடு என அனைத்தையும் துறந்து முன்பின் தெரியாத புதிய பணிக்களம் நோக்கி வந்தனர். புதிய மண் - புதிய மக்கள் - புதிய மொழி - புதிய கலாசாரம்-புதிய காலநிலை - புதிய உணவு - புதிய வாழ்க்கை முறை என அனைத்துமே புதியதாய் அமைந்த போதும் அர்ப்பணிப்பு மிக்க பணியை ஆற்றத் தொடங்கினர். வளங்களும் வசதிகளும் உள்ள பூமியில் இருந்து அடிப்படை வசதிகளே அற்ற ஒரு பூமிக்கு வந்து அவர்கள் வாழ்ந்த தியாக வாழ்வும் - கிறிஸ்தவத்திற்கு சான்று பகரும் அர்ப்பண வாழ்வும் - பேசிய கொச்சைத் தமிழும் வீதியில் அவர்களைக் கண்டாலும் முழங்காலில் இருந்து சுவாமி இயேசுக்கிறிஸ்துவைத் துதிக்க என வணக்கம் செலுத்த வைத்தது. அவர்கள் பேசிய அந்த கொஞ்சும் தமிழை பேசிக்காட்டுவோர் இன்னும் நம் மத்தியில் உள்ளனர். அவர்கள் இறந்து போன போது இந்த மண்ணே தம் சொந்த மண் என இங்கேயே புதைக்கப்பட்டபோது துறவறத்திற்கும் அர்ப்பணத்திற்கும் அவர்கள் ஆழ்ந்த அர்த்தம் கொடுத்தார்கள். ஆயரின் கட்டளையை சிரமேற் கொண்டு - மறைமாவட்டத்திற்கு அடித்தளமிடல் - சுதேச குருக்களை உருவாக்கல் - புதிய பணித் தளங்களை அமைத்தல் என மேய்ப்புப்பணி - கல்விப்பணி - சமூகப்பணி - மனித நேயப்பணி எனப் பன்முகவடிவப் பணிகளை ஆற்றி யாழ். மறைமாவட்டத்திற்கு முகம் கொடுத்தவர்கள் இவர்கள். இவ்வாறு வாழ்ந்து இறந்து போன அமலமரித் தியாகிகள் சபையைச் சேர்ந்த இந்த வெள்ளைக்கார சுவாமிமாரையும் அவர்களோடு இணைந்த மற்றைய சுதேச குருக்களையும் மறந்துவிட முடியாது. அவர்கள் ஆன்மா அமைதியில் இளைப்பாறட்டும்

2002ஆம் ஆண்டு முதல் யாழ்ப்பாண மாகாணம் 1847ஆம் ஆண்டு இலங்கை மாகாணம் என்ற நிர்வாகக் கட்டமைப்பில் பணியாற்றிய சபை காலப்போக்கில் தமிழ், சிங்களம் என்ற மொழி அடிப்படையில் யாழ்ப்பாணம், கொழும்பு மாகாணங்களாக பிரிக்கப்பட்டது. 1987ஆம் ஆண்டு யாழ்ப்பாணம் துணை மாகாணமாக்கப்பட லூயி பொன்னையா அ.ம.தி. அடிகளார் (1987 - 1991) தலைமைப் பொறுப்பை ஏற்றுக் கொண்டார். 2002ஆம் ஆண்டு யாழ்ப்பாணம் மாகாண அந்தஸ்துப் பெற முதல் மாகாண முதல்வராக ஜீவாப்போல் அ.ம.தி. அடிகளார் (1999-2005) பொறுப்பேற்றுக் கொண்டார். தொடர்ந்து போருக்கு பிற்பட்ட காலப் பகுதியில், இன்று யாழ். அமலமரித் தியாகிகளின் பணி பரந்து வளர்ந்து புது வடிவம் பெற்றிருக்கின்றது எனலாம். யாருமற்ற சிறுவருக்கான இல்லமான அன்பகம் முழங்காவிலில் இயங்குகின்றது. கொழும்புத்துறை சிறிய பெரிய குருமடங்களுக்கான கட்டட வசதிகள் விஸ்தரிக்கப்பட்டு கட்டட அமைப்பைக் காட்டிலும் பயிற்சியும் உருவாக்கமுமே முக்கியம் என்பதில் கவனம் செலுத்தப்படுகின்றது. அமலமரித் தியாகிகளினால் பராமரிக்கப்பட்ட பங்குகளில் கவனம் செலுத்தப்பட்டு சாட்டி சிந்தாத்திரைமாதா யாத்திரைத்தலம் - விளான் - அமதிபுரம் - கொக்கிளாய் நாயாறு - தச்சனா மருதமடு - கனகராஜன் குளம் - இலுப்பைக் குளம் - நிலாவெளி - சாம்பல் தீவு-கப்புத்தளை - லுனுகலை - அக்குறஸ - தெனியாய என இவர்களின் பங்குப் பராமரிப்புப்பணி பரந்து விரிந்திருக்கின்றது. வவுனியாவில் அமதி அகம் எனும் பெயரில் மறை உரைப்பணியை ஆற்ற மறை உரைஞர் குழு உருவாக்கப்பட்டிருக்கின்றது. யாழ்ப்பாண வைத்தியசாலையில் ஆரம்பிக்கப்பட்ட ஆன்மிகப்பணி; கிளிநொச்சி, வவுனியா, மன்னார் ஆகிய வைத்தியசாலைகளில் விரிவுபடுத்தப்பட்டிருக்கின்றது. யாழ்ப்பாண வைத்தியசாலை கட்டட அமைப்பும் பணிமுறையும் வளப்படுத்தப்பட்டிருக்கின்றது. உளவளத் துணைப்பணி முன்னுரிமைப் படுத்தப்பட்டு யாழ். வன்னி மாவட்டங்களில் புது வடிவுடன் ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றது. யாழ்ப்பாணத்தில் சுகவாழ்வு நிலையம், வளர்பிறை, பருத்தித்துறையில் அஞ்சலி அகம், முல்லைத்தீவில் அமைதித் தென்றல் என உள வளத் துணைப் பணி பன்முக வடிவமெடுத்திருக்கின்றது. யாழ்ப்பாணம் - முல்லைத்தீவு - கிளிநொச்சி - வவுனியா - மன்னார் ஆகிய இடங்களில் சமாதானத்துக்கும் நல்லிணக்கத்துக்குமான பணியகம் அமைக்கப்பட்டு சமாதானம் தொடர்பான கல்வி வழங்கப்பட்டு வன்முறையில்இருந்துஅமைதி வழிக்குத் திரும்பும் வழிகாட்டற் பணி மேற்கொள்ளப்பட்டிருக்கின்றது. மன்னாரில் ஞானோதயம் எனும் பெயரில் குருக்கள் துறவியர் பொது நிலையினருக்கான இறையியல் ஆன்மிக உருவாக்கல் பணி தொடங்கப்பட்டிருக்கின்றது. திருகோணமலையில் அமலஉதயம்எனும்பெயரில் கல்விப் பணிக்கான களம் அமைக்கப்பட்டிருக்கின்றது. திருகோணமலை புனித சூசையப்பர் கல்லூரி பொறுப்பெடுக்கப்பட்டதோடு யாழ்ப்பாணம் - மன்னார் - கிளிநொச்சி - முல்லைத்தீவு - திருகோணமலை ஆகிய மாவட்டங்களில் ஏறக்குறைய 10 அமலமரித்தியாகிகள் பாடசாலையில் கல்விப்பணி ஆற்ற வழி செய்யப்பட்டிருக்கின்றது. கோப்பாயில் சங்கமம் எனும் பெயரில் ஆன்மிக குணமாக்கல் வழிபாடுகளும் கருத்தரங்குகளும் சிறுவர் மற்றும் இளைஞர்களுக்கான கல்வியூட்டற் பணிகளும் நடைபெறுகின்றது. கிளிநொச்சியில் ஒப்ரெக் என்னும் பெயரில் தொழில்சார் பயிற்சிகள் மேற்கொள்ள வசதி செய்யப்பட்டிருக்கின்றது. மாங்குளத்தில் அமதிக்கரங்கள் எனும் பெயரில் மாற்று வலுவுள்ளோர்க்கான நலவாழ்வு மற்றும் புனர் வாழ்வுப்பணிகள் மேற்கொள்ள வழி செய்யப்பட்டிருக்கின்றது. கிளிநொச்சியில் அன்னை இல்லம் கல்விவள நிலையமாக இயங்குகின்றது. இதற்கு லொபறா நவீன நூலகம் வலுச்சேர்க்கின்றது. கொக்கிளாய்-நாயாறு பங்கில் அமதிக்களம் கடல் - கமத் தொழில் செய்பவர்களுக்கான கருத்துரைகளையும் வழிகாட்டல் பயிற்சிகளையும் வழங்குகின்றது. மன்னார் தச்சனா மருதமடு பங்கு- முள்ளிக்குளத்தில் அமல அருவி வளர்ந்தோருக்கான ஆங்கிலம் - கணினி - அறிவைக் கொடுக்கின்றது. அமதிபுரப் பங்கு - ஸ்கந்தபுரத்தில் அமதி வனம் சமூக மேம்பாட்டை வழங்கும் நிலையமாக இயங்குகின்றது. உள்நாட்டில் மட்டுமல்ல பிரான்ஸ் - நோர்வே - டென்மார்க் - இத்தாலி - லண்டன் - யேர்மனி போன்ற வெளிநாடுகளிலும் யாழ் அமலமரி தியாகிகளின் பணிக்களங்கள் பரந்திருக்கின்றன.

**200 ஆண்டின் நிறைவின் மகிழ்வில்**

யாழ். மாகாண முதல்வர் எட்வின் வசந்தராஜா அ.ம.தி. அடிகளாரிடம் (2014 முதல்) கேட்டபோது அமலமரித் தியாகிகள் சபையினரின் இந்த மகிழ்வான நேரத்தில் மாகாணத் தலைமைப் பொறுப்பை ஏற்றிருப்பது இறை வனின் செயல் என மகிழ்வோடு ஏற்றுக் கொள்கிறேன் என்றார். காலத்தின் தேவைகளுக்கேற்ப நிறுவுநரின் நோக்கை நிறைவு செய்யும் இப்பணியாளர்களின் சவால்கள் தான் என்ன? உலகளாவிய ரீதியல் மாறி வரும் உலகில் குறிப்பாக லத்தீன் அமெரிக்க நாடுகளின் புதிய ஏழை களுக்கு சபை நிறுவுனரின் நோக்கிற்கு அமைய தம் பணியை புதிய வடிவங்களில் முனைப்புடன் செயலாற்றவேண்டும். ஈழமண்ணில் கடந்த 30 ஆண்டு காலப்போரின் பின்னர் இவர்கள் இன்று ஆற்றிவரும் சிறப்புப் பணிகள் போற்றுதற்குரியது. இப்பணிகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டு இரக்கத்தின் ஆண்டில் இன்னும் அர்ப்பணிப்புடன் ஆற்ற வாழ்த்துவோம்

அமலமரித்தியாகிகளின் பணி யாழ். மாகாணத்திலும் தமிழ் பேசும் மக்கள் மத்தியிலும் இன்னும் உலகம் முழுவதும் காலத்தின் தேவைகளுக்கேற்ப இறைவனால் வழிநடத்தப்பட இறைவரம் வேண்டுவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கண்டியில் நடைபெற்ற எம்.ஜி.ஆர். விருது வழங்கும் நிகழ்வில் ஆன்மிக எழுத்தாளர் இராசையா ஸ்ரீதரன் கௌரவிக்கப்பட்டார். (ஐ)





சாவகச்சேரி வர்த்தக உரிமையாளர் கூட்டுறவுச் சங்கத்தின் அங்குரார்ப்பண நிகழ்வு தென்மராட்சி கலாமன்றத்தில் அண்மையில் நடைபெற்றது. (ஐ)



மார்க்கண்டு சுவாமிகள் சபையால் கடந்த தைப்பூசத் தினத்தன்று நயினை நாகபூசணி அம்மன் ஆலயத்தில் யாழ். பல்கலைக்கழக இந்து நாகரிகத்துறைத் தலைவர் பேராசிரியர் மா.வேதநாதனின் சித்தர் சித்தாந்தம் எனும் நூலின் இரண்டாம் பதிப்பு வெளியிட்டு வைக்கப்பட்டது. (ஐ)







கைதடி நவீல்ட் பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டியில் இடம்பெற்ற வீதியோட்ட நிகழ்வு. (ஐ)



குருநகர் புதுமை மாதா ஆலயத்தின் வருடாந்த திருவிழாவின்போது இடம்பெற்ற தேர்ப்பவனி. (ஐ-51)





யாழ்.புனித றோக்ஸ் வித்தியாலயத்தின் பெற்றோர் சந்திப்பு அதிபர் ஆ.சூசைநாதன் தலைமையில் அண்மையில் நடைபெற்றது. (ஐ)







ஸ்கந்தவரோதய ஆரம்பப் பாடசாலையின் இல்ல மெய்வன்மைப் போட்டி அண்மையில் பாடசாலை அதிபர் வ.நந்தீஸ்வரன் தலைமையில் நடைபெற்றது. நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட நாடாளுமன்ற உறுப்பினர் த.சித்தார்த்தன் கட்டடத்தின் பெயர்ப் பலகையைத் திரைநீக்கம் செய்து வைத்தார். (ஐ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT



கொல்லங் கலட்டி பிள்ளையார் ஆலயத்துக்குப் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட சித்திரத் தேர் வெள்ளோட்ட விழா கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. (ஐ-86)



வவுனியா வடக்கு ஒலுமடு அ.த.க.பாடசாலையின் வருடாந்த இல்ல திறனாய்வுப் போட்டி பாடசாலையின் அதிபர் விமலேந்திரன் தலைமையில் நடைபெற்றது.



வவுனியா திருநாவற்குளம் உமாமகேஸ்வரன் முன்பள்ளியின் கால் கோள் விழா முன்பள்ளி ஆசிரியை திருமதி மீரா குணசீலன் தலைமையில் சிறப்பாக நடைபெற்றது. (ஐ)




மடு கல்வி வலயத்துக்கு உட்பட்ட பண்டிவிரிச்சான் பாடசாலைக்கு குடிநீர் தாங்கி அமைப்பதற்கு வடக்கு மாகாண கிராம அபிவிருத்தி அமைச்சர் பா.டெனீஸ்வரன் 2015 ஆம் ஆண்டுக்கான பிரமாண அடிப்படையிலான மூலதன நன்கொடை நிதியை பாடசாலையின் பிரதி அதிபரிடம் கையளித்தார். (ஐ)



கொக்குத்தொடுவாய் பாடசாலையின் விளையாட்டு விழா பாடசாலை அதிபர் என்.விஜயரத்தினம் தலைமையில் நடைபெற்றது. (ஐ)



வடக்கு மாகாண கிராம அபிவிருத்தித் திணைக்களத்தால் புனர்வாழ்வு பெற்ற போராளிகள் மற்றும் உயிரிழந்த போராளிகளின் குடும்பங்களுக்கான வாழ்வாதார உதவி வழங்கும் நிகழ்வு மன்னார் மாவட்டத்தில் உள்ள அமைச்சரின் உப அலுவலகத்தில் இடம்பெற்றது. (ஐ)





இரத்தினபுரி கரித்தாஸ் சர்வமத சகவாழ்வு சமயத்தலைவர்கள் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு பகுதியில் உள்ள கியூடெக் கரித்தாஸ் சர்வமத குழுக்களை சந்தித்ததுடன் சர்வமத தலங்களையும் தரிசித்தனர். (ஐ)



வட்டுக்கோட்டை இந்து வாலிபர் சங்கத்தால் முல்லைத்தீவு மாவட்ட துணுக்காய் கல்வி வலயத்தைச் சேர்ந்த மாணவர்களுக்கு 2 ஆம் கட்டமாக சைக்கிள்கள், பாடசாலைப் புத்தகப்பைகள் மற்றும் காலணிகள் அன்பளிப்பாக வழங்கப்பட்டன. (ஐ)



மட்டுப்படுத்தப்பட்ட வங்காலை புனித அந்தோனியார் மீனவர் கூட்டுறவுச் சங்கத்துக்கு வடக்கு மாகாண மீன்பிடி அமைச்சர் பா.டெனீஸ்வரன் மாகாண குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்தி நன்கொடை நிதியில் இருந்து சங்கத்துக்கு கதிரைகளை வழங்கி வைத்தார். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





வவுனியா செட்டிகுளம் வீரபுரம் மணிவாசகர் மகாவித்தி யாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டியில், நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன், வடக்கு மாகாணசபை உறுப்பினர்கள் ம.தியாகராசா, எம்.பி. நடராஜா உட்பட்டோர் கலந்து கொண்டனர். இதன் போது வடக்கு மாகாணசபை உறுப்பினர் ம.தியாகராசா மாகாண சபை பிரமாண அடிப்படையிலான நிதியொதுக்கீடு ஊடாக, பாண்ட் வாத்தியக்குழுவுக்கான இசைக்கருவிகளை மகா வித்தியாலயத்தின் அதிபர் நித்தியானந்தனிடம் கையளித் தார். (ஐ)



யாழ்ப்பாணப் பல்கலைக்கழக சட்டத்துறையின் பத்தாவது ஆண்டு நிறைவு விழா மற்றும் 'நீதம் மலர்' வெளியீட்டு விழாவை முன்னிட்டு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக சட்ட மாணவர் சங்கத்தினால் வடமாகாண பாடசாலைகளுக்கிடையிலான மாபெரும் விவாதச் சமர் கடந்த வாரம் யாழ். பல்கலைக்கழகத்தில் நடத்தப்பட்டது. இதில் ஐந்து மாவட்டங்களிலும் இருந்து சுமார் பதினைந்து பாடசாலைகள் பங்குப்பற்றியிருந்தன. (ஐ)




சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தினர் வீதிப் போக்குவரத்து செயற்பாட்டில் ஈடுபடும் பாடசாலைகளின் மாணவர்களுக்கு சீருடைகளை வழங்கி வருகின்றனர். இதன் பிரகாரம் சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி மாணவர்களுக்கு வீதிப் போக்குவரத்து சீருடைகளை வழங்கினர். (ஐ)



தெல்லிப்பழை முத்து மாரியம்மன் ஆலயத்தில் கடந்த சனிக்கிழமை பௌர்ணமி தினத்தை முன்னிட்டு நடைபெற்ற விசேட பூசை வழிபாடுகள் மற்றும் குங்குமம் அபிசேகத்தில் சுமங்கலிகள் கலந்து கொண்டுள்ளதையும் படங்களில் காணலாம். (ஐ-86)





ஊரெழு கணேசா வித்தியா சாலையின் இல்ல மெய் வன்மைப் போட்டி கடந்த வாரம் பாடசாலை மைதானத்தில் அதிபர் திருமதி க.திருச் செல்வி தலைமையில் இடம் பெற்றது. இந்த நிகழ்வின் பிரதம விருந்தினராக வட மாகாண சபை உறுப்பினர் பாலசந்திரன் கஜதீபன் கலந்துகொண்டார். (ஐ)





நல்லூர் மங்கையர்க்கரசி வித்தியாலயத்தில் பரிசளிப்பு விழா நிகழ்வில், முதன்மை விருந்தி னராக பழைய மாணவர் பிரம்மஸ்ரீ.சர்வேஸ வரஐயர் பத்மநாதசர்மா கலந்து கொண்டார். நிகழ்வில், வருடத்துக்கான சிறந்த மாண வனுக்கான விருது வழங்கப்பட்டது. (ஐ)




வட்டுக்கோட்டை இந்து வாலிபர் சங்கத்தால் மட்டக்களப்பு மாவட்டத்தைச் சேர்ந்த யாழ். பல்கலைக்கழக முதலாம் வருட கலைப்பிரிவு மாணவிக்கு மடிக்கணினி அன்பளிப்பாக வழங்கப்பட்டது. (ஐ)



ஜேர்மன் கைல்புறொன் தமிழர் நட்சத்திர விளை யாட்டுக்கழகம் வலி. வடக்கில் மீள்குடியேறிய சேந்தான் குளம் பகுதியைச் சேர்ந்த மாணவர்களுக்கு தேவை யான கற்றல் உபகரணங் களை வழங்கியுள்ளது. வலி. வடக்கு பிரதேச சபையின் முன்னாள் துணைத் தவிசாளர் ச.சஜீவன் குறித்த மாணவர்களுக்கு உபகரணங்களை வழங்கி வைத்தார். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரண அறிவித்தல்கள்



### சுந்தரம்பிள்ளை கோபாலசிங்கம்

(பிரபல ரக்ரர் உரிமையாளர்)

நாரந்தனை வடக்கு, ஊர்காவற்துறையைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட சுந்தரம்பிள்ளை கோபாலசிங்கம் நேற்று (06.02.2016) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுந்தரம்பிள்ளை-இலட்சுமிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான செல்லத்துரை- பொன்னம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், ஏகநாயகியம்மாவின் பாசமிகு கணவரும், சந்திரவதனி (முன்னாள் உப தபால் அதிபர் எழுவை தீவு-UK) பத்மினி (ஆசிரியர், யா/வேலணை கிழக்கு ம.வி), இளங்கோவன் (ஆசிரியர் கிளி/ பளை றோ.க.த.க பாடசாலை) கருணாகரன் (வாழ்வின் எழுச்சி அபிவிருத்தி உத்தியோகத்தர், எழுவைதீவு பிரதேச செயலகம்- ஊர்காவற்துறை) ஆகியோரின் அன்பு தந்தையும், கருணாகரன் (UK) சண்முகராஜா (கோட்ட கல்வி அலுவலகம், ஊர்காவற்துறை), மிதுலா (வாழ்வின் எழுச்சி அபிவிருத்தி உத்தியோகத்தர், சமுதாய வங்கி பிரதேச செயலகம், ஊர்காவற்துறை) ஆகியோரின் அன்பு மாமனும், ஸ்ரீ வத்சனின் (UK) பாசமிகு பேரனும் ஞானசிங்கத்தின் பாசமிகு சகோதரனும் இராசதுரை (ஓய்வுபெற்ற அதிபர் யா/நாரந்தனை கணேச வித்தியாலயம்), காலஞ்சென்ற சகுந்தலையம்மா, பொன்ராசா (ஓய்வுபெற்ற வேலைதிட்ட மேற்பார்வை அதிகாரி), சரஸ்வதியம்மா சுப்பிரமணியம் (கனடா) இலட்சுமிதேவி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.02.2016) ஞாயிற்றுக்கிழமை பி.ப 12.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக நாரந்தனை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நணபர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்: **குடும்பத்தினர்.**

**நாரந்தனை வடக்கு,**
**ஊர்காவற்துறை.**

தொடர்பு:- இலங்கை 021 320 1401
லண்டன்- 044 7405 9927 98

## 'கணபதிப்பிள்ளை என்னும் பேராசான் கலங்கரை விளக்கானான்' நயினைக் கணேசாவில்



ஈழத்து யாழ் மண்ணில்
புகழ் பூத்த சிறுமண் நயினைத்தீவு
ஞாலத்தின் எத்திசையும் நறுமணம்
கமழும் நல்லதோர் மணித்தீவு
சீலத்தின் சிறந்துயர் கல்விதனில்
சீரியர்கள் பலரைத் தந்த சிறிய தீவு

இங்கே ....
காலத்தால் அழியாத கல்விக் கோட்டம்
கணேசா என்பதுமோர் கலையின் கூடம்
பேர்மிக்க தமிழாசான் பலரும் கூடி
பெருமையுடன் கற்பித்த புலமைக்கூடம்

ஆங்கே...
சீலத்தால் செம்மனத்தால் சிறந்த தமிழ்
புலமையினால் உயர்ந்த செம்மல்
ஆலத்தின் விதை போல அகிலமெலாம்
பெருவிருட்சம் கிளைபரப்பி மிகவளர்ந்து

ஆங்கு.....
ஆற்றிய நல் ஆசிரியப்பணி எம்மால்
போற்றிடவும் சாலுமோ அந்தோ - அந்தோ!
போய்விட்டார் என்றலுமே புண்ணாய்
வெந்ததையா எமது நெஞ்சம்
புலமைக்கு பரிசென்று புவியெல்லாம்
புலம்பிநிற்கும் இக்காலம்
புலமைக்கு பரிசு பெற புதுமுறையில்
கற்பித்த புதுமையாளன்

அக்காலம்....
பின்தங்கி நிற்குதைய நயினைக் கல்வி
பேசுவதற்கு இடமின்றி ஆண்டு தோறும்
எண்ணிறந்த மாணவரை ஈடேற்றி
எங்கெல்லாம் வாழ வைத்த மூதறிஞர்

இன்று ......
பேச்சற்று வீழ்ந்திட்டான்
பெரியம்மை பூசணியாள் பொற்பாதம்
சீர் உற்ற சாந்திபெற
தேறி நாம் வணங்கிடுவோம்.

(C/29036)(10.17)

**பழைய மாணவர் சங்கம்**
**நயினாதீவு ஸ்ரீ கணேச கனிஷ்ட மகா வித்தியாலயம்.**

## வெளிநாட்டு நாணய கொடுக்கல் வாங்கல் கட்டுப்பாடுகள் நீக்கம்

கொழும்பு, பெப்.7

வெளிநாட்டு நாணயங்களைப் பயன்படுத்திக் கொடுக்கல் வாங்கலில் ஈடுபடுவது மற்றும் வெளிநாடுகளுக்குப் பணத்தை அனுப்புவதில் இருந்த கட்டுப் பாடுகள் முழுமையாக நீக்கப் பட் டுள்ளதாக இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

இதன் பிரகாரம் என்.ஆர்.எப்.சி, ஆர்.எப்.சி உள்ளிட்ட வெளிநாட்டு நாணயக் கணக்குகளிலுள்ள பணத்தை முன்கூட்டிய அனுமதி இல்லாமல் அனுப்ப முடியும் என இலங்கை மத்திய வங்கி நேற்றுமுன்தினம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கு முன்னர் இத்தகைய கொடுக்கல் வாங்கல்களின் போது நாணயக் கட்டுப்பாட்டுத் தரப்பினரிடம் அனுமதி பெற வேண்டியிருந்தது. தற்போது அந்த நிலைப்பாட்டில் மாற்றம் செய்யப்படுள்ளது.

அத்துடன், வங்கிக் கணக்குகளில் இருந்து 10 ஆயிரம் அமெரிக்க டொலர்கள் அல்லது அதற்கு நிகரான தொகையை மீளப்பெறுவதற்கான வாய்ப்பும் வழங்கப்பட்டுள்ளது

இதேவேளை, இலங்கை வந்துள்ள சர்வதேச நாணய நிதியத்தின் பிரதிநிதிகள் நேற்றுமுன்தினம் நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்கவைச் சந்தித்தனர். உலக பொருளாதார நிலைக்கு அமைய இலங்கை தொடர்பில் எதிர்காலத்தில் பின்பற்றப்படவுள்ள நடவடிக்கைகள் குறித்து இதன்போது கலந்துரையாடியுள்ளனர். (வ-5)



### சங்கரப்பிள்ளை சோமசேகரம்பிள்ளை (சித்தப்பா)

காரைநகர், நடுத்தெருவைப் பிறப்பிடமாகவும் இலக்கம் - 231, கிளிநொச்சியை வசிப்பிடமாகவும் கொண்ட நீலிப்பந்தனை துர்க்கை அம்மன் ஆலய தர்மகர்த்தாவாகிய சங்கரப்பிள்ளை சோமசேகரம் பிள்ளை(சித்தப்பா) அவர்கள் 06.02.2016 சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சங்கரப்பிள்ளை - பார்வதி தம்பதியரின் அன்பு புதல்வனும் காலஞ்சென்றவர்களான பொன்னம்பலம் - பொன்னம்மா தம்பதியரின் மருமகனும் ஓய்வு பெற்ற ஆசிரிய ஆலோசகரான செல்வராணியின் பாசமிகு கணவரும் காலஞ்சென்றவர்களான தங்கம்மா சின்னாச்சிப்பிள்ளை (ஆசிரியை), வேலுப்பிள்ளை (முன்னாள் விரிவுரையாளர் பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை ), நேசரத்தினம், இராமச்சந்திரன், குணநாயகம்(முன்னாள் முகாமையாளர் - காரைநகர் ப.நோ.கூ. சங்கம்) ஆகியோரின் அன்பு சகோதரனும் காலஞ்சென்ற பார்வதி, சரஸ்வதி, இராசம்மா மற்றும் புவனேஸ்வரி, செல்வநாயகி (முன்னாள் பணியாளர் கரைச்சி தெற்கு ப.நோ.கூ. சங்கம்) ஆகியோரின் அருமை மைத்துனரும் பிரகலாதன், பிறேம்குமார்(குமரன் - மாவட்ட செயலகம், கிளிநொச்சி), துஸ்யந்தன் (பொறியியலாளர்), அம்பிகை (மாவட்ட வைத்தியசாலை - கிளிநொச்சி) ஆகியோரின் பாசமிகு தந்தையும் பூங்கோதை, இராஜரஞ்சினி (ஆசிரியை கிளி/ இந்துக்கல்லூரி), சுதர்சினி, சுகந்தன் (பிரதேச செயலகம் - சங்கானை) ஆகியோரின் அன்பு மாமனாரும் வைஸ்ணவி, அபிசேக், அஸ்வின், சஜிஸ், ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை இன்று (07.02.2016) ஞாயிற்றுக்கிழமை அன்னாரின் இல்லமான இல.231, திருநகரில் நடைபெற்று நண்பகல் 12.00 மணியளவில் தகனக் கிரியைக்காக பூதவுடல் திருநகர் பொது மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
**குடும்பத்தினர்.**

**இல.231, திருநகர், கிளிநொச்சி.**

(68726) (14.17.19.20)

**தொடர்பு : 021 228 5985**

## மரண அறிவித்தல்

### சங்கரப்பிள்ளை பரமலிங்கம்



யாழ்ப்பாணம் ஆனைப்பந்தியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சங்கரப்பிள்ளை பரமலிங்கம் அவர்கள் 04.02.2016 வியாழக்கிழமை இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சங்கரப்பிள்ளை - கண்மணி தம்பதியரின் பாசமிகு மகனும் காலஞ்சென்றவர்களான வைத்திலிங்கம் - செல்லம்மா தம்பதியரின் பாசமிகு மருமகனும் விஜயலக்சுமியின் அன்புக்கணவரும் சண்முகலிங்கம் காலஞ்சென்ற துரைச்சாமி மற்றும் கமலாம்பிகை (ஜேர்மன்), ஆனந்தலட்சுமி (யாழ்ப்பாணம்), கேதீஸ்வரன் (ஜேர்மன்), தனலட்சுமி (ஜேர்மன்), யோகேஸ்வரி (ஜேர்மன்) தியாகராஜா கமலாம்பிகை ஆகியோரின் அன்புச்சகோதரரும் காண்டீபன் (ஜேர்மன்), விதுஷினி (கனடா) ஆகியோரின் தந்தையும் ரஜீவன் (கனடா) அவர்களின் பாசமிகு மாமனாரும் சுரேஸ்குமார், ராஜ்குமார், ரவீந்திரகுமார், ரமேஸ்குமார், சிவகுமார் (ஜேர்மன்), பிரியதர்சினி (ஜேர்மன்), சுபாஷினி, சதீஸ்குமார், அசோக்குமார், நிஷாந்தினி, லக்சிகா (ஜேர்மன்), ஜெயவதனி, ஜெயகௌரி, விஜயமோகன், ஜெயகீதா, விஜயகாந்தன் ஆகியோரின் சித்தப்பாவும் காலஞ்சென்றவர்களான சந்திரகுமார், சகுந்தலாதேவி மற்றும் திலகவதி, வதனி (ஜேர்மன்), தவேந்திரன் (ஜேர்மன்), கணேசலிங்கம், சிறோன்மணி, மகேஸ்வரி, சிவராசா, செல்வராணி ஆகியோரின் மைத்துனரும் ரஜிதா (ஜேர்மன்), விஜயகௌரி, ஸ்ரீதர்சினி, கணேசலிங்கம் ஆகியோரின் மாமாவும் ஆச்சிமுத்துவின் பெறாமகனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.02.2016) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**98, பருத்தித்துறை வீதி,**
**ஆனைப்பந்தி,**
**யாழ்ப்பாணம்.**

**T.P: 021 222 9457**

தகவல்
**குடும்பத்தினர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சுஷ்மா–சந்திரிகா நேற்றுச் சந்திப்பு

இந்திய வெளிவிவகார அமைச்சர் சுஷ்மா சுவராஜ் நேற்று இலங்கையின் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவைச் சந்தித்துப் பேச்சு நடத்தினார்.

இந்தச் சந்திப்பு நேற்று முற்பகல் சந்திரிகாவின் இல்லத்தில் நடைபெற்றது.

இலங்கையின் நல்லிணக்க நடவடிக்கைகளுக்குப் பொறுப்பான அலுவலகத்தின் தலைவராக சந்திரிகா குமாரதுங்க பணியாற்றி வருகின்றார். இந்தநிலையில், இலங்கையில் அமைதியையும், நல்லிணக்கத்தையும் ஏற்படுத்த மேற்கொள்ளப்பட்டு வரும் முயற்சிகள் தொடர்பில் சந்திரிகாவிடம் சுஷ்மா கேட்டறிந்தார் என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை, சந்திரிகாவும், சுஷ்மாவும் நீண்டகால நண்பர்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது. (வ–சி)

## மகிந்த செய்தால் மட்டும் சரி மைத்திரி செய்தால் பிழையா?

*கேள்வி எழுப்புகின்றார் சிறிபால டீ சில்வா*

கொழும்பு, பெப்.7

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை விமர்சிப்பவர்கள் ஏன் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவை விமர்சிக்கவில்லை?– இவ்வாறு அமைச்சர் நிமல் சிறிபால டீசில்வா கேள்வி எழுப்பியுள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து சிறி லங்கா சுதந்திரக் கட்சி தேசிய அரசை அமைத்துக் கொண்டுள்ளமைக்கு சுதந்திரக் கட்சியின் சில உறுப்பினர்கள் கடுமையான விமர்சனங்களை முன் வைத்து வருகின்றனர்.

இதற்கு பதில் வழங்கும் வகையில் அஹங்கம பிரதேசத்ததில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் உரையாற்றிய அமைச்சர் நிமல் சிறிபால டீ சில்வா, முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச, அன்று ஐக் கிய தேசியக் கட்சியின் கருஜயசூரிய உட் பட 17 பேரை இணைத்துக் கொண்டு அரசு ஒன்றை அமைத்ததுடன் அதனை தேசிய அரசுஎன கூறினார்.

அன்று ராஜபக்சவை விமர் சிக்காதவர்கள், இன்று ஜனா திபதி மைத்திரி பால சிறிசேனவை விமர் சிப்பது நியாயமாகுமா?.– என்று கேள்வி எழுப்பினார்.

தேசிய அரசு என்பதனை மைத்திரிக்கு முன்னர் மகிந்தவே அறிமுகப்படுத்தியனார். சுதந்திரக் கட்சியின் சிலர் இதனை மறந்து விட்டனர் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

இவ்வாறானவர்களுக்கு அன்று மகிந்த அமைத்த தேசிய அரசு நல்லது, ஆனால் மைத்திரி அமைத்த தேசிய அரசு கெட்டதா?– என்றும் கேள்வி எழுப்பினார். (ந)

## மரண அறிவித்தல்கள்

### வேலுப்பிள்ளை இராசதுரை

பிறப்பு 09.08.1931



இறப்பு 05.02.2016

அரியாலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை இராசதுரை 05.02.2016 வெள்ளிக் கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை - சின்னம்மா தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்ற சரஸ்வதியின் அன்புக் கணவரும்,காலஞ்சென்றவர்களான முத்துக்குமாரு - செல்லம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும், பத்மாகரன், கிருபராணி ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்றவர்களான செல்லம்மா, சரஸ்வதி, மகேஸ்வரி, துரைராஜா ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்ற இராசையாவின் அன்பு மைத்துனரும், காலஞ்சென்ற வர்களான சீவரெட்ணம், இராசம்மா மற்றும் கலைமகள் கிருஸ்ணவேணி ஆகியோரின் மைத்துனரும், மகாலிங்கம், பத்மலோஜினி, ஜெயந்தி, ரஞ்சினி, சுபாசினி ஆகியோரின் மாமனாரும், மஞ்சுளா, நிமலன், நகுலன் ஆகியோரின் பெரிய தந்தையும், சக்கினா, சர்வினா, சபினா, மயூரன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.02.2016) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11 மணியளவில் இலக்கம் 201, திருமகள் வீதியில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக அரியாலை சித் துப்பாத்தி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

201,திருமகள் வீதி,
அரியாலை.

தகவல்:
குடும்பத்தினர்.

(68724)(11,17,19)

## மரண அறிவித்தல்கள்



தோற்றம்: 24.02.1933 மறைவு: 05.02.2016

### திருமதி பகவதி சொக்கநாதன்

(யா/பத்தமேனி இரத்தினேஸ்வரி வித்தியாலய ஓய்வுபெற்ற ஆசிரியை)

மானிப்பாயைப் பிறப்பிடமாகவும், அச்சுவேலியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பகவதி சொக்கநாதன் (05.02.2016) வெள்ளிக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் ஓய்வுபெற்ற அதிபர் சொக்கநாதனின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான பொன்னையா-இலட்சுமிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான வைரமுத்து-செல்லம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், சசிதரன் (நோர்வே), சுதாகரன் (நோர்வே) ஆகியோரின் பாசமிகு தாயும், பூரணி, சுஜிதா ஆகியோரின் பாசமிகு மாமியும், கஸ்விதன், வத்சலன், சுருதிகா, பரணிகா ஆகியோரின் பேர்த்தியும், காலஞ்சென்றவர்களான நாகரத்தினம், பஞ்சரத்தினம், சந்திரராஜா, சொர்ணரத்தினம் மற்றும் சிவசோதி ஆகியோரின் அன்புச் சகோதரியும், வாமதேவன், துரைராஜா ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.


இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

"அன்பகம்" கைத்தொழில் பேட்டை வீதி,
அச்சுவேலி மேற்கு, அச்சுவேலி.
021 790 2610

தகவல்:
குடும்பத்தினர்.

(C 29032)(10.17.19)

## மரண அறிவித்தல்கள்



### கணபதிப்பிள்ளை அரசகேசரி

நீர்வேலியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கணபதிப்பிள்ளை அரசகேசரி நேற்று (06.02.2016) சனிக்கிழமை காலமானார்.


அன்னார் காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை - சின்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும் சகுந்தலாவின் அன்புக்கணவரும் பிருசாலினியின்(HNDA)- அன்புத் தந்தையும் செல்லம்மா, தர்மலிங்கம், தங்கம்மா ஆகியோரின் அன்புச் சகோத்தரனும் காலஞ்சென்ற அரசகுமார், மகேந்திரராஜா, உமா ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஜெயசுதன், காலஞ்சென்ற ஜெயசுதா மற்றும் பவித்திரா ஆகியோரின் அன்பு மாமனாரும் வைதேகி, நிஷாந்தினி, ஜானகி ஆக்யோரின் அன்புப் பெரியப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.02.2016) ஞாயிற்றுக்கிழமை அன்னாரின் இல்லத்தில் பிற்பகல் 1.00 மணியளவில் இடம் பெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக நீர்வேலி சீயாக்காடு மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நிர்வேலி மத்தி,
நிர்வேலி.

TP: 077 2742 210

தகவல்:
குடும்பத்தினர்.



### முருகேசு ஸ்ரீசண்முகராசா

(முன்னாள் வடகிழக்கு மாகாணசபை செயலாளர்)

காரைநகரைப் பிறப்பிடமாகவும், கச்சேரி நல்லூர் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட முருகேசு ஸ்ரீசண்முகராசா நேற்று (06.02.2016) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முருகேசு - இராசலட்சுமி தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை - அன்னப்பிள்ளை தம்பதியரின் மருமகனும் காலஞ்சென்ற மகேஸ்வரியின் அன்புக் கணவரும் லக்சுமி (மகேஸ்வரி நிதியம்), கௌரி (மகேஸ்வரி நிதியம் - Coop Pect) ஆகியோரின் தந்தையும் கிபேட் அன்ரனியின் (பனை அபிவிருத்தி சபை) மாமனாரும் தமிழினி, குழலினி ஆகியோரின் அன்புப்பேரனும் காலஞ்சென்ற சிவராசாவின் அன்புச்சகோதரரும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (08.02.2016) திங்கட்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக பிற்பகல் 2.00 மணிக்கு செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

126/14, கச்சேரி நல்லூர்
வீதி, யாழ்ப்பாணம்.

தகவல்:
குடும்பத்தினர்.

(68739)



### சாந்தம்மா வேலாயுதம் (ஆச்சாரி)

இலங்கை காரைநகர் விக்காவில்லையைப் பிறப்பிடமாகவும் தற்போது தென் இந்தியாவில் வசித்தவருமான சாந்தம்மா வேலாயுதம் நேற்று (06.02.2016) சனிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.


அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் - அன்னம்மா தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்ற வேலாயுதம் அவர்களின் அன்பு மனைவியும் ருக்மணி தேவி (சிங்கப்பூர்), கண்ணதாசன் (இந்தியா), சுதர்சன் (பெல்ஜியம்), லோகேஸ்வரி (இந்தியா), கோகுலராணி (பிரான்ஸ்), மனோகரி (இந்தியா) ஆகியோரின் அன்புத் தாயும் காலஞ்சென்ற திருநாவுக்கரசு மற்றும் சிவனேஸ்வரன் (பிரான்ஸ்), ஹேமா (இந்தியா), இந்துஜா (பெல்ஜியம்) ஆகியோரின் அன்பு மாமியாரும் சுபாஸ், அரவிந்தன், மாதவன், சௌமியன், ஐஸ்வரியன், சஜீவன், சுஜிந்தா, சோனியா, கிருத்திகா ஆகியோரின் அன்புப் பேர்த்தியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.02.2016) ஞாயிற்றுக்கிழமை இந்தியாவில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சுதன்: 00919443969631
கண்ணன்: 00919629685519

தகவல்: சாந்தம்மா
குடும்பத்தினர்.

(68741)



### சுப்பையா இராசரத்தினம்

(வேதநாயகம்)

கொக்குவில் மேற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பையா இராசரத்தினம் (வேதநாயகம்) நேற்று (06.02.2016) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் திலகவதியின் பாசமிகு கணவரும் நேசராஜ் இன் அன்புத்தந்தையும் காலஞ்சென்றவர்களான சுப்பையா - கண்மணி தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்க ளான சீனியம்மா, நாகலட்சுமி மற்றும் பூமணி, இரத்தினம் காலஞ்சென்ற மகேஸ்வரி மற்றும் தயாநிதி (லண்டன்), தில்லைநாதன், பராசக்தி, சரோஜினி, முத்துராணி (கனடா), முத்துகுமாரராசா (கனடா) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.02.2016) ஞாயிற்றுக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக நண்பகல் 12.00 மணியளவில் கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

சிவகுரு ஒழுங்கை,
கொக்குவில் மேற்கு.

தகவல்:
குடும்பத்தினர்.

(68740)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளூர் உற்பத்தியாளர்களுக்கான
சந்தை வாய்ப்பு
யாழ் மாவட்டத்தின் முக்கிய நகரங்களில் சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு உள்ளூர் உற்பத்திகளான, கைப்பணிப் பொருட்கள், ஆடைகள், மலர்க் கன்றுகள், உணவுப் பொருட்கள் போன்றவற்றை கண்காட்சிப்படுத்தவும் சந்தைப்படுத்தவும் விரும்புகின்றவர்கள் எம்மைத் தொடர்பு கொள்ளவும்.
ஐடியா பொருண்மிய மேம்பாட்டு உசாவலர்
இல.15/1, விக்டோரியாவீதி, யாழ்ப்பாணம்
தொலை 021 300 3662 - 077 165 8845

# மரண அறிவித்தல்கள்

## பிரான்சீஸ் இராசநாயகம் (ராசு)

மண்ணில்-23.11.1952 விண்ணில்-06.02.2016



08ஆம் வட்டாரம், புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவு என்னும் இடத்தை நிரந்தர முகவரியாகக் கொண்ட பிரான்சீஸ் - இராசநாயகம் (ராசு) நேற்று (2016.02.06) காலமாகிவிட்டார்.

அன்னார் திரேசம்மாவின் (பிரேமா) அன்புக் கணவரும், காலம்சென்றவர்களான கணபதி – பிரான்சீஸ், அன்னம்மா ஆகியோரின் புத்திர னும், காலம் சென்றவர்களான கிறிஸ்தோப்பர், இன் நேசம் ஆகியோரின் மருமகனும், வில்வரசிங்கம், அருமைநாயகம், அமிர்தநாயகம், புஸ்பராணி ஆகியோரின் அன்புச் சகோதரனும், கிரேஸ்மணி (லண்டன்), யசீந்தா (பிரான்ஸ்), காலம் சென்றவர்களான புஸ்பம், பெல்சி, யேசுதாஸ் ஆகியோரின் மைத்துனரும், ராஜ பிரேம் (ராஜி-பிரான்ஸ்), லக்சி லியோனி, பிறின்சன் குபேரா (பிரான்ஸ்), விஜய அன்ரனி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும், அன்ரனி றொபேட் (பிரான்ஸ்), சதீஸ்குமார், சிந்துஜா (பிரான்ஸ்), ரஜீவனி (பிரான்ஸ்) ஆகியோரின் மாமனாரும் ஆவார்.


அன்னாரின், இறுதிக் கிரிகைகள் மல்லிகைத்தீவு புனித அந்தோனியார் ஆலய வீதியில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் இடம் பெற்று, 2016.02.07 (ஞாயிறு) பிற்பகல் 3.00 மணியளவில் நல்லடக்கத்திற்காக புனித சூசையப்பர் சேமக்காலைக்கு எடுத்து செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள்.

தொடர்புகளுக்கு:
077-3464006, 077-6581353 (C/29038)(10.17)

## கந்தையா திருநாவுக்கரசு



கொக்குவில் மேற்கு, கேணியடியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா திருநாவுக்கரசு நேற்று (06.02.2016) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - சிவக்கொழுந்து தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்ற சிவபாக்கியத்தின் பாசமிகு கணவரும் யசோதை (கனடா), ஜானகி, குமரதாசன் (பிரான்ஸ்), கோகுலதாசன் ஆகியோ ரின் அன்புத் தந்தையும் சிவஞானம் (சுதா பேக்கரி), ராலக்சுமி, வசந்தராணி ஆகியோரின் அன்புச்சகோதரனும் சிறிக்குமார் (கனடா) அருள்செல்வி (பிரான்ஸ்), சிந்துஜா, இருதயநாதன் ஆகியோரின் மாமனாரும் சங்கீர்த்தன், சாகித்தியன், அபிலேஸ் (பிரான்ஸ்), அம்சவி (பிரான்ஸ்), தாரணி (பிரான்ஸ்), லக்சி (கனடா), மது (கனடா) ஆகியோ ரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.02.2016) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பிற்பகல் 4.00 மணிக்கு கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

கேணியடி,
கொக்குவில் மேற்கு.

தகவல்:
கோகுலதாஸ்
(மகன்)

(68748)

# மாட்டுடன் மோதிய ஓட்டோ சாரதி காயம்

சாவகச்சேரி,பெப்.7

வீதியின் குறுக்கே ஓடிய மாட்டுடன் மோதிய ஓட்டோ குடை சாய்ந்து வயலுக்குள் பாய்ந்ததில் அதன் சாரதி தூக்கி வீசப்பட்டு காயமடைந்தார். ஓட்டோவும் சேதமடைந்தது.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை மாலை கைதடியில் இடம் பெற்றுள்ளது.

சாவகச்சேரி பொதுச்சந்தை வியாபாரிக்கு மரக்கறிகள் ஏற்றிவரச் சென்ற வேளையில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

சாவகச்சேரி பெரியமாவடியைச் சேர்ந்த ஓட்டோ சாரதி காயங்களுக்கு இலக்கான நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

(ற-ஜ-9)

## கண்ணீர் அஞ்சலி



எமது நண்பன்
உருத்திரன் அவர்களின்
அன்புத்தந்தையார்
கார்த்திகேசு சோதிலிங்கம்


அவர்களின் மரணச்செய்தி அறிந்து துயரடைந்தோம். அன்னாரிற்கு எமது கண்ணீர் அஞ்சலியைத் தெரிவித்து நிற்பதுடன் அவரது பிரிவினால் துயருறும் உறவுகளுக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களையும் தெரிவித்து நிற்கின்றோம்.

- நண்பர்கள் -

(68743)

## நன்றி நவிலல்

தோற்றம்: 26 . 05 . 1924



மறைவு: 02 . 02 . 2016

எமது அன்னை
### திருமதி. கமலாம்பிகை வேலாயுதபிள்ளை

அவர்கள் சுகவீனமுற்று வைத்திய சாலையில் இருந்த போது வருகை தந்து நலம் விசாரித்த உறவினர்கள், நண்பர்கள் மற்றும் அன்னாரின் மரணச் செய்தி கேட்டு நேரிலும், தொலைபேசி மூலமும் ஆறுதல் தெரிவித்த அனைவருக்கும் இறுதிச் சடங்கிலும் அன்னாரின் இறுதி யாத்திரையிலும் கலந்து கொண்ட அனைவருக்கும் எமது சிரம் தாழ்த்திய நன்றியை தெரிவித்துக் கொள்கின்றோம்.

7/3, முதலாம் ஒழுங்கை,
பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்.
(68732)(10.17)

## மரண அறிவித்தல்கள்

### யோகலிங்கம் அனோஜா

மலர்வு 27.06.2003 உதிர்வு 05.02.2016



அம்பன் குடத்தனையைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட யோகலிங்கம் அனோஜா (யா/அம்பன் அ.மி.த.க பாடசாலை - மாணவி) கடந்த 05.02.2016 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் யோகலிங்கம் - அற்புதராணி தம்பதியரின் பாசமிகு மகளும் நல்லையா - சரஸ்வதி தம்பதியினதும் அமிர்தநாதன் - யோகேஸ்வரி தம்பதியினதும் அன்புப் பேர்த்தியும் அஜந்தனின் அன்புத் தங்கையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று (07.02.2016) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் நல்லடக்கத்திற்காக அம்பன் குடத்தனை கொட்டோடை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
அம்பன் குடத்தனை. 0777 243103 குடும்பத்தினர்.

(68/29037)

### திருமதி முத்தாபரணம் (குஞ்சு) பாலசிங்கம்



கட்டுவனைப் பிறப்பிடமாகவும், பாலாவோடை இணுவிலை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி முத்தாபரணம் (குஞ்சு) பாலசிங்கம் நேற்று (06.02.2016) சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வைத்திலிங்கம்- பொன்னம்மா தம்பதியரின் அன்பு மகளும், பாலசிங்கத்தின் பாசமிகு மனைவியும், காலஞ்சென்றவர்களான இரத்தினம் (ஓய்வுபெற்ற ஆசிரியர்), மதியாபரணம் (ஓய்வு பெற்ற ஆசிரியர்), சுந்தரமூர்த்தி (ஓய்வுபெற்ற ஆசிரியர்) மற்றும் புவனேஸ்வரி, இராசமலர் (லண்டன்), சிவபாதசுந்தரம் (ஓய்வுபெற்ற மின்சார அத்தியட்சகர்) ஆகியோரின் பாசமிகு சகோதரியும், கீதாவின் (லண்டன்) பெரியம்மாவும், கிருபாகரனின் (லண்டன்) மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

[illegible],
இணுவில் மேற்கு, இணுவில்.

தகவல்: கணவர்
பாலசிங்கம்
(68735)(10.17)

## தொடர்ச்சி.....

### இந்திய

இழுவைப் படகுகள் அத்துமீறி நுழைகின்றன. இதனால் வட பகுதி மீனவர்களது வாழ்வாதாரம் கடுமையான பாதிப்புக்கு உள்ளா கின்றது. கடல் வளங்களும் சூறையாடப்படுகின்றன. எமது மீனவர்களது வலைகளும் அறுக்கப்படுகின்றன.

இவற்றினால் ஏற்பட்ட பாதிப்புக்களுக்கே இதுவரை நட்டஈடு எதுவும் வழங்கப்படவில்லை. எனவே இந்த விடயத்தில் இந்திய நடுவண் அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினால் கோரிக்கை விடுக்கப்பட்டது.

இதற்குப் பதில் வழங்கிய வெளிவிவகார அமைச்சர் சுஷ்மா சுவராஜ்,

இழுவைப் படகினால் கடல் வளங்கள் அழிக்கப்படுகின்றன. இதனால் இதனைத் தடை செய்ய வேண்டும் என்று எமது அரசும் வலியுறுத்துகின்றது. இழுவைப் படகுக்கு எதிரான நிலைப்பாட்டையே நாம் கொண்டுள்ளோம்.

இந்திய மீனவர் தொடர்பான பிரச்சினைக்குத் தீர்வைக் காண்பதற்கு, இலங்கை மீன்பிடி அமைச்சர் மகிந்த அமரவீரவை அடுத்த மாதம் புதுடில்லிக்கு அழைத்து கலந்துரையாடல் நடத்தவுள்ளோம். இன்னமும் இரண்டு அல்லது மூன்று மாதங்களுக்குள் இந்தப் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காணப்படும் - என்றார்.

(வ-5)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



### இராசதுரை சின்னத்துரை

தோற்றம் 01.01.1928
மறைவு 19.01.2015

எங்கள் வாழ்வில் இன்பத்தைப் பெருக்கி
இன்னலைக் கலைத்திட
எமக்கு இறைவனால் பரிசளிக்கப்பட்டவர்
நீங்கள் உங்களுக்கு நாம் பட்ட கடன்
எத்தனை பிறவி எடுத்தாலும்
தீர்க்க முடியாதப்பா

ஓம் சாந்தி !!!

அரசடி ஒழுங்கை,
இருபாலை தெற்கு,
கோப்பாய்.

குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சமத்துவமான

அரசமைப்பில் உள்வாங்கப்பட வேண்டும். அவ்வாறு உள்வாங்கப்படுவதனை இந்தியா உறுதிப்படுத்த வேண்டும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு விடுத்த கோரிக்கைக்கு பதிலளித்த போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கு வருகை தந்த இந்திய வெளிவிவகார அமைச்சர் சுஷ்மா சுவராஜுக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் இடையில் நேற்று மதியம், கொழும்பு தாஜ் சமுத்திரா விடுதியில் சந்திப்பு இடம்பெற்றது.

இந்தச் சந்திப்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் அதன் தலைவர் சம்பந்தனுடன் இலங்கை தமிழரசுக் கட்சியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான மாவை சேனாதிராசா, ரெலோவின் தலைவரும் நாடாளுமன்றக் குழுக்களின் பிரதித் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான செல்வம் அடைக்கலநாதன், கூட்டமைப்பின் ஊடகப் பேச்சாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன் ஆகியோர் பங்கேற்றிருந்தனர்.

இந்திய வெளிவிவகார அமைச்சர் சுஷ்மா தலைமையிலான குழுவில் இந்திய வெளிவிவகார செயலாளர் கலாநிதி எஸ்.ஜெய்சங்கர், இலங்கைக்கான இந்தியத் தூதுவர் வை.கே. சிங்ஹா மற்றும் உயர் அதிகாரிகள், தூதரக அதிகாரிகள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

இந்தச் சந்திப்புத் தொடர்பில், கூட்டமைப்பின் ஊடகப் பேச்சாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன் கருத்துத் தெரிவிக்கையில்,

### வேகம் போதாது

எமது மக்கள் எதிர்கொள்ளும் உடனடிப் பிரச்சினைகளான நில ஆக்கிரமிப்பு, மீள்குடியமர்வு, காணாமற் போனோர் விவகாரம், தமிழ் அரசியல் கைதிகள் விடுதலை, இராணுவக் குறைப்பு தொடர்பில் இந்திய வெளிவிவகார அமைச்சருக்கு தெரியப்படுத்தினோம். இந்த விடயங்கள் தொடர்பில் புதிய அரசு நடவடிக்கை எடுத்திருக்கின்றது. ஆனாலும் அதன் வேகம் போதாது என்பதையும் குறிப்பிட்டோம்.

### அரசியல் தீர்வு

தற்போது இலங்கையில் புதிய அரசமைப்பு உருவாக்கத்துக்கான ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன. இதில் இந்திய - இலங்கை உடன்படிக்கையின் அடிப்படை விடயங்கள் உள்ளடக்கப்பட வேண்டும். இதனை இந்தியா உறுதிப்படுத்த வேண்டும். தீர்வு விடயத்தில் இந்தியாவின் பங்களிப்பு தொடர்ந்து இருக்க வேண்டும் என்றும் கோரிக்கை விடுத்தோம்.

### அகதிகள் திரும்புதல்

இந்தியாவில் தங்கியுள்ள ஈழ அகதிகள் நாட்டுக்கு திரும்ப வேண்டும். அதற்கு இந்தியா உதவி வழங்க வேண்டும். குறித்த நடவடிக்கைக்கு முன்னதாக, அவர்கள் நாட்டுக்குத் திரும்புவதற்குரிய சூழல் உருவாக்கப்பட வேண்டும். அரசியல் தீர்வு எட்டப்பட வேண்டும் என்பதுடன், மக்களின் உடனடிப் பிரச்சினையும் தீர்க்கப்பட வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டோம்.

### இந்தியா துணை நிற்கும்

சந்திப்பின் இறுதியில் கருத்துத் தெரிவித்த வெளிவிவகார அமைச்சர் சுஷ்மா சுவராஜ், தமிழ் மக்களுக்கான இனப்பிரச்சினைத் தீர்வு விடயம் உள்ளிட்ட சகல விவகாரங்களிலும் தொடர்ந்தும் முழுமையான ஈடுபாட்டுடன் இந்தியா செயற்படும் என்று குறிப்பிட்டார். இந்தியா எப்போதும் சரியான விடயத்தின் பக்கமே நிற்கும். இலங்கையில் நீண்டகாலமாகத் தொடரும் இனப்பிரச்சினைக்கு சமத்துவமான அரசியல் தீர்வை ஏற்படுத்துவதற்கு இந்தியா துணை நிற்கும், என்றும் சுஷ்மா உறுதியளித்தார்-என்றார் நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன். (வ-5)

## விளையாட்டு

மருத்துவர்கள் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் நெல்லியடி அம்பன் அரசினர் தமிழ் கலவன் பாடசாலையில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றுள்ளது. இதில் யோகலிங்கம் தனுசா (வயது 13) என்னும் மாணவியே உயிரிழந்தவராவார். குறித்த பாடசாலையில் நேற்று முன்தினம் விளையாட்டுப் போட்டி நிகழ்வுகள் இடம்பெற்றுள்ளன. குறித்த விளையாட்டு நிகழ்வில் மேற்படி மாணவியும் அஞ்சல் ஓட்ட நிகழ்வில் பங்குகொண்டுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. அந்த நிகழ்வைப் பூர்த்தி செய்த நிலையில் மாணவி மயக்கமுற்று வீழ்ந்துள்ளார். அதனால் அவர் உடனடியாக மந்திகை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார்.

எனினும் அங்கு மாணவியின் நிலைமை மோசமாக இருந்துள்ளதனால், அவர் யாழ்.போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டிருந்தார். எனினும் சிகிச்சை பயனளிக்காது குறித்த மாணவி நேற்று அதிகாலை உயிரிழந்தார்.

விசாரணைகளின் பின்னர் சிறுமியின் சடலம் நேற்று உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது,

குறித்த பாடசலையின் வருடாந்த விளையாட்டுப் போட்டி நேற்று நடைபெறவுள்ளதனால் நேற்று முன்தினம் அணிநடை முன்னோட்ட பயிற்சியில் பங்குபற்றிய குறித்த மாணவி, அதனைத் தொடர்ந்து இடம்பெற்ற அஞ்சல் ஓட்டப் போட்டியிலும் பங்குபற்றியுள்ளார்.

இந்த நிலையில் அவர் மயங்கிச் சரிந்ததையடுத்து உடனடியாக மந்திகை வைத்தியசாலையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டு, மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார்.

எனினும் சிகிச்சை பலனளிக்காமல் நேற்று அதிகாலை குறித்த மாணவி உயிரிழந்தார் என தெரிவிக்கப்பட்டது.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்வதற்கு கல்வித் திணைக்கள, வடக்கு மாகாண கல்வி அமைச்சு அதிகாரிகளைத் தொடர்பு கொள்ள முயன்ற போதும் பயன்கிடைக்கவில்லை.

இதேவேளை குறித்த பாடசாலையில் நேற்று வருடாந்த விளையாட்டுப் போட்டி திட்டமிட்டபடி நடைபெற்றது. இதன் அரம்ப நிகழ்வில் உயிரிழந்த மாணவிக்கு மௌன அஞ்சலி செலுத்தப்பட்டதாக தெரிவிக்கப்பட்டள்ளது. (வ-4,101.422)

## சீன வெளிவிவகார

இதன்போது, சீன வெளிவிவகார அமைச்சர் வாங் ஜி, வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீரவை சந்தித்துப் பேசியுள்ளார். குறித்த சந்திப்பு , கட்டுநாயக்க விமான நிலையத்தில் இடம்பெற்றுள்ளது.

இந்திய வெளிவிவகார அமைச்சர் சுஷ்மா சுவராஜ் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை இலங்கைக்கு இரண்டு நாள் பயணமாக வந்துள்ளார். இவ்வாறானதொரு நிலையில் நேற்றுக் காலை சீன வெளிவிவகார அமைச்சர் கொழும்புக்குப் பயணம் மேற்கொண்டுள்ளார்.

நான்கு ஆபிரிக்க நாடுகளுக்கான பயணத்தை முடித்துக் கொண்டு பீஜிங் திரும்பும் வழியிலேயே, சீன வெளிவிவகார அமைச்சர், வாங் ஜி நேற்றுக் காலை கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்தார்.

குறுகிய நேரம் கட்டுநாயக்க விமான நிலையத்தில், சீன வெளிவிவகார அமைச்சரின் விமானம் தரித்து நின்ற போது, வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீரவும், பிரதி வெளிவிவகார அமைச்சர் ஹர்ச டி சில்வாவும், அவரைச் சந்தித்துப் பேச்சுக்களை நடத்தினர்.

சீன வெளிவிவகார் அமைச்சருடனான பேச்சுக்கள் பயனுள்ள வகையில் அமைந்திருந்ததாக பிரதி வெளிவிவகார அமைச்சர் ஹர்ச டி சில்வா தெரிவித்துள்ளார்.

அத்துடன் இந்த ஆண்டு பிரதமர் ரணில் சீனாவுக்கு மேற்கொள்ளவுள்ள பயணத்துக்கு முன்னர், எடுக்கப்படவுள்ள நடவடிக்கைகள் தொடர்பாகவும், இந்தச் சந்திப்பில் இணக்கம் காணப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (வ-5)

## அனைத்து

இலங்கை அரசின் அழைப்பின் பேரில், ஐ.நா மனித உரிமை ஆணையாளர் சையிட் அல் ஹுசேன் நான்கு நாள் பயணமாக நேற்றுக் காலை கொழும்பை வந்தடைந்தார்.

நேற்றுக் காலை 8.25 மணியளவில், கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்த, ஐ.நா மனித உரிமை ஆணையாளரை, வெளிவிவகார அமைச்சின் அதிகாரிகள் வரவேற்றனர்.

தமிழ், சிங்கள, முஸ்லிம், பறங்கிய இனச் சிறுவர்கள், ஐ.நா மனித உரிமை ஆணையாளருக்கு விமான நிலையத்தில் பூங்கொத்துக்களைக் கொடுத்து வரவேற்றனர். ஹுசேனுடன் ஐ.நா அதிகாரிகளும் கொழும்பு வந்துள்ளனர்.

இதையடுத்து வெளிவிவகார அமைச்சில், சையிட் அல் ஹுசேனுக்கும், மங்கள சமரவீரவுக்கும் பேச்சுக்கள் இடம்பெற்றன.

இந்த சந்திப்பையடுத்து வெளியே வந்த ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளர் சையிட் அல் ஹுசேன். செய்தியாளர்கள் கேள்விகளை எழுப்பினர். இதற்கு பதிலளித்த அவர்,

கொழும்பு வந்ததையிட்டு மகிழ்ச்சியடைகின்றேன். இது இலங்கைக்கான எனது முதலாவது பயணம். நான் அரசின் உயர்மட்டத் தலைவர்களுடனும், அனைத்து சமூகத்தின் பிரதிநிதிகளுடனும் சந்திப்பதற்கு ஆவலுடன் இருக்கின்றேன். அவர்கள் கூறும் அனைத்தையும் நான் செவிமடுப்பேன். வரும் நாட்களில் ஆக்கபூர்வமான கலந்துரையாடலில் ஈடுபடுவதற்குத் திட்டமிட்டுள்ளேன். -என்றார்.

நான்கு நாட்கள் உத்தியோகபூர்வ பயணமாக மேற்கொண்டு நேற்றுக் காலை கொழும்பு வந்த ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் சையிட் அல் ஹுசேன் ஊடகவியலாளர்களிடம் தெரிவித்தார்.

இதேவேளை, ஐ.நா. தீர்மான விவகாரம் வலுப்பெற்றுள்ள நிலையில் இலங்கை வந்துள்ள ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம்பந்தன், வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர மற்றும் அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், அரச அதிகாரிகள், சிவில் சமூகப் பிரதிநிதிகள், இராஜதந்திர சமூகத்தினர் மற்றும் தேசிய மனித உரிமை ஆணைக் குழுவினர் ஆகிய தரப்புகளைச் சந்திக்கவுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (வ-5)

## இன்று

வருகை தந்துள்ள ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் ஹுசேன், கொழும்பில் நேற்று சந்திப்புக்களில் ஈடுபட்டார். இலங்கைக்கான ஐ.நா வதிவிடப் பிரதிநிதி அலுவலகத்தில், ஐ.நா. அதிகாரிகளுடன் சந்திப்பில் ஈடுபட்ட அவர், அதன் பின்னர் வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீரவைச் சந்தித்திருந்தார்.

அவரது இலங்கைப் பயணத்தின் ஒரு பகுதியாக வடக்கு - கிழக்குக்கு நேரில் செல்லவுள்ளார். யாழ்ப்பாணம், திருகோணமலை மற்றும் கண்டி மாவட்டங்களுக்கு பயணம் மேற்கொள்ளவுள்ளார். முதலாவதாக யாழ்ப்பாணத்திற்கு இன்றைய தினம் ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் வருகை தரவுள்ளார். கொழும்பிலிருந்து விசேட விமானம் மூலம் பலாலியை வந்தடையும் ஹுசேன், அங்கிருந்து வாகனத்தில் யாழ்.நகரை வந்தடையவுள்ளார்.

வடக்கு மாகாண ஆளுநர் அலுவலகத்தில் காலை 9.30 மணிக்கு முதலாவது சந்திப்பு இடம்பெறவுள்ளது. இதன் பின்னர் காலை 10.30 மணிக்கு வடக்கு மாகாண முதலமைச்சரை அவரது இல்லத்தில் சந்திக்கவுள்ளார். இதன் போது, காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள், தமிழ் அரசியல் கைதிகளின் உறவுகள், மீள்குடியமர்வு தொடர்பான பிரதிநிதிகளையும் அவர் சந்தித்துப் பேசவுள்ளார்.

இந்தச் சந்திப்புக்களை முடித்துக் கொண்டு, நல்லூர் பின் வீதியிலுள்ள ஐ.நா. அலுவலகத்தில் பிரத்தியேகமாக அழைக்கப்பட்ட சிலரைச் சந்தித்துப் பேசவுள்ளதாக அறிய முடிகின்றது.

இதேவேளை, போரினால் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளர் சையிட் அல் ஹுசேன் நேரில் சென்று மக்களிடம் போர் பாதிப்புக்கள் தொடர்பில் கேட்டறிவார் என கொழும்பிலுள்ள ஐ.நா அலுவலகம் தகவல் வெளியிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (வ-5-106)

## இணைந்த

கருத் தறி யும் அமர்வு வவுனியா மாவட்டத்தில் கடந்த இரண்டு தினங்களாக நடைபெற்றது. நேற்று முன்தினம் இடம்பெற்ற அமர்வில் 15 பேர் மாத்திரமே பங்கெடுத்திருந்தனர். ஏனைய மாவட்டங்களில் இடம்பெற்ற அமர்வுகளில் பங்கெடுத்தவர்களின் எண்ணிக்கையை விட இது மிகக் குறைவானது என்று தெரிவிக்கப்பட்டிருந்தது.

இவ்வாறானதொரு நிலையில் நேற்று இடம்பெற்ற அமர்வில் 25 ஆலோசனைகள் முன்வைக்கப்பட்டதுடன், 60 பேர் வரையில் கலந்து கொண்டுள்ளனர். பெண்கள் அமைப்புக்கள் குழுவாக வந்து ஆலோசனைகளை முன்வைத்துள்ளன.

இவர்களைத் தவிர, பல்கலைக் கழக மாணவர் ஒருவர் தனியாளாக தனது ஆலோசனைகளை முன்வைத்துள்ளார். அதே போன்று விவசாயி ஒருவரும் கலந்து கொண்டு அரசமைப்புக்கான தனது ஆலோசனைகளை தெரிவித்துள்ளார்.

வடக்கு - கிழக்கு இணைந்த சமஷ்டித் தீர்வே வேண்டுமென்ற கருத்தையே முன்வைத்துள்ளனர் நேற்றைய அமர்வில் கலந்து கொண்டவர்களில் அதிகளவானோர் . நாட்டில் சமத்துவமாக வாழக் கூடிய வகையில் புதிய அரசமைப்பு உருவாக்கப்பட வேண்டும் என்றும், அது மதசார்பற்றதாக இருக்க வேண்டும் எனவும் இதன்போது அவர்கள் வலியுறுத்தியுள்ளனர். (வ-5)

## அதிகாரப்

தெரிவித்துள்ளனர்.

புதிய அரசமைப்பு உருவாக்கத்திற்காக மக்கள் கருத்தறியும் அமர்வு வவுனியா மாவட்டச் செயலகத்தில் நேற்று இரண்டாவது நாளாகவும் நடைபெற்றது. இதன் போதே அவர்கள் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளனர்.

வவுனியா மாவட்டத்தின், வவுனியா தெற்குப் பகுதியில் வசிக்கும் மக்கள் சிலர் நேற்றைய அமர்வில் தமது ஆலோசனைகளை முன்வைத்துள்ளனர்.

இதன் போது, தற்போதுள்ள அதிகாரப் பகிர்வு போதும் என்று அவர்கள் குறிப்பிட்டுள்ளனர். வடக்கு மாகாணம் போரினால் அதிகம் பாதிக்கப்பட்டது. அதனைக் கருத்தில்கொண்டு முன்னுரிமை அடிப்படையில் அதிகளவிலான அபிவிருத்தி நடவடிக்கைகள் இங்கு மேற்கொள்ளப்பட வேண்டும்.

மேலும், வேலை வாய்ப்பு அதிகளவில் இங்கு வழங்கப்பட வேண்டும். வேலை வாய்ப்பு வழங்கலின் போது, இந்தப் பகுதிகளைச் சேர்ந்தவர்களுக்கே நியமனம் வழங்க வேண்டும் எனவும் அவர்கள் இதன் போது கேட்டுள்ளனர். (வ-5)

## போட்டிக்கு

மகிந்த ஆதரவு அணியினர் சீனிகம ஆலயத்தில் (சீனிகம தெவொல் மகா தேவாலய) நேற்று தேங்காய் உடைத்து சாபமிட்டனர்.

இதில் தினேஷ் குணவர்தன, குமார வெல்கம, ரமேஷ் பதிரன, நாமல் ராஜபக்ச உள்ளிட்ட பொது எதிரணி நாடாளுமன்ற உறுப்பினர்கள் பலர் கலந்துகொண்டனர். அத்துடன் மகா சங்கத்தினரும் பொதுமக்களும் இதில் பங்கேற்றனர்.

அத்துடன், மகிந்த ஆதரவு அணியின் இந்த நடவடிக்கைக்கு எதிர்ப்புத் தெரிவித்து அரச ஆதரவு அணியினர் அதே ஆலயத்தில் தேங்காய் உடைத்து வணக்க வழிபாட்டில் ஈடுபட்டனர். இலங்கை தேசப்பற்று அமைப்பின் ஏற்பாட்டில் இந்த வணக்க வழிபாட்டு இடம்பெற்றது.

மகிந்த ஆதரவு அணி, அரச ஆதரவு அணி ஆகியவற்றின் ஏட்டிக்குப் போட்டியான இந்தச் செயற்பாடுகளினால் சீனிகம ஆலயம் நேற்று மக்களால் நிரம்பிக் காணப்பட்டது. பாதுகாப்பும் பலப்படுத்தப்பட்டிருந்தது. (வ-சி)

## முகப்புத்தகத்தில்

கணனி அவசர நடவடிக்கைப் பிரிவு தெரிவித்துள்ளது.

குறித்த முறைப்பாடுகளில் போலியான பெயரில் இயங்கும் முகப்புத்தகங்கள் தொடர்பாகவே அதிக எண்ணிக்கையான முறைப்பாடுகள் பதிவாகியுள்ளதாக அந்த பிரிவின் சிரேஷ்ட தகவல் தொழில்நுட்ப பொறியியலாளர் றொான் சந்திரகுப்த தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது:-

சமூக இணையத்தளங்களில் தங்களின் பெயர்களில் வேறு நபர்கள் போலிக் கணக்குகளை உருவாக்கியுள்ளமை குறித்து முறைப்பாடுகளில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. ஏனையோர் தங்களின் பெயர் மற்றும் நிழற்படங்களை பயன்படுத்தி போலியான முகப்புத்தகக் கணக்குகளை உருவாக்குவதற்கு ஏதுவாக சமூக இணையத்தளங்களில் அறிமுக மில்லாதவர்களுக்கு உண்மையான விவரங்களை வழங்காதிருப்பது உகந்தது.

அத்துடன் தங்களின் பெயர் விவரங்களுடன் போலிக் கணக்குகள் உருவாக்கப்பட்டிருக்கும் பட்சத்தில் அதுகுறித்து அந்தந்த சமூக இணையத்தளங்களில் முறைப்பாடுகளை முன்வைக்க முடியும் – என்றார். (வ-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# வெற்றிக்குத் திரும்பியது ஆஸ்திரேலியா திரில் நிலையில் ஆஸி.- நியூசி. தொடர்

ஆஸ்திரேலியா-நியூசிலாந்து அணிகளுக்கு இடையிலான இரண்டாவது ஒரு நாள் ஆட்டத்தில் நான்கு இலக்குகளால் வெற்றிபெற்ற ஆஸ்திரேலியா மூன்று ஆட்டங்கள் கொண்ட தொடரில் 1:1 என நியூசியின் ஆதிக்கத்தை இல்லாமல் செய்துள்ளது.

நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற நியூசிலாந்து முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது. சிக்சருடன் இன்னிங்ஸை ஆரம்பித்தார் மக்கலம். மக்கலத்தின் விளாசலுக்கு குப்திலால் ஈடுகொடுக்க முடியவில்லை. 12 பந்துகளில் 28 ஓட்டங்களைக் குவித்து ஆட்டமிழந்தார் மக்கலம். அடுத்த சில பந்துப்பரிமாற்றங்களில் குப்திலின் இன்னிங்ஸ் முடிவுக்கு வந்தது. நான்கு ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார் நிக்கொல்ஸ். மறுமுனையில் அரைச்சதம் கடந்தார் வில்லியம்சன். 300 ஓட்டங்களை எட்டிவிடும் சராசரியில் சென்று கொண்டிருந்தது நியூசிலாந்து. வில்லியம்சனைத் தவிர வேறெவரும் அரைச் சதத்தை நிறைவுசெய்யவில்லை. ஆனால் எலியாட், சான்நெர், மில்னி மூவரும் 30 ஓட்டங்களுக்கு அதிகமாக பெற்றனர். 50 பந்துப்பரிமாற்றங்களின் நிறைவில் நியூசிலாந்து 281-9. பந்துவீச்சில் ஆஸ்திரேலியா சார்பாக கசில்வூட் 3 இலக்குகளையும், பொலண்ட், சம்பா, மிச்செல் மார்ஷ் மூவரும் தலா இரு இலக்குகளையும் கைப்பற்றினர்.

300 பந்துகளில் 282 ஓட்டங்களைப் பெற்றால் ஆஸ்திரேலிய அணிக்கு வெற்றி. இந்த ஆட்டத்திலும் வென்று விட்டால் தொடரைக் கைப்பற்றிவிடலாம் என்ற முனைப்பில் நியூசிலாந்து. நியூசிலாந்தைவிட பலமடங்கு பலமாக அமைந்தது ஆஸ்திரேலியாவின் ஆரம்பம். கவாஜா, வோர்ணர் இருவரும் அரைச் சதம் கடந்தனர். 50 ஓட்டங்களுடன் வீழ்ந்தார் கவாஜா. இரு ஓட்டங்களால் சதத்தை தவறவிட்டார் வோர்ணர். இருவரையும் வெளியேற்றியவர் சென்நெர். சிமித் இரண்டு ஓட்டங்களுடனும், பெய்லி ஓட்டமெதனையும் பெறாமலும், மக்ஸ்வெல் ஆறு ஓட்டங்களுடனும் ஆட்டமிழந்தனர். மிச்செல் மார்ஷ் நிலைத்து நின்றாலும் அவருக்கு இணைப்பாட்டம் வழங்க எவரும் தயாராக இல்லை. மார்சீடன் ஹஸ்ரிங்ஸ் இணைய 4 இலக்குகளால் வெற்றிபெற்றது ஆஸ்திரேலியா. பந்துவீச்சில் நியூசிலாந்து சார்பாக சான்நெர் 3 இலக்குகளையும், ஹென்றி 2 இலக்குகளையும், போல்ட் ஓர் இலக்கையும் வீழ்த்தினார்கள். இந்த வெற்றியின் மூலம் மூன்று ஆட்டங்களைக் கொண்ட தொடரை 1:1 என்று ஆஸ்திரேலியா சமன் செய்துள்ளது. இறுதி ஆட்டத்தில் வெற்றி பெறும் அணிக்கே கிண்ணம் தீர்மானமாகும் நிலை ஏற்பட்டுள்ளது. (ம)

# மெஸ்ஸி 500




உலகின் தலைசிறந்த கால்பந்தாட்ட வீரரான மெஸ்ஸி 500 கோல்களை அடித்து சாதனை படைத்துள்ளார்.

கோபா - டெல்ரே கால்பந்து தொடரின் ஆட்டம் ஒன்று நேற்றுமுன்தினம் நடைபெற்றது. பார்சிலோனா-வலென்சியா அணிகள் மோதிய இந்த ஆட்டத்தில் பார்சிலோனா அணி 7-0 என்ற கோல் கணக்கில் வலென்சியா அணியை வீழ்த்தியது. இதில் மெஸ்ஸி மூன்று கோல்களை அடித்தார். அவர் அடித்த இரண்டாவது கோல் மெஸ்ஸியின் 500ஆவது கோலாகும்.

மெஸ்ஸியின் இந்தச்சாதனையை அடுத்து பார்ஸிலோனா அணி அடுத்துக் களமிறங்கும் ஆட்டத்தில் மெஸ்ஸியைக் கௌரவிக்க நிர்வாகம் சில ஏற்பாடுகளைச் செய்துள்ளதாக அறிய வருகிறது. (ம)

# 9.5 கோடிகளுக்கு வற்சன் பெங்களூரில் இவ்வருடம்

நடப்பு வருடத்தின் ஐ.பி.எல். தொடருக்கான வீரர்கள் ஏலம் நேற்று நடைபெற்றது. இதில் அதிக விலைபோன வீரராக ஆஸ்திரேலியாவின் வற்சன் உள்ளார். இவரை 9.5 கோடிகள் (இந்திய மதிப்பில்) கொடுத்து பெங்களூர் அணி வாங்கியது. அதிக விலைக்குப் போன இந்திய வீரராக நெகி உள்ளார். இவரை 8.5 கோடிகள் கொடுத்து டெல்லி அணி வாங்கியது.

ஏலத்தில் பெரிதும் எதிர்பார்க்கப்பட்ட யுவராஜ் சிங்கை 7 கோடிகளுக்கு ஹைதராபாத் அணி வாங்கியது. மிச்செல் மார்ஷ், இசாந் சர்மா, பீற்றர்சன், இர்பான் பதான் நாலவரையும் புனே வாங்கியது. இங்கிலாந்து வீரர் பட்லருக்கு கடும் போட்டி இருக்கும் என்று எதிர்பார்க்கப்பட்ட போதிலும் 3.8 கோடிகளுக்கு அவரை மும்பை அணி எடுத்தது. கடந்த வருடம் ராஜஸ்தானுக்கு விளையாடிய சாம்சன் இவ்வருடம் டெல்லியில் விளையாடவுள்ளார். அவரை 4.2 கோடிகளுக்கு அந்த அணி எடுத்தது. இலங்கைக்கு எதிரான ரி-20 ஆட்டத்தில் 14 பந்துகளில் அரைச்சதம் கடந்த நியூசிலாந்தின் அதிரடி வீரரான முன்றோவை வெறும் 70 லட்சங்களுக்கு கொல்கத்தா தனதாக்கியது. சென்னையின் ஆரம்ப வீரரான டிவைன் சிமித் இவ்வருடம் ரெய்னாவின் தலைமையில் குஜராத் லயன்ஸில் விளையாடவுள்ளார். இவர்களைத் தவிர பொதுவாக சகலதுறை வீரர்களுக்காகவே அணிகள் பெரும் போட்டியிட்டன.

(ம)



# சாய்னா விலகல்

இந்தியாவில் நடைபெற்றுவரும் தெற்காசியப் போட்டியில் இருந்து விலகியுள்ளார் நட்சத்திர பூப்பந்தாட்ட வீராங்கனையான சாய்னா நேவால்.

இந்த வருடம் ஓகஸ்ட் மாதம் பிரேசிலின் ரியோ டி ஜெனிரோ நகரில் ஒலிம்பிக் தொடர் நடைபெறவுள்ள நிலையில், அதற்கு தன்னைத் தயார்ப்படுத்தும் விதமாகவும் உடற்தகுதியை சிறந்த முறையில் வைத்திருப்பதுக்காகவும் அவர் தெற்காசியப் போட்டியில் இருந்து விலகியுள்ளதாக சாய்னா நேவாலின் பயிற்சியாளர் தெரிவித்துள்ளார். (ம)

# பளுதூக்கலில் இலங்கைக்கு வெள்ளி

இந்தியாவில் நடைபெற்றுவரும் தெற்காசிய விளையாட்டுப் போட்டியில் நேற்று நடைபெற்ற பளுதூக்கும் போட்டியில் இலங்கைக்கு வெள்ளிப்பதக்கம் கிடைத்துள்ளது.

இந்த விளையாட்டு விழாவில் இலங்கையை பிரதிநிதித்துவப்படுத்தி 467 வீர வீராங்கனைகள் பங்கேற்கின்றனர். நேற்று நடைபெற்ற 48 கிலோ கிராம் எடைப் பிரிவில் பளு தூக்கும் வீராங்கனை தினூசா ஹன்சினி வெள்ளிப் பதக்கத்தை வென்றார். இதே எடைப்பிரிவில் தங்கப்பதக்கத்தை இந்தியா வென்றெடுத்ததுடன் வெண்கலப் பதக்கத்தை பங்களாதேஷ் கைப்பற்றியிருந்தது. (ம)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இன்றைய மோதல்கள்

**றோயல். வி.கழகத் தொடர்**

ஊரெழு றோயல் விளையாட்டுக்கழகம் வடமாகாண ரீதியாக நடத்தும் கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் உரும்பிராய் இந்துக்கல்லூரியின் மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று ஞாயிற்றுக்கிழமை இரவு 8 மணிக்கு மின்னொளியில் இடம்பெறும் சுப்பர் 8 அணிகளுக்கு இடையிலான ஆட்டத்தில் அந்தோனியார்புரம் சென்.அன்ரனிஸ் அணியை எதிர்த்து ஊரெழு றோயல் அணி மோதவுள்ளது.

**குணபாலசிங்கம் ஞாபகார்த்தத் தொடர்**

யாழ். கால்பந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் குணபாலசிங்கம் குடும்பத்தினர் ஊரெழு றோயல் விளையாட்டுக் கழகத்துடன் இணைந்து நடத்தும் குணபாலசிங்கம் ஞாபகார்த்த கிண்ணத்துக்கான 40 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கான 7 வீரர்கள் பங்குபற்றும் விலகல் முறையிலான கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் உரும்பிராய் இந்துக் கல்லூரியின் மைதானத்தில் மின்னொளியில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று ஞாயிற்றுக்கிழமை இரவு 7 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் சென்.றொக்ஸ் அணியை எதிர்த்து அரியாலை ஐக்கிய அணி மோதவுள்ளது.

**கொக்குவில் மத்திய சன சமூக நிலையத் தொடர்**

கொக்குவில் மத்திய சன சமூக நிலையம் அழைக்கப்பட்ட கழகங்களுக்கு இடையில் நடத்தும் விக்ரம், ராஜன், கங்கு ஞாபகார்த்த கிண்ணத்துக்கான 30 பந்துப்பரிமாற்றங்களைக் கொண்ட துடுப்பாட்டத் தொடரின் ஆட்டங்கள் கொக்குவில் இந்துக்கல்லூரியின் மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் ஹாட்லிஸ் அணியை எதிர்த்து ஜொலிஸ்ரார் அணி மோதவுள்ளது. பிற்பகல் ஒரு மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் யாழ். பல்கலைக்கழக அணியை எதிர்த்து கொக்குவில் மத்திய சனசமூக நிலைய விளையாட்டுக் கழகம் மோதவுள்ளது.

**ஈ.கே.குமரையா ஞாபகார்த்தத் தொடர்**

கால்பந்தாட்ட மத்தியஸ்தர் சங்கம் நடத்தும் ஈ.கே.குமரையா ஞாபகார்த்த கிண்ணத்துக்கான கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் அரியாலையில் அமைந்துள்ள கால்பந்தாட்ட பயிற்சிநிலையமைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 4.15 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் ஆனைக்கோட்டையூனியன் அணியை எதிர்த்து நாவாந்துறை சென். மேரிஸ் அணி மோதவுள்ளது. (ம-23)

# தேசியத்தில் இடம்பிடித்த வீரர்களை கௌரவித்தது சென்.லூசியா வி.கழகம்

யாழ்ப்பாணம், பெப். 7

இலங்கை தேசிய கால்பந்தாட்ட அணியில் இடம்பிடித்து விளையாடிவரும் மன்னார் பள்ளிமுனை சென்.லூசியா விளையாட்டுக்கழக அணி வீரர்களான எடிசன், கொட்வின் இருவரையும் பள்ளிமுனை சென். லூசியா விளையாட்டுக்கழகமும் கிராம மக்களும் ஒன்றிணைந்து விழாவெடுத்துக் கௌரவித்துள்ளனர்.



பள்ளிமுனை கிராமத்தில் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை மாலை 5 மணியளவில் இந்தக் கௌரவிப்பு நடைபெற்றது. பள்ளிமுனைச் சந்தியிலிருந்து பள்ளிமுனை சென். லூசியா மகா வித்தியாலயத்தின் பான்ட் வாத்திய இசையுடன் விழா மண்டபத்துக்கு அழைத்துவரப்பட்டதைத் தொடர்ந்து பள்ளி முனை சென்.லூசியா விளையாட்டுக் கழகத்தின் தலைவர் அன்ரன் பிகிறாடோ தலைமையில் கௌரவிப்பு நிகழ்வு நடைபெற்றது. நிகழ்வில் பிரதம விருந்தினராக விளையாட்டுத் துறை பிரதி அமைச்சர் எச்.எம்.எம்.ஹரிஸ் கலந்து கொண்டார். சிறப்பு விருந்தினர்களாக சென்.லூசியா ஆலய பங்குத்தந்தை ஸ்ரீபன்ராஜ் அடிகளார், நாடாளுமன்ற வன்னி மாவட்ட உறுப்பினர்களான சாள்ஸ் நிர்மலநாதன், கே.கே.மஸ்தன், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பாரூக், வடமாகாண சபை உறுப்பினர் ரைஸ் மற்றும் விளையாட்டுத்துறை பணிப்பாளர்கள் மன்னார் மாவட்ட விளையாட்டுக்கழகங்களின் பிரதிநிதிகள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (ம-23)

## கில்லறி அபாரம்

யாழ்ப்பாணம், பெப். 7

ஊரெழு றோயல் விளையாட்டுக்கழகம் நடத்திவரும் கால்பந்தாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டமொன்றில் மன்னார் கில்லறி அணி வெற்றிபெற்றது.

வடமாகாண ரீதியாக நடத்தப்பட்டுவரும் இந்தத் தொடரின் ஆட்டங்கள் உரும்பிராய் இந்துக் கல்லூரியின் மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை இரவு 8 மணிக்கு மின்னொளியில் இடம்பெற்ற ஆட்டத்தில் அந்தோனியார்புரம் சென். அன்ரனிஸ் அணியை எதிர்த்து மன்னார் கில்லறி அணி மோதிக் கொண்டது. இதில் மன்னார் கில்லறி அணி 3:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (ம-23)

## போராடி வென்றது றோயல்

யாழ்ப்பாணம், பெப்.7

யாழ். கால்பந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் குணபாலசிங்கம் குடும்பத்தினர் ஊரெழு றோயல் விளையாட்டுக் கழகத்துடன் இணைந்து நடத்தும் 40 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கான 7 வீரர்கள் பங்குபற்றும் விலகல் முறையிலான கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் உரும்பிராய் இந்துக்கல்லூரியின் மைதானத்தில் மின்னொளியில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை இரவு 7 மணிக்கு இடம்பெற்ற ஆட்டத்தில் ஊரெழு றோயல் அணியை எதிர்த்து கலைவாணி அணி மோதிக் கொண்டது. இதில் ஊரெழு றோயல் அணி 3:2என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது. (ம-23)



மன்னார் கௌரியம்பாள் அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டியை முன்னிட்டு நடத்தப்பட்ட வீதியோட்ட நிகழ்வு. (ம)

## இல்ல மெய்வன்மைப் போட்டிகள்

யாழ்ப்பாணம், பெப். 7

**பண்ணாகம் வடக்கு அ.மி.த.க. பாடசாலை**

பண்ணாகம் வடக்கு அ.மி.த.க. பாடசாலையின் இல்ல மெய்வல்லுனர் போட்டிகள் எதிர்வரும் புதன் கிழமை பிற்பகல் 1.30 மணியளவில் பாடசாலை மைதானத்தில் பாடசாலையின் அதிபர் அ:சிறிபன் றெக்ஸ் தலைமையில் இடம்பெறவுள்ளன. நிகழ்வில் பிரதம விருந்தினராக இலங்கை சுங்கத் திணைக்களத்தின் மேலதிக பணிப்பாளர் அ.குலேந்திரன் கலந்து கொள்ளவுள்ளார்.

**சென்.ஜோன் பொஸ்கோ வித்தியாலயம்**

சென்.ஜோன் பொஸ்கோ வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டிகள் நாளை மறுதினம் பிற்பகல் 1.30 மணிக்கு கல்லூரியின் அதிபர் அருட்சகோதரி மேரி சொசாந்தியின் தலைமையில் நடைபெறவுள்ளன. நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் கலந்துகொள்ளவுள்ளார்.

**நாவாந்துறை ஆர்.சி.வித்தியாலயம்**

நாவாந்துறை றோமன் கத்தோலிக்க வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டிகள் நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை நிக்கிலஸ் வி.கழக மைதானத்தில் பிற்பகல் 1.30 மணிக்கு கல்லூரியின் அதிபர் தலைமையில் நடைபெறவுள்ளது. நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் என்.தெய்வேந்திரராஜா கலந்து கொள்ளவுள்ளார். (ம-23)

## மன்னார் மாவட்ட விளையாட்டுத்துறை அபிவிருத்தி தொடர்பான கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், பெப். 7

மன்னார் மாவட்ட விளையாட்டுத்துறை அபிவிருத்தி தொடர்பான கலந்துரையாடல் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை பிற்பகல் 3மணிக்கு மன்னார் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றது.

விளையாட்டுத்துறை பிரதி அமைச்சர் எச்.எம்.எம்.ஹரிஸ் கலந்து கொண்ட இந்தக் கலந்துரையாடலில் மன்னார் மாவட்ட விளையாட்டுத்துறை அபிவிருத்தி தொடர்பாகவும், மைதான அபிவிருத்தி தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது. வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான சாள்ஸ் நிர்மலநாதன் கே.கே. மஸ்தான் மற்றும் விளையாட்டுத்துறைப் பணிப்பாளர்கள், மன்னார் மாவட்ட விளையாட்டுச் சங்கத்தின் பிரதிநிதிகள் எனப் பலரும் குறித்த கலந்துரையாடலில் பங்குபற்றினர். (ம-23)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

FLC FRENCH LANGUAGE CENTRE FOR BETTER FRENCH
பிரெஞ்சு மொழி வகுப்பு
Embassy ... International Diploma in French
MR. V. JEGAN (Trained in France - 2007, University இல் French விரிவுரைகளை மேற் கொண்டவரும்)
DELF A1, A2 Exam இல் 100% சித்தி...
No. 40, பலாலி வீதி, ஆரியகுளம். 0779 789 456 / 021 221 7781
பிரதான வீதி, நெல்லியடி TP: 021 3202973
→ ஆரியகுளம் → 100M → பலாலி வீதி → FLCentre

கார் விற்பனைக்கு
ஒக்ஸ்போட் 8ஸ்ரீ - XXXX
பெற்றோல் கார்
விற்பனைக்குண்டு




தொடர்புகளுக்கு :- 0777946713

# நியூகாசிலை பந்தாடியது எவெர்ற்ரன்




இங்கிலாந்து பிரீமியர் லீக் தொடரில் எவெர்ற்ரன், நியூகாசில் அணிகளுக்கிடையிலான ஆட்டத்தில் எவெர்ற்ரன் அணி வெற்றி பெற்றுள்ளது. ஆட்டம் ஆரம்பித்து 23ஆவது நிமிடத்தில் ஆரோன் லென்னோன் முதல் கோலை பதிவு செய்ய முதல்பாதியின் முடிவில் எவெர்ற்ரன் 1:0 என்று முன்னிலை வகித்தது. இரண்டாம் பாதியில் நீண்ட நேரம்வரை கோல்கள் எவையும் பதிவாகவில்லை. 88ஆவது நிமிடத்திலும், இறுதி நிமிடத்திலும் கிடைக்கப்பெற்ற பெனால்டிகளின் மூலம் றொஸ் பார்க்லி அடுத்தடுத்து கோல்களைப் பதிவு செய்ய முடிவில் 3:0 என்ற கோல் கணக்கில் எவெர்ற்ரன் அணி வெற்றிபெற்றது. (ம)

# செல்சி - வட்போர்ட் ஆட்டம் சமநிலை



நடைபெற்றுவரும் இங்கிலாந்து பிரீமியர் லீக் தொடரில், செல்சி - வட்போர்ட் அணிகளுக்கு இடையிலான ஆட்டம் சமநிலையில் முடிவடைந்துள்ளது. ஆட்டத்தின் முழு நேரத்திலும் எந்தவொரு அணியாலும் தனித்து ஆதிக்கம்செலுத்த முடியவில்லை. முடிவில் கோல்கள் எவையும் பதியப்படாமலேயே முடிவடைந்தது ஆட்டம். இதன் மூலம், ஜோஸ் மொரின்ஹோவை கூஸ் ஹிட்டிங் பயிற்சியாளராகப் பிரதீடு செய்த பின்னரான ஏழு ஆட்டங்களிலும் செல்சி தோல்வியடையவில்லை. புள்ளிகள் தர வரிசைப் பட்டியலில் 29 புள்ளிகளுடன் செல்சி 13ஆவது இடத்தில் இருக்கின்றது. (ம)




100% தொழில்வாய்ப்பு உத்தரவாதம்
அதிகபட்ச நியாய விலையில்
February 13, 14 ஆம் திகதிகளில் யாழ் இந்துக் கல்லூரி மண்டபத்தில் புலமைப்பரிசில்கள் வழங்கப்படும்
Talk to us at
011 4381 981
www.amdt.lk
BTEC Approved Centre
AMDT Sri Lanka's Design Campus
AMDT Academy of Multimedia Design & Technology

# நியூசி. டெஸ்ட் அணி அறிவிப்பு ஆஸிக்கு எதிரான தொடருக்காக

ஆஸ்திரேலியா அணிக்கு எதிரான இரண்டு ஆட்டங்கள் கொண்ட டெஸ்ட் தொடர் எதிர்வரும் 12ஆம் திகதி ஆரம்பமாக வுள்ள நிலையில் தொடருக் கான நியூசிலாந்து அணி அறிவிக்க ப்பட்டுள்ளது.

ரெய்லர் காயம் காரணமாக இடம்பெறவில்லை. புதுமுக வீரர் ஹென்றி நிக்கோலசுக்கு வாய்ப்பு அளிக்கப்ப ட்டுள்ளது. அணி விவரம் வருமாறு: மக்கலம் (தலைவர்), வில்லியம்சன், குப்தில், அன்டர்சன், பிரஸ்வெல், போல்ட், ஹென்றி, லாதம், ஹென்றி நிக்கோ லஸ், சான்ரெர், சவுத்தி, வாக்நெர், வற்லிங். (ம)

மொழி வகுப்புகள்
திருமண பந்தத்தின் மூலம் வெளிநாடு செல்பவர்களுக்கு இலகுவாக சான்றிதழ்கள் பெற்றுக் கொள்ளக் கூடிய முறையில் ஜேர்மன் - Deutsch, நெதெர்லாந்து - Dutch, French, Italian, English வகுப்புகள் நடைபெறுகின்றன.
விவேகானந்தா அக்கடமி
221/1, மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம்.
021 321 6928, 077 484 2464



லா லிகா தொடரில் இன்று நடை பெற வுள்ள வலென் சியா அணிக்கு எதிரான ஆட்டத்துக்காக நேற்றைய தினம் பயிற் சியில் ஈடுபட்ட ரியல் மட்ரிட் வீரர்கள்.(ம)

கணினிக்கற்கை நெறிகள்
2015 O/L A/L பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களே!
Microsoft Office
Multimedia
Web Designing
DeskTop Publishing
Hardware Technology
Java Programming
Computerized Accounting
Eng. Drawing & AutoCAD
Visual Programming (C# /.NET)
Android Apps
Ethical Hacking
Networking
மேலதிக விபரங்களுக்கு
071 777 4555
INSTITUTE OF INFORMATICS STUDIES
இல 200 சிவன்பண்ணை வீதி, யாழ்ப்பாணம்
021 222 2831 / 071 777 4 555

மாணவரின் உள்ளத்திலிருந்து



யாழ் இந்துக் கல்லூரி, 2015ம் ஆண்டு கணிதப் பிரிவில் கல்வி பயின்ற நான், நடைபெற்ற க.பொ.த உயர்தர பரீட்சையில் 3A சித்தியுடன் மொறட்டுவ பல்கலைக்கழகத்தில் பொறியியல் பீடத்திற்கு தெரிவாகியுள்ளேன். எனது பல்கலைக்கழக கற்கை நெறிக்கான அடிப்படைக் கணனி அறிவினோடு ஆங்கில அறிவினையும் மேம்படுத்திக் கொள்ளும் வகையில் IIS இல் இணைந்துள்ளேன். திறன்களை விருத்தி செய்துகொள்வதற்கு என் போன்ற மாணவர்களுக்கு IIS ஒரு சிறந்த வழிகாட்டியாக உள்ளது.

இப்பத்திரிகை. நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 07.02.2016 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org